பேசுஞ்சவுசமெடுத்துரைக்கிற் பிறழ்தலில்லாவகச்சவுச
மேசலில்லாப்புறச்சவுச மென்னவிரண்டாமகச்சவுச
மாசையின்மையெனுமண்ணு லரியஞானப்புனலில்வினை
மாசின்றாகவுள்ளத்தை மண்ணலெனநான்மறைகூறும் ௭

உலகமெடுத்தபுறச்சவுச முரவுத்தெண்ணீரிடைப்படிதன்
மலைவின்றாகமுதியமறைவடித்த தனிமந்திரமுணர்தல்
கலைவெண்டிங்கட்பசுங்கொழுந்து கான்றநிலவுக்கதிர்மழுங்க
நிலவுதிளைக்கும்வெண்ணீறு நிலவப்புனைதலெனப்படுமால். ௮

தவமென்றுரைத்தறிறம்பாது சரிக்குஞ்சாந்திராயணமா, நவை
தீர்நெறியின்வந்ததனை நயத்தன்மகிழ்ச்சி யாகுமாற், செவமஞ்
செழுத்துப் பிரணவஞ்சீர் திகழ்நான்மறையீங் கிவையுரைத்த,
வெவரும்புகழுஞ்சிவப்பிரணி தானமிறைவன்றனைநினைத்தல். ௯

...விலாசனங்க டெரிந்துரைக்கிற் பதுமாசனஞ்சொத் திகைமற்
...பாதபந்தமுறு தீதின்றுயர்ந்தசமசானு [ரைச்
...வெனு மிவைகண்முதலாமதியின
மறையோ ரியற்றுமெழில்சேராசனமே ௧௦

சனங்கணன்கா யியற்றவெய்திடுமேன்
வருதுன்பந்துயின் மற்றிவைகள்வாராவா
ராணாயாமமுதலியோகம னைத்துமடையுமென
...ரோன்புகல்கின்ற மறையோர்நான்கும்வழங்குமால். ௧௧

...ல்பிராணவாயுவினைச் செறித்தல்பிராணாயாமமா
...சாலதனோடபானனெனும் வாயுவதனையெழில்பெறவே
...ராய்ந்தமையவடக்குவதும் பிராணாயாமமென் றறைவார்
...விமுதறடிந்து நீதிறவத்தினொழுகுவோர்

மந்தப்பிராணாயாமம்வரில் வேர்வுதோன்றுமத்திமமா
மந்தப்பிராணாயாமம் வரிலலையுமேனியதன்பின்னே
சிந்தைதமகிழவுத்தமமாம் பிராணாயாமஞ்சேர்ந்திடிலோ
விந்துநிலத்தினின்றுமெழுந் திடுமாலியாக்கையியம்பிடினே. கரு.

தெரித்தமறைமந்திரமோதிச் செய்யும்பிராணாயாமத்தைக்
கருப்பப்பிராணாயாமமெனக் கற்றல்செய்வார்சாசின்றி
யுரைத்ததனிமந்திரமுள்ளத் துணராதியற்றுகின்றதனை
விரித்தார்கருப்பமிலதாய பிராணாயாமமெனமிக்கோர். கசு

புறத்திலெழுமேலியங்குமாற் பிராணவாயுபொருந்துடலிற்
செறித்தங்குறையுமபானனெனும் வளிக்கீழாகிச்சென்றிடுமா
னிறுத்தவியானன் மெய்முழுதுநிறைந்தேயுறையுமியாக்கையினி
லுறுத்துஞ்சந்திகளைநடுக்கஞ் செய்தேயொடுங்குமுதானனே.

இயல்பாயிருத்துமியாக் கைதனைச்சமானனென்னவியங்குவளி
யயலாறுகனெதிரொடுக்குங் கூர்மனிமைத்தல்செயுமடைவே
செயிர்தீர்ந்தொழியக்கிரிகரனாங் காற்றுத்தும்மல்செய்யுமாற்
பயிலுந்தேவதத்தனெனும் வளி * யாவித்தல்பண்ணுமால். கக

* ஆவித்தல் - கொட்டாவிவிடுதல்.

உடலைமிகவும்வீங்குவித்தாங் கொலித்தேயுறையுந்தனஞ்சயன்ம
றடைவேயிவ்வாறுறைவளிகள் செய்யுமிடர்வந்தடையாவா [ற்
விடர்தீர்பிராணாயாமத்தை யறிந்தாங்கியற்றிலென்றுமான்
மடமாதேனக்கெங்குறையு மழவாணிறைவனென்றாலே கஎ

கடுங்கானகத்தினிடைவழங்கு கனற்கட்சீற்றக்கடாக்களிற்றை
மடங்கலேற்றைப்பன்றுளில் வணங்கவடக்கும்வகைபோல

வடைந்தேயியங்குபிராணவளி யதனையடக்கல்வேண்டுமென
னொடிந்தார் தவத்தாலுளந்தெளிந்துநோன்மைசான்றமுனிவோ
[ரே.

விடயவழிபோம்புலன்முழுது மீட்டல்பிரத்தியாகார
மொடியாதுளத்தைத்தெளிவித்துநிறுத்தலுரைக்குந்தாரணையா
முடியாப்பொருளையுள்ளத்துண் முன்னிநினைத்தறியானமெனப்
படைவாளரவமுடித்தசடைப் * பரமன்றெென்னூல்பகருமால்.

* பரமன்றெென்னூல் - வேதமாகமமிரண்டும்.

மூலாதாரத்திடைக்கரிய முகில்கீண்டொளிருங்கதிர்மின்றுப்
போலாயிதழ்நான்கமைந்துதிகழ் பூந்தண்கமலமலர்மேலு
மேலாஞ்சுவாதிட்டானமிசை விளங்குமதியமெனநிலவு
காலாமலருமிதழாறு கவினுங்கமலமலர்மேலும். ௨௦

உந்திமிசைவாளிரவியென வொளிருமிதழீரைந்தியைந்த
வந்தண்கமலமலர்மேலு மணிசேர்ந்திலங்குமாகத்து
வந்துதானவொளிமழுங்க வயங்கும்வெள்ளையொளிதரும்பீர்
சிந்துமிதழீராறுடைத்தாய்த் திகழுங்கமலமலர்மேலும். ௨௧

உருவக்கழுத்தின் மிசையிருள்கெட் டோடவெறிக்குஞ் செஞ்சு
ரொரியிற்றிகழுமிதழீரெட் டியைந்தகமலமலர்மேலும் [வைகசே
புருவநடுவிலெறிபசும்பொன் போலப்பிறங்குகதிர்க்கற்றை
சொரியுமிதழோரிரண்டுடைத்தாய்ச் சுடருங்கமலமலர்மேலும்.

பன்னற்கரியபளிங்கொளிபோற் பவளவொளிபோற்கதிரொ
ளிபோன், மின்னின்றெளிபோன்மதியொளிபோல் விளியுஞ்சுடா
செய்விளக்கொளிபோ, லுன்னற்கரிய பரஞ்சுடரை யுள்ளியுண்
ணியுளமுருகித், தன்னைமறந்தங்கிருத்தல் சமாதியெனலாஞ்
சாற்றுங்கால். ௨௩

முடியாயோகமோரெட்டு முயன்றோர்வெள்ளைமுள்ளெயிற்று
விடவாளரவமுடித்தசடை விமலனடித்தாமரையடைவா
ரிடையூறுளவாலியோகநெறி யியற்றற்கவையுமிசைப்பனென
வொடியாவினையின் முதன்முருக்கி யுயர்ந்தகுருதமுனியுரைப்பான்

அட்டாங்கயோகமுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௫௦.

ஒன்பதாவது

யோகவிக்கினமுரைத்த வத்தியாயம்.

வெய்யநோய்சிரத்தையின்மை விளம்பியபிரமாதந்தன்னோ
டையுறல்விடயத்திச்சை யன்மனமப்பிரதிட்டை
மையல்கூர்தருபிராந்தி தெரிசனமாற்றலாகா
தெய்துமுவகைய துன்ப மெனுமிவையிடையூறாமால். ௧

வளிமுதன்மூன்றினாலும் வருதனோய்வீடுபேற்றிற்
கிளர்வுறுவிருப்பமின்மை சினந்தவச்சிரத்தையாகுந்
தெளிவுறுசமாதிக்கேற்ற காரணந்திரம்பாதாற்று
முளைமுருகிகழ்ந்திருத்த லுணர்த்திடும்பிரமாதமாமால். ௨

இதுகொன்மற்றதுகொலென்ன வென்றுதலையப்பாடாம்
புதுவதுகண்டு வேட்டல் புரையறுவிடயத்திச்சை
அதையுறுமகிழ்ச்சியின்மை யன்மனஞ்சூழ்தியான
மதியினிற்பற்றாதி மாயுறலப்பிரதிட்டை. ௩

ஓதியவுடம்புதானென் றுளத்தினினினைத்தலேனை
நிதினிற்றிகழ்பிராந்தி தெரிசனந்தெரிக்குங்கால
யாதிதெய்விகமற்றுதி பவுதிகமவற்றினோடு
மேதமோதிற்றவாத்தி யான்மிகமிடர்மூன்றாமால். ௪

கூறியவிவைகளன்றிக் குறித்துணருபசருக்க
மாறுளவவற்றினும மாய்ந்தெடுத்துரைக்குங்காலைத்
தேறரும்பிரதிபைதேவ தெரிசனஞ்சிரவணம்வார்த்தை
யீறிலாவாசுவாத மிரசனையென்பவாமே. ௫

மறைந்தது நுண்ணிதாகி யிருப்பதுமருவியெங்கு
முறைந்ததுஞ்சேயதாகி யுள்ளலுமுள்ளலாகா
திறந்ததுநிகழ்வதூஉமற் றெதிர்வதுமிவைகளெல்லாந்
திறம்பலிலுள்ளந்தன்னாற் றெரிவுறல்பிரதிபையாமால். ௬

சேட்டிளம்பருதியென்னத் திகழ்வுறுதேவற்காண்ட
லீட்டருஞ்சிறப்பிற்றேவ தெரிசனமென்னலாமாற்
கேட்டதோரொலியினாலே கிளரொளிப்பொருளுணர்ந்து
நாட்டுதல்சிரவணமென்ன நான்மறைபகருமாதோ. ௭

உரைபெறுவார்த்தைவேத மோதுதலொலிநீர்சூழ்ந்த
விருநிலவரைப்பில்வானி லெண்டிசைமருங்கின்மேய
விரையொடுசுவைகளியாவும் விளங்குமாறறிதருனே
யரிதுணராசுவாத மென்றெடுத்தறைவரன்றே. ௮

மண்புனல்கனலிகாற்று வான்மனமகங்காரத்தோ
டொண்சுடர்பிரமமென்ன வகுத்தெடுத்தோதப்பட்ட
வெண்பொருட்குணங்களெட்டு மிரசனையென்னலாகும்
பண்புடனொன்றெட்டாய்ப் பாற்படவிளங்குமாதோ. ௯

வேறு.

அலகையெண்குண மகணிலக்குணங்களாமரக்கர்
மலைவிலெண்குண மறிஇலாக்குணங்களாமியக்கர்
நிலவுமெண்குண நீள்கனற்குணங்கள்கந்திருவ
ருலைவிலெண்குணம் வாயுவின்குணமெனவுரைப்பர். ௧௦

விண்புரந்தினி தளித்தருள் வெந்திறல்வேந்த
னெண்பெருங்குணம்விசும்பினன் குணமெனவிசைப்பார்
தண்கதிர்க்கலைமாமதி தழைத்த வெண்குணங்கள்
பண்பிறையுந்திடன்மனத்தினெண் குணமெனப்பகர்வார். கக

பெரியமாதவப்பிரசாபதி குணங்களோரெட்டு
மரியதாமகங்காரநற் குணமெனலாமால்
விரைசெய்நாண்மலர்விளங்குறு பிரமனெண்குணமு
முரையிறந்தொளிர்பிரமநற் குணமெனவுரைப்பார். க௨

தரையிலெண்குணமடைந்தவ னைந்தெருடுதரும்பி
விரிபுனற்குணமெய்திலே ரெண்குணமேவு
மெரியியற்குணமெய்தின்மூ வெண்குணமெய்தும்
பொருவளிக்குணமெய்திரு லெண்குணம்பொருந்தும். க௩

உயருநீளிருவிசும்புறு குணத்தினேடொன்றி
லியலலாருமையெண்குண மிசைத்திடுங்காலச்
செயிரிலாதநன்மனத்துறு குணத்தொடுஞ்சேரி
லயர்விலாதவாறெண்குண மடைந்திடுமென்றே. க௪

மறுவிலாவகங்காரத்தின் மன்னியகுணங்கள்
செறியிலெய்துமேழெண்குணந் தெரிந்தினிதுரைக்கி
னறிவரும்பிரமத்தினன் குணத்திணையடையி
னெறியினெய்துமெண்ணெண்குண நிகழ்த்திடன்மாதோ. க௫

குறுகலோங்குதல் குறுமடைக்குழவிசல்லுருவம்
பெறுதல்வெண்ணரை பிறங்கியமூப்புருவெடுத்த
லறைதருநால்வகைச்சாதியின் வடிவொடுமைதன்
மறுவினற்பெரும்பூதத்தின் வயங்குருவெடுத்தல். க௬

பொருதிரைக்கட லுடுத்தகல்புடவியோரேழு
மொருகரத்தினிற் றாங்குதலுரைத்தமாநிலத்தின்
விரியுமாற்றமெய் தாங்குதல்விளம்புமற்றவையே
யிருநிலத்தினெண் குணமெனவெடுத்தினிதிசைப்பார். ௧௭

நீரின்வாழ்வுறலதனிடைத் தோன்றுதனிறைந்த
வார்கலிப்புனலதன்மிசை நடந்திடநெஞ்சி
ளேருமெங்கணுமுறுபுனல் காட்டிட லுற்ற
வார்பெரும்புனல்குடத்தினல் வடிவமாயெடுத்தல். ௧௮

அருந்துமியாவையு மமுதுறழ்தீஞ்சுவையாக்கல்
விரிந்தமூன்றுபூ தத்துடனுமுருமேவல்
பொருந்துமேனியிற் றழும்பறப்பொலிதலீங்கிவையாங்
தாங்கநீரினெண் குணமெனச்சாற்றுவர்மன்றோ. ௧௯

மெய்யில்வெங்கனல் விளைத்தலவ்வெங்கனற்பிழம்பால்
வையநீற்றுத னீற்றுமவ்வையகமுழுதுஞ்
செய்யவெங்கன லதனினுண்டாக்கலத்தீயைக்
கையினேந்துத னீரிடைவைத்தனுகாத்தல். ௨௰

சுடர்செய்வெவ்வழல் வெம்மையிற்றுளக்குறிருத்த
லடையுமியாவையு மனத்தினுற்றாயனவாக்கன்
மிடையும்பூதமோ ரிரண்டெனமேவரவிளங்கும்
வடிவமேவுத லழலினெண்குணமெனவகுப்பார். ௨௧

நினைவினேகுத னிழன்மதியிடறுமால்வரைக
டனைவிற்றேளினுற் றாங்கலச்சுடர்மணிவரையிற்
கனமதாகுத னுண்மையாகுதலிருகையி
னினிதின்வாயுவை யெழில்பெறவேந்திமேலெடுத்தல். ௨௨

வேற்றுமெய்தொறும் புகுந்தினிதிருந்தலோர்விரலி
னூற்றலாற்பெரும் பூதங்களைந்தையுமலைத்தல்
காற்றென்றுலிய வுருவினைக்கவின்பெறவெடுத்தல்
போற்றுவாயுவி னெண்குணமெனப்புகன்றிடுவார். ௨௩

பழுதிலாவுட லெடுத்தலப்பழுதறுமுடற்கு
நிழலிலாவகை செய்திடனீளிருவிசும்பு
வழியதாய்நடந் திடுதலிந்தியங்களின்மருவ
லொழிவிலிந்தியத் தாலறியாவகையுறைதல். ௨௪

அலகில்பேருல குள்ளவையாவையுமடைவி
னிலவக்கண்ணிறுங் காண்டல்சேணிடையினினிகழு
மொலிகள்கேட்டிட லழிவிலாதுறைதன்மற்றிவையே
மலருமாயிரு விசும்பினின்குணமெனவகுப்பார். ௨௫

கருதுகின்றவெவ் விடத்திலுங்கருத்தினிலேகல்
வினாவின்மீளுதல் விழைந்தவையாவையுமடைதல்
பொருளொவற்றினுந் தோன்றுதல்புகறவெவர்க்குந்
தெரிவதற்கரி தாம்பொருட்டெரியுறக்காண்டல். ௨௬

மங்கலத்துட னுறைந்திடவழிசெறுத்தாற்று
மைமங்களைக்கிழ வன்றனிலழுகுறத்தோன்ற
லெங்குந்தன்னிரு கண்முனமெனிதினிற்காண்ட
லங்குநன்மனத் தெண்குணமென்பரார்த்தக்கோர். ௨௭

வெட்டல்கூற்றினைக் கடந்திடன்மிருத்துவையொழிதல்
கட்டலெற்றுதல் கருணைகூர்ந்திடுதல்பேருலகிற்
பட்டவாழுத வுலகினைப்பழுதறகடத்த
லெட்டமாமகங் காரத்குணமெனவிசைப்பார். ௨௮

உலகமியாவையும் படைத்திடலளித்திடலொழித்த
றலைமையாகுத றனித்தனிவடிவமாய்ப்படைத்த
லலகினீதியுண் டாக்குதலஃறிணையமைத்த
லிலகுமுத்திதந் திடல்பிரமத்தினென்குணமே. ௨௯

இன்னயாவையு மீறிலாதோங்கியமுத்தி
மன்னுதற்கிடை யூறிவைமனக்கொளாதகற்றி
மின்னுநக்கவார் சடையவன்விரைமலர்ப்பாத
முன்னல்வேண்டுவர் முடிவிலாமுத்தியின்விழைந்தோர். ௩௦

யோகவிக்கினமுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - ௪௮௦.

பத்தாவது
பத்திமகிமையுரைத்த வத்தியாயம்.

நாட்டுமியோகநன் னெறியினிணணினர்க்கன்றி
யீட்டுநல்லறத் துறைவழியியைந்தவர்தமக்குங்
கூட்டராவணி தனிமுதரேன்றுமற்றென்று
மீட்டுஞ்சுதமா முனிவரன்விளம்பனுற்றனனால். ௧

வேறு.

கவ்வைநீர்க்கங்கைசூழ்ந்த காசிவாழிறைவன்றன்னை
மைவிழிக்கரியகூந்தன் மலைமகண்மகிழ்ந்துநோக்கி
யெவ்வழியொழுகினோருன் னின்னருள்பெறுவரொன்னா
வெவ்வழற்சூலமேந்தும் விண்ணவனுரைக்கவென்றாள். ௨

மெய்த்தவத்தாற்கொலன்றி விழுமியஞானத்தாற்கொ
லத்தநீயருள்வாயென்ன வரும்புவெண்ணிலவுநாறு
முத்தவெண்ணகையாய்பஞ்ச மூர்த்தமாமெண்ணோக்கி
யித்திறமலரோன்றானுங் கேட்டனனெடுத்துமுன்னாம் ௩

தூளங்கொளிமுத்தஞ்சிந்தித் துள்ளுவெள்ளருவிவீழும்
வளங்கனிபசும்பொற்கோட்டு மால்வரைமடந்தைமாறா
துளங்கனிந்துருகுமன்புக் குற்றுநாமளிப்போமென்று
விளம்பிறைக்கண்ணிசூடு மிறையவனருளினானே. ௪

பத்திமகிமையுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௧௮௪.

பதினொன்றாவது

சத்தியோசாதத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

என்னலுமுனிவசொல்லா யீறிலாமறைக்குமெட்டா
முன்னவனெடுத்தபஞ்ச மூர்த்தநாண் முருகுவிம்மு
பொன்னிதழ்க்கமலவீட்டுப் புங்கவன்கண்டவண்ணம்
பன்னுதியெனலுஞ்சூதமுனிவரன்பகரலுற்றான். ௧

வேறு.

பொன்பிறழ்கமலப்பொகுட்டிவீற்றிருக்கும் பொருவிலாநான்முகனிருபத், தொன்பதாஞ்சுவேதலோகிதகற்பத் துணர்தலுஞ்சுவேதலோகிதமா, மன்பெருவண்ணக் கன்றொடுமழகு வாய்ந்துளாங்குழவியாய்மாறா, வன்புமீக்கூரச்சத்தியோசாத னவன்முனமெய்தினன்யாதோ. ௨

மாயிருஞாலமுழுவதும்பூத்த மாமலர்ப்பொகுட்டிலுறைமுனிவன், பாய்கதிர்மணிச்சூட் டரவகங்கணைத்துப் பண்ணவன்பழமறைகாணாச், சேயபூங்கமலத் துணையடிவணங்கித் தேங்கமழ்மருமலர்தூவித், தூயநான்மறையா லாங்கவன்றன்னைத் துதித்தனனன்புமீக்கூர. ௩

துளிநறுப்பிலிற்றி முருகுவாயவிழ்க்குந் துளவணிமுகுந்தனு ங்கோடி, யளிகுடைந்துண்ண முகையவிழ்கமலத் தண்ணலும் வெருவினர்திகைப்ப, வெளிமுகடுடைய வெவ்வழற்பிழம்பாய் விளங்கிடநின்றருண்முக்கட், களகண்மெய்யின்று மெய்த்தவத் துயர்ந்த கவின்பெறுநால்வர்வந்துதித்தார். ௬

ஆரழல்விழுது விட்டெனக்கிடந்த வவிர்சடையண்ணல்பாற் றோன்றுஞ், சீர்பெறுதவத்துமுனிவரரிறைவன்சேவடித்தாமரை சேர்ந்தா, ரோர்பெறநின்ற விறைவனிவ்வுருவை யுளத்தினிலெ ண்ணினோரியாருங், கார்தொடநிவந்த கதிர்மணிக்கோட்டுக் கயி லைசென்றடைவரொன் றுளாத்தான். ௭

சத்தியோசாதத்தோற்றமுரைத்தவத்தியாயமுற்றும்.

ஆக திருவிருத்தம்-௩௯௪.

பனிரண்டாவது

வாமதேவத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இவ்வகையுரைத்து மாதவப்பயத்தா லிருவினையறுத்தமாமுனி வீர், கவ்வைநீர்க்கங்கை புனைந்தருள்வாம தேவ[illegible] ண்ணல், செவ்விதிற்கண்ட வாறெலாந்தெரிந்து [illegible] ண்மினீரொன்றாக், கொவ்வையங்கனிவாய்ப் பங்கனை[illegible] றினன்சூதமாமுனிவன். ௧

முறைவகுபிரத்த கற்பமென்றொது [illegible] னி, னறமலர்க்கிழவ னுளங்களித்துருவி [illegible] படைத்துத், தமையனற்பாந்தன் [illegible]

மான்மழுக்கரத்திலங்க, மறைபுகழ்வாம தேவன்மற்றவன்முன்
மகிழ்வுடன்றோன்றினன்மன்னோ. ௨

மட்டுவார்ந்தொழுக வாய்முறுக்கவிழு மணமலர்ப்பொகுட்டு
றைமறையோன், விட்டலர்கடுக்கைத் தொடையறாழ்மவுலி வி
ண்ணவனுற்றிடநோக்கிக், கட்டியபைம்பொற் கனைகழல்வீழ்ந்
து கடிமலர்பற்பலதூவி, யட்டமாமூர்த்தி யாயுறைமுக்க ணண்
ணலைத்துதித்தனன் மகிழ்ந்தான். ௩

பையவிழ்பாம்பின் பருமணிச்சூட்டிற் பாயிருலகெலாம்வ
ருத்தும், வெய்யகோய்நரகில் வீழ்ந்துவீழ்ந்திரங்கி மெலிவுறுவ
ண்ணமெய்த்தவத்தா, லையமில்ஞானந் தெளிந்திடுநால்வ ராரழ
ற்சடலையினடித்த, மையுநுண்மருங்குனங்கையோர்பங்கி னம்ப
னதுமைழயினிலுதித்தார். ௪

மாயிருஞாலமுழுவதுமுய்வான் வள்ளறனஞ்செழுத்துணர்
த்தி, யாயிரம்பருவமுறைந்தனர்பின்ன ரழிவிலாமெய்யுணர்வத
னால், வாய்விரிகடுக்கைத் தொடையலங்கரையின் மதியுமிழமு
தொடும்பெருகிப், பாய்தருகங்கைச் செஞ்சடாமவுலிப் பண்ண
வன்பதத்தினிலடைவார். ௫

வெண்ணிலவுமிழும் விரிகுறையன்ன மீமிசையுயிர்த்தவன்வ
ணங்கக், கண்மூன்றமர்ந்து நின்றருள்முக்கட் கனியினைநாடொ
றுமுனாத்தி, லெண்ணரியருஞ்சிக்கலா தடரு மிருவினைமுழுவ
துமுருக்கித், தண்ணறுக்கடுக்கை மிலைந்தசெஞ்சடையோன் ற
னிழலடைவனொன்றுரைத்தான். ௬

வாமதேவத்தோற்றமுரைத்த வத்தியாய முற்றிற்று.
ஆகதிருவிருத்தம்-௧௬௫.

பதின்மூன்றாவது
தற்புருடத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இன்னவாறுணர்த்து முனிவிர்காள்செய்ய விலவிதழ்கவற்றுமி
ன்கனிவாய்க், கன்னலங்குதலை மடந்தையோர்பங்கிற் கவின்பெ
றமகிழ்ந்ததற்புருடன், பொன்னிதழ்க்கமலப் பொகுட்டுவீற்றி
ருக்கும் புங்கவன்காணமுன்வந்த, வன்னவாறுரைப்ப லென்று
யர்சூத னிறபத்தெரிக்கலுற்றனனால். ௧

அன்னதற்கப்பார்ப்பீதகற்பத்தி லரும்பவிழ்தாமரைப்பொகு
ட்டின், மன்னியவிரிஞ்ச னுளத்திடைநினைப்ப மல்கிருட்பிழம்பு
வாய்மடுத்துப், பொன்னெனத்திகழு நன்னிறந்தாங்கிப் புனிற்
றிளமதிக்கொழுந்தணிந்து, முன்னர்வந்துற்றான் முடிவிலாவே
த முடிவினில்விளங்குதற்புருடன். ௨

அருமறைவிளையாட்டயர்தருநாவி னணிமலர்ப்பொகுட்டுநா
ன்முகத்தோன், வருமுலைபங்கன் தோன்றலுந்தனது மலர்விழி
குளிர்ப்புறநோக்கி, விரைமலர்தூவி மற்றவன்செய்ய விளங்கு
பொற்கழலிணைபணிந்து, கரையழியின்பக்கடலினுளமூழ்கிக்கட
வுளைப்பழிச்சினன்மறையால். ௩

மதிதவழ்சடையோனழகுறுமுகத்தில் வதனமுங்கண்ணுறும்
வாலெயிறுங், கதிர்வளைக்கையுங்காலுநான்கமைந்து தோன்றுகா
யத்திரியணங்கைப், பொதியவிழ்கமலப் பொகுட்டிருந்தளித்
தான் பொருவில்காயத்திரிதன்னை, விதியினிற்பயின்றார் வெய்ய
நோய்நரகில் வீழ்ந்திடார்கயிலைவீற்றிருப்பார். ௪

பொருப்புவிற்குழைத்துப் பொரூந்தலர்புரங்கள் பொங்கழ
ன்மடுத்தவன்றன்பாற், றிருத்தகுசிறப்பி னால்வர்வந்துதித்தார்

இளைக்கடலுடுத்தவிவ்வுலகில், வருத்தும்வெந்நரகின்வருந்திடா
வண்ணம் வயங்கியவஞ்செழுத்துணர்த்தி, யருப்புவெம்முலையா
ள்பங்கில்வீற்றிருக்கு மண்ணமன்பதத்தினிலடைந்தார். ௫

கனைத்துணர்விரிந்தகொன்றைநறுந்தேன்றுளிக்குநளிர்புனற்செ
ஞ்சடைக்காட்டிட்,புனிற்றிளந்திங்கண்மிலைந்ததற்புருடன்பொ
ன்னடித்தாமரைப்போது, நினைப்பவர்பிறவிநெடுங்கடல்படியார்
நினையிதழ்நறுமுகைகுடைந்து, கனைத்துவண்டிமிருங் காந்தா
ஞ்சாரற் கயிலைசென்றடைவொன்றினைத்தான். ௬

தற்புருடத்தோற்றமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௧௦௯.

பதினான்காவது

அகோரத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இருவினையுருக்கியரியமாதவத்தா லிறைவனைவணங்கியகுத
னருவினையகற்று முனிவிர்காள்கடவு ளருமறைக்கிழவன்முன்
காண, வெரியுமிழ்நறுவாளகோரன்வந்துற்ற வாறெலாமியம்பு
வனென்று, வருமுலைபங்கி னன்னலைப்போற்றி மலைவறத்தெ
ரிக்கலுற்றனனால். ௧

ஆங்கதற்கப்பா லிலகற்பத்தி லைந்திருதென்னடிமைப்பாவை,
வீங்குநீருலகை முழுவதும்புரந்த விண்ணவனினைந்துறைகாலைத்,
தேங்கொள்பூங்கடுக்கைச் செஞ்சடையிலைச்சித் திரப்புறவான்க
ரத்தேந்தித், தூங்கிருள்பழுத்தவடிவொடகோரத் தோன்றிய
தாங்கவன்முன்னம். ௨

பின்றிகழ்சடைக்காட்டினிலணிந்த விளங்குவெண்மதியினை
னோக்கிக், கன்றுமாச்செறிப்பக்கமலமெனக்கருதி லெழுந்திபட

வுடன்னிடத்திற், றுன்றுநான்மறைதேர் நால்வர்வந்துதித்தாங் குலங்கவோராயிரம் பருவஞ், சென்றதன்பின்னர் வள்ளல்பூங் கமலச் சேவடிநீழல்சென்றடைந்தார். ௩

அன்னமாய்ப்பறந்து தேடியுங்காணு வண்ணல்வந்தெய்தி னனென்னுத், தன்னுளங்குழைந்து மதுக்கவிழ்த்தலருந் தாம ரைப்பொகுட்டுறையண்ணல், பொன்னவிர்கடுக்கைநறுமலர்து விப் புனைகழற்சேவடிவணங்கிப், பன்னருஞ்சிறப்பிற்பழமறை காணுப் பரமனைப்பழிச்சினன்பணிந்தான். ௪

தாட்டுணைபணிந்தான்முகன்செய்ய தாமரைமுகமலர்நோக் கிப், பாட்டளிமுரலுங்கடுக்கையந்தொடையல் படர்சடைமிலை ந்தருளண்ணல், வாட்டமில்குணத்தா னின்னுளங்குழைந்து வழுத்தினகேட்டுளமகிழ்ந்தேம், வேட்டனகேட்டிமாமறைதுகி ழுவ விரைவினில்வழங்குவனென்றான். ௫

மழலையாழ்மிழற்றும் வரியளிகோடி மன்றலம்புதுமுகை கு டையப், பொழிமதுக்கவிழ்க்கும்பொன்னிதழ்க்கமலப் பூம்பொ குட் டுறைதருமண்ணல், குழவிவெண்டிங்க டவழ்தருசடிலக் குழகனின்குரைகழலடியிற், பழுதறுமன்பேவேட்டனனதுவே பணித்தியென் றிரத்தலும்பணித்தான். ௬

அகோரத்தோற்றமுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-உ0எ.

பதினைந்தாவது

அகோரமந்திரமுரைத்த வத்தியாயம்.

பொருப்புவிற்குழைத்தப்ங்கவன்மலர்வாழ் புனிதனைநோக்கி னன்புகல்வான், முருக்கிதழ்ச்செவ்வாய்மகளிர்தமாவி முழுத்த

வராவினைச்செகுத்தோ, ருரைத்திடற்கரிய மறையவர்ச்செகுத்
தோ ரொளிமுடியரசனாமாய்த்தோ, ரருத்தியான்மெய்ம்மையுண
ர்வினிலுயர்ந்த குரவருக்கிடரினையளித்தோர். ௧

வெந்நரகளிக்குங்கள்ளினையயின்றோர் வேறொருவற்குரித்தா
ய, கன்னலங்குதலை மடவரல்வெய்ய கதிர்முலைக்கனிவுறக்கலந்
தோர், மின்றெளிவிரிக்கு மாழையைக்கவர்ந்தோர் விடத்தினை
யொருவருக்களித்தோ, ரின்னருள்புரியென் றடைந்தவர் தம்பா
லீறிலாத்தீவினையிழைத்தோர். ௨

தாறுபாய்களிறு கவிழும்வெங்கானத் துத் தாமவேலானைசவிட்
டிருந்தோர், வீறுசேரொன்றனன்பருக்கிடரை விளைத்தவர்வெவ்
வினையகற்று, மாறுகிமறைபோரத்தியவேள்வி யாற்றிடாவகைக
யிடர்புரிந்தோர், சீறடிமழலைமகவிறுவன்னாவி தீவினையெய்திடச்
செகுத்தோர். ௩

இகளாறுமெனதுமந்திரமொருநா ளுயிர்முறைதுணிந்தோதின்,
லகவிருவிசும்பிற்பருதிகண்டிரியு மாயிருட்படலமேபோலப், புக
லும்வெம்பாவமனைத்தும்விட்டகலப் போகுயரண்டமுமொருவி,
நகுமணிக்கோட்டுக் கயிலையாஸ்வளாயி னண்ணிணனிணிதுவீற்றி
ருப்பார். ௪

அரியவிம்மறையை யன்றாலயமவர்க்கு மன்புடையிலிக்குமென்
குளா, முருகியவன்பர் தம்மிசிறந்தி யாதலாலுயிர்தருக்கம
மும், விரைமலர்க்கமலப்பொருட்டினேமலுறையும் விண்ணவர்க்குணர்
த்தனமென்றுங், கருதிதம்பமுத்தமனையிடத்துண்ணைல் சமுறியின
ன்றனதுளாங்கனிந்தே. ௫

அகோரமந்திரமுரைத்த வத்தியாய முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௨௧௨.

பதினாறுவது
ஈசானத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

ஐம்புலனடக்கியருமறைகாணு வண்ணலேவணங்குமாதவத் தீர், கம்பமாகளிற்றி னீருரிபோர்த்த கண்ணுதற்கடவுளீசான ன், வம்புலாங்கமலத் தண்ணன்முன்காண வந்தவாறுரைப்பனி யானென்று, வம்பருங்காணு வண்ணலேப்போற்றிச் சூதமாமு னிவரனுரைப்பான். ௧

மற்றதன்பின்னர் விச்சுவரூப கற்பத்தின்மலையனிலேப்பச், கற்றைவெண்ணிலவுத் திங்கள்வாண்முகமுங் கண்களுங்கருஞ் செய்வாளெயிறும், பொற்றொடித்தோளுஞ்செப்பசிறடியும்பொ ம்மல்வெம்முலேயுமோர்நான்கா, யுற்றசொற்கிழத்தியொழுகொ ளிப்பளிங்கி னுருவொடுமுதித்தனண்மன்றோ. ௨

துளங்கொளிப்படிக வடிவினைத்தாங்கிச் சுடர்மதியிலேத்தவீ சானன், விளங்கிடவர்தோன்றினன்றோன்ற விரிஞ்சன்வீழ்ந் திறைஞ்சினன்பரவ, வுளங்களிந்தீசன்வேண்டுவேட்டு யுதவு வனென்றலுநின்ற, விளங்கதிர்மணிப்பூ ணின்னைத்துவர்வா யீங்கிவள்யாவளென்றுரைத்தான். ௩

உரைத்தலுமமுதமுற்றிருந்தொழுகு மொழிமதி முடிசோ்ந்த ன்மேற்கொன்றை, யரிந்துவெண்டரங்கக் கங்கைநீரொழுகு ம ழல்விழுதனையவார்சடையோன், திருத்தகுபிரமன் மாயனே முதல தேவர்கள்யாரையுமீன்ற, வொருத்திமற்றிவளாம் வெள் ளிவெண்கமலத் துன்றதருவாணியென்றுரைத்தான். ௪

படைவியோர்காலாற்பொற்றிரேணுமுதல தேவர்கள்யாரையு ம்புரப்பா, னுடைகடல்விடத்தையுண்டவன்முன்ன ரொளிவெ

னுநால்வர்வந்துதித்தா, ரிடர்படாதெறிநீ ருலகெலாமுய்ய வேத்
தருமஞ்செழுத்துணர்த்தி, மடவரல்பங்கனைறைகழன்மிளிரு ம
ணிமலர்ச்சேவடியடைந்தார். ௫

மொழிதருபஞ்சப் பிரமநற்கதையை முடிவுறக்கேட்பவர்நா
ளும், பழுதறப்பகர்வோர் யாவரேயெனினும் பசுங்கதிர்த்திசைதி
சைபரப்பும், குழவிவெண்டிங்கள்குளிர்சடையிலைந்த கொழுங்
கதிர்மணிமிடற்றிறைவன், மழலையஞ்சுரும்பர் வீழ்ந்தறிகல்லா
மலரடியடைவனென்றிசைத்தான். ௬

ஈசானத்தோற்றமுரைத்த வத்தியாயமுற்றும்.
ஆகத்திருவிருத்தம் - ௨௪௬.

பதினேமூவது
மகாலிங்கந்தோன்றிய வத்தியாயம்.

ஈறிலாதநல்லிலிங்கமற் றெவ்வகைதோன்று
மாறிலாதுறையிலிங்கயா ரிலிங்கத்தில்வழுத்த
வாறுதாழ்சடையண்ணலெவ் வகையமர்ந்தருளுங்
கூறல்வேண்டுமென் றுரைத்தனர் கோதிலாமுனிவர். ௧

இன்னவாசகந்தேவர் தென்புலத்தவர்யாரு
மன்னமீதுயர்த்தவனுடன் கேட்டலுமவர்க்கு
முன்னங்கூறினனுங்கதை மொழியலென்றிறைநா
ளுன்னிமெய்த்தவச் சூதமாமுனிவரனுரைப்பான். ௨

விறையமின்றெருளிபிரதானமே விருத்தியலிலிங்கந்
செறிபசுங்கதிர்த்தெண்ணிலா முடித்தசெஞ்சடைக்
கறைமிடற்றாங்கண்ணுதற் கடவுளேயிலிங்கி
யிறையிலிங்கத்தினன்னல்வாழ் தன்மைமற்றதுகேளாம். ௩

முன்னந்தண்டுளி முகில்வறந் தொழிதர வெய்யோன்
றுன்னும்வெங்கதிர்க்கொடுந்தழல் சுடுதலாற்றொலைந்து
மன்னிநிற்பனதிரிவன யாவையுமாயப்
பின்னல்வெண்டிரைத்தடங் கடல்கோத்ததுபெருகி.

இலகுபொன்முடியாயிர மிருவிசும்புருவு
மலைமுகந்ததோளாயிரமாயிரமலர்த்தா
ணிலவவாயிரங்கண்மலர் வளர்ந்தனனெடுநீ
ரலைபுரட்டுதெண்கடலிடைப் பசுந்துழாயண்ணல்.

அயிலெயிற்றசெஞ்சூட்டரா வணையின்மேலந்தண்
புயலெனத்துயில்புனத்துழாய் மாயனைப்பொருந்தி
மயன்முகிழ்த்தெழுமனத்தனும் மாமறைக்கிழவன்
றுயிலெழுப்பினன்றொடிபொலி தடக்கையாற்புடைத்தே.

கதிர்மருட்டியதிகிரிமால் கண்மலர்விழித்து
மதலையெவ்வுழியிருந்திவண் வந்தனையெனலு
முதல்வனாகியவென்னைநீ முதுக்குறைவின்றிப்
புதல்வனாமெனப்புகன்றவா றென்னெனப்புகன்றான்.

பரவைவெண்டிரையுலகெலாம் படைத்தளித்தழிக்கு
மொருவன்யானென தொண்டிறற்குழவிநீயெனலு
மெரியெனக்கனன்றீர்ந்துழாய் முகிலுடனிகலி
வெருவுவெஞ்சமம்விளைத்தனன் விரைமலர்க்கடவுள்.

ஆயகாலையிலாதியோ டந்தமற்றின்றிக்
காயமற்பிழம்பாகிமுன் கண்ணுதலொன்ற
மேயவவ்வுருவறிகலர் விரைமலரயனுஞ்
சேயதாமரைக்கண்ணனும் வெருவினர்திகைத்தார்.

விரிகதிர்ச்சிறையன்னமாய் விசும்பிடைப்பறந்து
தெரிவதற்கரிதாமுடி தேடுதியானு
முருவக்கேழலாயுடை திரைப்பார்முகங்கீண்டு
துருவத்தேடுவனடியெனத் துழாய்முடியுரைத்தான். ௧௦

உறைந்தமாயவனேனமா யகனிலங்கீண்டு
செறிந்தபூங்கழற்சேவடித் தாமரைதேட
நிறைந்தவொண்கதிர்க்கற்றைகா னெடுமுடிவிசும்பிற்
பறந்துதேடினனன்னமாய்ப் பழமறைக்கிழவன் ௧௧

பீடுசாலுமவ்விருவரும் பெய்மலரடியு
மாடகக்கதிர்முடியுமோ ராயிரம்பருவந்
தேடிக்காண்கிலர்திகழ்தரு செந்தழற்பிழம்பா
நீடிலிங்கத்தின்முன்னம்வந் தெய்தினர்நின்றார் ௧௨

கன்றுநெஞ்சினராகியாங் கிருவருங்கலங்கி
நின்றகாலையினீடருட் பிழம்புசீத்தெறிக்குந்
துன்றும்வெவ்வழலாகிமுன் றோன்றிலிங்கத்தி
னொன்றுபேரொலியோமென வொலித்ததையன்றே. ௧௩

வேறு.

ஒலிதோன்றியபின்னீசான மோங்குமுடியாய்த்தற்புருட
மலர்வாண்முகமாய்முருகொழுகு மந்தாரகலமகோரமாய்
மலிவின்றுகமனைநவழுத்தும் வாமதேவங்குய்யமா
யிலகுபொன்னங்கழற்கமல மிணைநிர்சத்தியோசாதமாய். ௧௪

மாலைக்குழவிமதிநிலவின் மந்தாகினிச்செஞ்சடைத்தவழ
பால்வெண்ணீற்றினிலவுமொளி பழுத்ததற்சன் முகிழ்த்திலை
நாலக்கணவிழ்க்கனல்கின்ற சணிச்சியொடுமான்காத்திலக [ங்கக்
வாலம்பழுக்குநிலைவிடம் றன்னைத்தோன்றத்துதித்தனரால். ௧௫

மகாலிங்கந்தோன்றிய வத்தியாயமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௫௫.

பதினெட்டாவது
மாயனுமயனுந்துதித்த வத்தியாயம்.

---*---

என்றுபுகலமர் தவத்தோ ரெரிபொற்கோட்டுமேருநெடுங்
குன்றந்தழைத்ததிணிதடந்தோட் குழகன்றிருமுன்மற்றவர்க
ணின்றுதுதித்தவாறெமக்கு நிகழ்த்துகென்னவுளமுருகிக்
கொன்றைமுடித்தோனடிபரவிச் சூதமுனிவன்கூறுவான். ௧

கண்டுமுடிமேற்கைகூப்பிக் கண்ணீர்வாரமயிர்பொடிப்ப
விண்டமலர்தூயானந்த வெள்ளத்தழுந்தியுள்ளுருகிப்
பண்டைமறையுங்காணாத பதுமமலர்மெல்லடிவீழ்ந்து
வண்டுபடுபூந்துளவோனு மலர்நான்முகனும்வழுத்தினரால். ௨

கிடைத்தற்கரிய வரும்பொருளே கேடின்றுயர்ந்த பரஞ்சுடரே, யுடைக்கும்பரவைக் கடல்விடமுண் டலவாதெம்மைப்புரந்தோனே, படைத்துமளித்துமெவ்வுலகும் பாழ்பட்டொளியக்கடைநாளிற், றுடைத்தும்விளையாட் டயர்கின்ற தோன்றாலுன்னைப்போற்றுவமே. ௩

கீற்றுமதியந்தவழ்குடுமிக் கிளர்செம்பவளமால்வரையே
யாற்றுந்தவத்தின்றுறைபோய வன்பர்படியுமருட்கடலே
யூற்றும்பசுந்தேன்கமழ்கொன்றை யுருவப்பசுந்தார்நறுந்தாரு
தூற்றுந்தரங்கக்கங்கைபுனை தோன்றாலுன்னைப்போற்றுவமே.

அரியபழநான்மறைக்கொழுந்தா யமலமாகியழிவின்றி
யெரியுங்கனலாய்வெண்மதியா யெறிக்குங்கதிர்செய்பருதியா
யுருவாயருவாய்ச்சின்மயமா யுள்ளும்புறம்புமுணர்வரிய
துரியாதீதமாய்நின்ற தோன்றாலுன்னைப்போற்றுவமே.

என்னைப்பரவவருள்பெருகி யிளைக்குழவிப்பிறையலங்கல், மின்
னிற்றிகழுஞ்செஞ்சடையின் மிலைந்ததனிவானவனுவந்து, பொ
ன்னிற்றிகழுந்தடமார்பிற் பொறிவண்டறைய முகைநெகிழுங்,
கன்னித்துளவமாலைபுனை கண்ணன்முகநோக்கினனுரைப்பான்.

மாயனுமயனுந்துதித்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௨௱௬௯.

பத்தொன்பதாவது

மாயனுமயனும் வரம்பெற்ற வத்தியாயம்.

உற்றென்வலப்பாற்றேமலரோ னுதித்தானிடப்பாலிற்றிகழுங்
கொற்றத்திகிரிப்படை தாங்குங்குமரநீவந்துதித்தனையா
மற்றென்புதல்வரிருவீரு மனக்குவிழைந்தகேண்மினெனப்
பொற்றபசும்பொனுடைபுனை பூவைவண்ணனுரைசெய்யும். ௧

கொன்றைகமழுங்குளிர்சடிலக் குழகாவுள்ளங்குழைந்துருகி
யென்றுமுனதுதாமரைத்தா ளிறைஞ்சுமன்பேவேட்டனமா
லன்றியிழைவதேதொராக்கென் றறைதலோடுமருள்கூர்ந்து
நன்றுதந்தேமெனாநீட்டு நம்பன்கூறலுற்றனனால். ௨

முதியதனிநான்மறைவடித்த முதல்வன்பாத்மகற்பத்துன்
புதல்வனெயியுர்இவனார்ந்தா மனையிற்றோன்றுவனுந்
கதிரிற்றிகழுமென்னுருவங் காண்பேரனாளிதுமென்று
மதுவார்ந்தொழுகும்பங்கயக்கை வனையுமுதல்வனையுரைத்தனனால்.

அன்றுமுதலாயிலிங்கத்தி லண்டபரிபூரணமாகி, யொன்
றாய்ப்பழைய மறைநான்கு முணர்தற்கெட்டா துயிர்க்குயிராய்,
நின்றமுதல்வனினிதமர்ந்து வினையுமன்பர்தமையாளி, மன்றல்
கமழுந்தோட்டு மலராயிரந்தூய்மைநந்தருளும். ௩

இன்னதனை நகையயொர்நாளு மீளவெண்டிக்ச்ட்டமங்கண்ணி
பொன்னஞ்சடிலமிசைப்புனைந்த புனிதன்முன்னர்நவில்கின்றே
ருன்னரிய முக்கண்ணை னுருவுதாங்கியுறைதவரெனப்
பன்னுமறைதேர்முனிவரர்க்குப் பகர்நான்குதமாமுனிவன். இ

மாயனுமயனும்வரம்பெற்ற வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - உ௪௪.

இருபதாவது

மாயனுந்திக்கமலத்தில்

நான்முகன்றோன்றிய வத்தியாயம்.

தகைசேர்பாத்மகற்பத்தித் தண்ணெங்கமலைநாம்பொருட்டி
லகமீர்ப்புவனம்பூத்தமறை யண்ணை லுதித்தவாறுமவ
னைகவெண்ணிலதவழ்சடில நட்பண்வடிவங்கண்டதுவும்
புகலவேண்டுமெனமுனிவர் புகன்றான்குதமாமுனிவன். ௧

வேறு.

பாம்பிணைசுருட்டுபடுபுனற்பெருக்கிற் பருமணிநெடுமுடிசெஞ்சூட்ட, வாயிரம்பகுவாய்ப்பார்தன்மேற்றுயிலு மண்ணைநனருகுறச்சென்று, சேயநான்மலரோன்யானெனீயென்று செப்பலுந்திகிரியஞ்செல்வன், மாயிருஞாலமுழுவதும்பூத்த மாயன்யானென்றுவாத்தனனால். உ

இனையவாறுரைப்பக்கேட்டநான்மறையோ னெனதுரையைழியதாய்ப்புகுந்து, முனைவவெவ்வுலகுங்காண்டிநீயென்று மொழிதலும்வாயினுளெய்தி, யனையவன்வயிற்றினூடிபெருமாலாற்றியாவையுங்கண்டு, தனைவிவண்டாள் பகர்தலுமாயனாத கண்ணனே ன்மீன்டெய்தினன்மாமே. ௩

மாயவன்மலரோன் மலர்முகநோக்கி மலர்தலையுலகமற்றெ
வையுஞ், சேயவென்வாயுட்புகுந்துநீகாண்டி யென்றலுந்திசை
முகனெய்திப், பாய்திரைப்புவனமாயிரம்பருவம்பரிவுடன்கண்டு
மீள்காலை, யாயவன்வாரா வகைவழியெல்லா மமைவுறச்சுருக்கி
னன்மன்றே. ச

மன்னியமறையோன்வருவழியொன்றுங் காண்கலனுறுபுண்
மயங்கிக், கன்னிவண்டிமிரும்பசுந்துழாயலங்கற் கண்ணனைவல்
லஞ்சுழியுந்திப், பொன்னிதழ்க்கமலத்தாட்புழைவழியாய்ப்புறத்
தினிற் பொருக்கெனவெய்தி, மின்னுறக்கொளிரும் விரைமலர்ப்
பொகுட்டில்விழைவுடனுறைந்திடுகாலை. ரு

கலைமதிகொழித்தநெடுநிலாவோடு பெருகியகங்கைநீர்வெள்
ளத், தலைதவழ்ந்தென்ன வனிதுதல்வெண்ணீற் றவிரொளிதி
சைதிசைபரக்கப், புலவுநாறழல்வாய்மூவிலைச்சூலம் பொங்கழ
* றும்பிடத்திரித்து, மலைமகள்கொழுநனங்கவர்முன்னமகிழ்வு
டனெய்தினன்மாதோ. சு

* தும்மல்-விடுதல்.

பற்றலர்புரங்கள்பட்டெரிதவழப் பவளவாய்க்குறுநகைமுகி
ழ்த்த, கற்றைவார்சடையோனுயிர்ப்பிறுத்தாய கடிகமழ்கமலபீ
டன்றனையை, வெற்றுநீர்த்தரங்கக்கருங்கடற்றுயிலு மிறைவனைதி
ழின்முகநோக்கி, யற்றமின்மறைகள்வளர்தருநன்று வண்ணனன்
மதிவையிலைபுகலும். எ

என்வயிற்றிடையுட்புகுந்துநீயுலகம்யாவையுங் கண்டுமீண்
டனையா, லுன்வயிற்றிடையுளாயிரம்பருவ முலகெலாங்கண்டு
மீள்காலைத், தன்னிடாவண்ணம் வழியெலாஞ்சுருக்கித் துயரி
ழைத்ததுமற்றன்றிப், பொன்னிதழ்க்கமலங்காற்றிருவனைய
ப்புரித்ததெனியம்புதியென்றான். அ

அற்றமினினதுபெருமைகாண்பதற்கா வழியெலாமடைத்த தையல்லாற், செற்றமீக்கூரப் புரிந்தனனல்லே னென்னுமைழச் சிறந்துதோன்றுதலான், மற்றுனையென்றன்புதல்வனுமென்றும் வள்ளிதழ்க்கமலமேவுதலாற், பொற்றசெங்கமல யோனியாமென்றும் புகல்வனொன்றுரைத்தனன்மாயோன். ௯

செய்யதாமரைப்பூங்கண்ண னிவ்வாறு செப்பலுஞ்செழுமறைக்கிழவ, னையிருகையுமழல்விழிநுதலுமவிர் மதிபுனைந்தசெஞ்சிகையும், பையவிழ்தூத்திப்பருமணிச்சூட்டுப் பஃறலையரவகங்கணமு, மையெழில்கவற்றுமிடறுமின்றிலங்க வந்தவன்யாவனென்றுரைத்தான். ௧௦

தன்னிகர்தானேயன்றிவேறில்லாத்தலைவன்மற்றீங்கிவனுக்கு, மன்னவனுயிர்ப்பா லாகுமென்கமல மசைந்ததென் றியம்பலுமம்ம, வென்னையுமழியாசின்னையுமன்றியிறையவன்யாவனேயெனுப், பொன்னிதழ்க்கமலப்பொகுட்டு நான்முகத்தோன்புகறலுமாயவன்புகலும். ௧௧

அழிந்திடாப்பொருளாயகண்டமா யொன்முயாதியாயமலமாயின்னும்,பழந்தனிமறையுங்காண்பதற்கரியபரஞ்சுடராகிவெண்ணீற்றுக், குழந்தைவெண்மதியம்புனைந்துலைறகின்ற குழகனைக்கூரறிவெல்லா, மிழந்திவணிவ்வாறிசைத்தனை யறிந்தோரியாவர்மற்றிவ்வகையிசைப்பார். ௧௨

மலைமகள்கொழுநன்பீசிநீபீச மற்றியானியோனிதன்பீச, மூலகெலாமுன்னந்தோற்றுவிப்பதற்கெனியோனியில்வைத்தனன்வைப்ப, வலர்கதிர்ப்பசும்பொ னண்டம்வந்துதித்தோராயிரமாண்டலைபுரட்டுங், கலிகெழுபரவைக்கடற்கிடந்தெறியுங்காற்றினாற்கரந்ததையன்றே. ௧௩

உடைந்தபேரண்டந்தனக்குமண்கீழோ டோங்குயர்விசும்பு
மேலோடாய்க், கிடந்ததாலதன்பினின்னுடையறிவாற் கேடிலா
ச்சனகனேமுதலா, யடைந்தனரவராங்கவர்படரு மைம்பொ
றியவித்தனர்யாவுங், கடந்துமேலாகிநின்றருண்முக்கட் கனியி
னுக்கன்புபூண்டனரால். ௧௪

இன்னணங்கற்பந்தொறுமினக்கிறைவன் மாயையான்மோக
ம்வந்தெய்து, மன்னநின்மோகந்தவிர்ந்திடும் வண்ணமாரழற்சு
டலையினடித்த, முன்னவற்றொழுதிதொழாயெனி லவன்றன்மு
ச்சிறுண்முடிகுவையென்னக், கன்னியந்துளவ மாலொடுவிரிஞ்
சன் கண்ணுதலடிமலர்பணிந்தான். ௧௫

மாயவனுந்தியில் நான்முகன்றோன்றிய வத்தியாயமுற்றும்.

ஆகதிருவிருத்தம்-௨௫௧.

இருபத்தொன்றாவது
நான்முகனுமாயனுந்துதித்த வத்தியாயம்.

வணங்கினனெனலுமாதவர்முனிவர் மாயனுமலர்மிசையயனு
மணங்கரவசைத்தவண்ணலையெவ்வா றகங்குழைந்தேத்தினெ
ன்ன, மணங்கமழ்கடுக்கைத் தொடையருழ்மவுலி வரதனைவழு
த்திமாசகன்ற, குணங்களான்மிக்க சூதமாமுனிவன் கோதறக்
கூறலுற்றனனால். ௧

வேறு.

நினைப்புமாய்மறப்புமாகி நினைவினுக்கெட்டாதொன்று
யனைத்துமாய்நின்றாய்போற்றி யருமறைக்கொழுந்தேபோற்றி
கனைத்துவண்டிமிரவின்றாங் கடுக்கையங்கண்ணியோடு
புனிற்றுவெண்டிங்கட்கண்ணிபுனைந்தசெஞ்சடையாய்போற்றி.

நள்ளிருட்பிழம்புமேயு நாகிளந்திங்கணைக்கிப்
புள்ளிமான்பிள்ளைதுள்ளும் புனைமலர்க்கரத்தாய்போற்றி
யுள்ளொடுபுறமாயெங்கு முறைந்தருளிறைவாபோற்றி
வெள்ளியம்பொருப்பில்வாழும் விமலனேபோற்றிபோற்றி. ௩

பொருப்புவிற்குழையவாங்கிப் புரமெரிமடுத்தாய்போற்றி
மருக்கமழ்குமுதச்செவ்வாய் மலைமகள்கொழுநபோற்றி
நெருப்புருவெடுத்துமுன்ன நெடுவிசும்புருவிநின்ற
வருட்பெருங்கடலேபோற்றி யமலனேபோற்றிபோற்றி. ௪

கண்டயுகமதனிற்றோன்று மண்டங்கள்கழியவுண்டு
சுடலையினடித்தாய்போற்றி சுடரொளிப்பிழம்பேபோற்றி
விடவரவணிந்தாய்போற்றி மெய்யுணர்வெய்திநின்ற
வடியவர்க்கருள்வாய்போற்றி யண்ணலேபோற்றிபோற்றி. ௫

கூற்றுயிர்குடித்தபைம்பொற் குரைகழற்றாளோய்போற்றி
யேற்றுயர்கொடியாய்போற்றி யீறிலாமுதலேபோற்றி
யாற்றருந்தவத்தின்மிக்கோ ரறிந்துணர்பொருளேபோற்றி
யூற்றுதேங்கொன்றைவேணி யொருவனேபோற்றிபோற்றி. ௬

என்றவர்வழுத்தக்கேட்ட விறைவனுமவரைநோக்கி
நன்றுநீர்துதித்தீருள்ளம் வேட்டனநவில்கவென்னக்
கொன்றைதாழ்சடையோயுன்றன் குரைகழற்கமலத்தாளன்
பொன்றுமேயுள்ளநீங்கா துறைந்திடவேண்டுமென்றார். ௭

மற்றவர்க்கருளியீசன் மலரவன்முகத்தைநோக்கிப்
பொற்றசெங்கமலத்தோயெம் புதல்வனீநினக்குநாளுங்
குற்றமின்றுயர்ந்தஞான மருளினமென்றுகூறி
யெற்றுநீர்க்கங்கைவேணி யிறையவன்மறைந்தானன்றே. ௮

நான்முகனுமாயனுந்துதித்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௨௬௭.

இருபத்திரண்டாவது
பஞ்சப்பிரமத்தின்சிறப்புரைத்த வத்தியாயம்.

படுதிரைப்புவனம்யாவும் படைத்திடவேண்டுமென்றுத்
தடமலர்க்கமலப்புத்தே டவம்பலபுரிந்தான்மற்றவ்
வொடிவினற்றவத்தினாலெவ் வுலகுமுற்றிடாமைநோக்கிக்
கடிமலர்க்கண்ணீர்வாரக் கரையழிவெகுளியுற்றான். க

கண்வழியொழுகுநீராற் கதழ்சினக்கொடியபாந்த
ளெண்ணறத்தோன்றநோக்கி யிரங்கிமெய்சோர்ந்துவாடிப்
புண்ணியத்தவத்திற்கீதோ பொருந்துவதென்றுகூறித்
தண்ணறுங்கமலத்தண்ண றன்னுயிர்நீங்கினானே. உ

வழிமதுக்கலுழிமாந்தி வண்டுவீழ்கமலவீட்டுப்
பழமறைக்கிழவனாவி பதினொருதேவராகி
யழுதுகொண்டுதித்தலாலே யாங்கவர்தம்மைஞால
மொழிவருசிறப்புவாய்ந்த வுருத்திரரென்னுமன்றே. ௩

ஆங்கவருதித்தபின்ன ரவ்வுழிவிரைவினெய்தி
மாங்குயிற்குதலைபங்கன் மலரவற்காவிநல்கத்
தீங்கிலாமறையோனாவி யடைந்துசெஞ்சடிலத்தண்ணல்
பூங்கழல்வணங்கிநின்று பொருவில்சீர்வழுத்தினானே. ௪

மாற்றருஞ்சிறப்புவாய்ந்த மாமறைக்கிழவன்றாழ்ந்து
போற்றலுமுவகைபூத்துப் புரிமுறுக்கவிழ்ந்துநீங்கே
ஊற்றுபூங்கடுக்கைமாலை யொருவனுள்ளுருகிமுன்னந்
தோற்றியவண்ணமெல்லாஞ் சொல்லுவான்றொடங்கினானே. ௫

பனிமலர்ப்பொகுட்டில்வாழும் பழமறைக்கிழவநீமு
னினைவுறுங்காலைவந்து நின்முனந்தோன்றலாலே
தனையெரின்றிநின்ற சத்தியோசாதமென்ன
வெனைமுழுமறைகளெல்லா மின்னமுமிசைக்குமாதோ. ௬

அள்ளலஞ்சேற்றினூறு மரக்கிதழ்முளரிவாட
வெள்ளிவெண்ணிலவுகான்று விசும்பெழுதிங்களென்னத்
தெள்ளொளிவாய்ந்துகாயத் திரியெனுநாமஞ்சேர்ந்த
வொள்ளிழைமடந்தையாங்கெனுழையினிலுதித்தாண்மன்றே.

எண்கண்வானவர்முன்ன மெண்ணியகாலந்தன்னில்
விண்கிழித்தெழுந்தசெய்ய வெயிலிளம்பருதிபோலக்
கண்கவரழகுவாய்ந்து கண்ணுறுந்திறத்தாலென்னைத்
தெண்கடலுலகம்வாம தேவனென்றுரைக்குமாதோ. ௮

மாயிருஞாலம்போர்த்த மல்கிருட்பிழம்புசீத்துப்
பாயலைமுகட்டிற்றோன்றும் பருதியஞ்செல்வனென்னச்
சேயொளிவாய்ந்துகாயத் திரியெனச்செப்புநாமத்
தாய்வளைமடந்தையென்பா லாயிடைத்தோன்றினாளோ. ௯

தாதவிழ்கமலவீட்டுத் தலைவநீபுருடனாக
மாதவங்கோடிசெய்து மனத்தினீநினைக்குங்காலை
யேதமினினதுமுன்ன மெய்தலாலெனக்குநாமங்
கோதிறற்புருடனென்னக் கூறுநான்மறையுமன்றே. ௧௦

தழன்முகம்பழுத்தசெய்ய தமனியமழுங்கமாறு
வொழுகொளிவாய்ந்துகாயத் திரியெனவோதுநாமத்
தழகுவீற்றிருந்தபொம்ம லணிமுலைப்பவளச்செவ்வா
யிழைபுனைமருங்குன்மாது மென்னுழைத்தோன்றினாளோ ௧௧

நிரையிதழ்க்கமலத்தோய்நீ நினையுமக்காலந்தன்னிற்
கருநிறம்பழுத்துமற்றுன் கண்முனந்தோன்றினேனவ்
வுருவமேகோரமல்லா லுலைவறவியற்றுகின்ற
வரியநற்றழலகோர மாதலாலகோரமென்பார் ௧௨

அலர்கதிர்முத்தஞ்சிந்தி யலைதவழ்கடலிற்றோன்றுங்
கலைமதிமழுங்கப்போர்த்த காரிருட்பிழம்பின்குப்பை
மலையுமேனியளாய்க்காயத் திரியெனும்வாட்கணங்கை
யுலகமீரேழும்போற்ற வென்றுமையுதித்தாண்மன்னோ. ௧௩

ஆறறிமறையோர்செல்வ மனைத்துமாய்நின்றவென்னைத்
தேறிநின்றுளத்தினூடு திகழ்தரநினைத்தகாலை
யீறிலீசானனென்ன வெடுத்துநான்மறையுமேத்த
வீறுசேர்விச்சுவரூப மாகமுன்விளங்கினேனால். ௧௪

விரிதலையுலகம்போற்றும் விச்சுவரூபமாக
வருள்கனிந்தொருருக்காயத் திரியுமாங்குதித்தாண்மற்றவ்
வுருவினையகம்பினோடு முணர்ந்துளமுருகவல்லா
ரிருவினைகடிந்துமாயா வின்பமுற்றிருப்பர்மன்னோ. ௧௫

பஞ்சப்பிரமத்தின்சிறப்புரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௨௮௨.

இருபத்துமூன்றாவது
வியாதர் வரலாறுரைத்த வத்தியாயம்.

எனவுநான்முகத்தோன்முக்க ணிறைமலரடியிற்றாழ்ந்து
துணைவினில்வியாதன்வந்து துலங்கிடத்தோன்றுமாறு
முனைவநீயெய்துமாறு மொழியெனவுரைத்தலோடுஞ்
சினவிடையுயர்த்தவண்ணல் செவ்விதிற்செப்பினானே. ௧

முறையின்வந்தெய்துமொன்று முகந்தொறுமுடிவிலாத
மறுவறுதவத்துவேத வியாதன்வந்துதிப்பனன்றே
னறிவருமறைகள்யாரு மறிந்திடவேண்டியன்பா
னெறியினிற்பகுத்துநான்கு முலகினினிசைத்துவானே.

உலகமுய்ந்திடுவான்ஞான மொழிவறவுணர்த்தவேண்டி
மலைவறுதவத்தோனுகி வருகுவன்யானுமென்பா
லலைவறுமன்பினோடு மடைகுவர்நால்வரன்னோர்
தலைமைசேர்ஞானமெய்திக் கயிலையங்கிரியிற்சார்வார். ரு

விண்ணவரிறையுநீயும் விரிதலையரவிற்றுஞ்சுங்
கண்ணனுமிலிங்கபூசை காதலாலியற்றியன்றே
வண்ணலம்பதங்களெய்தி யமர்ந்தினிதிருத்திரென்றுந்
தண்ணிலாமுடித்தவேணித் தனிமுதன்மறைந்தானன்றே. சு

வியாதர்வரலாறுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-உஅசு.

இருபத்துநான்காவது நீராடல்விதியுரைத்த வத்தியாயம்.

என்னலுமிலிங்கபூசை யெங்ஙனம்புரியுமாறு
பன்னுதியென்றுபோற்றிப் பழமறைமுனிவர்கேட்பக்
கன்னலிற்கனிந்ததீஞ்சொற் கனங்குழைபங்கில்வாழு
முன்னவற்றெழுதுசூத முனிவரன்மொழியலுற்றான். க

வேறு.

அந்திமதிக்கொழுந்தணியு மலர்சடையோன்மலைமகளுக்கறைந்தவாறு, நந்திதனிகேட்டுயர்ந்த சனற்குமாரமுனிவனுக்குநவிலவன்னோன், முந்தைமறைவியாதனுக்கு மொழிந்தபடியானுமக்குமொழிவனென்னுச், சிந்தைமகிழ்ந்தருந்தவர்க்குச் செயிரிகந்தசூதமுனிதெரித்தானன்றே. உ

உந்துதடந்திரைபுரட்டி யொழுகுநதிப்புனலாடலழுவின்மூழ்கன், மந்திரமோர்ந்துணர்தலென மூவகைத்தாம்யாக்கையினை

வயங்குமண்ணை, லெந்தவகைமண்ணினுமற் றெறிதிலாமந்தாகி
னிசெஞ்சடையினேற்ற, வந்தமிலாத்தனிமுதலி னடிபரவார்ம
ருவியமாசகன்றிடாரோ. ௫

மண்ணினாற்கோமயத்தான் மாமறைமந்திரங்கொடுதன் யா
க்கைமண்ணிப், புண்ணியநன்னீருகாற் பூந்துகில்வெவ் வேற
ணிந்து முழுகிப்பின்னர், கண்ணுதல்பூங்கழல்பரவி முச்சுடர்ம
ண்டிலநினைந்துகமழும்பைந்தா, ரண்ணல்வருணனைப்பரவித்தல
த்தொழுகுதண்புனலி னாடல்வேண்டும். ௬

நீராடல்விதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௯௦.

இருபத்தைந்தாவது

சந்திவந்தனைவிதியுரைத்த வத்தியாயம்.

தருப்பையினாற்பலாசிலையாற் றளையவிழுநறுமலரார் தண்ணீ
ர்தோய்த்துச், சிரத்தினின்முக்காற்றெளித்துத் தெள்ளுமறை
மந்திரத்தாற்செங்கையள்ளி, யருந்தியமுக்காலுதவியாயிரத்தெ
ட்டுருக்காயத்திரிநவின்று, குரைத்தகடன்முடித்தகதிர்க் குழ
வியினையஞ்சலிகூப்பியேத்தி. ௧

எறிகதிர்நால்வலமாக்கிமின்மலர்சேர்த்தியபுனை வினைமைப்பிலோ
ர்க்குச், செறியும்விரனுதியிறுதனிமுந்நூல்வடமாக்கித் தருப்
பைசேர்த்து, வறன்மலர்க்கைசவியுயிரவான் முனிவருக்கருளி
னாவிடமாக்கி, மறுவில்பெருவிரலதனாற் றிலோதகத்தென்புல
த்தவர்க்குமாயினல்கி. ௨

நகரின்வடபாற்குணபா னளிபுனற்றன்கரைகண்ணிப்புனல்
சைக்கொண்டு, துகளறுமுக்காலருந்தி யிருமுறைவாயினைத்து

டைத்துத்துலங்குகண்க,டிகழ்தருமுக்கிருசெவிமார்புச்சியிவை செங்கரத்தின் விரலாற்ருெட்டுப், புகழ்தருசுத்தாசமனம் பண் ணிவிரிதருப்பையின்மேற் பொருந்தமேவி. ௩

இலகுபசும்பொன்னிஞற்றருப்பையிஞற்பவித்திரமாங்கிலங் கத்தாங்கி, வலமுழந்தாண்மேல்வைத்தவிடக்கரமேல்வலக்கரத் தைவயங்கச்சேர்த்தி, யலகறுசீர்வாய்ந்தபழமறைநவிலும் * பிர மவெச்சமமையவாற்றி, நிலவுமணையிடையெய்தி யிருதாளின்ம ணிக்கலசநறுநீர்பெய்து. ௪

* பிரமவெச்சம் - பிரமயஜ்ஞம் என்னும் வடமொ ழி திரிந்துநின்றது.

அருமறைவேள்விக்கனலினொடுத்துப்பிரணவத்தை யமை யவோதி, யுரைபெறுபஞ்சப்பிரமத் தாலுச்சிநெற்றியுரங் குய்யந் தாள்கள், வரன்முறையேயிணிதணிந்து பிரணவத்தாலுடன்மு ழுதும்வயங்கமண்ணி, விரிதுகில்வேறெண்ணணிந்துவிளங்குமறைமந்திரங்கள்விளம்பவேண்டும். ௫

சந்திவந்தனைவிதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - உகூ௫.

இருபத்தாருவது
சிவபூசைவிதியுரைத்த வத்தியாயம்.

மையறுநன்னிலத்திருந்து மன்னுபிராணயாமமாபித்செய்து, மெய்யினைச் * சோடணத்தாற் * பிலாவணத்தாற் சிவதேகமாக் கிவீறு, னாயிரண்டுசெங்கரமுமைமந்துதிருமுகமுமாயவிரவெண் டிடங்க, ணையமுழுநிலவெறிக்கும் பளிக்குருவத்திறையவனையுள த்திருடி. ௧

* சோடணம்-சுடுதல். * பிலாவனம்-நனைத்தல்.

மழைக்கருங்கார் தவழ்குடுமி மலையாரப்பூஞ்சேற்றான்மாட்சி
த்தாக, மெழுக்கெறிந்தநன்னிலத்து மேம்பட்ட பசுந்தருப்பை
மேலதாக, விழைத்தகதிர்மணிவள்ளங்கவிழ்த்துநறுநீர்தெளியா
வெடுத்துச்சாந்தந், தழைத்த * விலாமிச்சநிறைதண்புனல்பாத்
தியவெள்ளந்ததும்பத்தேக்கி. ௨

* விலாமிச்சம் - விழற்புல்லின்வேர்.

திருச்சேராசமனீயபாத்திரத்திற்றக்கோலஞ்செறிந்ததீம்பூக்,
கருப்பூரஞ்சாதிக்கா யிவற்றினறும்பொடியோடு கழுநீர்பெய்து,
விரைச்சாந்துதிலங்கடுகு வெண்ணீறுபசுந்தருப்பை நறுநெய்செ
ந்நெல், மருச்சேர்ந்தமலரினுட னருக்கியபாத்திரந்தெண்ணீர்
மலியவாக்கி. ௩

களிச்சுரும்புவீழ்போதுசெஞ்சாலிவளர்தருப்பை கமழ்தாமா
லர், தெளிக்குநறுநீர்பெய்யும்பாத்திரத்திற்பெய்தந்தத் தெண்ணீ
ர்தன்னா, லளித்தருளுமீசான மந்திரங்கொண் டெவற்றினையுந்
தெளியாவன்பு, தளிர்த்திறைவன்பானர்ச்சித்தாமரைத்தாண்மல
ர்தூவித்தாழ்ந்துபோற்றி. ௪

உடைதிரைவெவ்விடமயின்றோ னொளிர்மதிசேர் முடியினை
யின்மலர்கலிவிக், கடிகமழுந்தூபமொடுதீபமிவைகல்கியருட் கட
லின்றாய, வடபுறத்தின்மலைமகளை வணங்கிவகிர்பிறைக்கோட்
டுவயங்குநால்வாய், விடல்கெழுமுகடவுளையுங் கந்தனையும்விரை
மலர்தூய்விரும்பியேத்தி. ௫

செங்கமலமலர்ப்பொகுட்டிற் செய்யதழன் * மண்டிலமு மிரு
ள்கால்சிக்கும், வெங்கதிரோன்மண்டிலமும் வெண்மதிக்கண்ம
ண்டிலமும்விளங்கநாட்டி, யங்குயர்முக்குணமிறுவியவற்றின்மி
சையுயிர்மூன்றுமமையச்சேர்த்திக், கங்கைபுனைகடவுளையாவாக
னஞ்செய் துள்ளுருகிக்கனிந்துபோற்றி. ௬

* மண்டிலம் - மண்டலமெனற்பாலது.

அண்ணன்மறைமந்திரத்தா லருக்கியமேமுதலாய வளித்து
* வாச, வெண்ணெயுடனைந்தைவகையமுதநெய்தயிர்பாலினி
யதேறற், கண்ணுடைத்தகழைக்கரும்பின் றீஞ்சாறுசெவ்விள
நீர்கமழ்தண்சாரற், புண்ணியமால்வரைச்சாந்தின் பூந்தேய்வை
யிங்கிவற்றாற்பொலியவாட்டி. ௭

* வாச எண்ணெய் என்பதற்கு-கந்ததைலமென்றுபொருள். இதனை "பிரதமங்கந்ததைலஞ்ச,, என்னு மாகம சுலோகத்தாற்காண்க. முறைவைப்பு மிதனானேயறிக.

தக்கோலஞ்சாதிக்காய்கருப்பூரந்தாமரைமற்றிவைகள்பெய்து,
மிக்கமறையெடுத்தோதுஞ் சத்தியோசாதத்தால்விளங்குசோதி,
கக்கியவாடகப்பசும்பொற் கலசத்துட்டருப்பையொடுநிறைத்த
நீராற், செக்கரொளிச்சடையோனைத் தெய்வமறைமந்திரத்தாற்
றிகழவாட்டி. ௮

ஒளிவிரிக்குமணியாடையொண் கதிர்கால்பசும்பொனுனுவரி
யுண்ட, தளிமுகில்கண் படநிவந்த தமிழ்மலயச் சந்தனம்போ
திவைகள்சாத்தி, நளியகிற்றூபந்தீப நல்லடிசில்கருப்பூரவெள்ள
டையினோடு, மளிதழையவுதவியுயர் மணிமவுலிவிரிகதிர்செய்யா
ரஞ்சூட்டி. ௯

வண்டுபடுமலர்தூவிவழுத்தியபின்மலரடியிற் றாழ்ந்துகொன்
றை, விண்டமலர்ச்சடையோனை யுளத்தினிலாவாகிக்கவேண்டு
மென்றுப், பண்டைமறையெடுத்திசைக்கு மின்னணைமாங்கவற்
குவழிபாடுசெய்வோர், தெண்டிரைவெவ்விடமயின்றோன் சேவ
டித்தாமரைமலரிற் சேர்வார்மன்றே. ௧0

சிவபூசைவிதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்-௱௫.

இருபத்தேழாவது
மானதபூசா விதியுரைத்த வத்தியாயம்.

முற்றிழைபங்கனையுளத்தில் வழிபாடுசெய்யும்வகைமொழி வனுள்ளப், பொற்றநறுங்கமலமேற் பொங்கழலின்மண்டிலமு மிரவிசெய்ய, துற்றகதிர்மண்டிலமுஞ் சுடர்மதிவெண்மண்டில முந்தொடர்ந்துநிற்கா, நற்றகுணமொருமூன்று முயிர்மூன்று மிவ்வடைவேயுறைவுன்னி. க

அனைத்துலகுந்தனியீன்றவமலையொருபாகனுயவற்றின்மீது, கனைத்துவரிவண்டிமிருங் கடுக்கையந்தார்வானவனைக்கருதல்வே ண்டும், புனிற்றுமதிப்பசுங்கொழுந்து புரிசடையிற்புனைந்த தனி ப்பொருளேயன்றி, நினைப்பவனுநினைவுமென வேறுமொருபொ ருளுளதோநினையுங்காலே. உ

ஆயினுமிவ்வகைகூறு படுத்தியழியாமுதலைமுன்னல்வேண்டுந் தாயவிருபத்தாறுந் தத்துவமாஞ்சோதியேநினைக்குந்தோன்ற லேயவவன்றனைநினையு முயிரிருபத்தைந்தாந்தத்துவமேயாகுஞ் சேயதனியவ்வியத்த மிருபத்துநான்காந்தத்துவமேசெப்பில். ௩

அறையுமகதத்துவத்தோ டகங்காரம்பஞ்சதன்மாத்திரைகளெ ன்றி, மிறையுஞானேந்தியங்கன்மேந்தியமீரைந்துடனேநீங்காதெ ன்று, முறையுமனந்தன்னுடனைம் பூதமெனவிவையாகுமொழி ந்துநின்ற, குறைவிலிருபான்மூன்றுந் தத்துவங்கள்வரன்முறை யேகூறின்மாதோ. ௪

சாற்றுமிருபத்தாறுந்தத்துவமாய் நின்றதனிமுதலேகர்த்தா, தோற்றுவர்மூவருமவன்பாற் றந்தைதாயில்லாமற்றுவார்த்தசெ வ்வாய், மாற்றரியமென்மழலை மகவில்லாவாறுபோல்வயங்குகூர் ங்கோட், டேற்றையிருகொடியுயர்த்த விறையின்றிநிலைக மில் லைமாதோ. ரு

வேறு.

என்னலுஞ்சனற்குமார னந்தியையினிதுநோக்கி
முன்னைநீயமலனென்று மொழிபவன்கருத்தாவாகின்
மன்னுமிந்தியங்கடம்மாற் சிமிழ்ப்புணப்படுமற்றெங்ஙா
னன்னவன்கருத்தாவாத லறைறயெனவறையலுற்றான். ௬௪

உறைபெறுகாலந்தன்னி லுற்றிடும்பொருள்களந்த
வரியகாலத்தைக்கர்த்தா வாக்குமத்தன்மைபோல
விரவியகுணத்தோடொன்றி விமலனுற்றுறையுங்காலே
மருவுமக்குணங்களேயவ் வரதனைக்கருத்தாவாக்கும். ௬௫

உலகமாங்கவன்றனட்ட மூர்த்தியாயொளிருஞ்செய்ய
மலைவில்பேர்வடிவமாகு மனமொழிகடந்துதூய
வலகில்பேரொளியாய்நின்ற வமலனையுணர்ந்துவாயா
னிலவுநான்மறைகட்கேனு நிகழ்த்திடலரியவாமால். ௬௬

ஒளியதாயுறையுந்தோன்ற லுலககர்த்தாமற்றல்லன்
றெளியுமாங்கவன்மேலன்பாற் றிரைக்கடலுலகமந்தக்
களைகணின்வடிவென்பாரக் களைகணுயுறையுந்தேவே
விளைதரவுளத்திஞனும் விடாதுநாமுணர்வதம்மா. ௬௭

வீறுசேரிறையுந்தானுந் தியானமும்வேறென்றோது
தேறுதலழிவிலாத பிரமநற்றியானமாகு
மாறிலிவ்வுலகமீசன் வடிவெனவுணர்கமுன்னாங்
கூறியவிறையையாவி யெனக்குறித்துணர்கபின்னர். ௬௮

செங்கயற்கண்ணிபாகன் சேவடிக்கன்புபூண்டோ
ரங்கத்திற்குறைந்தோரேனு மருங்குலமில்லாரேனு
மிங்கிவர்தம்மைநெஞ்சால் வாயினுலிகழ்ந்தோர்யாரும்
வெங்கனரகந்தன்னில் வீழ்ந்துயிர்பதைப்பர்மாதோ. ௬௯

கருங்கயன்மருட்டிநீண்டு கதிர்மணிக்குழைமேற்பாய்ந்து
பொருந்தடங்கண்ணிபங்கிற் புனிதன்றனடியிற்றாழ்ந்து
மருங்குவந்தணையாத்தாரு காவனமறையோர்யாரு
மருந்துயருழந்தாரென்ன வறைந்தனனந்திடன்றே.   கஉ

மானதப்பூசாவிதியுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆகதிருவிருத்தம்-நகள.

இருபத்தெட்டாவது
தாருகாவனத்திற்சிவன்பலியேற்கச்சென்றவத்தியாயம்.

*

ஆதியங்கடவுடாரு காவனத்தடைந்தவாறு
மாதவத்தோர்கள்யாரும் வள்ளலையிகழ்ந்தவாற்றாற்
றீதுழந்தழிந்தவாறுஞ் செப்பெனச்சனத்குமாரன்
காதன்மீக்கூரநந்தி கழறுவான்றொடங்கினனே.   க

நீற்றொளிபழுத்தநெற்றி நெடுநிலாவேணியண்ணல்
சாற்றருமுனிவரெல்லாந் தாருகாவனத்தினின்று
மாற்றியதவத்தின்றன்மை யறிந்தருள்புரிவான்வேண்டி
மாற்றருமழகுவாய்ந்த வடிவொடுமெய்தினனே.   உ

முகிழ்ந்தவாண்முறுவல்பூத்த முகத்தொடுமுக்கட்டேவன்
றிகழ்ந்தகாருருவங்கொண்டு திகம்பரனாகித்தோன்ற
வகங்கனிந்துருகியோடி வருந்தவமகளிரெல்லா
மகிழ்ந்துகார்வரவுகண்ட மடமயிற்குழாத்தின்மொய்த்தார்.   ந

வேறு.

மல்லிகைமணந்துசெறி வாசமலர்க்காவின்
மெல்லிதழவிழ்க்குமலர் கொய்தல்விழையாமே
முல்லைநகைமாதர்சிலர் முத்தணிபிறங்கச்
சில்லரியகிண்கிணி சிலம்பவெதிர்சென்றார்.   ச

வீங்குமுலைவெய்யபொறை மெல்லடிபெயர்ப்பின்
வாங்குமிடைவாழ்கில தெனக்கனா தண்மானப்
பூங்குழலிரங்கவளி பொங்குசுனையாடார்
மாங்குயின்மருட்டுமொழி மாதர்சிலர்வந்தார். ௬

சோலையுறைகிள்ளைவளை சூழ்தளிரினேந்திப்
பாலனையமென்மொழி பயிற்றலுமறந்து
சாலமணிமேகலை தளர்ந்ததுமருங்கென்
றோலமிடமாதர்சில ரோகையினடந்தார். ௭

மெல்லடியபஞ்சுசில மேவசிலமீள
வொல்லையினலத்தக மணிந்தவகையொப்பச்
செல்லுமலர்சீறடி சிவப்பவெழின்மேவும்
வல்லியெனவன்னநடை மாதர்சிலர்வந்தார். ௮

வார்குழையின்மீதுபுனை வாசமுழுநீல
மாரும்விடமின்னமுத மாக்கும்விழிபாய
பாரின்மிசைவீழுமவை போற்பரியவோடிக்
கார்மயிலையன்னசில கன்னியரடைந்தார். ௯

கோடுபடுவெம்முலை குளித்துதிரமூழ்கு
மாடன்மதன்வாளிபுறம் வீழ்வதெனவோடிப்
பாடகமென்சீறடிய பஞ்சுபடவைம்பாற்
சூடுமலர்சிந்தமட மாதர்சிலர்சூழ்ந்தார். ௰

மாகமுறநீள்குடுமி மல்லல்வரைகாணுந்
தோகையெழுந்தார்வமொடு சூழ்வதெனவோடிப்
போகிதழலங்கல்புனை பொற்றபுயநோக்கிப்
பாகின்மொழிமாதர்சிலர் பயப்பயவெதிர்ந்தார். ௰௧

ஆயிதழ்முறுக்கவிழு மங்கமலநோக்கித்
தூயசிறையன்னமிசை தொக்கனகடுப்பச்
சேயவடிமாமலர்கள் கண்டுசிலைபைங்கேழ்
வேயனையதோளியர்கள் மெல்லெனவெதிர்ந்தார். ௧௧

இன்னமுதுறிக்குவிறை பாடலிகன்மாரன்
கன்னல்வரிவெய்யசிலை தோள்கழியவாங்கித்
துன்றுமலர்வாளிபல தூவல்வளையாழப்
பொன்னெழுதுசாயலவர் பூண்முலைமடுத்தான். ௧௨

ஆங்கவர்கடப்பமிலை ரணங்கனையமாது
தாங்கிருள்கிடந்தகுழல் சோரவிழிசோர
வீங்குமுலைமென்பசலை போர்ப்பவிடையோன்மேற்
றுங்கியவுளமெதிர் செல்லநனிசார்ந்தான். ௧௩

உள்ளநிரம்பியொழி யாதவளர்காதல்
வெள்ளவலைமேன்மிதந்து வீழ்வதெனவாவிக்
கள்ளவிழுமீர்குவி காவலொருமாது
பிள்ளைமடவன்னமிவள் பெண்கொடியுயர்ந்தாள். ௧௪

பற்றுவளொருத்திமனே வார்குழைமுயலிப்பச்
செற்றுகதிர்மேகலை சிலம்பொலிசிலம்ப
வற்றரிவின்மைதக்குமரி தாயபொருடன்னைப்
பற்றுவலெனத்தளர்ந்து பையவணைந்தாள். ௧௫

பண்ணவிசையிற்றுயிர் பதித்துலவுசெவ்வா
யண்ணலிருதாளுமுயர் தோளுமருமார்பும்
கண்ணிணைகளிப்பவெழு காதன்மிகநோக்கிப்
பெண்ணமுதமாயவொரு பேதைதளர்வுற்றாள். ௧௬

தங்கியுளத்துள்ளுறைந்த தாங்கரியகாம
வெங்கனலின்வெம்பொறிகள் மேற்பொடித்ததென்னச்
செங்கதிரெறிக்குமணி சிந்தவுளமாழ்கி
யங்கலுழுமேனியொ ரணங்குமெலிவுற்றாள். கஎ

தாங்குழலையாரழ றணித்திலமெனத்தம்
பூங்கதிர்முகங்கரிதல் போலவெழுகாம
வீங்கழலினுற்கருக வெள்ளைமணிமுத்தம்
வாங்குமிடைவாணகையொர் மாதுதளர்வுற்றாள். கஅ

மின்னுவயிரத்திரள் விளங்கியகலாப
மன்னமெனநூபுர மரற்றுமடிசூழப்
பொன்னுரைகடுக்குமொளி பொங்கவவணின்றண்
மன்னுதிரைநீர மடந்தையெனலானாள். கக

விண்ணுருவுபொற்குடுமி மேருவரைபோலும்
வண்ணமலர்மார்பினின் மணத்தியெனவண்ணல்
வெண்ணிலவின்மென்னகை விளைப்பநகையாய
தண்ணெனமுதுண்டொர்மட மாதுயிர்தளிர்த்தாள். உ௦

நீலமணிமேகலையு நித்திலமுயிர்க்குஞ்
சோலையிளவேயனைய தோள்வளையுநீங்க
வாலவிடமூறும்விழி யாயிழையொருத்தி
கோலமலருழ்த்தநறுங் கொம்பனெனநின்றாள். உக

பாயலைதவழ்ந்துகரை பாய்கடலின்முத்த
மேயவடமெய்யழலின் வெந்தொழுகுசுண்ணஞ்
சேயதளிர்மேனிமுழு தாகவொளிசிந்து
மாய்வளையொருத்திமட வன்னமெனலானாள். உஉ

கத்திகைநறுங்குழலொர் காமரிளவல்லி
முத்தகமுரிஞ்சுமுலை முக்கணிறைநோக்க
வத்தலைவெகுண்டுகதி ராய்வனையொருத்தி
தத்தரிபரந்துகுழை தாவுவிழிசேந்தாள். ௨௩

வேறு.

கருங்கொடிப்புருவங்கோலிக் கதிர்மணியெருத்தங்கோட்டி
மருங்குலந்தானைசோர மாரன்வெம்பகழிக்காவி
விருந்தளித்தேந்துகோட்டு வெம்முலைசுமக்கலாற்றுக்
கருங்குழன்மருங்குல்சாயத் தோகையிற்சிலர்கணிற்பார். ௨௪

மருமலர்க்கூந்தற்றாழ மணிதெளித்தெழுதியன்ன
புருவவிற்கோலிச்செம்பொற் பொருப்புவிற்குழைத்தவண்ணல்
கருவிளம்பழுத்ததின்னேடோட் கணைவளையிலக்கமாக
வரிமதர்மழைக்கணம்பு தொடுத்தனரயர்ந்துநிற்பார். ௨௫

அலைதவழ்கடலிற்பட்ட வலர்கதிராரந்தாழ
முலையளவன்றுபைந்தார் முருகுலாமார்பமென்பார்
மலையளவல்லவீங்கு வயங்கெழிற்றோள்களென்பார்
சிலையளவல்லவின்று திகழ்தருபுருவமென்பார். ௨௬

கள்ளவிழ்கோதைமாதர் கடவுள்பூங்கழற்காலேத்தி
மெள்ளவேவீதிசெல்லில் விரிதிரையவண்டுபாட
வள்ளலந்தேற்றுதாறு மரக்கிதழ்முளரிவாட்டத்
தெள்ளுதல்வருங்கோலோவென் றிரங்கினரிசைத்துநிற்பார். ௨௭

மழைமுகிலென்னநின்ற வள்ளறன்புயத்தைச்சேர
விழைவளர்பசும்பொன்மேரு வெனவெழுமுலைபுழுத்தக்
கழைவளர்தோளாவாளா கவின்பெறப்படைத்துவைத்த
வழிமதுக்கலைப்புத்தேள் வாழியபெரிதுமென்பார். ௨௮

பிள்ளைவண்டராற்றவிண்ட பெய்மலர்த்தொங்கருழ்ந்த
வெள்ளுவதொன்றுமில்லா விருபுயத்தணைத்தியென்பார்
புள்ளவாமதன்கைவாளி பொழிந்திடப்பார்த்தியென்பார்
வள்ளலேயுனதுநெஞ்ச மறந்ததோவளிமற்றென்பார். உகூ

முயலடைகிடக்கையில்லா முழுமதிமுகம்வேராட
வெயின்மணிக்கலையுந்தாரும் விரிகதிர்த்தொடியுநீண்ட
சயலொடுபொருதுசேர்ந்த கண்ணினீரோடுஞ்சோர
மயன்முகிழ்த்தெழுந்துவிம்மு மனத்தினராகியிற்பார். ௩0

குழந்தைவெண்டிங்கள்வெய்ய கூற்றெனவந்துதோன்றிப்
பிழிந்துயிருண்ணுமுன்னம் பெருவனையணையதோளி
லெழுந்துவெம்பசலைபோர்த்த விணைமுலைகுளிப்பவாங்கி
யழுந்திடப்புல்லியெங்க ளாருயிர்காத்தியென்பார். ௩க

ஐயரியொழுகுகண்ணு லவனுளங்குழைக்கமாட்டார்
பையரவனையவல்குற் பனிமொழிப்பவளச்செவ்வாய்
நையுநுண்மருங்குலம்பொ ஞுகிளவல்லியொப்பார
வெய்யவார்முலைகளோடு வெதும்பினருடிகிற்பார். ௩உ

கத்திகைநறுமென்கூந்தற் கனங்குழைமடநல்லார்கள்
வித்தகமதன்கைவாளி வெம்முலைக்கோட்டின்மூழ்க
மத்தெறிதயிரின்மாழ்கி யவன்மலரடியின்வீழ்ந்து
தொத்தலர்மாலைதாழ்ந்த துணைப்புயத்தணைத்தியென்பார். ௩௩

உலைமுகம்பழுத்தவொள்வே லோடரித்தடங்கணல்லீர்
மலைவறுபாடலென்னும் வலையினுலுள்ளம்வெளவிக்
கொலைசெயவந்துநின்ற கூற்றுவனல்லான்மற்றுப்
பலிகொள்வானெண்ணிநம்பாற் படர்ந்தவனல்லனென்பார். ௩௪

பரும்மணிக்கலாபஞ்சூழ்ந்த பாம்படுமல்குல்வெய்ய
வருமுலைத்துவர்த்தசெவ்வாய் வார்குழையலைத்தவாட்க
ணரிவையருள்ளமாழ்கி யிவ்வகையறையவொன்
முறையலறுகின்றா ரென்றுந் தன்மடந்தைபாகனார். ௩௫

தாதுலாமலங்கல்சூழ்ந்த தாழ்குழன்மகளிரெல்லாங்
காதன்மீக்கூரமேனி கவினழிந்திரங்கநோக்கிச்
சோதியாயெங்குமாய தோன்றலையறியாராகி
மாதவத்தோர்கள்யாரு மயங்கினர்சபித்திட்டாரால். ௩௬

அற்றமில்தவங்கள்செய்யு மருமறைமுனிவர்யாரு
முற்றுரைத்திட்டசாப மொளிமணிமுத்தஞ்சிந்து
மெற்றுநீர்க்கடலிற்றோன்று மிரவிமுன்மழுங்குமீன்போற்
பற்றலர்புரங்கள்செற்றோன் பாலுறுகாதுமாய்ந்த. ௩௭

மறையவர்சாபந்தன்னால் மாய்ந்ததுதக்கன்வேள்வி
யறைகடற்றுயிலுமாயோ னடைந்தனன்பிறவிவாரோற்
கிறைகுறியிழந்தான்முன்ன மெய்தினர்வசுக்கள்மாயப்
பிறவியைநகுடன்மேனாட் பெருமலைப்பாம்பாய்வீழ்ந்தான். ௩௮

துன்னிருண்மருட்டுமேனித் துண்டவெண்பிறைப்பற்காலன்
பின்னவர்குலத்துவந்து பிறந்தனன்பிரசாது
கன்னியந்துளவமாலைக் கதிருமிழ்திகிரிமாயன்
மன்றுவெண்டரங்கவாரி மாய்ந்ததுபாலின்றன்மை. ௩௯

ஈங்கிவரன்றிப்பின்னு மெண்ணிறந்தோர்கள்வெய்ய
இங்குறுசாபந்தன்னாற் றீர்வருந்துயரின்வீழ்ந்தா
ராங்கதுபரமன்றன்பா லடைந்திலதென்றுலியாரோ
மாங்குயிற்குதலைபங்கன் பெருமையைவகுத்தற்பாலார். ௪௰

சிறந்தமாதவர்கண்முன்னர் திகழ்தரசின்றவீசன்
மறைந்தனன்மறைதலோடு மற்றவர்கலங்கிமாழ்கி
நறுந்துழாய்மாயனுந்தி நாண்மலர்ப்பொகுட்டிற்றோன்று
மறங்கணாநாவினுனை யடைந்தனர்வணங்கிநின்றார். சுக

செற்றமிறவத்தோருற்ற வகையெலாஞ்செப்பலோடும்
பொற்றசெங்கமலமேய புங்கவனவரைநோக்கி
யற்றமின்மறையுங்காணு வண்ணலேயாகுநம்பா
லுற்றவனவனையென்கொ லுணர்ந்திலீரறிவிலார்போல். சுஉ

வடிவிலானேனுமுன்னூல் மாண்பிலனேனுந்தன்பா
லடைதருமதிதிதன்னை யிகழ்ந்திடலாகாதூய
வொடிவினுன்மறைகளோதி யொண்டழலோம்பிநாளு
மடவரலோடுமில்லின் வாழ்ந்திடுமறைவல்லோர்க்கே. சுரு

வேறு.

அருமறைதேர்சுதரிசனனெனுமறையோன்முன்னைநாளழியாக்கற்பின், வருமுலைமென்குமுதவிதழ்மனைவியெழின் முகநோக்கியதிதிசேரிற், றெரிவரியபூசனைகளினிதாற்றிவேண்டுவன சிறப்பினல்கி,மருவுதியென்றாங்கவனுண்ணசையினு லுளாசெயினுமருவுகென்றான். சுச

கொழுநனிவை யுரைத்திடலுமிருதடங்கண் புனல்வாரக்குழைந்துமாழ்கு, மிழைதவழுமுலையாளைநோக்கிமட மாதிரங்கலெய்துகின்றே, ரழிவிறனிமுதலாவராங்கவர்கள் வேண்டுவனவளித்தியென்னத், தொழுதகையகற்புடையளாதலினு லாங்கதற்குத்துணிந்தாண்மன்னோ. சுரு

ஆயிழையாங்கியைந்திடலு மருமறையோன் மனையகன்றகாலைநோக்கி, மாய்விலறக்கடவுளொருமறையவனுய்மனையகத்துமு

ருவலோடுங், காய்கதிர்ப்பூண்மடநல்லாளொடிசின்முதல் வேண்டு
வனகளிப்பினல்கத், தூய்மறையோனகமகிழ்ந்து துணைமுலைக்
கோடழுந்தவெனைத்தோய்தியென்றான். ௬௬

என்றலுந்தன்கணவனுரைமுன்றள்ளநாணம்பின்றள்ளவே
ந்து, குன்றனையகுவிமுலையாள் விழிபுதைத்துமெய்நடுங்கிக் கு
ழைந்துமாழ்கி, நின்றிடுமக்காலைதனிற் கொழுனனுங்கெய்திட
லுமதியானின், மன்றல்கமழ்கருங்கூந்தன்மனைவிமுலைத்தடந்
தோய்தன்மகிழ்ந்தேனென்றான். ௬௭

இனையமொழிகேட்டிடலுமினிதெனத்தன்னுள்ளமியைந்தி
ளர்ந்தேன்மாந்திக், கனைவரிவண்டிமிர்கூந்தற்காரிகைநாண்மண
த்தியெனக்கடையினேகர், துனைவிலுயர்தருமமுள மிகமகிழ்ந்
து தனதுருவந்துலங்கத்தாங்கி, யனையவன்பாலெய்திடலு மாங்
கவனுமடிபரவியன்புற்றான். ௬௮

கணங்கொள்சுரும்பியிர்கூந்தலின்மனைவிகழைத்தோள்கள்
கருத்திறைவு, மணந்திலனியானுமதுள்ளத் தாய்மைதெரிவான்
வந்தேன்மாற்றலார, வணங்கிசையுங்கொடுங்கூற்றமனுகாது
நும்முழையென்றருளியென்பாற், றணந்ததுமற்றெவ்வுலகுந்
தாழாமலுயர்ந்துவளர்தருமந்தானே. ௬௯

ஆதலாலிதிதனைவழிபடுதல்வேண்டுமாலன்னைதன்னைப், பே
தையர்போனீரிகழ்வதானீர்நம்பாவத்தாற்பெருநீர்க்கங்கை, தா
னுலாஞ்சடைக்கரந்ததனிமுதலேசரணுதவடைதிரென்றுப், போ
தினான்முகமுனிவர் முகநோக்கியருளினொடும் புகன்றானன்றே.

துறந்தவர்க்கேயல்லதவன் றூயமலர்த்தாளிணைகள்தொழுத
ல்கூடா, மறங்கொள்சினவுழுவையதள் வனைந்தபிரானடிக்கம

லம்வணங்கியேத்தித், திறம்பலிலாத்துறவினதுதன்மையறிவா னெமக்குத்தெரித்தியென்னக், கறங்குதடந்திரைபுரட்டு கடலுலகம்பூத்தமுனிகழறலுற்றான். ருக

அருள்சுரந்தகுரவன்பா லருமறைநூலகத்துணருமளவாறு லும், பருவமொருபன்னிரண்டா யிலும்பிரமசரியத்தைப் பண்ணிப்பின்னர், குரவனதுதண்ணளியா லில்லறம்பூண்டழல்வேள்விகோதிறைற்றித், தெரிவரியமழலைமொழிச்செங்கனிவாய்மக வுயிர்த்துச்செழுங்கானண்ணி. ருஉ

அறுமதியாயினுமதியீராறெனினும்பன்னிரண்டுபருவமேனு ம், மறுவறவான்பாலருந்திமறைநவிலுமுத்தழலுமரபினேற்றிச், குறைவறுதென்புலத்தவரைத்தேவர்களை முனிவர்களைக் குலமுந் துபோற்றி, யுறுபொருளாங்கெவற்றினையு முற்றமறையவர் நம் பாலுவந்துநல்கி. ருங

குரவனடிபோற்றிமுற்றத் துறந்ததற்பின்கோதில்சருசருந் திச்சின்றுண், மருவிடுகவதனிடையிலாவிதணந்திலதென்றால்வ டபாறேக்கி, யரவவிரிபுனலுடுத்தவகனிலத்தைவலம்வருமக்கா லையாவி, யொருவுவரோன்மலைமடந்தை யோர்பாகனடியிணைக்கீ ழுற்றுவாழ்வார். ருச

துறந்தவரோயன்றித்தம்மனைவியினாலந்துய்த்துவாழ்வோரோ னுங், கறங்குதிரைவிடமயின்ற கண்ணுதல்பொன்னடிபரவிற்க தியிற்சேர்வா, ரறந்திறம்பாவேள்விபலவாற்றியெவன்றுணமிவை யளித்தோனெங்கு, நிறைந்துறையுங்கடவுளடியிணைக்கின்றோ நீங்காதமுத்திசேர்வார். ருரு

முன்னங்காலனைக்கடந்தான் சுவேதனொடு மாமறையோன்
முகிழ்வெண்டிங்கண், மின்னகுசெஞ்சடைவனைந்தவெள்விடை
யோனருளினா லன்றேவென்ன, வன்னமுயர்த்தோயவன்பால்
வெங்கூற்றமணுகாமலகன்றவாறு, பன்னுதியென்றுயர்தவத்து
ப்பழமறையோர்பகரவவன்பகர்ந்தானன்றே. ௫௬

தாருகாவனத்திற் சிவன்பலியேற்கச்சென்ற
வத்தியாயமுற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௧௭௧.

இருபத்தொன்பதாவது
சுவேதன் காலனைவென்றவத்தியாயம்.



சிறியதூரம்வாணாளொன்றெண்ணிமறைச்சுவேதனொளிர்திங்
கள்வேணிக், கறைமிடற்றோனடிபரவுங் காலையினிற்கண்களழ
ல்கதுவக்கீற்றுப், பிறையெயிற்றுவாய்மடித்துப் பெருஞ்சினந்த
ன்றலைக்கொளீஇப் பிறங்குபொற்கோட், டிறுவனைகால்கொடுந
டந்துவருவதெனவெங்காலனெய்தினானே. ௧

எய்திடாவான்புகுது மெரிவிழிவெங்காலன்முகஞ் சுவேத
னோக்கிக், கொய்யுமலர்க்கொன்றைபுனை கூத்தனதுகுரைகழல்
கைகூப்பினோர்க்குச்,செய்யமலர்ப்பொகுட்டுறையுஞ்செழுமறை
யோன்முதலானதேவராலு, மையொழுகுங்கருமேனி நின்னாலு
மென்கொல்பயம்வருவதென்றான். ௨

மறையவனுங்குறைத்திடலும் வகிர்மதிவாளெயிறிலங்கக்கு
மண்டு, பொறியழல்கண்ணிணைகாலப் புணரிவாய்மடுத்தகரும்
விதியினலபிடேகஞ்செய்தெழில்பெறவிளங்கி
யதிருமாகடலண்டங்களெவற்றிற்குமுதலாய்த்
தனைதமலர்ப்பொதுட்டண்ணலுமோவிதாங்கினனால் உஉ

இன்னவாறிவர்க்கருளிமாலயன்றெழுயாவும்
மன்னிமன்னிடாதுறைதருமயேசுரன்விளங்கு
மின்னவாவியபொன்முடிவிரியுமிவ்வுலகிற்
றுன்னிவாழுயிருய்ந்திடச்சூட்டினனன்றே. உ௩

சூரியனுக்கு முடிசூட்டியவத்தியாய முற்றிற்று.
ஆக திருவிருத்தம்—அசுரு.

ஐம்பத்தேழாவது

சூரியன்றோற்றமுரைத்த

வ த் தி ய ா ய ம்.

——0)(*)(0——

என்றுகூறலுமிடைவிடாமுக்குறும்பெறிந்து
துன்றும்வல்வினைத்துரிசறுத்துயர்ந்தமாமுனிவர்
மன்றவெங்கதிர்வெய்யவன்றோற்றத்தைவயங்க
வொன்றுமாறுரைசெய்யெனச்சூதனுமுரைத்தான். ௧

புரியவிழ்ந்ததாமரைமலர்ப்பொகுட்டுறைமறையோ
ணிரவுபோயபினான்குபூதங்களுமிருப்ப
வுருவவெங்கனலிறந்திடவுலகமற்றெவையுந்
தெரிகலாமையிற்சிந்தனைமயங்குபுதிகைத்தான் ௨

திகைத்தபின்னொளிர்தேயுருபத்தினைத்தாங்கி
யுலகக்குநீள்புனன்மீதிருந்தழலையுண்டாக்கிப்
பகுத்ததிவ்வியம்பவுதிகம்பாத்திபமென்ன
வகுத்துமூன்றுபேரவற்றினுக்கிட்டனன்வயங்க. ௩

உரைத்தமூன்றினுட்டிவ்வியவழலொளிர்பருதி
பரிக்குமெய்தொறுமுறைகனற்பவுதிகமாமால்
விரிக்குமெவ்வுலகத்தினுமனைதொறும்விளங்கி
யிருக்குஞ்செந்தழலியம்பிடும்பாத்திபமென்றே. ௪

உறையுமெய்யினிலுற்றிடுபவுதிகமதனை
யறைவர்சாடராக்கினியென்றுமலம்புதெண்ணீராற்
குறைவிறிவ்வியம்பவுதிகங்கெடாவியல்குலவி
நிறையுமில்லுறைபாத்திபங்கெட்டிடுமிகழ்த்தில். ௫

அலரும்வெங்கதிர் தன்னுடையொளியையா ரழலி
னிலவைத்திடுமாலையம்போதுநீடிருள்செய்த்
திலகவேற்செய்வான்றேன்றிடுகாலையோரழலின்
மலைவில்சோதியைமீட்டுந்தன்னுழையினில்வாங்கும். ௬

அரவவெண்டிரையார்த்தெழுமலைகடன்முகட்டி
லிரவிதோன்றியகாலமற்றிரவுபோயுறையும்
விரியுநீரிலவ்வெய்யவன்குடகடல்வீழின்
மருவுமாலையம்பகலும்போய்மறிபுனலுறுமால். ௭

பகலின்வெங்கதிரவற்றினுட்பனியினைப்பெய்யுந்
திகழுஞ்சந்திரனெனவுறைசிறந்துமுன்னூறும்
புகலுமின்னமிர்தெனவெழிற்பொருந்துநானூறு
மகிலமெங்கணுந்தழைத்திடமழையினையளிக்கும். ௮

பாங்கிற்சுக்கிரனெனப்பகுத்துரைக்குமுன்னூறுந்
தேங்குதண்ணொளிதிகழ்மணித்திரளொடுத்தெறியும்
வீங்குதெண்டிரையுடுத்தபேருலகெலாம்விழுங்கித்
தூங்கும்வல்லிருடுணிபடச்சுடர்வெயில்விரிக்கும். ௯

வருணன்வெய்யவையாயிரங்கதிரொடுவயங்கும்
பொருவிலந்தவாறுயிரங்கதிர்செயும்பூடா
விருளையோட்டியேழாயிரங்கதிர்திசையெறிப்ப
விரியும்வானிடையங்குசன்விளங்கிடச்செலுமால். ௧0

இலங்குகின்றவெண்ணாயிரங்கதிரினையெறித்துத்
துலங்குபொற்றடந்தேர்மிசைத்தோன்றிடுந்தாதர்க்
கலங்குதெண்டிரையுலகினையிந்திரன்கவின
விலங்குமொன்பதிணாயிரங்கதிரினால்விளக்கும். ௧௧

பாயசெங்கதிரொருபதினாயிரம்பரப்பி
மேயபொன்வரைவலம்வரும்விளங்குபாச்சனியன்
வாய்விரிந்திடத்தாமரைமலர்கதிர்பதினா
றாயிரம்விரித்துலவிடுங்செபத்திமானறையில். கஉ

எவ்வெலாத்திசைமருங்குமேழாயிரங்கதிர்கள்
செவ்வனேவிரித்தொளிருமித்திரன்செலவயருங்
கவ்வைதீர்க்கடறோன்றியெண்ணாயிரங்கதிரால்
வெளவுமானிலத்திருணினைவயங்கெழிறோடா. க௩

ஆரியமாப்பதினாயிரங்கதிரினையலாது
முனைசெயொன்பதினாயிரங்கதிரினையுமிழ்ந்து
விரியும்வானிடைவிலச்சுவான்செல்லும்விட்டுணுவு
மிருள்கெழிக்குமேழாயிரங்கதிரிஞலிலங்கும். க௪

இயம்புசீரிளவேனிலினிருளொழிகதிரோர்
வயங்குமெய்யொளிகபிலமாம்வேனிலின்வாசு
முயங்குதாமரைமுகைமுறுக்கவிழ்ந்திடத்தோன்றித்
துயங்குவெய்யவானிறம்பசும்பொன்னதாஞ்சாற்றில் க௫

ஆரமேகலைமடந்தையரிருக்கையாடவர்சேர்
காரின்வந்தெழுபகலவர்கதிரொளிசுவேத
மோர்செய்கூதிரினெழுகதிர்வளரொளியியம்பி
லோருமேலவரொளிபெருபாண்டுவென்றுரைப்பார் க௬

எதிருமுன்பனிக்காலத்தினிருட்குறும்பெறிந்து
கதிர்செய்வோரொளிதாம்பிரவண்ணமாங்கழறில்
முதிரும்பின்பனிக்காலத்தின்முத்தெறிகடல்வா
யுதையஞ்செய்பவரொள்ளொளியுலோகிதமாமால். க௭

இரவிதோற்றமும்வண்ணமுமிசைத்தனமந்தப்
பருதியுந்திகழ்பானிலாப்பசுங்கதிர்விரிக்கு
முருவவெள்ளைவெண்மதியமுமுரவுநீர்க்கடல்வாய்க்
கரியவெவ்விடமுண்டவன்கண்ணிணையென்பார். கஅ

சூரியன்றோற்றமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம் — அஅக.

ஐம்பத்தெட்டாவது

சூரியன்முதலான கோளுநாளு முரைத்த வத்தியாயம்.

—o)(*)(o—

விரியும்வானினுறைகோளின்றன்மையின்னுநனிவிளங்கப்
பரிவாலுள்ளங்கொள்ளும்வகைபகர்வாமெடுத்துப்பழமறைக
ளுரைசெய்வேள்வித்துறைமுற்றியுயர்ந்தமுனிவிர்காளென்று
கரியமிடற்றோனடிவணங்கிச்சூதமுனிவன்கழறினன். க

அழலின்றன்மையாகுமாலலைவாய்முகட்டினெழுபருதி
வழியும்புனலின்றன்மையாம்வயங்குமொளிகால்வட்டமதி
நிழல்கால்வேலோன்கூறுகுலவுபுகழ்ச்சேய்மலர்மடந்தை, கொ
ழுனன்கூறும்புதனென்னக்கோதின்றுணர்ந்தோர்கூறுவார். உ

வயங்குமழுவாளுருத்திரன்றன்கூறுமறலிகூறுமா
மியங்குமணித்தேருறைவெய்யோனினிதினீன்றபுகட்காரி
தயங்குந்தேவகுருவாகிச்சாருந்தகைசேர்வியாழமற்றப்
புயங்கொள்வலியாலுறையசுரர்குருவாய்வெள்ளிபொருந்துமால்
சுடர்செய்பருதிவிசாகத்தினதிதிவயிற்றிற்றோன்றியதா [ன்
ளொடியாத்தருமன்றனக்குமதி யுதித்ததொளிருங்கார்த்திகையி

மிடல்சேர்பிருகுமுனிவற்குவெள்ளிபூசத்துதித்தா
லடைவேபூராடத்திலங்கிராவுக்குதித்தானந்தணனே. ௪

சேயமலர்வாழந்தணர்க்குப்பூராடத்திற்றிகழ்ந்துதித்த
தாயுங்கதிர்சேய்சுடர்ப்பருதிதனக்காங்கறையுமிரேவதியிற்
பாயும்புரவித்தேர்க்கரியோனுதித்தான்பகருமவிட்டத்திற்
றூயகதிர்செய்மதியினுக்குத்துலங்குமறிவன்றோன்றினனால். ரு

வயங்குகோளிற்செங்கதிரும்வான்வாயிருபத்தேழாகித்
தயங்குமுடுவிலவிட்டமுந்தண்ணொளிசேர்மற்றைத்தாரகையில்
வியங்கோட்டந்தேர்ச்சுக்கிரனுமேவியுறையுங்கேதுவினி
லியங்குதூமகேதுவுமேமேலாமென்னவியம்புவரால். ௬

மருவுமயனமோரிரண்டின்மாசின்றுயருத்தராயனமு
முறைசெய்வருடமைவகையிலுயர்ந்தோர்புகழ்சம்வச்சரமும்
பருவந்தம்மிற்பின்பனியும்பகுக்குந்திங்கட்பன்னிரண்டிற்
புரைதீர்மாசியெனவுலகம்புகலுந்தகமைசால்மதியும். ௭

பகரும்பக்கங்களிற்பூர்வபக்கந்தானும்பழுதின்றாய்த்
திகழுந்திதியிற்பிரதமையுஞ்சேருமிருபோதினிற்பகலுங்கலா
முகூர்த்தங்களிலீசன்மகிழும்பிரதோடமுமறிவார்
புகல்வாரதிகமெனமெய்ந்நூல்புரையின்றுணர்ந்தபுலமையோர்.

உரைத்தவிவைகளேவற்றினையு மொளித்தண்கதிர்கான்முத்தெ
றிந்து, திரைக்கும்பரவைக்கடன்முகட்டினெழுசெங்கதிரோனு
குமாற், பரிக்குமுதல்வனிவன்முதலாங்கோட்களெவைக்குமே
லாகி, யிருப்பன்றுருவனுலகெல்லாமேத்தமகிழ்வினென்னுளும்.

சூரியன்முதலான கோளுநாளுமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—அகூ0.

ஐம்பத்தொன்பதாவது

துருவன் துருவபதமடைந்த

வத்தியாயம்.

———(*)———

என்றுதவச்சூதமுனிவியம்பிடலுமிருந்தபெருந்தவத்தோர்யாரு, நன்றுமொழிந்தனை துருவனுயர்பதத்தினண்ணியது நவைகடீர, வின்றெமக்குமனமகிழவுணர்த்திடுதியெனலோடுமிளந்தேனூற்று, கொன்றையணிசெஞ்சடையோன்குணாகழற்றுளிணைவணங்கிக்கூறினனே. க

திருகுசினமதக்களிற்றுத்தெவ்வோரைதப்புறங்கண்டுசெழுந்தேனாறி, முருகுகமழ்தாமரைத்தாள்வணங்கினோர்க்காசுரிமைமுழுதுமீந்தோன், அருமறையினெறிதவறுதாருயிர்கடழைப்பவருள்பொழிந்துவீங்கு, முரவுநீர்ப்புவிபுரந்தவுத்தானபாதனெனுமொளிறுவேலான். உ

ஆங்கவர்க்குப்பூம்பெண்ணைக்காயினெழில்கவற்றியலர்சுணங்குபூத்து, வீங்குமுலைச்சுநீதியும்வானகற்றிமணிக்குழைமிசைபோய்மிளிரும்வேற்கட், டேங்கிசையவளிதவழுங்கருங்கூந்தற்சுரிசியெனூர்துவர்த்தச்செவ்வாய்ப், பூங்கொடியுமனைவியர்வான்வடமீனினென்னனும்பொலிவின்மிக்கார் ௩

பஞ்சிசூழ்பரசிறையவகலல்குற்பசுங்கொடிமென்னுசுப்புவாட்டெங், கஞ்சமுகைகவற்றுமுலைக்கருங்கூந்தற்சுரிசியுளங்களிப்பவீன்ற, மஞ்சனையோர்குறங்கேற்றிமணிதிகழுமடங்கலாசனத்தின்வெய்ய, நஞ்சுமிழும்வெள்ளிலையநாமவடிவேல்வேந்தனிருக்குமெல்லை. ௪

அணைமருட்டுகழைமென்றோட்சுனீதியருள் துருவன்மிகவு
கன்றகீர்த்திக், கிணையிலாத்தாதைபாலெய்தியவன்குறங்கின்மி
சையிருக்கமேல்வைப், பணிபுரையுமகலல்குற்சுருசியென்றன்வயி
றுதவாப்பாலாவீங்கு, மணிமலைத்தோளரசனெழிற்குறங்கின்மி
சையிரேலென்னமறுத்தாளன்றே. ௫

மற்றவடன்வெய்யமொழிசெம்புருக்கிவிட்டென்ன வந்து
காதூ, டுற்றுநுழைந்திடலோடுமுளக்கமலத்தொடுமுகமென்க
மலம்வாடிப், பொற்றவொளியறமாய்ந்துபோர்வேற்கைத்தாதை
முகநோக்கத்தாதை, சற்றுமிரங்கலனாகி யிருப்பதுகண்டன்னை
பாற்சார்ந்தானன்றே. ௬

உருகியுளமிகத்தளரமெய்ம்முழுதுமறவாடியொளிருஞ்செ
ய்ய, வெறிபசும்பொற்சதங்கைசிறிதலம்பவிழிபுனல்பாயவேங்கி
யேங்கி, வருமகவின்முகநோக்கியிடைதுவளவெதிரோடிமாழ்கி
க்கையா, விருவிழிவார்புனலுடையாவாருயிரேயுற்றதெவனியம்
புகென்றாள். ௭

என்னலும்பட்டவையெல்லாமழலைமொழியாலியம்பலொ
டுகின்றன், மன்னுமெழிற்றாதையன்பா மனைவியரின்மேம்பட்ட
வாற்றால்வெய்ய, வின்னமொழிபகர்ந்தனளஞ்சிறுங்கொடியா
ளொன்றுவினையிளங்கேளையா, கன்னன்மொழித் தாயுரைத்துப்
பின்னருமோருறுதிமொழிகழறினாளே. ௮

அரசனெழிற்குறங்கின்மிசை யிருக்கையன்றேவவ்வணங்
குதவித்தாளியாரும், பரவுமின்றதேவருறைபதங்களுக்கெல்லா
முயர்ந்தபதத்தைமேவ, வரியதவம்பலவாற்றியுற்றிடுதியெனவிய
ம்பியோங்கல்வென்ற, வருமுலைகள்பால்சோரமழைநெடுங்கண்
புனல்வாரவருந்தினின்றாள். ௯

இன்னவகையன்னையுரைத் திடலோடுமவளிருதா ளிறைஞ்சி
யெழுந், துன்னுமழற்கானிடையிற்றுணைமலர்ச்சீறடிநோவத்து
னைவிசெய்தி, மின்னுறழும்புரிசடையோன் விரைமலர்த்தாளி
னைக்கமலம்விரும்பித்தாழ்ந்து, மன்னுதவக்கவுசிகன்ற னாசிரம
மடைந்தவன்றாள்வணங்கினனே. க0

வணங்கியருகுறநின்றசிறுவன்முகமருளோடுமகிழ்ந்துநோ
க்கி, யணங்குவடிவேற்றடக்கை யுத்தானபாதனுயிரனையமைந்
தா, வணங்கினைவாண்முகக்கமல முளத்தினிலென்னுற்றதுங்
கூறாத்தியென்னப், பிணங்குமறைநாமுனிவன் சிறுவனுமாங்கு
ற்றதெலாம்பேசலுற்றான். கக

எற்றுதிரைமண்புரக்கு மென்றாதைகுறங்கின்மிசை யிருக்
குமெல்லை, யுற்றுநறையேலென்புதல்வ னேடுநீயெனத்தவிர்த்
தாளுடன்றுசீறிச், சிற்றனையாங்குற்றதெல்லா மென்னன்னை
மருங்கணைந்து செப்பலோடு, மற்றவனீதவமியற்றி யெவர்க்கு
மேயாபதமடைந்துவாழ்தியென்றாள். கஉ

அதலிறைவருள்புரிவோர்கன்றாலவட்டத்தி னில்லையோங்
கு, மாதவஞ்சரணென்ன வந்தடைந்தேன்சிறியன்மன மகிழுயா
ர்க்கு, மீதுறையும்பதமதனின்மேவியுறைந்திடும்வண்ணம்விரு
ப்பினேடு, மோதுகெனமீட்டுமவன் பணிந்திடலுமுளமகிழ்வா
னுவோக்சலுற்றான். கங

மியரும்பதம்பெறுவான்வேண்டுதியேல்விரைநறவக்கலுழி
பாய, வாய்விரியுநறுங்கொன்றை மலர்சடையோன்வலப்புறத்தி
னுதித்தோன்றுங், காயுமழல்வாய்த்திகிரிக்கண்ணனடிப்போது
ளத்திருத்துள்வைத்துத், தூயவருந்தவம்புரிதிபுரிந்தனையே லு
யர்ந்தபதர்தன்னாமே. கச

என்றுமுனிவரனியம்பவாங்கவன்றுளிறைஞ்சியிருந்தருக்கள்கோடி, துன்றுகொடுங்கானேகிச் சுடர்செய்மணிவண்ணனை மலர்த்துணைத்தாண்முன்னி, யொன்றுமருந்தலனுகித்தவம்புரியுங்காலையினிலுடன்றுபேயுங், குன்றுபுரைபூதமும்வெம் புலிக்கணமுங்குறுகினவாற்குழூமிமன்றே. கரு

அடர்ந்துவருத்திடவுமுளங்கலங்கலனுயரியதவ மாற்றனேக்கி, வடங்கொள்முலைச்சுனிதியெழிற் படிவமோர்வேதாளந்தாங்கிவந்திங், கிடைந்திடேலரியதவ மியற்றியென்றன் கண்மணியேயெய்துகென்ன, வுடைந்துமனமுருகாதுமாயையெனவுணர்ந்துதவமுஞற்றினனே. கசு

இவ்வகையவிட்கோடி கடந்துதவமியற்றுதல்கண் டிரங்கியார்க்கும், கௌவைதீர்க்கடற்றுயிலுங் கார்மேகவண்ணனெழிற்கருழன்மேலாய்த், தெவ்வைதற்றுங்குலிசன்முதற் றேவரெல்லாமிருபுடையுந்திரண்டுசெல்ல, வெவ்வழல்காலடற்றிகிரிவலனேந்தியாங்கவன்முன்விரைந்துற்றனே. கஎ

உற்றுமுழுமதிகோடியுதித்தெனவொளிரும்வலம்புரிவெண்சங்கான், மற்றவன்றன்கன்னமிசை நடைத்திடலுமகிழ்ச்சியொடுமாசில்ஞானம், பெற்றுமலர்விழியிணைகடிறந்திசைசெ லொருகொடிபின்னலைந்து, சுற்றமரர்குழாமொடுநின்றவனைக்கண்டெழுந் [illegible] நெருங்கிப்புகழ்க்கலுற்றான். கஅ

அளைத்தலைப்பாற்கடன்முகட்டு [illegible] வருத்துமுலைப்புலிமடந்தை [illegible] செற்குட்ட, முருக்குமழனைஞ்சு [illegible] யுக்க, வுருக்கினருக்களியதுகிலொத்துவிழித்து [illegible] போற்றி. ககூ

கன்னிமதில்சூழ்கிடந்துகருங்கடலேயகழாகக்கவினித்தோ ன்றுந்,தென்னிலங்கைதனிபுரந்துதிசைதிசைவெங்கோனடத்து நிமலஞ்சன், மின்னமருமணிமவுலிபுனைசிரமோர்பத்தும்வெறுநி லத்தின்வீழப், பொன்னவிருஞ்சிலைகுழைத்தபோரேறேநின்று ணைத்தாள்போற்றிபோற்றி. உ௦

கரியசெழுங்குவளைமலர்த்தடத்திடையிற்கராவொன்றுபற் றவாடி, வெருவியிருபிறைக்கோட்டுப்பரவடியகளிறுகரமீதுபோ க்கி, மருவிருக்குமலருந்திமணிவண்ணகாத்தியென வந்துவேழ ப், பரிவகற்றியருள்புரிந்தபாப்பணையாய்நின்பாதம்போற்றிபோ ற்றி. உக

என்றுதுதித்திணையடியில்வீழ்ந்திட்டுமிளந்திங்கட்கண்ணி சூடிக், குன்றுநெடுஞ்சிலைத்தடக்கைக் குழகனதுகுற்றேவல்செ ய்துபெற்ற, தொன்றுளதுதுருவபதமப்பதத்தினென்றுமுறை நியென்ன, மன்றல்கமழ்பசுந்துளபவனமார்பன்சிறுவனுக்குவ ழங்கினனே. உஉ

அருகுறையுந்தேவரொலா மாங்கவனையுலங்கன்முடி சூட் டவோங்குந், துருவபதந்தனிற்றுருவனெனுநாமம்புனைந்தெவரு ந்துதித்துவாழ்த்த, வரைபிரமாசதிரவைற்றனர்மற்றவனுமுள மகிழ்வின்றன், பரிவகற்றியவனோடினிதிருந்தான்பெறலரிய படர்தகின்மன்னே. உங

துருவன்துருவபதமடைந்த வத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம், கஉங.

அறுபத்தாவது
தேவாசுரர்தோற்றமுரைத்த
வத்தியாயம்.

---*---

என்னலோடுந்துருவனதுகதையையாங்களறிவுருவான்
சொன்னாயதனாலுளமகிழ்ந்தேஞ்சுடர்செய்மவுலிப்புத்தேளிர்
பன்னுசீர்த்திக்கந்திருவரியக்கர்பாம்புதானவர்கண்
மன்னுதோற்றமுரைத்தியெனச்சூதமுனிவன்வகுத்துரைத்தான்

புரிவாயவிழுநறுங்கமலப்புத்தேட்டனதுமனத்தினா
லுரைசால்பிரமாபதின்மர்தமைப்படைத்தானவ்வாறுயர்தக்கன்
பரிவாற்படைப்பப்படைத்தவெலாம்பாழ்பட்டொழிந்ததிறநோ
மருவாற்கூந்தற்சூதிவயிரிணியாமிவளைமணந்தனனால், [க்கி

ஆயசூதிமகிழ்ந்தளித்தவையாயிரவர்தமைநோக்கி
யேயும்படியேபடைத்திரெனவியம்பலோடும்யாழ்தெரிந்த
மாய்விறவநாரதன்படைப்பால் வருவதெவன்கொலெனவுரைத்
தூயதவரீர்புரிமினெனவவருந்துறந்துசென்றனரால். [துத்

அதுகேட்டுள்ளமிகமாழ்கித்தக்கனகல்வானிடைத்தோன்று
மதிபோனுதலாள்வயிரிணியாமற்றைமனைவிபாலறிவின்
முதியபுதல்வராயிரவர்தம்மையளித்தான்முன்னவர்போல்
விதிநேரந்தமுனியுரைப்பவவருந்தவத்தின்மேயினரால். ௬

இவ்வாறிவருமேகுதலுமெழில்சேர்வளைக்கைவயிரிணிபால்
வெவ்வேனெடுங்கண்மகளிராறுபதின்மர்தம்மைமேனகையு [ன்
மொவ்வாளென்னவளித்தனனாங் கவருளொழுகுகொடிநுசுப்பி
மைவார்குழலார்பதின்மர்தம்மைத்தருமன்றனக்குவழங்கினான்

டரிவிலாதகாசிபனுக்கெழில்சேர்பதின்மூவரையளித்தா
னுருவமதிக்காங்குவந்திருபத்தெழுவர்தம்மையுதவினு
னரிவாணெடுங்கணால்வர்தமையருட்டநேமிதனக்களித்தான்
பிருகுபுதல்வன்றனக்கிருவர்தம்மைப்பெட்பினுடனீந்தான். ௬

கற்றைக்கரியமலர்க்கூந்தற்கனிவாய்மகளீரிருவர்தமைச்
செற்றமகற்றும்பிசாசவனுக்களித்தான்றிங்கண்மருட்டுநுதன்
மற்றைமகளிரோரிருவர்தமையுமன்னோடுயர்விண்ணு
முற்றுபுகழத்தவம்புரியுமங்கிராவுக்குவந்தளித்தான். ௭

இவரிலுலகம்புகழ்ந்தேற்றுமெழில்சேர்தருமன்மனைவியரி
னவையில்விசுவைவிச்சுவதேவரைநற்றவத்தானல்கியொ
ருவமையில்லாச்சாத்தியைசாத்தியரைவிழைவினுடனுயிர்த்தா
ளெவரும்போற்றுஞ்சங்கற்பைசங்கற்பங்கடமையீன்றாள். ௮

மருத்துவதிநல்மருத்துவரையீன்றாள்வயங்குபானுவென்பாள்
அருத்திகூரப்பானுவரையளித்தாள்முகுர்த்தங்களைமுகுர்த்தை
விருப்பினீன்றாள்கொடாதமையலம்பைவிழைவினோடளித்தா
ளுரைக்குமெழில்சேர்வசுவென்பாள்வசுக்களெண்மர்தமையுயிர்த்தாள்.

எழில்சேரிவர்களோரொண்மரிலங்குந்திசைக்கோரொருவராய்
விழைவால்மகிழ்ந்துவீற்றிருப்பார் வீறுற்றுயர்ந்தமெய்ஞ்ஞானம்
வழுவாதுறையுங்காசிபன்றன்மகப்பேறியாவும்வகுத்துமக்கு
மொழிவாங்கேண்மினெல்லீருமென்றுவிரித்துமொழிகுற்றான்.

உரைத்ததவத்துக்காசிபன்றன்மனைவிமாரிலொளிரதிதி
விரிக்குங்கதிரோர்பன்னிருவர்தம்மைவிழைவினுடனீன்றாள்
வரிப்பூணுதலாள்திதியிரணியாக்கனோடுமெறங்களிந்து
தருக்காலுயர்ந்தவிரணியனைத்தந்தாளுவகைதழைவுறவே. ௧௧

கனியும்முதுப்சுந்தேனுங்கனிந்தமழலைச்செய்துவர்வாய்த்
தனுவென்றுரைப்பாணூறுமகளீன்றுள்வியற்றும்பிரையென்பா
விணைவிறேனுகேசிசேனியனுசிதுகடீர்சுக்கிரீவி
வினதைவிளங்குசுசியென்பார்தம்மைவிழைவினளித்தனளால்.

உரைக்கும்வினதையருணனையுங்கலுழன்றனையுமொளிர்வ
ளைக்கை, வரிப்பூணுதலாண்மின்னென்னுமடந்தைதனையுமகிழ்
ந்தளித்தாள், செருக்கியகன்றுகுழைகிழிக்குஞ்சேல்நேர்தடங்க
ட்சுரியென்பாள், விரிக்குஞ்சிறையபிலவமெனும்பறவைதன்னை
விழைந்தீன்றுள். கங

சுரசைகரியவிடங்கனன்றுசொரிதூம்பெயிற்றகொடுஞ்சர்ப்பம்
விரைவிறேராயிரம்வயறுவாய்த்தாள்விளங்குகத்துருவு
மெரியுமணிசேர்தலைகளாயிரங்களுடையவெறுழ்வலிய
வரிசேர்மிடற்றபடனுகமளித்தாளோராயிரமகிழ்வால். கச

கொங்கார்கூந்தற்குரோதவசைகொடியவரக்கர்தமையீன்றுள்
வெங்கார்விடநேர்விழிச்சுதியுமியக்கர்தம்மைவியந்தளித்தாண்
மங்காவெழில்சேர்சுரபியென்பாளீன்றுள்பசுக்கண்மடிமேதி
யங்கோமுனியென்பாளமரர்மாதர்முனிவர்தமையளித்தாள்.

சுடர்செய்பசும்பொற்குவடேய்ப்பத்துணைத்துவீங்கிப்பணை
த்தமுலை, யிடுகுநுசுப்பினருட்டையென்பாளியாழ்தேர்ந்துயர்கி
ன்னரொடு, மடைவேயியற்கந்திருவர்தமைப்பயந்தாளமருபிரை
யென்பாள், கொடிகடருக்களிவற்றையுளங்குளிர்க்கும்வண்ணமு
யிர்த்தனளால். கசு

பின்னுமகப்பேற்றினைவிரும்பிப்பெருமாதவங்கள்பலவாற்றி
மன்னுஞ்சங்வச்சானசிதனென்னுமிவனைமகிழ்ந்தளித்தா
ளன்னோர்தம்மிற்சங்கவச்சானென்பானுக்காயரிப்பியனும்
பன்னுமறைதேர்நயித்துருவன்றுனும்பழுதின்றுயுதித்தார். கஎ

கோதிலாதயித்துருவன்றனக்குக்குண்டபாயியொன்
றோதுந்திறலோருதித்தனரா லுமையிற்சிறந்தவிப்பியனுக்
கேதமில்லாவிப்பியரென்பார்களெழுந்துவெண்டிரைகள்
மோதுங்கடல்சூழுலகெல்லாமுன்னிப்புகழவுதித்தனரால். ௧௮

மற்றையசிதன்றனக்குயர்ந்து வயங்குமறையின்பொருளெல்லா
முற்றுங்குணருந்தேவலனென் றுரைக்கும்புதல்வனுதித்தனனற்
சொற்றேஞ்சிறந்தகாசிபன்றன்மரபிவ்வாறுதொகுத்தெடுத்துப்
பற்றில்லாதபுலத்தியன்றன்மரபுமறியப்பகருவாம். ௧௯

திரணவிந்துமகிழ்ந்தளித்ததேனூர்கூந்தலிளிபிலையென்
றுரைசெய்மடவாள்புலத்தியனை மணந்தாங்குயிர்த்தாளுலகெல்
பரவுகீர்த்திவிச்சிரவாவென்பான்றன்னைப்பகரவனுக் [லாம்
கரியமனைவிமார்களொருநால்வருளராங்கறையுங்கால். ௨௦

அவருட்டேவவன்னினியென் றறைவாள்குபேரன் றனையளித்
ளுவமையில்லாக்கைகசிரோங்குசினராவணனையுயிர் [தா
கவருங்கும்பகருணனைச்சூர்ப்பனகிதன்னைக்கலையுணர்ந்த
வெவரும்புகழும்விபீடணனையீன்றாளுலகமுளநடுங்க. ௨௧

மற்றைப்புட்போற்சடையென்பாண் மகாபாரிசனைமகோதரனை
வெற்றிவடிவாட்பிரகத்தன்றன்னைத்தியின்விழுதன்ன
கற்றைக்குழலாழ்வெய்யமுலைக்கும்பினசியாங்கன்னியைவா
னுற்றதேவர்நாணுமுள்ளநடுங்கவுயிர்த்தனளால். ௨௨

பகையென்றுரைப்பாடிரிசிராவென்பான்றனையும்பருதிவாட் [ச்
டிகழுந்தடக்கைத்தூடணனென் றுரைப்பான்றனையுந்திறல்வீதி
சிகுவன்றனையும்வரைவெருவத்திரண்டமுலைரம்மியைதனையும்
புகையும்விடத்தைதவாளரவுபொழிந்தாலென்னவுயிர்த்தனளால்,

அறிவாலுயர்ந்தவத்திரிபாலுதித்ததற்பினருந்ததியை, மறைதேர்
வசிட்டன்விதிமுறையின்மணந்துமற்றையவடன்பாற், பொறை
சால்மைந்தர்நூற்றுவரையளித்தானவருட்புகல்சத்தி, முறையே
யளித்தான்றிரசந்திதன்பால்மொழியும்பராசரனை. ௨௪

கோதிறவத்துப்பராசரன்பூங்குவளைநெடுங்கட்காளியிடத்
தாதிவேதவியாதமுனிதன்னையளித்தானுங்கவனு
மோதுந்திரைவாருதிவிரிநீர்முகந்தமுகிலையழகழிக்கும்
போதார்கூந்தலிரணியைபாற்பொருவில்சுகனையுதவினனால். ௨௫

அன்றேநெடுங்கண்வீரிணியைபாலந்துபுதல்வரொடுநடங்கு
மின்னேர்மருங்குற்கீர்த்திமதிதனையுமளித்தானவள்விருப்பாற்
றன்னேரில்லாவணுகனென்பான் றடந்தோண்மணந்து தகவி
னோர், பன்னுட்புகழப்பம்பிரமதத்தன்றன்னைப்பயந்தனளால்.

சொன்னேம்வசிட்டன்மரபெல்லா மறிவான்றெருகுத்துத்துலங்
குதவத், தன்றேன்புதல்வர்சத்திமுதலொருநூற்றுவர்தம்மாவி
யெலாம்,முன்னேயெதிர்ந்தவுதிரனெனுமரக்கன்கவர்ந்தானென
முனிவர்,தன்னேரில்லாச்சுதனைநீயதுசாற்றென்னச்சாற்றினன்.

தேவாசுரர்தோற்றமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௯௬௦.

அறுபத்தோராவது
அரக்கன் சத்திமுதலோரைக்கொன்ற வத்தியாயம்.

*

ஒடிவிறவத்துக்கவுசிகமாமுனிவனுதிரனெனவுரைக்குங்
கொடியவரக்கன்றனைநோக்கிக்கோதில்வசிட்டமுனியீன்ற
மடனிற்கேழ்விசத்தியென்பான்முதலாநூறுமைந்தரையு
மவாவென்னப்பணித்திடலுமன்னோராவிபருகினான்.

அதுகேட்டேங்கியருந்ததியோடலம்வந்தழிவில்தவவசிட்டன்
மதிதோய்குடுமிவரையேறிமண்ணில்வீழ்ந்துமறிகடலி
னெதிரேயோடிவீழ்ந்துமுயிரிறவாமையினானெடிதுயிர்த்து
விதியேவலியதெனவாடிவிம்மிவிம்மிமிகச்சோர்ந்தான். ௨

சோர்ந்தவசிட்டன்முனஞ்சத்தி மனையாளெய்தி நின்றூய்மை,
யார்ந்தபுதல்வன் புதல்வனென்றன் வயிற்றினுள்ளானவன்று
னே, சார்ந்தபழிதீர்த்திடுவெனெனச்சாற்றித்தானுந்தடங்கணீர்,
வார்ந்துவழியவயறலைத்துமயங்கிநிலத்தினுறவீழ்ந்தாள். ௩

நிலத்தின்வீழ்ந்தாளருகணைந்துநின்றன்வயிற்றினுறைபுதல்வன்
குலத்தையுயர்த்துமெனவாவி கொண்டங்கிருந்தேங்கோடியிடர்
யலக்கண்டவிர்தியரும்புதல்வர்க்கவலஞ்செய்யேலென்றட்டும்
புலத்தின்வழியேமனம்போக்கா வசிட்டனுரைப்ப வவள்புகல்
[வாள்

அன்னையாலென்மகவாலென்னருளுந்தந்தைதன்னாலென்
மன்னுங்கொழுநன்றனையில்லாமகளிர்தமக்கென்றழுதரற்றித்
துன்னுதழலின்வீழ்ந்தாவிதொலைப்பேனென்னத்தூயமுனிக்
கன்னற்குதலையருந்ததியோடிரங்கியவலக்கடல்வீழ்ந்தான். ௫

அவ்வாறிவர்கடுயருழப்பவாழிநெடுமால்விசும்பெய்தி, யொவ்வா
ன்பிறனையென்னையல்லா லொளிநீர்ச்சடையா னடியவருண்,
மைவார்குழலிவயிற்றுறைவோன் மரபுமவனாலுண்டாமா, லிவ்
வாறிரங்கல்வசிட்டமுனியென்றுதெருட்டியேகினனால்.

மாயனிவ்வாறுரைத்தபடிகேளாவுள்ளமிகமகிழ்ந்து
தூயகற்பின்திரசந்திதன்னைத்துயரோலெனவுரைத்தாங்
காயவவளையருந்ததிதன்னோடுமுடன்கொண்டரியதவ
மேயவசிட்டமாமுனிவன்றனதாச்சிரமமேவினான். ௭

மேவிமதியோர்ப்பத்துநிறைந்ததற்பின்விசும்பினிடைவாழுந்
தேவர்மகிழமுகுந்தனையாங்கதிதியீன்றசெவ்விபோ
லோவமறைகளொருநான்குமோங்கவயிறுவாய்த்தனளாற்
றூவில்கற்பின்திரசந்திதகைசேர்தவத்துப்பராசரனை. அ

பிறந்தகுழவிமுகநோக்கிவசிட்டன்பெட்பினெடுமுறைந்தா
னிறந்தசத்திமகப்பேற்றுற்றுணைவரோடுமின்புற்றே
யுறைந்தான்பிதிர்க்களுலகத்தினுறையவுதித்தவம்மதலை
சிறந்தவன்னைமுகநோக்கிச்சிந்தைகுழைந்தீங்கிவைசொன்னான்

என்கொலறியேனமங்கலநணிழ்ந்தீங்குறைதியெனையார்ந்த
வன்பினளித்தநற்றாதையெவ்வாறிரந்தானறைதியெனத்
துன்புற்றுளைப்பவாங்கவளுந்துயரக்கடலினிடைமூழ்கி [ள்.
வன்புற்றுதிரனெனுமரக்கன்மாய்க்கமாய்ந்தானெனச்சொன்

அரக்கன்றன்னாற்கொலைப்பட்டா னெனக்கேட்டலர்வார் சடையண்ணல், விரைப்பூங்கமலவடிபோற்றி மும்மையுலகும் விரிதழலின், னெரிப்பேனென்னவசிட்டனஃ தடாதாலெழினின்றாதையுமன், செருக்கான்மாய்த்தவரக்கனுயிர் செகுப்பாயென்னத்தெரித்தனனால். கக

என்னலோடுமகிழ்தூங்கி மண்ணிலிலிங்கம்வகுத்திளந்தேன், றன்னுமலர்தூய்த்தொழுதேத்தித் துணைத்தாட்கமலமுளத்திருத்தித், தன்னைமறந்தாங் கவனிருப்ப் வவன்முன்றடமால்வரையீன்ற, மின்னேர்மருங்குலுமையோடும் விமலன்வெளிவந்தான்மன்னோ. கஉ

வந்தவிறைவன்மலர்த்தாளைவணங்கிவணங்கியானந்தச்
சிந்துவொவாருதிமூழ்கித்தேமென்குதலையொருபாகா
பைந்தத்தவங்கண்டடியேன்முன் னெளிதின்வந்தா யென்றுவி
பந்தமறுக்குமிருகமலபாதமீட்டுந்தொழுதனனால். [னை

தொழுதசிறுவன்முகநோக்கி விழைந்ததென்னைசொல்லுகென
வழுவலன்பிற்றாதையனைக்காணவேண்டுமவருயிரை
யழியபுரிந்தவரக்கனைவன்கிளையோடடுத்தல்வேண்டுமெனப்
பழுதில்சத்திமுதலினனைப்பாங்கிற்காணவிடுத்தனனால். ௧௭

விடுத்துச்சிறுவன்முகநோக்கிவிளங்குமற்றுந்தாதையனை
யடுத்துப்பணிதியெனவிறைவனருளிற்கூறவுவகையுளம் [ன்
பொடிப்பவன்றோன்பணிந்திடலும் பொருவில்சத்திதன்புதல்வ
மடற்பூங்கமலமுகநோக்கிமகிழ்வினோடுமிவையுரைத்தான். ௧௮

அரியமகப்பேற்றார்பெறுதற்கரியதுண்டோயுனையான்முன்
புரியுந்தவத்தாற்பெற்றதனாற் பெற்றேன்புரிவார்சடையண்ணல்
மருவுமுலகமென்றுதவவசிட்டன்பாதமலர்வணங்கி
யுரியதுணைவரொடுமீசனுறையுமுலகமடைந்தனனால். ௧௯

இவ்வாறவனேகியபின்னரிறைவன்றாளின்மகிழ்தூங்கிச்
செவ்வேவணங்குசிறுவன்முகநோக்கிச்செந்தீவிடங்கொதிக்கும்
வெவ்வாளரக்கர்தமைக்கொல்லும்வகையுமருளிவிரைதுளும்பு
மைவார்கூந்தலுமையோடுமணிநேர்மிடற்றன்மறைந்தனனால்.

செய்யதழலினவிசொரிந்துதீதிறாதையுயிர்மாய்த்த
மையோர்மேனிவாளரக்கன்குலத்தோடிடியேறுண்டமணிப்
பைவாய்நாகமெனவாவிபதைத்தாங்கழியக்கொலக்கண்ட
பொய்தீர்வசிட்டன்பராசரனை நோக்கியிவைகள்புகன்றனனால்.

நின்றாதையனைக்கொன்றவனையல்லாவரக்கர்யாவையுநீ,பொன்று
ப்புரிதல்மாதவத்திற்பொருந்தினோர்க்குப்பொருந்தாதா, லென்றா
ங்குறைப்பவரக்கர்தமைக்கோறலொழிந்தானிதுவறிந்தாங், கன்
றைப்பகலேபுலத்தியமாமுனியுமாங்கணடைந்தனனால். (௧௧)

உற்றமுனிவன்பராசரனைநோக்கியுன்றன்குருமொழியாற்
செற்றமொழிந்தென்மரபாயவரக்கர்கொலைநீதீர்ந்தகன்றாற்
பெற்றிடாதமெஞ்ஞானம்பெற்றிபிறங்குமணிவண்ண
னற்றமில்லாப்புராணமுரியறையவறிவுண்டாகென்றான். ௨௰

அரக்கன் சத்திமுதலோரைக்கொன்றவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௯௯௰.

அறுபத்திரண்டாவது

சூரியன் வங்கிசமுரைத்த வத்தியாயம்.

என்றுமுனிவனோதுதலுமாயோன்புராணமெவற்றினையு
நன்றுமொழிந்தானெனவோடுமினிக்காடுமுகமலரத்
தூன்றுகதிர்கான்றிலகுசெழுஞ்சுடரோன்மரபில்வேந்தர்தமை
மன்றமொழிவாயெனமுனிவர் சூதனறிவால்வகுத்துரைத்தான்.

வேறு.

மாசறுதவத்தாலுயர்ந்தழியாதமறையொருநான்கையுமுண ர்ந்து, காசிபன்புதல்வன்கலிகெழுபரவைக்கருங் கடன்முகட்டி னிற்றோன்றி, யேகவிறுலகுமாசுறழுமிருள்படக்கதிர்க்குலம்ப ரப்பித், தேசுகண்படுக்கும்பசும்பொன்மால்வரையை வலம்வருந் தினகரனுமால். ௨

தடவரையனையமுலைசாற்றுங்கித் தனியிடைச்சங்கைகொ ள்பவள், சுடரொளிவிரிக்கும்பருதியைமணந்து சாயையைவச்சத மென்று, மிடல்கெழுதிணிதோள்மனுவையுமிரேவந்தனையுநன் னமனையுமினிரும், வடிவெயிர்நெடுங்கண்யமுனையாமடந்தை தன் னையும்வயிறுவாய்த்தனளால். ௩

பூங்குழற்பிரபையன்னவற்புணர்ந்துபுலரியாங்காலத்தையு
யிர்த்தாள், வாங்குநுண்மருங்குற்சாயையென்பவளு மற்றவன்
வரைப்புயந்தழுவி, யோங்குசாவன்னியென்பவன்றனையுஞ்சனி
யையுமொளிநகைச்செவ்வாய், மாங்குயிற்குதலைத்தபதியென்று
மாக்குமடந்தைதன்னையுமளித்தனளால். ௪

எரியுமிழ்வடிவேல்மனுவருள்புதல்வனெழில்பெறுமிக்குவா
கவன்றன், பொருவறுபுதல்வன்விகுக்கியாங்கவன்றன்பொற்பு
றுபுதல்வன்றகுத்தன், இருமலிகுத்தன்மகன்சுயோதனன்மற்ற
வன்மகன்பிருதவன்மகன்சீ, ருனாசெய்விச்சுவகனவன்மகனிவ
ருச்சுவனென்னுமொளிறுவாருரவோன். ௫

மற்றவன்புதல்வன்பிரகதச்சுவனுங்கவன்மகன்யுவனாசு
னைய, பொற்றடந்திணிதோட்குவலையாச்சுவனுங்கவனருள்புத
ல்வன்மேவலனாப், பற்றியுள்ளாவியருந்தவாட்டிருடாச்சுவனவ
ன்பயந்திடுபுதல்வ, னெற்றுகொண்டினாகிர்மன்னனைக்கம்புரக்குமெ
ழிற்பிரமோதியென்றுரைப்பார். ௬

ஆங்கவன்புதல்வன் மடநலார்க்கரங்க ளுமரியச்சுவனலர்ந்
த, தேங்கமழ்தண்டாரன்னவன்புதல்வன்றிறலகிரும்பனுங்கவ
வன்சேய், வாங்குவிற்றடக்கைச்சங்கதாச்சுவனு மற்றவனளித்
திடுமைந்த, ரோங்குசிர்க்கிருதாச்சுவனெழிலிரணச் சுவனெனு
மொளிறுவாள்வேந்தர். ௭

இடுகுநுண்மருங்குன்மடனலார்விரும்புமியலிரணச்சுவன்
புதல்வன், வடவரைகறுவிமல்லடுதிணிதோள்யாருவனச்சுவன
வன்சேய், கடல்புடையுடுத்தமண்ணைக்கப்புரக்குங் காதுவெண
மணிமுடிவேந்தர், தொடிபுனைதடங்கைத்தலைவனாயகத்தாயின
மணிமூன்றின்மாந்தாதா. ௮

அன்னவன்புதல்வனடையலர்ச்செருக்கு மாடல்வேல்வேந்தனம்பரிடன்,மின்னலங்கவற்றுநுணுகிடைநோவவெற்பினைப்பழித்திருமாந்த, பொன்னவிர்திதலைமுலையுமிழ்ப்பசுந்தேன் பொழிமதுத்தார்ப்புருகுச்சன், கன்னவிறிரடோளடையலர்வணங்குகனைகழற்றுண்முசுகுந்தன். கூ

மற்றவர்தம்மிலம்பரீடன்றன்மகனெழில்வரைநிகர்தடந்தோட், பற்றலராவிபற்றியுண்பருமவாளினைச்சுவனவன்சேய்; கற்றையங்குழலார் காமனேயென்னக் காமுறுமரிதனுங்கவன்சே, யொற்றையந்திகிரியுருட்டிமண்முழுது மொருகுடைநிழற்றுமாரீதன். க0

வாளையம்பகடுதாக்கலினுயர்ந்த மலர்தலைப்பச்சிளங்கமுகின்; பாளைவிண்டொழுகுவழைச்சிறுதேறல்பாய்பெருங்கழனிநாடாளுங், காளைவண்டுழக்குதாரப்புருகுச்சன்கண்மணியனையநற்புதல்வன், வேளெழில்சாயும்வனப்புடைப்பிரக தச்சுவனும்விறல்வேந்தன். கக

அவனருள்புதல்வனடுகளத்தெதிர்ந்தவாடல்வாளரசர்பொன்முடிமேற், கவனவாம்பரியின்கவிகுளம்பழுத்துங்காதுவேலேந்துசம்பூதி, யுவனருள்புதல்வன்விட்டுணுப்பிறவனவன்மகனொள்ளிழைமடவார், குவளையந்தடங்கணிறைதருதடந்தோட்கொற்றவாள்வயிட்டுவைப்பிறவன் கஉ

மல்லெனத்திணிதோள்வரைசிறிதாக வளர்கிரிதாச்சுவன்றனக்குச்,சொல்லிடும்பிரீடதச்சுவனென்னுந்தோமறுபுதல்வனுண்டவன்சேய், செல்லுறநிவர்ந்தமுடமுதிர்தெங்கின்றீம்பொழிலிருபுடையுடுத்த, வல்லியங்கமலப்பழனநாடாளுமடலரியச்சுவனென்பான். கங

மட்டவிழலங்கலணிதருமரியச்சுவனருள்புதல்வன்மாதிரத்
த, வெட்டுமால்வரையும்பிடுங்கிநீள்கரத்தால்விசும்புறவெறிந்து
நின்றார்க்கும், விட்டொளிபசும்பொனேடைமால்யானைவிசமனு
மவன்விழைந்தருள்சேய், கட்டெழிற்றிரிதன்னுயாவெனவுரை
க்குங்கவுளழிகடாக்களிற்றுழவன். ௬௪

ஆங்கவன்கொன்றையலர்சடையண்ணற்கடிமைபூண்டகலி
லம்புரந்து, திங்கறுபுரவிமேதனன்காகச்செய்குவான்சிந்தையு
ணினையா, வோங்குறுந்திறயிலாமையில்வருந்தியுறைதருகானெயி
றபசும்பொற், பூங்கமலத்தோன்புதல்வனைத்தன்னடியவன்மையினா
டைந்திவைபுகன்றான். ௬௫

பரிவுறேல்வேந்தேயிவுளிமேதத்தின் பதின்மடங்குறுபலன்
கொடுக்கு, முருவவாணுதலாள்பங்கனன்றேமை மாயிரத்தெட்டு
மோதென்று, விரைவுடனுரைப்பவாங்கவன்றானும்விழைந்தவை
புகன்றழியாத, புரவிமேதத்தின் பதின்மடங்காய பலத்தினைப்
பொருந்தினனன்றே. ௬௬

பொருந்தினனென்னப்புகறலுமிருந்தபொய்யறுதவத்துமா
முனிவர், திருந்திடத்தண்டிபுகன்றநாமத்தைச்செப்புதியமைறயு
மாறென்னக், குருந்தொசித்தாயர்மனையிடைவளர்ந்தோன் கா
ண்கலாக்குழகனதுணைத்தாள், வருந்திடாதுள்ளத்திருத்தியகு
நன்வருத்தறிவுறமொழிந்தனனால். ௬௭

சூரியன்வங்கிசமுரைத்த வத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௩௭௭.

அறுபத்துமூன்றாவது
சகத்திரநாமமுரைத்தவத்தியாயம்.

அலைகீரணியுந்திரன்றூறுப்பிறவுவாதனருள்சர்வன்
சிலைவார்நுதலாள்பங்கினுறைதுருவன்சிகண்டிமகாகரும
னிலவும்பகவான்காரக்கன்றபசுசிகரில்மகாகாயன்
புலவுகமழுந்திரிசூலனனகன்பூதநாரணனே. ௧

கறைசேர்மிடற்றினுன்மந்தன்விருபனியதன்மகாகாட்டன்
பிறைசேர்சடிலன்பரன்கருத்தாவாதிபிறங்குங்கோரதபன்
குறைவிலாதபிராணுமன்மந்திரணியதன்கோதில்தபன்
விறல்சேர்மழுவாட்டசவாகுலீலகண்டன்விளம்பரனே. ௨

வினதன்வசுவக்கிரணதிநிதிக்கண்விளம்புமரிகேசன்
வினைவோர்நெஞ்சினுறைசுபத்திதயித்தியகாலிர்த்தியநிருத்தன்
கனகவளைவினைமைகேச்சுவாமனமுந்தகந்தாரிமனு
கணைவார்கொன்றைநவிவசாயன்விசயன்விழுமெய்கியகாண். ௩

உரைசெய்நிருத்தன்வெருளுபணபரிகாரியோளிர்பகவான்
பரவுமுநிநன்மகாதேசனுங்கிரதேசன்பரன்சம்பூப்
புரிவார்சடிலன்றிசழ்சருவவியாபிபுகலுங்காவாசி
விரைவார்கூந்தலுமைபாகனிவாரிருகன்விச்சுவரூபன். ௪

கரையேறுயர்த்தவாசாகனுரகனவையில்மகேந்திரவேகன்
நிரைவாய்நஞ்சமருந்துமுனியுலோகன்றிங்களணியியமன்
முருகுசடாதழியதத்தாளவாசுதேவன்மொழிசித்தன்
கரியினுரிபோர்த்திடுதான்றமதனகாலன்கவாம்பதியே. ௫

அந்திவண்ணத்திசானனுலோககாரியனைறுபிழித்து
னர்த்திகிகந்தன்மகாலிங்கனிசையில்லாவிதிகாசன்

பந்தமடியார்க்கறுத்தருளும்விபாகன்பகவர்த்தனன்கற்பன்
செந்தார்கொன்றைபுனையிடம்பனடம்பன்றிகழும்பசுபதியே. சு

சங்கக்குழைதாழ்சுகனசுதனகின்மானன்சாற்றகதன்
மங்கையிடஞ்சேர்சோபனன்றத் துருணன்வணங்குமகாவருட்
டிங்கட்சடிலமகாகர்ப்பன்மதங்கன்றிகழுமகாகன்னன் [டன்
வெங்கணரவமணிசவத்திவருட்டன்சுபாபன்விருடகனே. எ

செங்காலன்னமுயர்த்தவயன்வணங்குவிமுத்தன்றேவேசன்
கொங்கார்கூந்தலுமைபங்கிற்சேகிதானன்குழைந்தடியார்க்
கங்கேயருளுமகோபனன்மாமேகனழிவில்மாயாவி
சங்குராவான்றேவர்தொழுதாட்டாமனாச்சிவாத்தனனே. அ

இவைகள்முதலவாயிரத்தெட்டீசனுமமியம்பிடுவோர்
நவைகூர்பஞ்சபாதகமுநீங்கிஙவிற்றுபுரவிமக
மெவருமோராயிரமியற்றுபலத்தையடைவாரொன்றுபின்னுந்
தவமேயியற்றுஞ்சூதமுனிவேந்தன்மாபுசாற்றினன். க

சகத்திரநாமமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம். கஅசு.

அறுபத்துநான்காவது

திரிதன்வாவங்கிசமுரைத்த வத்தியாயம்.

முருகுடைக்குவளைமேய்ந்திளமேதிமுப்புடைக்காய்க்குலைத்
தெங்கின், விரிசிழற்றுஞ்சும்பழனநாடாளும்விறற்றிரிதன்னுவா
மைந்த, னுளைகிழித்தனையநுணங்குநூற்கலிங்க நேரவாவலைச
த்தநுண்மருங்குல்; விளைவழிந்துயர்ந்தவெம்முலைமடவார் விரு
ம்புறுமருணனும்வேந்தன். க

அறைபவன்புதல்வ னடையலார்புரங்க ளகழ்ந்துநீர்வாவி
செய்தாடுங், கறையடியானைச்சந்தியவிரத னவன்மகன்கற்பக
நாடு, மறிதிரைமுத்தமணியெடுத்தெறிபு மாக்கடலுடுத்தபாரே
ழு, நெறிதிரிந்தாலுந் திரிந்திடாவாய்மை நிகழ்த்தரிச்சந்திரனெ
ன்பான். ௨

வைத்தலைநெடுவேன்மற்றவன்புதல்வன்வளர்கழைத்தேத்
திருனுடையச், செய்த்தலைவாளைதாவுதண்ணாட்டுலோகிதனவன
ருட்சிறுவன், பைத்தபாம்பல்குன்மடனலார்முகிழ்த்தபடாமுலை
பொருததாரரிதன், மைத்ததண்டுளிக்கார்முகிலடைகிடக்கு ம
ணிவரைத்துந்துவென்றுரைப்பான். ௩

துந்துவென்றுரைப்போன்றனக்கடல்விசயன்சுவேதனெ
ன்றுரையினிற்சிறந்த, மைந்தரோரிருவருளரவர்தம்மில்வாகை
வேல்விசயனற்புதல்வ, னந்திவோர்வண்ணன்முனிவுறப்பட்டபு
ரமெனவடையலார்புரங்கள், செந்தழலுண்ணவிழிக்கடைசிவ
க்குஞ்சிங்குவேற்குருதனும்வேந்தன். ௪

தும்பைவேய்ந்தடுபோரொற்றிடுதெவ்வர்தோட்டொடியேந்
துகோட்டினைக்குஞ், சிம்புரியாகக்கொள்ளுமாகளிற்றுக்கிளர்
புகழ்க் குருதனற்புதல்வன், பைம்பொனின்மவுலி மன்னவர்ப
ணியும்விரதன்மற்றவன்மகன்பகைவர், வெம்பமர்கடந்துசெந்த
முறும்முட்வெற்றிவேல்வாகுவென்றுரைப்பார். ௫

வாகுவின்புதல்வனாகவைத்தெதிர்ந்தமன்னர்பொன்மணிமு
டியிடறும், வேகமால்யானைச்சகரனுங்கவன்சேய் வென்றிவேல்
விறலசமஞ்சே, னோகையோடன்னோளித்திடுமைந்தனஞ்சுமா
னவனுயிர்ப்புதல்வ, னாகிலவண்டுதவழ்ந்துதேனருந்துகளிமலர்
த்தாரணிதிலீபன். ௬

ஆங்கவன்புதல்வனலர்சடையண்ண லாய்மலர்த்துணையடி போற்றி, வீங்குநீர்க்கங்கைத்திருநதிகொணர்ந்தபகீரதனவன்வி ருப்புறுசேய், வாங்குதெண்டிரைநீரளறெழுமுகந்தமைத்தகார் முகில்விளையாடுந், தேங்கமழ்பொழில்சூழ்திருநகருறையுஞ்சினங்கொள்வெள்ளிலையவேற்சுதன். ௭

வைக்கெழிலளித்துமானிலஞ்சிறக்கப்பரந்தகாழல்குன்மாமகளிர், மைக்கெழில்கொடுத்தமதர்விழிநீங்கா மணிப்புயச்சருதனற்புதல்வன், திக்கயமெட்டுமெரும்பொறையாற்றத்தினாக்கடலுடுத்தபாரேழு, மொக்கமால்வரைநேர்புயத்தினிற்றுங்குமோங்குசிர்புனைந்தநாபாகன். ௮

நாந்தகத்தடக்கைவெற்றிநாபாகன் மகனொருநாற்பெருந்திசையு, மேந்தியபுகழும் பரீடனுமவன்சே யிரிருகாவதங்கமழுஞ், சாந்தளறெடுக்குந் தடம்புயச்சிந்துத் தீபன்மற்றவன்றருபுதல்வன், பார்தன்மேற்கிடக்கும்புவியெலாந்தானே பரித்திடுந்திறலயுதாயு. ௯

மற்றவன்புதல்வன்வல்லியும்பொருந்தார் மனைவியாமங்கலனுனு, மற்றிடப்பரூஉத்தாள்பெயர்க்குமால்யானை ரிதுபன்னவனருள்புதல்வன், பொற்றசெங்கமலப்பழனநாடாளுஞ் சாருவபூமனுங்கவன்முன், பெற்றநற்றவத்தாற் பெற்றிடுபுதல்வன்பின்னவண்டராற்றுதார்ச்சுதாசன். ௧0

தடனறியாதுகழிப்பினுந்தெவ்வர் தலையினைத்தள்ளியல்லாது, விடுகதிர்மணிசெய்தடத்தினுட்புகுதாவிறல்கெழுவெய்யவாட்சுதாச, னொழுவறுவனப்பார்மகன்சவுதாசனோங்கவன்மகனசுமாதன், மடலவிழ்பசுந்தாரன்னவன்புதல்வன் வாளகைவேல்மூலகனென்பான். ௧௧

உவனருள்புதல்வனுயர்கழைதொடுத்ததெத்திருவுடைதா
வெய்யோன், கவனவாம்பரியின்கவிகுளம்பிடறுங் கவின்மலைச்சு
தரதனவன்சேய், தவழ்மதிக்கவிகையிருநிலமுழுதுந்தனதென
க்கவியினிழலினுறுங், கவனருள்புதல்வன் விருத்தசர்ம்மாமற்றவ
னருள்மைந்தன்விச்சுவகன். கஉ

பொருவறுமவன்றன்புதல்வன்மாற்றரசர்பொழிகதிர்மணி
முடியிடறுங், திருகுவெஞ்சினத்தகறையடிக்களிற்றுத் திலீப
னன்னவன்றருபுதல்வன், கரிமுகமெழுகியனையருன்மந்தி காய்
க்குலைவிரிதலைக்கமுகு, தருமிழற்றுஞ்சுங்குருமணிப்பொருப்பன்
றமவேலேந்துகட்டுவாங்கன். கங

அன்னவன்புதல்வனரசிளவன்ன மாயிரட்டாமரையுறைய
ச், சென்னலங்கவரிவீசிடும்பழனநாட்டுறைதிர்க்கவாகவன்றன்,
பன்னரும்புகழ்சேர் புதல்வன்வல்லேன முழுவெழுபாத்தரும்
பொன்னு, மின்னவிர்மணியுமருவிகொண்டிறங்கும் வியன்மலை
ரகுவெனும்வேந்தன். கச

மற்றவன்புதல்வன்வாங்குவெண்டிரைநீர்வட்டவையுண்டிடு
வதுபோலப், பற்றலர்தாமரைநந்திறந்துநிரம்பருகுவைவேலசண
வன்சேய், பொற்றபொன்மவுலியமரர்வந்திரப்பப் போர்ப்புலிய
னையசம்பரனை, வெற்றிகொள்வாளான்முடித்தலையுருள வீழ்த்
திய தசரதனுமால். கரு

ஆங்கவன்புதல்வனலைகடலகழா வணிமதிலிலங்கைமுதா
ரி, லோங்கரசிருக்குந்தசக்கிரீவன்றன் னுள்ளுயிரொன்றறப்ப
ருகித், தேங்கமழ்தாமரைநந்திறந்தகன்று செல்கெனச்சிலைமுகந்
தொடுத்து, வாங்குவிலிராமனன்னவன்புதல்வன்மணிமுடிக்கு
சலவனென்பான். கசு

குசனருள்புதல்வன்கோக்கணங்கோடிவிழுங்கியும்வீழுங்
கிடுக்கொண்ட,நசையறுதழனுநாமவேல்சத்தியாங்கவன்மைந்த
னுற்றிசையும், வசையறுசீர்த்தி வழுத்துமாறுடன்ற மணிமுடி
வேந்தருள்ளாவி,பசையறவருந்திச்செந்தழறும்பருகிவாணி
டதனும்வேந்தன். ௧௭

நிடதனைப்புதல்வனெய்மதிகவளந்தெவிட்டிமெய்நிழலினைச்
சனிபுங், கடமழிந்தொழுகுங்கடுங்கண்மாலியானைநளனவன்கா
தல்கூர்மைந்த, னுடைதிரைப்பரவையுடுத்தபாரேழுமொருதனி
நிழன்றகோல்செலுத்து, படிமதஞ்சாய்த்துக்குருதிவாய்சுமழும்
பருதிவேல்நபனெனும்வேந்தன். ௧௮

கோடிவண்டிமிர்தார்நபனருள்புதல்வன்குளைகழன்மன்ன
ர்பொன்மவுலி, காடிவேதிட்டும்புண்டரீகாக்கனவனருணல்லெ
ழிற்புதல்வ, னுபொம்பென்னப்புடையகலல்குலாயிழைமடநலா
ரகன்ற, வோடரித்தடங்கணிணைதருவனப்பார் சேமதன்னுவா
லெனுமுறவோன். ௧௯

ஆங்கவன்புதல்வனறுமலர்நெகிழ்த்தநாற்றம்விண்ணகமெ
லாங்கமழ, வோங்கியபொழில்சூழ்திருநகர்த்தேவரானீகனுங்கவ
னுதவிடுசேய், வீங்குதெண்டிரைநீர்வாய்மடுத்துண்டு விளாந்த
மைமுகிலிடைகிடக்குந், தீங்கறுபசும்பொற் குடுமியம்பொருப்
பன்கினகுவெனுந்திறல்வேந்தன். ௨௰

காடகமொன்னார் புகுதரச்செய்யுங் கினகுகாமுறுபுதல்வ
ன், பாடல்வாய்ச்சரும்பர்படிந்துதேனுண்ணும்பசுந்தொடைச்
சகாசவனவனுக், சோடரித்தடங்கண்மடனலார்விரும்புஞ் சுக
னுசைசந்திராவலோச, னுடலவாட்டார்பீடினென்றனைக்கு பா
சனுபுதல்வனுண்டாமால். ௨௧

சுகனருள்புதல்வன் சுரிமுகச்சங்கஞ் சூலுலோந்தலறிநொந் தீன்ற, நகைமணிமுத்தந்திரையெறிபுனல்சூழ்நாட்டுறைசந்திர கிரியாங், கெல்கடியவன்றன்புதல்வன்வாகழற்காலிறைஞ்சிடா மன்னர்வாழ்க்கரம், புகையழல்கொளுத்துங் கடுங்கண்மாலியா னைப்பாணுசித்தெனும்புகழ்வேந்தன். உ௨

நெறித்தபூந்தொடையன்மற்றவன்புதல்வனிழன்றவான்க ற்பகக்கோட்டிற், கறிக்கொடிபடருங் குருமணிப்பொருப்பன் கவின்சுலுத்தாயுவாங்கவன்சேய், செறித்தநீடோகை நடஞ்செ யப்பசியதேனுமிழ்காந்தள்கைமலிழ்ந்து, மறித்திடும்பொழில்சூ ழ்மருநாடாளும்வரதனென்றுரைத்தனனன்றே. உ௩

திரிதன்வாவங்கிசமுறைாத்த வத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௦௦௬.

அறுபத்தைந்தாவது

சந்திரவங்கிசமுறைாத்த

வத்தியாயம்.

உரைத்தனைகதிரோன்மரபினில்வந்த வேந்தர்யாரையுமுல குண்ட, விருட்குழம்பெறிந்துலாக்கதிர்பரப்பியாவருந்தொழு திடக்குணபாற், றிரைக்கடன்முளைட்டிலெழுதருதிங்கள்மரபினி ல்வேந்தரையெமக்கு, விரித்துரையென்னமுனிவரர்க்குதன்விரித் தனனுரைக்கலுற்றனனால். க

வேறு.

அருங்கதிர்செய்மதிக்கடவுளளித்தபுதல்வன்புதனவன்சேய் மலையூருவவேல்விடுத்தமுருகவேளில்வாங்குதித்த

சிலைவாய்ப்பகழியோன்னலர் தந்தேந்தாரகலவனைபோக்கி
நிலவுங்கவிகைசிலமுழுதுமிழற்றபுரூரவாவென்பார். உ

பிணைமானேக்கையழகழித்துப்பெய்தேன்குவளைமலர்வாட்டுங்
கணைபோலுண்கணுருப்பசியைக்கலந்துபுரூரவாவளித்த
வினையில்புதல்வராயுவொடுமொயுவியம்புமமர்வாயுத்
தினிதோட்சதாயுச்சுதாயுசுறுந்தேனர்தொடையில்விசுவாயு. ௩

என்னுமவருளாயுவென்போன்புதல்வன்வேந்தரினிதீன்ற
கன்னற்குதலைமடமாதர்காமுற்றளித்தபசுந்தொடையுந்
துன்னுங்கதிர்கான்மணிமுத்தவடமுந்துயல்வந்துயர்குடுமிப்
பொன்னங்கிரியைப்பாடழித்தபொலிதோணகுடனென்பரால்

நகுடனளித்தபுதல்வனவருளராங்கவருணஞ்சசூழ்
புகைவேற்றடக்கையாதியென்பான்பொருவில்வெள்ளியினிதீன்
வகல்காழல்குலியற்றையவ்யானிதனையும்விடபனுவா [ற
மகிழவின்நசனமிட்டையென்பாடனையுமணந்தனனல். ரு

மைநூற்றனையமலர்க்கூந்தற்றெய்வயானிமகிழ்புதல்வர்
செய்வாயுனாத்தகெட்டிலைவேலெதுவுசிகரிற்றுருவசுவும்
பையேற்றகன்றபசட்டல்குற் படர்வெம்முலைச்சனமிட்டையீரு
ன்பொய்தீர்புதல்வர் துருகுயனுப்பூருவென்னப்புகன்றனரால்.

அளியமலர்ச்சிறடித்தெய்வயானிமுலைமேலன்புற்றுக், கிளிபோ
ன்மிழற்றுஞ்சனமிட்டை கிளர்வெம்முலைதோய்ந்திருந்ததனல்,
வெளிமீதுறையுங்கதிர்வெள்ளிவினாத்தாரியாதிதனைநோக்கிக்,க
ளிவந்தரும்பாக்கிழவுருவையடைநீயென்னக்கனன்றுாைத்தான்

உரைத்தலோடுங்கிழவுருவையெய்திப்புதல்வரொடுமிந்த
வருத்துமுருவைவாங்கினுமதிளமைதருவீரெனவழங்க

விருப்புற்றொருநால்வரும்வெறுப்ப விளையவிறல்வேற்பூருவென்
பானருத்தியாலக்கிழவுருவைவாங்கியிளமையளித்தனனால். ௮

அளித்துவிளமையடைந்துமிகமடவார்கனிவாயமுதருந்திக்
களித்துவருடமாயிரஞ்சென்றதற்பினிளமைகடிதளித்து
விளைக்குந்துன்பமூப்பினைத்தான்வாங்கியுலகெலாம்விளைத்தேன்
றுளிக்குந்தொடையற்பூருவைக்காவென்னமவுலிசூட்டினான். ௯

போற்றுந்தென்கீழ்பாற்றென்னாடுகப்போர்வேற்றுருவசுவை
மாற்றில்பசும்பொன்மணிமவுலிபுனைந்துவடமேல்பாற்றிசையிற்
கூற்றுமுட்குங்கொலைபுரியுங் குருதிவடிவேற்றுருகுவைத்தேன்
றூற்றுபணிநாண்மலர்மாலைச்சுடர்செய்மவுலிசூட்டினான். ௧௦

வடகீழ்பாலிற்பகைவனாநீவாகைவேலுக்குணவுகொடுத்
தொடுவின்றலர்தார்புனையனுவை யுறைவாயென்னவுவந்துதவி
யடைவேதென்மேல்பாலெல்லாமாத்தின்வழிநின்றகலாது
கடமால்யானையெதுவென்பான்றன்னைக்காத்தியெனவளித்தான்

இவ்வாறீன்றபுதல்வனாவர்தமக்காங்குதவியெழின்மலரா
னொவ்வாவனப்பின்மனைவியரோடுயர்வெங்கானந்தனில்மேவி
யையவாயரவையனையபொறிதபநோற்றியாதியளிமூரலு
மைவார்கடந்துலுமைபங்கன்மலற்றாணிழலடைந்தனனால். ௧௨

உரைத்தகாதையினைப்பரிவிற்கேட்டோர்மகிழ்ந்தோரோதினோர்
விருப்பார்மகப்பெற்றிருநாலந்தன்னினெடுநாண்மிகவாழ்ந்து
வரிப்பூணுதலார்பங்கனுறையுலகில்வதிவாரொன்றுதவத்
திருக்காலுயர்ந்தசூதமுனிவேந்தன்மரபுசாற்றினனால். ௧௩

சந்திரவங்கிசமுறைத்தவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௦௨௨.

அறுபத்தாறுவது

எதுவங்கிசமுனைத்த வத்தியாயம்.

———※———

தென்மேல்பாலிலுறைநயுமெதுவளித்தபுதல்வர்தீய்த்துமுக,சொ ன்னூர்வெள்வேற்சகத்திரசித்தெழில்சேர்குரோட்டுநீலன்முது, பன்னூறெறிந்தசிகன்கோடிபருதிவடிவாள்மன்னர்தொழு, மின் னூர்கழற்காலிரகுவெனும்வினைத்தார்வேந்தனெனவிரிப்பார். க

பகர்ந்தவவருட்சகத்திரசித்தென்பான்புதல்வன்பசுநறவார் நகைந்ததுணர்த்தார்ச்சதசித்தாங் கவன்றன்புதல்வர்மூவரிற்சீர் திகழ்ந்தம்படருமேகயன்றன்புதல்வன்றெய்வத்தாமரையை நகும்பொற்கழற்காற்றருமநேத்திரனென்றெவருநவில்வரால். உ

வேறு.

விடங்கொள்வேற்றருமநேத்திரன்புதல்வன்வினைதிளைப்பா ற்கடலுடைக்குர், தடங்கொள்பொற்குமி மந்தரவனையிற்று ட்டுணைபணிந்திடாவெள்வே, லடங்கலர்சேனைக்கடலினையுடை த்தவன்கெழுவாகையந்தடந்தோள், மடங்கலேறனையகிருதவீ ரியனும்வசையறுபுகழுடைமன்னன். ௩

கிருதவீரியனுங்களித்திடுபுதல்வன் கிளைவிசும்படமரனையெ ல்லாம், பொருகளந்தன்னிற்புறக்கொ[illegible] [illegible]சைந்தவாளி ராவணன்வெற்றித்,திரட்டம்புயங்களிருப[illegible]க்கவார்த் திருஞ்சிறைப்படுத்தி, யொருதனியானையு[illegible]லுத்துங் கார்த்தவீரியனெனுமுரவோன். ௪

வேறு

பருதிவடிவாளவன்மைந்தனாஞ்னு[illegible]ரூர்ந்து முருவவல்குன்மடநல்லாருடியுதைத[illegible]

மருவுமாதர்முலைச்சுவடுமாறுச்சந்தவளமார்பிற்
றெரியருமுஞ்சயத்துவசன்புதல்வன்றாலசெங்கணும் ௬

திண்டோளவன்றன்புதல்வர்நூற்றுவரிற்சுரும்பர்செழும்பொற்
றுண்டாட்டயர்ந்துமுகைகீறியோதைநறவம்வாய்மடுக்குந் [று
தண்டாரலங்கல்விருடனெழிற்றயங்கும்வீதிகோத்திரனும்
விண்டோய்சீர்த்திவிறல்வேந்தர்விரிநீருலகமளித்தனரால். ௭

விருடன்புதல்வனகன்கயவாய்வாளைகமுகின்மிடறுடைப்ப
வரிசேர்புள்ளிச்சினவரால்வளர்பூங்கழையின்மிசைதொடுத்த
வருவப்பசுந்தேன்றுடைகீறுமொலிநீர்ப்பழனநாட்டுமதுப் [ல்.
பொருவிலவன்றன்புதலவன்விருடணனென்றெவரும்புகல்வா

மற்றைநவீதிகோத்திரனுங்களித்தபுதல்வன்மணிவண்டு, மூற்றி
ப்பசுந்தேன்றுளியாந்தமுகைவிண்டலர்தாரணியனந்தன்,பொற்
றகழுற்காலவன்புதல்வன்பொருந்தார்பசியகொழுங்குருதி, வெ
ற்றிவடிவாட்குணவளித்தவிறற்றுச்சயனென்றுரைப்பரால். அ

முன்னருரைத்தகுரோட்டுவென்பா னளித்தபுதல்வன்முனைமதி
ய, மன்னவெயிற்றுப்பூதமும்பேய்க் கணமுந்துணங்கையாட்ட
யர, மின்னுங்கதிர்வாளுறைகழித்தபிரசனுவானவன்விழைவு,ம
ன்னும்புதல்வன்புகழ்சித்தி ரரதனென்றுரைக்கும்வயவேந்தன்.

வேறு.

வெண்டலைப்புணரிஞாலம்விருப்புறுமவன்றன்மைந்தன்
வண்டிருப்பன்னபல்காழ்மணியல்குன்மடந்தைமார்தந்
தண்டையந்தாடைவந்துதகைபெறச்சிவந்துவீறு
கொண்டசசிவிந்தென்னுங்குளிர்மதிக்கவிகைவேந்தன். ௧௦

வேறு.

ஒன்றைவன்புதல்வர்நூற்றுவருள்மற் றவர்தமிலக்கணனெ
னானும், தேங்கமழ்தாரோனளித்திடுபுதல்வன் சிறுநுதற்கருங்

சயந்தண்ணோர், வாங்குநுண்மருங்குலேங்கமேலெழுந்தும்ணிவ
டஞ்சமர்திறுமார்ந்து, வீங்குவெம்முலைகள்பசப்புறவீங்கும்வெ
ற்புறழ்திணிபுயச்சயச்சன். ௧௧

வேறு.

இரவலர்க்கடையாவாயிலெழிறிகழிஞ்சிசூழ்ந்த
திருநகர்தன்னின்மேவுந்திண்டிறற்சயச்சன்மைந்த
னிருதியாங்கவன்றன்மைந்தனெழில்பெறுமுசனுவன்றோன்
பொருவறுபுதல்வன்செய்யபூந்தொடைத்திரிதனுமால். ௧௨

அன்னவன்சிறுவன்பாலாராவியந்துகில்சூழ்தந்த
பன்மணிக்கலாபமின்னும்பாம்படுபணிந்தேந்தல்குற்
சன்னலங்குதலைமாதர்கண்மணிவண்டுமொர்க்கு
மின்னிசைவண்டும்வீழுமீர்ந்தொடைச்சுதேடுவென்பான். ௧௩

உரைத்திடுமென்றோன்மைந்தனுறுதிவழங்கவெய்தி
யிரப்பவரிலாமையாலுமெரியுமிழ்ந்திலங்கிக்காய்ந்து
செருக்குவாட்டெவ்வர்வந்துசெருவெதிர்கொடாமையாலும்[ன்
பொருப்புறழ்திணிதோள்வாடும்புகைந்தவேல்மருங்குவென்பா

விலைப்புறங்கொடுத்தவாரந்தாங்கவன்விழைந்தமைந்தன்
கலைப்புறங்கொடுத்தவல்குற்கணைப்புறங்கொடுத்தகண்ணோர்
மலைப்புறங்கொடுத்தகொம்மைவனமுலைக்கிறவிள்ளு
மிலைப்புறங்கொடுத்தபூந்தார்வெறுழ்வலிமருத்துவென்பான் ௧௫

தேனவிழ்பசியதொங்கலவனருள்சிறுவன்வெய்ய
கானகமடைந்ததெவ்வர்மனைவியர்குழலுங்காய்பொற்
றுணையமுலைமேற்றுருங்கண்டகம்பற்றிவாங்கக்
கூனவில்வாங்குகொற்றவுருக்குமகவசனென்பான். ௧௬

பொற்புறுமன்றேன்மைந்தன்போகுயர்வானின்மேவிக்
கற்பகம்வாடயாவுங்கலங்கிடக்காய்பொனேத்துச்
சொற்புலவோர்க்குநல்கும்பார்விருத்தன்றேன்றேவில்
மற்பகவீங்குதிண்டோள்வாகைவேலைவர்ப்பெற்றான். ௧௭

கழல்புணையவர்கடம்முட்சியாயகனென்னுங்காளை
வழிமதுத்தொடையல்மாலைச்சிவிச்சக்கிரவர்த்தியின்ற
வொழுகுநுண்மருங்குற்பேதையோங்குவெம்முலையிற்றேய்ந்து
விழைவுடனளித்தமைந்தன்வெற்றிவேல்விதர்ப்பனுமால். ௧௮

விதற்பர்சோனளித்தமைந்தர்விண்ணுறநிவந்தகீர்த்திப்
பதைப்பரும்பருமயானைக்காதனும்பாண்வண்டார்க்கும்
புதுக்கடிகமழுமாலைபுனைகவுசிகன்வானூர்ந்த
மதிக்குலவிளக்காம்வெய்யவாகைவேலுரோமபாதன். ௧௯

வாகைவேலுரோமபாதன்மகிழ்வுடனளித்தமைந்த
னாகிளவண்டார்தொங்கற்பப்புருவன்றன்மைந்தன்
கோகிலமிழற்றுதண்பூங்குளிர்பொழிலுடுத்தபொன்னம்
போதுயரிஞ்சிசூழம்புனைகர்ப்பூதியென்பான் ௨௦

காதனுங்கருதுமைந்தன்கனைபொருதிரைக்குழுநீர்
விரிதிரைக்கடலும்வானவெண்மதிவடிம்புதட்ட
வுருவியசிமையவெற்புமுழுதியென்றுடன்றோர்பற்றக்
குருதிவாள்பற்றுஞ்செங்கைக்குந்தியென்றுரைக்கும்வேந்தன் ௨௧

குந்திபோங்களித்தமைந்தன்குலவளைபணையமார்பிற்
சந்தனவெம்முலைமேலாகத்தடமுலையணிந்தகன்னன
மைந்துடைமார்பிற்காகமதனமர்விளைக்குஞ்செய்ய
வுந்துதேன்றுளிக்கும்பைந்தாருனைவிருட்டிணியென்பாரால் ௨௨

மானடைந்திருந்தவெள்ளைமதிக்குலத்தவன்றன்மைந்த
னூனடைந்திருந்தவெள்வேல்வலக்கையனாகியொன்னார்
கானடைந்தவர்கள்போகக்களத்திடையெதிர்ந்துவந்தோர்
வானடைந்திடக்காண்வெற்றிரணதிருட்டனென்னுமன்னன். உ௩

இட்டிடைகலுழவீங்கியெழுந்தவெம்முலைப்பொன்னார்ந்த
பட்டுடைச்சூழுமல்குற்பனிமொழிமகளிர்நெஞ்சி
னூட்டிகழ்ந்தொளிருமன்னோன்மகனிதிசிதியோங்கன்னோன்
மட்டவிழ்தொடையன்மைந்தன்றசாருகனென்பான்மாதோ.

பொறிப்புறவலவன்றாளால்கழ்குழிதோறும்பொற்பார்
செறித்தபூங்கமலமுத்தசிறைநந்திடுங்கழனிநாட்டு [ன்
விறற்படையன்னோன்மைந்தன்வியோமன்மற்றவன்றன்மைந்த
புறக்கொடைபகைவர்க்கண்டபொருவில்சீமூதனென்பான். உ௫

அளிதவழ்ந்தேறுபைந்தாரவன்மகனகன்றவான
வெளியிடைச்செல்வோர்செல்லுஞ்செலவழுங்குறமேல்வீங்கிக்
கிளர்முலைமடவார்போற்றக்கேழ்கிளர்கழைத்தோள்வாட
வளர்தருமலங்கற்றிண்டோள்விகிரிதியென்னுமைந்தன். உ௬

வணங்கலார்மார்பம்புக்குத்தசைசுவைத்தொளிறும்வாகை
யணங்குவேலவன்சேய்வீமரதனவனளித்தமைந்தன்
மணங்கொடார்மணிசேய்மோலிநவரதனவன்சேய்வண்டு
பிணங்கிவீழ்பசியதொங்கற்றிரிரதனென்னும்பேரோன். உ௭

வயங்குபொற்றேருமாவும்வேழமுமன்னியார்க்கு
மியங்கலர்நகரில்வைகுந்திரிரதனீன்றமைந்தன்
றயங்குவாட்சகுனன்னோன்றருமகனிரம்பன்றும
முயங்குமார்பன்னோன்மைந்தன்முனிவேற்றேவராதன். உ௮

வேறு.

பாவடிப்பனைக்கைப்பகடுபோழ்ந்திடுவாளன்னவன்பயந்தி டுமைந்தன், தேவனக்கேத்திரநந்தனனன்றோனளித்திடுசீருடை மைந்தன், பூவையஞ்சிறையகிள்ளைபோடிருந்துபுதுமொழிபயி லவிண்ணோங்கு, காவுசூழ்நகர்வாழ்புருடன்மற்றவன்சேய்கவி ன்புருடோத்தமனென்பார். உகூ

உலம்பொருதிணிதோண்மலையெனவீங்கியுயர்புருடோத்த மன்கதிர்கான், றிலங்கொளிமவுலிதாங்கியவிக்குவாகுவென்பா னினிதளித்த, பொலங்குழைமடந்தைதோட்டுணைதழுவிப்பொ ற்புறவளித்திடும்புதல்வன், விலங்குவில்லுமிழுமணிதிகழ்மார் பன்விறன்மிகுசாந்தொதனென்பார். ௩0

எதுவங்கிசமுறைத்தவத்தியாய
முற்றிற்று.

ஆக திருவிருத்தம். கூ௫உ.

அறுபத்தேழாவது
சாந்தொதன்வங்கிசமுறைத்த
வத்தியாயம்.

என்னவாணையமாயையோடெறிந்தறிவுற்று
மன்னுமாதவமுனிவோர்மகிமைபுதித்த
பொன்னவாங்கழற்சாந்தொதன்மரபினைப்பொருந்த
முன்னிக்கூறெனச்சூதனுமறிவுறமொழிந்தான். க

அன்னசாந்தொதனளித்திடுபுதல்வனற்குமாரன்
பொன்னுலாங்கழலந்தகன்றிவ்வியன்புகழ்சேர்
மன்னிருட்டிணிபோசனற்றேவமாவிருதன்
றன்னையொப்பிலாத்தகைபெறுசிர்ப்பசமானன் உ

கச்சந்தின்றபொற்கழற்பசமானனற்புதல்வ
ரச்சணங்குவேற்சகச்சிரன்புகழுயுதாயுச்
செச்சைதாழ்புயத்தாசகன்றிருந்தலர்ச்செருக்கும்
பச்சிரத்தவாள்விறற்பலவானெனப்பகர்வார். ௬

முன்னங்கூறியதேவமாவிருத்தனுமொய்ம்பு
மன்னுமார்பினன்மகிழ்வுடனளித்திடுமைந்த
னன்னமென்னடைப்பேதையர்பேதுறவலங்கற்
கன்னவின்றதோட்கவின்செயும்பப்புருவென்பார். ௭

மற்றையந்தகனளித்திடுபுதல்வர்வெண்மதிநேர்
கொற்றவெண்குடையச்சுவவீடணன்குமாரன்
றுத்திவண்டுதேனருந்திடுதொடையணிசமீகன்
வெற்றிவாட்பசமானெனவிளம்புவரன்றே. ௮

வேலைசூழ்புவியெத்துணையத்துணைவிரிந்த
மாலைதாழ்குடைக்குரானனன்களித்திடுமைந்த
னாலமென்னவந்தடர்ந்திடுமடையலராவி
காலன்வாய்க்கிரையாக்குவேற்கவின்றிருட்டுனுவே. ௯

வேறு.

கழல்புனைந்திலங்குநோன்றாட்டிருட்டுனுவளித்தகாளை
வழிமதுமலரோன்றேனும்வார்குழல்சுட்டிவிட்டோர்
பழியுறுமருங்குல்மாதர்பணைமுலைபசப்பச்சூழ்ந்து
விழைதாவலங்கன்மார்பம்விரிந்திடுமனலனென்பார். ௧0

படுபொறிப்பகுவாய்வெய்யபாம்பெனவேதிர்ந்தவேந்தர்
குடர்புறஞ்சூழ்ந்தகோட்டுக்குஞ்சரவனலமைந்த
னிடையெவனுய்வதென்றேயேங்கிடவீங்குமுத்த
வடமணிமுலையினார்க்குமதனனுமயிசித்தென்பார். ௧௧

வேறு.

ஆடல்வேலபிசித்தடலாகுகன்றனையும்
பாடல்வண்டிமிர்தொடைப்புணர்வசுவையும்பாண்செய்
கோடயாழ்மருள்குதலையாகுதியெனுங்கொங்கா
ரோடவிழ்ந்தபூமலர்க்குழறன்னையுமீன்றாள். ௯

புதல்வரின்றிநற்புணர்வசுப்புரவிநன்மேதம்
விதியிற்செய்தவிசொரிந்திடுமழலிடைவிளங்க
மதியின்மிக்கபேரயுகனுமைந்தன்மாற்றரசர்
பதைபதைத்திடப்பாணியாதுதித்தனனன்றே. ௧௦

மொழிந்தவாகுகன்மைந்தர்வான்முகின்முகங்கறுப்ப
வழங்குவண்கொடைத்தேவகன்மறிதிரைபுரட்டித்
தழங்குகார்க்கடலுலகெலாந்தனதடிப்படுத்தி
யுழந்தவெஞ்சமங்கடந்தவேலுக்கிரசென்ன. ௧௧

உரைத்தமற்றவர்தம்மிலொண்கதிருமிழ்மவுலி
தரித்தவுக்கிரசென்னெனப்பான்றழனுகம்
பரித்தமாநிலமுழுவதும்பையுளுற்றிரங்க
மருத்தலைழத்ததார்மணிமுடிக்கஞ்சனைப்பயந்தான். ௧௨

மற்றைத்தேவகன்மைந்தரோர்நால்வரோடசைந்து
பற்றிலாவிடைபாடுறப்பணைத்திருமாந்து
கொற்றங்கொண்டெழுகுவிமுலைத்தேவகிமுதலாங்
கற்றைவார்குழற்கன்னியரெழுவரைப்பயந்தான். ௧௩

பயந்தகன்னியரெழுவர்தம்மையும்பனிவிசும்பி
னியங்குவானவர்செவிடுபட்டிடமுரசெறிந்து
வியன்கொள்சீர்மலிதேவகன்விழைவுடனளிப்ப
வயங்குதார்வசுதேவனன்குறமணந்தனனால். ௧௪

ஆவிவாட்டியவாட்ல்வாளுடைவசுதேவ
னுவிவாட்டியநறுமலர்க்கருங்குழல்களினத்
தேவிவாட்டியசிறுநுதலுரோகிணியென்னுங்
காவிவாட்டியகன்னிதன்னையுமணந்தனனால். ௧௫

கஞ்சனயகாலத்தினிற்றேவகியெட்டா
மைஞ்சனின்னுயிர்மாய்த்திடுமென்பதுகேட்டு
விஞ்சுசீருடைவிறல்வசுதேவனோடளிய
பஞ்சின்மெல்லடித்தேவகிதனைச்சிறைப்படுத்தான். ௧௬

சிறையிடைப்படுதேவகியீன்றருள்பால
ரறுவர்தம்மையுமறத்துறைவழியுலகளிக்குங்
கறைகொள்வாட்கஞ்சன்கையினூற்காலினைப்பற்றி
மறியநீணிலத்தடித்துயிர்மாய்த்தனனன்றே. ௧௭

கொடியகஞ்சனம்மக்களையுயிர்குறைத்ததற்பி
னெடிவிலாவறிவாலுயர்சேடனோர்கூறு
மிடல்மிகுந்ததோள்விற்பலபத்திரன்றன்னைக்
கடிமலர்க்குழற்றேவகிகருவினுட்கொண்டாள். ௧௮

கொண்டவக்கருவதனைமால்மாய்கையைக்கொண்டு
வண்டுலாங்குழலுரோகிணிவயிற்றினுள்வைப்பக்
கெண்டையந்தடங்கண்ணவள்கிளர்வெள்ளைமேனித்
திண்டிறற்பலபத்திரன்றனைச்சிறந்தளித்தாள். ௧௯

பின்னர்நல்லெழிற்றேவகிபிள்ளைவண்டிசைக்குங்
கன்னியந்துளவணிந்திடுகண்ணனைவிரியுந்
துன்னுகார்க்கடலுலகெலாந்துயரறுத்துய்ந்து
மன்னிவாழ்தரமகிழ்வொடுவயிறுவாய்த்தனளால். உ௦

வேறு.

திகிரியஞ்சங்கும்வாளுந்தண்டமுந்திகழும்வில்லுந்
துகைபெறத்தாங்கித்தோன்றுஞ்சிறுவனைத்தந்தைநோக்கி
மகிழ்வுடன்வணங்கவோடிமவையெலாமறையாவன்றான்
முகமெதிர்நோக்கியின்னமொழிசிலபுகன்றானன்றே. ௨௧

என்னையாங்காயர்பாடியுய்த்துமற்றசோதையீன்ற
கன்னியாமாயைதன்னைக்கடிதினிற்கொணர்தியென்ன
வன்னவன்சிறுவன்றன்னையாங்கணுற்றசோதையீன்ற
மின்னிளங்குழவிதன்னையெடுத்தனன்கொணர்ந்தானன்றே.

கொணர்ந்தவக்குழவிவாய்விட்டழுதிடுகுரலைக்கேட்டுப்
பணம்புனையல்குற்றங்கைகயிற்றினிற்பற்றிக்கஞ்ச
னணங்குறப்பாறைமீதிலடித்திடவெடுக்குமெல்லை
மணங்கமழ்வன்பொற்றாளிலுதைத்துவானகன்றதன்றே. ௨௩

அகன்றவம்மாயைகஞ்சனலர்முகநோக்கியாரு
மிகழ்ந்திடுநின்னைக்கொல்வானெய்தியானொருவனென்று
திகழ்ந்தவாளென்றுகூறியேகலுஞ்சிந்தைவாடி
முகம்புலர்ந்தயராவன்றான்மொய்கதிர்மாடம்புக்கான். ௨௪

ஆயர்தம்பாடிதன்னில்வளர்ந்தவக்கண்ணனெய்தி
தூயவாநெறியிற்செல்லுந்திண்டிறற்கஞ்சனாவி
மாய்வுறவெறிந்துமோதுமழிகொயுலகமெல்லாஞ்
சேயவாந்தருமந்தன்னைத்திகழ்தரப்பரப்பினானே. ௨௫

வேறு.

அல்லவேகடிந்தமுனிநிறக்கண்ணனலர்முலைமனைவியர்த
ம்மைச், சொல்லிடிற்பதினாறாயிரத்தொருநூற்றுவருளரவர்தமிற்
குறுகொள், செல்லெனச்செறிந்தகருங்குழன்மடவாரெண்மரா

திக்கனித்துவர்வாய், முல்லைவாண்முறுவற்கமல்வீட்டுறையும் ணைக்குபோன்முதன்மைபெற்றுளரால். உசு

மற்றவர்தம்மிலணிதிகழுருக்குமணியெனும்வரிநுதன்மடந்தை, பெற்றிடுபிரத்தும்மினன்முதலாகும்பெருந்தகையவர்களை நோக்கிக், கற்றையங்கூந்தற்கதிர்முலைச்சாம்பவதியெழிற்கண்ண னோடெனக்குச், செற்றமில்புதல்வர்வேண்டுமென்றன்னோன் றேமலரடிதொழுதுரைத்தாள். உஎ

ஆங்கவருரைப்பக்கேட்டுளம்வருந்தியயர்வுறேலணிவடஞ் சுமந்த, கோங்கரும்பனையமுலையுமைபங்கன்குரைகழற்றுண்மு தல்வணங்கித், தீங்கரும்புதல்வர்த்தருவலென்றுரைத்துத்திகழு பமன்னியுவிருக்கு, மோங்குறுசாலையதனிடைக்கண்ணனுய்திற னுடியெய்தினனால். உஅ

எய்திமாமுனிவன்றுளிணைவணங்கமுனிவனுமெழில்பெ றுகண்ண, னுய்திறனுடிநோக்கினுலவன்றன்கருவினையொன்ற றக்கழுவிச், செய்யவாய்மறைசொல்லஞ்செழுத்தோதித்திகழ்ந் தவக்கண்ணனைக்கரிய, மைதிகழ்மிடற்றோனடியிணைபரவுமடிய ர்தம்பண்ணையுள்வைத்தான். உகூ

அஞ்செழுத்துணராவான்சுவைத்தீம்பாலளித்திடுவெண்ணை நெய்பூசிக், கஞ்சமொத்திலங்குதாணுதியூன்றிக்கையினைமேனு றப்போக்கிப், பஞ்செனச்சிவக்குஞ்சீறடியுமையாள்பங்கனைம னத்திடைநினைந்து, மஞ்சமைவேண்டிவருவளியருந்திமாசறுதவ மியற்றினனால். ௩௦

மாசறுதவத்தால்வருந்துதற்கிரங்கிமலையெனவளர்ந்துவார் முனிந்து, தேசுகண்படுக்கும்வருமுலையுமையாளொடுஞ்சினவி டையின்மேல்கொண்டு, மூசிவண்டுழக்கமுகைவெடித்திளந்தே

றெழுகியமொய்மலர்க்கொன்றை, யோசனைகமழவென்னையா
ளுடையான்கண்ணனுண்மகிழ்தரவெதிர்ந்தான்.   ௩௧

வேறு.

எதிர்ந்திடுமிறைவன்றன்னையிறைவியோடினிதுநோக்கித்
தறைந்தபூங்கமலப்பொற்றுடாழ்ந்துவெம்பிறவியென்னும்
அதிர்ந்திடுகடலினுழ்வேன்முன்னரங்கயிலைமேவி
வதிந்தவொன்முதலேகாணவந்ததேனெளிதினென்றான்.   ௩௨

என்றலுமிறைவனுள்ளம்விழைந்தவாறியம்பென்றோத
மன்றநின்றண்மேலன்பும்புதல்வரும்வழங்குகென்னக்
கொன்றைதாழ்மவுலியானுங்கூறினகொடுத்துவானஞ்
சென்றுயர்கயிலைதன்னிலுமையொடுஞ்சேர்ந்தானன்றே.   ௩௩

அன்னவேலகியபின்கண்ணநணிகிளர்துவரைநண்ணப்
பெண்ணலங்கனிந்தசாம்பவதியவள்பெருந்தோள்புல்லிப்
பண்ணவனருளாற்சாம்பன்முதலியபதின்மர்தம்மைத்
தன்னைறுந்துளவோனுள்ளமகிழ்ந்திடத்தகவினீன்றான்.   ௩௪

மற்றயமனைவிமாருமகிழ்விறையொருவர்வாகைப்
பொற்றடந்திணிதோள்மைந்தர்ப்பின்மரைப்புகழவீன்று
ருற்றநற்புதல்வர்சண்டாங்குமிழ்நறைத்துளவினேனு
மற்றமினுவகைகூரவகமலர்ந்திருந்தானன்றே.   ௩௫

மணிமிடற்றிறைவனேவவாணனுயிரங்கைதம்மி
லணிகெழ்நடக்கையோர்நான்கொழியமற்றவைகளெல்லாந்
துணிதரத்திகிரிதன்னுற்றுணித்தலர்துளவோன்பின்னு
மிணையிலாவரக்கர்வெய்யவின்னுயிர்மாய்த்திட்டானே.   ௩௬

தருமனைமுதலவாயவைவராற்றரணிகாவற்
றிருமலிவேந்தர்மற்றையனேகராசிதைவித்தன்பா

[தொ]ன்மையாந்தனதுசுற்றம்யாவையுமுணர்ந்தவேதப்
பொருவருமறையோர்சாபத்தாலுயிர்பொன்றுவித்தான். ௩௭

பின்னரோர்வேட்டனேவாலேறுண்டுபிறங்குதிண்டோள்
மன்னுவேட்டனுக்குமாருக்கதியினைவழங்கித்தானு
முன்னுபுதேவரொல்லாம்போற்றிட்டுமுகைவாய்விண்ட
கன்னியந்துளவநாறவைகுந்தங்கடிதிற்சேர்ந்தான். ௩௮

இனமலர்க்குழலுருக்குமணிமுதலெண்மர்வெய்ய
கனையெரிமூழ்கியாவிகழிந்தனர்சேட்னுகப்
புனைதொடைப்பெலனும்பொன்றிப் போயினனுயிர்மாய்ந்திட்
டினைகரிலாதபொற்பாரிரோவதிதழலின்மூழ்கி. [டான்

விசையனங்கவர்கட்கெல்லாநீர்க்கடன்விதியிற்செய்து
வசையறுதருமற்கெய்தியுரைத்தலுந்தருமன்மாழ்கி
நசையிலேபுலகினென்றுநானிலம்வலங்கொண்டேகி
யிசைபெறுதுணைவரோடுமிருங்கதியெய்தினனே. ௪0

எய்தவிக்காதைதன்னைக்கேட்டுளோரிசைத்தோரிந்த
மாயிருஞாலந்தன்னிற்பன்னெடுங்காலம்வாழ்ந்து
சேயுயர்கயிலைதன்னிற்சென்றுவீற்றிருப்பரொன்று
மேயவைம்புலன்கள்யாவும்வென்றமாருதன்சொன்னன். ௪௧

சாத்தொதன்வங்கிசமுரைத்தவத்தியாய

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧0௬௩.

அறுபத்தெட்டாவது
தத்துவதோற்றமுரைத்த
வத்தியாயம்.

சொன்னவைகேட்டுமாயைத்துவக்குருமுனிவர்முன்ன
மன்னியபடைப்பின்றன்மையுரைத்தனைமயங்காவண்ண
மின்னுநீவிரித்துக்கூறவேண்டுமென்றியம்பலோடுந்
தன்னையொப்பில்லாச்சூதமுனிவரன்சாற்றினுல்.

வேறு.

அழியாமுதலாயொன்முகியமலமாகியுறைகின்ற
பழுதின்முதலினிச்சையாற்பகரும்பிரதானத்தினின்று
மொழியுமகதத்துவமுண்டாமொழிந்தபிரதானந்தானே
விழைவிற்றேன்றுமகானுகிவருமென்றறிந்தோர்விளம்புவராஸ்.

வேறு.

உரைசெய்மகதத்துவத்தையொழிந்துநின்றதத்துவங்களவை
க்குமேலாய், வினைவின்வந்துதோன்றலால்மகானென்றுந்தான்
வளர்ந்தும்விரிந்துநின்று, மருவுறுபூதங்கட்டம்மைவளர்த்தலாற்பி
ரமனென்றும்வரம்பிலியாவும், பரமனதனுலறிதலாலதனைபிரு
தியென்றும்பகருவர்மாதோ. ௨

நிறையுமகதத்துவந்தன்முயற்சியானிகழ்த்துமகங்காரந்த
ன்னை, முறையினிலுண்டாக்குமந்தவகங்காரம்விகாரமாயைமு
றையேநின்ற,குறைவிலாப்பஞ்சதன்மாத்திரைகட்மைத்தோற்று
விக்குங்கோதின்முக, வறையுமவைதமினின்றும்பூதங்களோரை
ந்துமடைவிற்றேன்றும். ௩

போற்றும்வைகாரிகமென்னுமகங்காரந்தனினின்றுபொலி
விேனுடு, தோற்றுமொலிமுதலைந்துமுணர்தருஞானேந்தியங்களை

ந்துந்தோமில், சாற்றுமொழிமுதலாயவைந்துகருமங்களையுந்தகை
வீந்செய்யுமாற்றில்கருமேந்திரியங்களைந்துமனத்தோடுவைந்துதோ
ற்றுமாதோ. ரு

உரைத்திடுபூதங்களோரொன்று தன்னிலோர்பாதிநான்கதா
கி, விரித்திடுபூதங்களொருநான்கினுளுமேவுமதை மெய்ம்மைவே
தர், தெரித்திடுமாமுனிவர்பஞ்சீகிருதமெனவிரித்தறிவார்செப்பு
வாரால், முருக்கிதழ்வாயுமைபங்கன் றன்னூலுமிவ்வகையே
மொழியுமன்றே. சு

இவ்வகையேகலந்துறையுமைம்பூதத்தொடுங்கரணமுதலா
யெங்குஞ், செவ்விதாயுறைகின்றவிசேடத்தையீருந்தத்துவங்க
ள்சேரிந், பௌவநீர்மொக்குளெனவண்டமுதித்திடுமதனிற்பவ
ளம்வாட்டு, கொவ்வைவாயுமைபங்கனருளினாற்குலமறையோன்
றோன்றுமாதோ. எ

தோன்றியவேதியன்படைப்பானெண்ணிருசிதனைமனத்தி
னுவந்துதாய்தா, மான்றமறையறிகின்றவங்கிராவத்தலையினி
டையுமங்கே, கான்றொளிசேர்கண்ணினிடைமரிசியையுமத்திரி
யைக்கரத்தினுள்ளுந், தான்றனியேயுறைகின்றபிராணனிடைத்
தக்கனையுந்தோற்றுவித்தான். அ

இதையத்திற்பிருகுவையும்வியானவாயுவிற்புலகன்றனையுமே
தில், மதியுற்றபுலத்தியனையுதானவாயுவினிடையுமாசின்றாகிக்,
மொருவிடாதுலகந்தன்னைப்படைத்தளித் தொழிப்பதொன்றாய்
மருவியபரனேயென்னமனத்திடையுணரவேண்டும், ௰

காரியகாரணங்களியாவையுங்காசொன்றில்லாத்
தாருமான்மாவின்கண்ணேயமருமென்றறிந்துகொண்டோ
ரோர்தருபொருள்கடன்னையன்றிவேறுளதென்றெண்ணி
யோர்தருவுள்ளஞ்செல்லாதின்பமுற்றிருப்பனன்றே.   கக

புகன்றிடுமனந்தான்கண்ணிற்பொருந்திடில்விழித்தலுண்டாந்
திகழ்ந்தகண்டத்தின்மேவிற்கனவுறுநெஞ்சிற்சேரிற்
பகர்ந்திடுசுழுத்திமேவுமுச்சியிற்படர்ந்துசெல்லி
லிகழ்ந்திடாத்துரியமேவுமெனவுணர்ந்தறியவேண்டும்.   கஉ

கருமவிந்தியங்களொன்றுமோரைந்துங்சழறுகின்ற
பொருவில்ஞானேந்தியங்களெனப்புகலைந்துமற்றை
மருவிடுஞ்சித்தம்புத்திமனமகங்காரமென்ன
வுரைசெயுநான்குமத்தியான்மமென்றுரைப்பர்மாதோ.   கஙு

கதிரவன்றிக்குப்பூமிகாசிலாவருணன்வாயுத்
துதியமைமிருத்தன்வேதாமதியுருத்திரன்றீச்சொல்லுங்
கொதியழற்குலிசிவிண்டுமித்திரன்கூறுகின்ற
விதியவற்றினுக்குத்தூயவதிதெய்வமென்பர்மேலோர்.   கச

திகழொருபதினுன்காயவிந்தியந்தம்மைச்சேர்ந்து
பகர்பதினன்குவாயுப்பற்றியாங்குறையுமன்றிப்
புகறருமெழுபத்திராயிரநாடிபொருந்தல்செய்யுந்
தகைவுட்னுரைசெய்கின்றதூலவுடம்பினுள்ளே.   கரு

வேறு.

ஆசிலாதவன்னத்தின்மயமாயமரப்படுங்கோசம்
பேசுகின்றதூதான்மாவிளம்புபிராணமயகோச
மேசிலாதவிந்தியான்மாவியம்புமின்றமனோமயமாங்
கோசநீங்காச்சங்கற்பவான்மாவென்னக்கூறுவார்.   கசு

உறையாநின்றவிஞ்ஞானமயமென்றுரைக்குங்கோசமற்றை
நிறையுங்காலவான்மாவாநிகழ்த்தானந்தமயகோச
முறையேயுரைக்கப்பட்டாநின்றவிலயவான்மாமுழுவதுந்தம்
மறிவாலறிந்தோரிவ்வகையேயாசின்றாகவுணர்வாரால். கஎ

வேறு.

உறைந்திடுநம்மைக்கோடிகருமங்களுளுற்றிறனுஞ்
சிறந்திடக்காணறேற்றார்தெளிந்திடுகுருவினுள்ள
நிறைந்திடுமருளைப்பெற்றுக்கருமங்களைவையுநீத்துத்
திறம்பிடாதிருந்துநோக்கிற்றீதறக்காணலாமால். கஅ

ஈறிலாஞானமெய்திவிருவினை துலைவதல்லால்
வேறுமற்றெவற்றினாலும்வினையறத்துலைந்துமாய
மாறிலாமுத்திவீடுமருவிடவிழைதலுற்றோர்
கூறருஞானந்தானேகுறிக்கொளவேண்டுமன்றே. கக

வருணவாச்சிரமந்தம்மின்மருவுவோர்நசையினாலே
யுரைசெயுங்கருமந்தன்னையுஞற்றுவரவற்றாற்பற்றி
மருவுறுந்தொடர்ந்துநின்றவிருவினைமற்றவற்றாற்
பரிவுறும்யாக்கைவந்துமன்னுறும்பகரின்மாதோ. உ0

கோதிலாஞானமுற்றஞானிக்குக்கோபத்தோடு
தீதுசெய்குணங்களியாவுஞ்சிதைந்திடுமதனான்மற்றை
யேதமேவிளைக்கும்வெய்யவிருவினையகன்றுமாயு
மாதலாலுடம்புவாராதழிவிலாமுத்தியெய்தும். உக

அருத்தியின்ஞானமின்றிமுத்திவீட்டைதல்கூடா
விரிப்பருஞானந்தானுந்தியானத்தாலன்றிமேவா
துரைத்திடுதியானந்தானுமோங்கியஞானம்வல்ல
குருத்தனியருளினல்லாற்கூடுதலரியதாமால் உஉ

மொய்யழன்முனிபுற்கானமுழுவதுஞ்சுடுவதேபோ
லெய்தருஞானவெந்தியிட்டமூவகையாய்நின்ற
வெய்யவாம்பாவமெல்லாம்வேரறச்சுடுமற்றென்று
துய்திறமளிக்குஞானமுற்றுநன்குறைதல்வேண்டும். உ௩

உந்திமேலீராறுகுமங்குலத்தீற்றிலொன்று
மந்தண்மென்கமலமாகவதன்முதற்றருமமாகுஞ்
சிந்தைசெய்ஞானமாகுஞ்செவ்வனேநின்றநாள
நந்தலிலணிமாவாதியெட்டுநல்லிதழதாகும். உ௪

ஆங்கதன்பொகுட்டின்மேலாயலர்கதிர்ப்பருதிகோடி
யோங்குறவுதித்தாலென்னவொளிவிடுஞ்சுடரின்மீதிற்
றீங்கிலாமுதலாயார்க்குந்தெளிவரும்பொருளாயொன்றாய்
நீங்கிலாதுறைவேஞானநிருமலரறியவென்றும். உ௫

தலையினதுச்சிமீதுந்தயங்கியவன்னமெல்லா
நிலைபெறுதொளிருஞானவொளியதாய்நினைவுக்கெட்டா
தலகிலாயாமேயென்றுமமருவேமமர்ந்தவாற்றை
மலைவறவறிந்தோர்தாமேமாசிலாமுத்திசேர்வார். உ௬

பரப்புறுமண்ணிற்கீற்றில்பாடல்சாய்சர்வனென்றுந்
திரைத்தநீர்தனக்குச்செப்புபவனென்றுந்திகழுஞ்செந்தீக்
குருத்திரனென்றுங்காத்திற்குக்கிரனென்றுமற்றும்
விரித்தவான்றனக்குமெய்மைவீறுசால்வீமனென்றும். உ௭

இரவிமண்டிலத்திற்கீறின்மாதேவனென்றுந்திங்கட்
பொருவின்மண்டிலத்துக்கோங்கிப்பொலியுமீசானனென்றும்
விரியுமான்மாவுக்கெல்லாம்பசுபதியென்றுமேலோ
ருரைசெயவெட்டுமூர்த்தியாகியேயுறைகுவேமால். உ௮

தாங்கியவுடம்பிற்றின்மைமன்னதுதநும்பிறிற்றல்
வீங்குநீர்வண்ணஞ்செந்தியியங்குதனுலவைமேவி
யாங்குறைபுழைகளெல்லாமகலிருவிசும்புதந்தந்
தீங்கின்மாத்திரைகடம்மிற்றிகழ்ந்துறவிருக்குமன்றே. ௨௯

வேறு.

உரைக்குமுழந்தாளளவுநிலங்கொப்பூழளவுமொலிதெண்ணீ
ரரிக்குங்கனலிகழுத்தளவாமுலவையியம்புநெற்றிவரை
யிருக்குமதன்மேலாகாயமிடக்கண்மதியம்வலக்கணெரி
விரிக்குங்கதிரோனெனவறிவாலிரங்குவுளார்தல் வேண்மொல்

விரிந்தபூதங்களினேடுவிளம்பிந்தியங்கடர்துவங்க
டிருந்தாவகங்காரத்தினெறிசெறிமுக்குணங்கண்மாத்திரைகள்
பொருந்துமாயைசீவனிவைபொய்யாம்யாமேபொய்யின்றி [ர்
யிருந்தெவ்விட்த்துநிலைபெறுவோமதனுற்றுணுவெனவிசைப்பா

பருதிமுதலாங்கோளனைத்துமாயன்முதலாம்பலதேவும்
புரியுங்கருமமெவையுநமதேவறலையின்மிசைப்புன்டு
மருவியியற்றுநிற்குமெனமனத்தினுணரவேண்டுமாற்
றிரிவிலாதமெஞ்ஞானந்திறின்றுணரவல்லோரே. ௩௨.

இயற்றல்செயுநல்வினையதனுலெய்துஞானமாங்கதனுன்
மயக்கிலவிர்த்திவந்தெய்துமதுதான்வந்தபின்னரோ
யுயக்கொள்பரமவிரத்திவருமதனுல்யோகமுமதனுற்
பயக்குமென்றுமழியாதபரமமுத்திதனிவீடே. ௩௩.

இவ்வாறறிந்துவிடயத்திலொழுகாதெனதுமலர்த்தாளிற்
செவ்வேதுளங்காவுளந்திருத்திவைத்தோன்றனேதிவிடமு
மொவ்வாதாகுமில்வாழ்க்கைவிடத்தினெழியப்பவெனப்
வைப்ராயரவமணிந்தசடைப்பரமன்பத்திப்பட்வுரைத்தான், ௩௪

பரமனருளின்மிகுதியினாற்பழுதிலாதஞானத்தை
யுரைசெய்கின்றகாதையினை யுரைப்போர்கேட்போ ருண்மகிழ்
கருவுட்புகுந்துபுகுந்துமிகக்கலங்கிநாளுங்கழிந்திடா [வோர்
தருவாயுருவாய்ச்சின்மயமாயமருமுதலினடிசேர்வார். ௧௫

தியானவிதியுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௫௮௦.

எண்பத்தைந்தாவது

சனகன்முதலியோர்க்குமுத்திகொடுத்த வத்தியாயம்.

*

இவ்வாறிறைவன்கூறுதலுமில்வாழ்க்கையினுளிடைப்பட்டுச்
செவ்வாயுமையாளொடுமிருந்தவாறென்னிறைவசெப்புகென
மைவார்கூந்தன்மலைமகளைநோக்கிநகைத்துமணியிடற்றோ
னவ்வாறெடுத்தங்கறியும்வகையாசின்றுகவுரைந்தனனால். ௧

நிதில்ஞானந்தியானமிகச்செறியும்பந்தந்தீர்ந்திடுதே
லோர்துகின்றவான்மாவுக்குளதுபோலத்தோன்றிடுமா
லேதஞ்செய்யுமாயையினாலிதனையறிந்தோனியாவனவ
னாதியாயபந்தத்தினகப்படாமலமர்குவனால் ௨

உறையுந்தேவிவிச்சையென்றுமறைக்குஞ்சுருதிமிருதியென்று
முறையேதுதிதானென்றுமவை யென்றுமொழியுமிட்டையென்
நிறையுஞானசத்தியென்றுநிலவுங்கிரியாசத்தியென்று [று
மறிவாலறியிலிவ்வாறேயமர்ந்திங்குறையப்படுவளால். ௩

உறைந்திங்கமருமெனதுகூறுமாலொளிருமணிவிளக்கைக்
கறங்கியிசைவண்டறைகூந்தற்கன்னற்குதலைமலைவல்லி

நிறைந்தேயுறையுஞ்சராசரங்கணிலவுமிந்தவுலகெல்லா
மறைந்தமாயாவிகாரமெனவறிவாலறியவேண்டுமால். ௪

மின்பாட்டழிக்குமருங்குலிவள்விளங்குமைந்துமுகத்தோடு
முன்பேயெனதுமுகந்துதித்தாளுதித்தமுகின்மென்முலையோடு
மன்பாற்கலந்தேயுறைந்தனமாலன்றுமுதலாய்நிவிர்த்தியொடு
துன்பூட்டாத்தனிமுத்திதானுந்துலங்கத்தோன்றியதால். ௫

என்றுகூறிமழுவலானுமையினெழில்சேர்முகநோக்க
மன்றல்கமழுங்கருங்கூந்தன்மதர்த்தவடிக்கண்மலைவல்லி
யன்றைப்பகலேசனகன்முதலோர்கண்மாயையறவகற்றிக்
குன்றுமுத்திவீட்டளித்தாளவருமுத்திகூடினரால். ௬

இறைவன்றனேயுமையாயுமிணையின்முதல்வன்றனுயு
முறைவானுருவமிரண்டாகியுணரிலிறைவனருள்பெற்றே
குறைவிலாதமுத்தியினைக்கூடவேண்டுமல்லாது
முறையேகோடிகருமங்கள்செயினுமுத்திகூடாதால். ௭

விலங்கொடாலும்பறவைகளுமென்பிலவையும்வெளிவந்த
வலங்குசினையதருக்களுநம்மண்ணலருள்பெற்றுடையவேற்
புலன்கள்கடிந்தமேலோரும்பொருந்தற்கரியமுத்தியினைத்
துலங்கச்சென்றேயடையுமிதுகுளேபுரிந்திங்குரைத்தேனால். ௮

இறைவன்கனிந்தவருள்பெற்றுங்கெய்தற்கரியதனிமுத்தி
குறைவின்றகச்சென்றடைந்தவுயிர்க்கோடியினதளவையினை
யறையப்படுவாரிவ்வுலகிலியாவருளர்கொலென்றுதவ
நெறிசேர்சுதமுனிதவத்தோர்நெஞ்சமகிழநொடித்தனனால். ௯

சனகன்முதலினோர்க்குமுத்திகொடுத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம். கங-அக.

எண்பத்தாறுவது

அட்டமாசித்தியியல்புரைத்த

வத்தியாயம்.

—※—

கொடுத்தலோடுந்தவமுனிவர்நுவலுமட்டமாசித்தி
யடையப்படுவதெவ்வகையாலறைவாயென்றுகூறிடலுங்
கடணின்றெழுந்தவிடமருந்துங்கடவுண்மலர்ப்பூங்கழல்போற்றி
மட்ணில்கேள்விச்சூதமுனிவகுத்துமொழியலுற்றனனால். க

ஒருவாயுள்ளக்கமலமிசையிதழுக்கோரோர்மாதத்தின்
மருவவிதழ்முப்பானாறுவாய்த்தகமலமருவிடுமே
உருவமதிவெங்கதிர்கனலியுரைத்தவடைவேயொளிபம்பி
விரியநீங்காதெஞ்ஞான்றுமேவியமர்ந்துவிளங்குமால். உ

உரைத்தவற்றின்மேலாகியோரொண்சத்தியமர்ந்துறைய
விரிக்குமிதழோரெட்டுடைத்தாய்மேவுங்கமலமமர்ந்திடுமேற்
றிரைக்கும்பரவைமுகட்டிலெழுதீம்பாற்கதிர்செய்மதியமிரு
டிரக்குங்கதிர்கால்வாளிரவிசுடருங்கனலிதுலங்கிடுமால். ௩

பகருமவற்றின்மேலாகிப்பழுதில்சத்தியீரெட்டுத்
திகழுமிதழோர்பதினாறுசேர்ந்தகமலமுறையுமே
னகைவெண்ணிலவுக்கதிர்மதியநளிர்பூங்கமலநறுந்தோட்டு [ல்.
முகிழ்வாய்விரிக்குஞ்செழும்பருதி முதிர்செங்கனலிவிளங்கிடுமா

மற்றையவற்றின்மேலாகிவயங்குஞ்சத்திபன்னிரண்டாங்
குற்றேயுறையவிதழீராறுடையகமலமலரமரும்
பொற்றவன்னகமலமிசைப்பூந்தண்கதிர்கால்வெண்மதிய
மொற்றையாழித்தேரிரவியொளிருங்கனலியுறைந்திடுமால். ௫

ஓங்குமவற்றின்மேலொன்பான்சத்தியுறையவிதழொன்பான்
றாங்குகமலமலரமருமதன்மேனிலவுதழைக்குமதி
வீங்குமிருள்சீய்த்தெழுபருதிவெய்யகனலியிவைமூன்று
நீங்காதுறையுமெனவறிவானெஞ்சினுணரவேண்டுமால். ௬

உறைந்தவிவற்றின் மிசையெண்ணென் ணுருவுதாங்கிநம்மிறை
வன், மறங்கால்வேற்கணுமையினொடுமமர்வானென்னமனத்து
ணரு, மறந்தேர்யோகமிகப்பொருந்துமாசொன்றில்லாமாமுனி
வர், சிறந்தவட்டமாசித்திநீதின்றுகவெய்துவரால். ௭

அறையுமட்டமாசித்தியாவவணுவுக்கணுவாகி
யுறைந்தவணுமாலகிமாவிண்ணுருயோடலுலகெல்லா
நிறையுமெவையுமுறைந்திருத்தன் மகிமாநினைத்தவோரிடத்தின்
முறையேநீங்காதமர்ந்திருத்தல் பிராத்தியென்னமொழிகுவரால்.

விடையமெவையுநுகர்ந்திடுதல்பிராகாமியமாம்விளம்புநுன்ப
மடைவேயின்பம்பூதங்கட்களித்தலீசத்துவநினைவி [தல்
னொடியாவுருவம்வகுத்தல்வசித்துவமாம்பிறப்போடிறப்பொழி
நொடிவார்மேலோர்காமாறுசாயுச்சியமாமெனநுனித்தே. ௯

இன்னவட்டமாசித்திவல்லோன்யாவும்விரும்பாது
முன்னுயழியர்ப்பரம்பொருளாய்மூவர்முதலாய்மதியிறுற்
பன்றுளெடுத்துப்பகர்ந்திடினும்பகர்தற்கரியபரஞ்சுடராக்
கொன்னேயுணர்ந்துசமாதியினிலிருக்கின்முத்திகூடுவனால், ௰

விருத்தவட்டமாசித்திசெய்யாதவனுமிகக்கேழ்த்த
முருக்குந்துவருமழகழிக்குஞ் செவ்வாய்முகிழ்மென்முலைபாகன்
ஞருத்தன்மனத்திலுணர்ந்திருக்கவல்லானென்னிலொருகாலும்
வருத்தமில்லாத்தனிமுத்திவீட்டின்மருவப்படுவனால், ௧௧

கருமந்தன்னைநசையினாற் கழுமவியற்றப்படுகின்றோ, ரொருவா
தன்னைவயிற்றிடையினாற்றேயுரவுநீருடுத்த, விரியுநிலத்திற்பிறந்
துபிறந் துழல்வார்மேவிப்பிறக்கும்வகை, தெரியவுரைப்பல்கே
ண்மினெனச்செவ்வேயெடுத்துத்தெரித்தனனால். க௨

வேறு.

உரைசெயப்படும்பவளவாய்ச்செறுவினிலூற்று
மருவுநித்திலக்குமிழியாய்த்தோன்றுமற்றதுதா
னொருவிலோர்பதினான்குகூறும்புகலுதிரம்
விரியுமுப்பத்துமூன்றுகூறுந்தனிவிரவும் க௩

விரவிமற்றதுபிண்டமாய்வளிபலமேவி
யுரைகுலாலனோர்திகிரியினுருவகுப்பதுபோற்
றிரியுமந்தியான்மாவெனும்வளியுருச்செய்யப்
பொருவிறந்தைதன்னுருவமேபோலுறப்பொருந்தும். க௪

அன்னையன்புறவருந்தினவருந்தியோரொன்பான்
மன்னுதிங்களவ்வயிற்றினுட்பொருந்துபுவருந்திப்
பின்னரையிரண்டாகியதிங்களிற்பிறந்து
சொன்னநாளெலாமிருந்துபின்றொலைந்திடுமென்றே. க௫

தொலைந்தியற்றியவினைகளின்பயன்களைத்துய்த்து
விலங்குமக்கட்பரங்களாய்மீட்டும்வந்துதிக்குங்
கலங்கிமாய்ந்துசெல்போதும்வெண்ணரகுறுகாலும்
புலம்புகொண்டதானன்றியாவருமிலர்புகலில். க௬

ஆதலாலரும்பிறவியங்கடலினின்றகலப்
போதினான்முகனேமுமைப்புயனிறவண்ண
னேதமுற்றிடவெரியழற்பிழம்பதாய்நின்ற
மாதுபாகனம்மலரடிநினைந்திடல்வழக்கே. க௭

இன்னவட்டமாசித்தியினியல்புதான்மலரோன்
முன்னங்கூறியதிக்கதையெடுத்தனர்மொழிவோ
ரன்னமென்னடையம்பகட்டிளமுலைத்துவர்வாய்
மின்னொர்பாகன்வாழ்கயிலையின்மேவுவரன்றே. ௪௮

அட்டமாசித்தியியல்புரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௪௪௦௭.

எண்பத்தேழாவது

ஆசாரவிதியுரைத்த வத்தியாயம்.

என்னலுமுனிவர்சவுசவாசாரத்தியல்பினையியம்பெனவெ றிக்கும், பொன்னெடுங்குன்றவிற்கடைகுழைத்துப் பொருந்தலார்புரமெரிமடுத்த, பன்னகாபரணன்பதத்துணைதொழுதுபல்வினைக்குறும்பறுத்துயர்ந்து, மன்னியகுருநாதனுங்கவருள்ளமகிழ்ந் தீர்ந்திடவுரைத்தனன்றால். ௧

உறைந்திடுகுருவின்பாலமர்ந்தியம்பியமங்கடன்கைகளாற்றிச், சிறந்தவக்குருவின்பால்விடைகொண்டுதென்றிசையுறுத்தபாலெல்லாங், கறங்கெனத்திரிதல்வேண்டுமாற்றிரியுங்காலையிற்கருதுதற்கரிதாய், நிறைந்துறைபொருளைமறந்திடாதென்று நெஞ்சினினினைந்திடலுரித்தே. ௨

நீதறுவழியிற்செல்லுதல்வேண்டு நீம்புனல்வடித்ததையுண்ணல்லா, லேதமற்றொழியக்குடித்திடலாகாபடிறொழிந்தியம்பிடலாமாற், கோதறுவேள்விதன்னினுஞ்சிராத்தந்தன்னினுமருந்துதல்கூடா, மாதுயர்செய்யுஞ்சோறலெஞ்ஞான்றுமனக்கொளாதகற்றிடல்வழக்கே. ௩

ஒய்யெனவோருருண்டொழிந்ததற்பினையமேற்றுண்கமற்
றன்றி,யையமேற்றுண்போன்கானகமுறைவோன்பாலுமேற்று
ண்டிடலாமான், மெய்ம்மையேயுணர்ந்தாங்குகிரினெற்கவர்ந்து
மேதகவருந்துவோன்பாலும்,பொய்ம்மையேயின்றியுறைகுவோ
ன்பாலுமையமேற்றுண்டலும்பொருந்தும். ௪

இவ்வகையையமேற்றுநன்குண்போன்காடிசோறெவற்றி
னையேனுஞ், செவ்விதினளித்தலருந்திடவேண்டுமனைதொறுஞ்
சென்றுசென்றுற்று, வெவ்வழல்போலவெகுண்டுமற்றொன்றை
யிழைந்துநீயளித்தியென்றருந்த, லவ்வியமவித்தமனத்தினோர்
க்காகாதென்றுநான்மறையறைந்திடுமால். ௫

தருப்பைநுண்ணுனையினீரினையருந்திச்சாந்திராயணம்பல
வாற்றி, வெருச்கொளுங்கொலைபொய்களவொடுவெகுளி நசை
யெனுமிவற்றினைவெறுத்துக், குருப்பணித்திட்டவகையினைப்பு
ரிந்துசிறிதுண்டுகோதையர்முலைமேல், விருப்புறுதொழிந்தங்கு
பகிடதத்தைமேதகவுணர்ந்திடவேண்டும். ௬

இவ்வகையமர்வோர்மூத்தியினுறுவாரியம்பிகெருமங்கள்பு
ரிவோ, ரெவ்வமில்முற்றத்துறந்தவர்க்காணின் மும்முறைவலங்
கொளாவிறைஞ்சிச், செவ்விதினுரைக்க வேண்டுமால்வரதந் த
ண்டொடுகமண்டலஞ்செருப்புத், திவ்வியமாயவாசனமிவற்றை
ச்சென்றுறத்தொடுத்தனன்கன்றால். ௭

எச்சகன்குறுபாத்திரங்களைத்தொடுதலியைந்திடாவிலகொ
ளிவிரிக்கும், வச்சிரமவுலித்தேவனாக்குருவைமனத்தினுமிகழ்ந்
திடலாகா, நச்சரவென்னவெகுண்டியாவரையுநவையுறவுதைத்தி
டல்கூடா, வச்செயல்பொருந்திற்குடிலையோர்பதினாயிரஞ்செவி
த்திடினவையகலும். ௮

பரவுறுதேவர்ப்பிழைத்தலிற் குருவைப்பிழைத்தன் மாபாவ மென்றுரைப்பா, ருரைசெயுமாபாதகஞ்செயிற்குடிலையோர்பதி னாயிரமோதின், மருவிடாவப்பாதகங்கெடுமவற்றிற்பாதிமன்னு றவெடுத்தோதிப், புரிகட்ன்கழித்தலொருவிடினவற்றின்மும்ம டங்கோதிடல்பொருந்தும். ௯

காகமேமுதல்பறவைகட்ம்மைக்கொலைசெய்பாதகங்கழி ந்திடுமா, லோகையோடொருநூற்றெட்டுருவோதிலொளியதா யொழிவறவெங்கு, மேதமாயுறையுமிறைவனையுணருஞானிக ளீங்கிவைசெயினுஞ், சோகமோகங்களெய்தவிப்பாவந்தொடர் ந்துறவருந்திடாதொழியும். ௧0

வெண்டுகிலுடுத்தேகுரவனைத்தேவர்தமைப்பணிந்திடுதல்வே ண்டிடுமாற், றெண்டிரைநுரையிற்றிகழும்வெண்பட்டுவெண்கடு கிட்டிடிற்றூய்தாங், குண்டிகைநீரைத்தெறித்திடிற்கூட்டைக் கரையப்பட்டெவையுநன்குறுமா, னுண்டுகில்பட்டுநூலொடும்வி ளைவிற்றூய்மையாநுவன்றவில்லத்தால். ௧௧

மரவுரிதோல்சங்கிப்பிபொன்வெள்ளிமாசறுபுனலினூற்கழு வி, வுரைசெயுங்கஞ்சஞ்சாம்பரால்யம்பித்தளையொடுசெம்பிவை கள், பொரியனைப்புளியாற்றூய்மையாம்விறகுகுசைப்புல்மற்றி வைகள்புற்றேய்த்த, விரிபுனற்றெளிக்கினன்குறுமெச்சபாத் திரம்விளங்கும்வெந்நீரால். ௧௨

தாருவோடெலும்புதந்தநீள்கொம்புசாகாநற்கிழங்கொடுபல ங்கள், வாரியாற்கழுவிற்றூய்மையாங்குவவுச்செந்நெல்வெண் சோற்றினைவந்து, சாருதற்கரியோர்சார்ந்துறத்தொட்டாற்றொ ட்டவவ்வளவுமேதள்ளி, நீரினூற்றெளிக்கின்மற்றதுதூய்தாமெ ன்றுமேலவர்நிகழ்த்துவரால். ௧௩

உறைந்திடுமில்லமெழுக்கெறிந்திட்டாற்றூய்மையாமுனா செய்மட்கலங்க, ளறைந்திடுகனலினிடையினிலிட்டுக்காய்த்தி டிற்றுலங்கிடுமாக்கள், சிறந்திட்மிதித்தநிலமெலாந்தூய்மைசேரு மென்னிலக்குழியதனி, னிறைந்தநீர்பசுவொன்றருந்திமிஞ்சிடு மேற்றூய்மையாமெனநிகழ்த்துவரால். கச

கன்றினையருத்தியாவினன்மடியிற்கறந்தபாறூய்மையாம்ப றவை, தின்றெறிந்திட்டபழமுநன்குறுமாற்செறிந்துவார்தெள் ளறல்புனையுந், துன்றுபூங்குழலார்பூப்புறுந்தோறுந்தூய்மையா குவர்கள்காழியர்தா, மன்றவீய்ந்திட்டவாடைநீர்தெளிப்பிற்றூ ய்மையாமெனவழங்குவரால். கரு

மயிர்வினைசெய்வோர்கரங்கடேய்மையவாங்கூலத்திற்கொண ர்ந்துவந்தவைகள், செயிரிலவாகும்வேட்டையினுய்வாய் பட்ட் செந்தடிசணன்குறுமாற், றுயரில்வேதியர்கடலங்குமெய்நிழலும் வேதஞ்சொல்போதில்வாய்நின்று, மயலுறத்தெறித்த திவலையு ந்தேனுந்தூய்மையாமெனவறைகுவரால். கசு

துயின்றெழுகாலுந்தும்மியபொழுதுஞ்சொன்னவையருந் தியபொழுதும், பயன்படுசுத்தாசமனமேபண்ணல்பான்மையாம மனவியர்மூலமேன், முயங்கியகாலும்வாயிசங்கோழிமுதிர்சின நாய்பன்றிகழுதை, யியங்குமொட்டகமாமிவற்றெடுபதிதற்றெ டினுநீராடலேயியையும். கஎ

மக்களையீன்றுங்குறைபவர்தமையும் பூப்புற்றுவதிந்தமாகி ன்ற, நக்கபூங்குழலார்தம்மையுந்தொட்டானறிபுனலாடுதனன் காந், தொக்கவைம்புலன்கள்வென்றறத்துறந்தோர்தமக்குநீள்சு ட்டர்முடியணிந்த, கச்குசெந்தழல்வேன்மன்னவர்தமக்குங்கழறி டுசூதகமின்றால். கஅ

பரவுறுதேவர்ப்பிழைத்தலிற்குருவைப்பிழைத்தன்மாபாவ
மென்றுரைப்பா, ருணைசெயுமாபாதகஞ்செயிற்குடிலையோர்ப்பதி
னாயிரமோதின், மருவிடாவப்பாதகங்கெடுமவற்றிற்பாதிமன்னு
றவெடுத்தோதிப், புரிகடன்கழித்தலொருவிடினவற்றின்மும்ம
டங்கோதிடல்பொருந்தும். கூ

காகமேமுதலப்பறவைகடம்மைக்கொலைசெய்பாதகங்கழி
ந்திடுமா, லோகையோடொருநூற்றெட்டுருவோதிலொளியதா
யொழிவுறவெங்கு, மேதமாயுறையுமிறைவனையுணருஞானிக
ளிங்கிவைசெயினுஞ், சோகமோகங்களெய்தவிப்பாவந்தொடர்
ந்துறவருந்திடாதொழியும். கo

வெண்டுகிலுடுத்தேகுரவனைத்தேவர்தமைப்பணிந்திடுதல்வே
ண்டுமாற், றெண்டிரைநுரையிற்றிகழும்வெண்பட்டுவெண்கடு
கிட்டிடிற்றூய்தாங், குண்டிகைநீரைத்தெறித்திடிற்கூட்டைக்
கரையப்பட்டவைபுகன்றுமா, னுண்டுகில்பட்டுநூலொடும்வி
ளைவிற்றூய்மையாநுவன்றவில்லத்தால். கக

மரவுரிதோல்சங்கிப்பிபொன்வெள்ளிமாசறுபுனலினாற்கழு
வி, வுரைசெயுங்கஞ்சஞ்சாம்பராலீயம்பித்தளையொடுசெம்பிவை
கள், பொரியனைப்புளியாற்றூய்மையாம்விறகுகுசைப்புல்மற்றி
வைகள்புற்றேய்த்த, விரிபுனற்றெளிக்கினன்குறுமெச்சபாத்
திரம்விளங்கும்வெந்நீரால். கஉ

தாருவோடெலும்புதந்தநீள்கொம்புசாகங்கிழங்கொடுபல
ன்கள், வாரியாற்கழுவிற்றூய்மையாங்குவையுச்செந்நெல்வெள்
சோற்றினைவந்து, சாருதற்கரியோர்சார்ந்துறத்தொட்டாற்று
ட்டவவ்வளவுமேதள்ளி, நீரினாற்றெளிக்கின்மற்றதுதூய்தாமெ
ன்றுமேலவர்நிகழ்த்துவரால். கங

உலறந்திடுமில்லமெழுக்கெறிந்திட்டாற்றூய்மையர்முனை
செய்மட்கலங்க, ளுறைந்திடுகனலினிடையினிலிட்டுக்காய்த்தி
டிற்றுலங்கிடுமாக்கள், சிறந்திட்மிதித்துநிலமெலாந்தூய்மைசேரு
மென்னிலக்குழியதனி, னிறைந்தநீர்பசுவொன்றருந்திடுஞ்சிறு
மேற்றூய்மையாமெனநிகழ்த்துவரால். ௧௪

கன்றினையருத்தியாவினன்மடியிற்கறந்தபாறூய்மையாம்ப
றவை, தின்றொழிந்திட்டபழமுநன்குறுமாற்செறிந்துவார்தெள்
ளறல்புனையுந், துன்றுபூங்குழலார்பூப்புறுந்தோறுந்தூய்மையா
குவர்கள்காழியர்தா, மன்றவீய்ந்திட்டவாடைநீர்தெளிப்பிற்றூ
ய்மையாமெனவழங்குவரால். ௧௫

மயிர்வினைசெய்வோர்கரங்கடேய்மையவாங்கூலத்திற்கொண
ர்ந்துவந்தவைகள், செயிரிலவாகும்வேட்டையினுய்வாய்பட்ட
செந்தடிசணன்குறுமாற், றுயரில்வேதியர்கடுலங்குமெய்நிழலும்
வேதஞ்சொல்போதில்வாய்நின்று, மயலுறத்தெறித்ததிவலையு
ந்தேனுந்தூய்மையாமெனவறைகுவரால். ௧௬

துயின்றெழுகாலுந்தும்மியபொழுதுஞ்சொன்னவையருந்
தியபொழுதும்,பயன்படுசுத்தாசமனமேபண்ணல்பான்மையாம
னைவியர்முலைமேன், முயங்கியகாலும்வாயிசங்கோழிமுதிர்சின
நாய்பன்றிசமுதை, யியங்குமொட்டகமாமிவற்றொடுபதிதற்றொ
டினுநீராடலேயியையும். ௧௭

மக்களையீன்றுங்குறைபவர்தமையும் பூப்புற்றுவதிந்தமாகி
ன்ற, நக்கபூங்குழலார்தம்மையுந்தொட்டானறிபுனலாடுதனன்
காந், தொக்கவைம்புலன்கள்வென்றறத்துறந்தோர்தமக்குநீள்சு
டர்முடியணிந்த, கச்குசெந்தழல்வேன்மன்னவர்தமக்குங்கழறி
டுசூதகமின்றால். ௧௮

நெறியலாநெறிசெல்பதிதனும்வானப் பிரத்தனுநீளிடைத்த
ன்னி, லுறைதருவோனுமிறந்திடினிடுகொடாற்றிடுமளவுளதென்
ன, வறைகுவர்தாயத்தார்க்குமாசவுச மசிறபவருமறைதன்னை,
முறையினிலுணர்த்தோன்குரவனீங்கிவர்களிறந்திடில்மூன்றுநா
ளுளதால். ௧௯

மாதுலனிறக்கின்மூன்றுநாளுளதால்வாளமரிடையினிலி
றந்தோர்க்,கோதுமாசவுசமிலதெனவுரைப்பாருயர்ந்துநான்மறை
யினையுணர்ந்த, வேதியர்தமக்கோர்பதுநாள்வேந்தர்க்கீராறுநா
ண்மிகுவணிகர், கேதமிருண்மூவைந்துபின்னவர்க்குமுப்பதுநா
ளெனவிசைப்பார். ௨௦

உரைத்திடுபூப்புமகளிருக்கோரோர்நாளுருமுன்னநாம்யுக
த்தில், விரித்திடுமிரண்டாம்யுகமுதற்றிங்கடொறுமெய்துமவ்வி
ம்பியபூப்புற், றிருக்குநன்மகளிர்தமைமுதநூளிவியம்புறுகடை
யியர்க்காணிற், பொருக்கெனவகரல்போன்றுசென்கன்றுபோ
தரவேண்டுமென்றுரைப்பார். ௨௧

மற்றையவிரண்டாநாளினின்மறையோர்தமையுயிர்வதைத்
தவர்க்காணி, லுற்றிடாதகறல்போன்றுசேணகலவேண்டுமொன்று
ந்தினமுற்றுற், சொற்றதிர்பாதியகலநான்காநாளினிற்றூயவோ
டிற், கற்றையங்கூந்தற் கணிபடுகுதலைக் கன்னியர்தூய்மையெ
ய்துவரால். ௨௨

உரைத்திடுபூப்புற்றிருக்குநன்மகளிரொளிர்கசைவிளங்குநல்
வாசம், விரித்திடுமாலைசந்தனமணிநல் மெய்யினைவிளங்கிடத்தி
மிர்தல், திரைத்தெறிபுனலிற்றுழைதலமுதல் ளார்தியினிலங்குசே
ணகறல், வருத்துஞ்சூதாடல்புணர்ந்திடலிவற்றை மனத்தினுமினை
த்திடலாகா. ௨௩

ஓதியநான்காநாளினீர்மூழ்கி யொருவர்தங்களையுநோக்கா து,தீதறவிரவிதன்னையேநோக்கல்வேண்டுமாற்றிகழநோக்கியபி ன், கோதறுதருப்பைதோய்த்தநீரோனுங்கோட்டவான்பொழிந் தபாலேனு, மேதமில்பஞ்சகவ்வியமேனுமருந்திடல்வேண்டுமெ ன்றிசைப்பார். உ௪

அறைதருபுனலிற்படிந்திடுநான்காநாளிலாறுயநாளதனின் முறையினிலெட்டாநாளினிற்பத்தாநாளினில்மொழியுமீரா று நிறைதருநாளிலோர்பதினான்காநாளினினிசழ்த்துமீரெட்டுச் செறிதருநாளிற்கருவுரிற்புதல்வர்ப்பெறுகுவர்சேயிழைமடவார்.

மற்றையநாட்கடமிற்கருவுற்றால்மகளிரைப்பெறுகுவரளிவீ ழ், கற்றையங்கூந்தற்கனிபடுகுதலைச்கன்னியரொன்றுமாகுதன், முற்றநன்காகத்துறந்தவர்க்குற்றதீவினைமுடிந்திடுமாறு, சொற்றி டக்கேண்மின்முனிவர்காளென்னத்தொகுத்தெடுத்துரைக்கலுற் றனனால். உ௬

ஆசாரவிதியுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௪௬௩௩.

எண்பத்தெட்டாவது

முற்றத்துறந்தோர்பிராயச்சித்தவிதியுரைத்த வத்தியாயம்.

—*—

அகல்காழல்குன்மடந்தையரைமனத்தினினைத்தலாகாவா மகளிர்முலைமேல்மற்றொருகாலேனுமணக்கிற்சாந்தபனம் புகலும்பிரசாபத்தியமென்றோதும்பொருவில்கிரிச்சிரங்க ளொன்றுகவாற்றிடுதல்வேண்டுமெனத்தொன்றுரைக்கும். க

கொடியகொலைபொய்களவிவற்றைமறக்கல்வேண்டுங்கோர்தாய
விடர்செயிவைதாஞ்சிறிதறியாதெய்தப்பட்டவெனினன்கா
வொடிவின்றுகவேயுணராவோங்குமதிறக்கிரிச்சரத்தை
மட்டினில்கேழ்வியெய்தியரனேற்றல்வேண்டுமெனவகுத்தார். ௨

வேட்டுப்பசுந்தேனுகர்ந்திடுதலாகாவிழைந்துதென்புலத்தோர்க்
கூட்டக்கொணர்ந்தவவையேற்றுங் குண்டறனியுப்பிணைமிசைத
கோட்டமில்லாவெதிகளுக்கங்காகாவென்னக்கூறுமொல் [ல்
வாட்டமில்லாத்தனிமறையுமனுநூன்முதலாநூல்களுமே. ௩

உரைத்தவிவற்றிலொன்றேனுமுணராதெய்தப்பட்டிடுமேல்
விரித்தகேழ்விமறையவர்பால்விளங்கவாய்ந்துபாவத்தை
முருக்குமாறுநோற்றிடுதல்வேண்டுமெனவேமொழிகுவா
லருத்தியில்லாவெதிகளுக்கென்றறிவாலுயரப்படுகின்றோர். ௪

இவ்வாறறிந்துபசும்பொன்னுமோடுமிணையாமெனநினைந்து
செவ்வேமறையின்முடிவினினன்குறையுஞ்செந்தீமேனியனை
யொவ்வாக்கருணைப்பெருங்கடலையுன்னியுணரப்படுமெதிதான்
வெவ்வாரகின்வீழாதுவிளியாமுத்திதனிலுறுவான். ௫

பிராயச்சித்தவிதியுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௪௯௮.

எண்பத்தொன்பதாவது

மரணநிமித்தமுரைத்தவத்தியாயம்.

—*—

என்றுகூறமாமுனிவ ரிருந்தசூதன்முகநோக்கி, மன்றவினியுங்
காலையினிலெய்துநிமித்தவகையெல்லாங், குன்றாதுரைத்திடெ
னவேலோடுங்குன்றஞ்சிலையாய்க்குழைத்தெயில்க, ளன்றைப்பக
லையழலுண்ண வளித்தோற்றொழுதங்குரைத்தனனால். ௧

வேறு.

அருந்ததிதன்னைநிலவின்மெய்நிழலை யலங்கொளித்துருவ னைக்கண்ணுற், றிருந்திடக்காணூரிறப்பரோராண்டிற் றினகரன் செய்யவாளொளியைப், பொருந்திடக்காணுதெரியொளிதன்னைப்புலப்படக்கண்டவர்காண்பார், வருந்துறப்பதிஞேர்திங்களீற் றினிற்போய்மறலிவைவச்சுதன்காம். உ

வாயினுன்மலத்தைவெள்ளிபோற்பொன்போல்வருந்துபு கக்குவோர்கனவி, லெய்வுறவின்னவாறுகண்டிடுவோரிறப்பரா ற்றிங்களோர்பத்தி, லாயுநுண்மணலிற்சேற்றினின்மிதித்தவடி மூனையடியினிற்குறையின், மாய்குவரோரேழ்திங்களிலென்ன மதிவலார்நுனித்துரைத்தனரால். ௩

தலையினிற்கபோதங்காகம்வந்திருப்பிற்சாவராலாறுதிங்களி னின், மலைவுறவேகுங்காலைவாயசங்கள்வந்துடன்பற்றிடில்வளி தா, னலைவுறத்தூளிதனைத்தலைமிசையிற் சொரிந்திடினிழலறிவு ற்றுங், குலைவுறத்தோன்றினுன்குதிங்களினி லுருத்தெழுநமனு ழையுறைவார். ௪

மின்னிவான்வலப்பாலிடித்திடில்விரிந்தநீரிடைவானவிற் காணின், மன்னிடாதிறப்பர்மூன்றுதிங்களினில்வயங்குறுமாடி யினீரிற், றன்னெடுமெய்யைத்தலையினைக்காணுதிருக்கிலோர்திங் களிற்சாவார், கொன்னுனைச்சூலமேந்தியதறுகட்கூற்றினுக்கரு கிருந்தாகி. ௫

மெய்சவம்போலநாறிலோர்பக்கந்தன்னுளேவீகுவர்நீரு, ளாய் யெனமூழ்கியெழுதருகாலைமுந்நெஞ்சுலரினுச்சியினில், வெய் யவாய்த்தூமமெழுந்திடிற்பத்துநாளினிலிறப்பர்மெய்மிகவு, நை யவேசந்திதோறுநொந்திடிலோர் நான்குதிங்களினிறந்திடுவார்.

கவிழ்தலையுளியங்குரங்கொடுசிக்கயாற்றகாற்றேரின்மீதே
றி,நவையுறத்தென்பாற்றிசையினிலேகுவரிருட்பிழம்புபோன்
மேனித், தவளவான்பிறைநேரெயிற்றிடையொருத்திதழுவகன்
வெங்கூற்றுறுதிசையிற், றுவளவேயிழுப்பக்கனவுறிற்றிங்களொ
ன்றினிலுயிர்தொலைந்திடுவார். ௭

தன்னிறமிகவுங்கரியதாய்த்துன்னற்கருஞ்சிதர்நளர்தரவுடு
த்து, மன்னியேயுறையமற்றொருதவத்தோன்றிகம்பரனாகியே
வந்து,முன்னர்வந்திருப்பவள்ளலஞ்சேற்றிற்றம்முடன்முழுவது
ந்தாழ்ந்தங், கின்னலுற்றிருப்பக்கனவுகாண்குவனேற்றிங்களொ
ன்றினிலிறந்திடுவார். ௮

தலையினின்மிகவுஞ்சாம்பராயிருப்பத்தடந்தொத்திப்புனல்
வறப்பக், கொலைபுரியரவக்குழூஉநனிதோன்றக் கொண்டல்போ
ன்மேனியன்கல்லா, லலைவுறவெரியக்கனவுவந்துற்றாலாங்கவோ
விகூற்றுவன்கை, வலையினிற்பட்டவைகலோர்பத்தின் மாய்வ
தற்கையமொன்றிலதே. ௯

வெய்யவன்குணபாலெழுதருகாலை விரைந்தெதிர்ந்தொரு
வனைநோக்கி, யொய்யெனநரிகள்கூப்பிடிற்றிங்களொன்றினிலு
யிர்தனைந்திடுவார், பொய்கைநீரிடையிற்படிந்தெழுகாலைப்பொரு
க்கெனநெஞ்சொடுபல்லு,மையவேநோவிற்றிங்களோர்மூன்றின
மனுவைநன்னுதலின்னளம். ௧௰

எல்லியும்பகலுங்காரணமின்றிவெருவிநாமிரவினில்வான,
வில்லிணைக்கண்டுற்றானினும்பகலினுடுக்களைவிளங்கநோக்கிடி
னுஞ், சொல்லிடுமொருவர்கண்ணினுட்டமதுமெய்யிருறேன்றி
லவெனினுஞ், செல்லுவர்மறலியுறைந்துவாழ்நகரிற்றிங்களோ
ர்மூன்றுசெல்காலை. ௧௧

செவியிரண்டினுங்கண்ணொன்றினுநின்றுதினம்புனல்வார்ந்தொழுகிடினு, நவையுறக்கருதிக்கல்லெனத்திண்மைநாப்பொருந்திடினுநற்கபோலங்,குவிதரத்திரண்டுதோன்றினுஞ்செவியைப்பொற்றிடிற்கொம்மெனுமோசை, யவியினுந்திங்கண்மூன்றினுளைமன்றனாலயத்தடைவதுசாதம். ௧௨

தலையினைவிரித்துப்பாடியேயாடித்தழல்விழிநமன்றிசைதன்னிற், செலவுறக்கனவுகண்டவர்திங்களிரண்டினிற்சாவதுதிண்ணங், கலினவாம்புரவிகழுதையோடணிந்ததேரிலத்திசையினிற்கடுகி, யலமரச்செல்லக்கனவுகண்டவர்தாந் திங்களொன்றினிலுயிரகல்வார். ௧௩

குழியினில்விழுந்துநெறிதனைக்காணாதலம்வரக்கொடுங்கனவுறினும், விழைதருமில்லோரிரண்டுமேற்றொன்றாய்த்தோன்றினுமெய்யினிலொருவ, னழிவுறவடித்தாங்ககல்வதுபோலுந்தோன்றினுமயிர்சிகைபரப்புந், தழலினுள்விழுந்தாற்போன்றிருப்பினுமோரைந்துதிங்களினுயிர்தணப்பார், ௧௪

செய்யவாய்ச்சிவந்தகண்களோரிரண்டுமேலுறச்செவ்வனே நோக்கி, வெய்யவாயுயிர்ப்புவிடுபவர்மூன்றுநாளினுள்விளிந்து போகுவரால், மையெனக்கருகிக்கறுத்துமாணிக்கவண்ணநோகியேசிவந்து, நையவெள்ளாடைதோன்றிலோரைந்துநாளினுட்டொலைவருள்ளாவி. ௧௫

இவ்வகையுணர்த்தநிமித்தம்வந்தெய்திலெழுந்துகீழ்த்திசையினிலன்றிச், செவ்விதின்வடபாற்றிசையினிற்றான்போய்ச்சேகறுநிலத்திடையிருந்தாங், கவ்வியமவித்துப்பிரணவமோதியழலுருவாயநம்பனை, மௌவலங்குழலாளொடுமனத்தெண்ணின் மற்றவன்மலர்ப்பதமடைவார். ௧௬

மரணநிமித்தமுணர்த்த வத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௪௫௪,

தொண்ணூறாவது

பிரணவத்தியல்புரைத்த வத்தியாயம்.

---*---

பிரணவத்தியல்பையுரைத்திடக்கேண்மின்பிரணவம்வயி[illegible]
[illegible]றியென்று, முறைசெயச்சிறந்ததாமசியென்றுமொளிர்கிருச்[illegible]
[illegible]வித்தியென்று, மருவிடுமூன்றுமாத்திரையாகமாசில்காந்தா[illegible]
[illegible]னுவிபோ, லரிறபவொலித்தாங்குச்சியினடுவணமர்ந்திடுமெ
[illegible]நடுத்தோதில். க

இஃதுவகையாயபிரணவந்தன்னையெழிறிகழ்வில்லதார்க்கொ
[illegible]டி. இவ்வியவம்பாச்சீவனைப்பூட்டித் திகழ்ந்தொளிர்பிரமமா
[illegible]லக்கி, லவ்வியமவித்தாங்காசனுகாதவானந்தமயமதாயமர்ந்
[illegible], செவ்விதாயேவிற்காலமோர்மூன்றுந்தீர்ந்திடாமுத்திசேர்கு
[illegible]வார். உ

அறிந்தவர்புகழுமகரமாத்திரைதானென்றதாமாங்கதுவாகு
[illegible], சிறந்தமாகிலமோரிரண்டுமாத்திரையாந்தீதிலாவுகாரமற்றது
[illegible], முறைந்தமர்கின்றவொளிபுவலோகமுமாத்திடுமகாரமோர்
மூன்று, கிறைந்தமாத்திரையாமன்னதுவாகுநிலவியேயமர்சுவ
[illegible]லோகம். ந

ஒருவிடாநாதமாகுமாலோங்குமுருத்திரலோகமுற்றுணர,
[illegible]யதாம்விந்துச்சிவபதமாகுமிவ்வகையமர்ந்திடுகுடிலை, யுரை
செயும்பொருடொல்பிரமமாமிதனை யுணர்ந்தவருமையுருவோடு
[illegible], விரவியோருருவாயமர்ந்திடுமுதல்வன்விரைமலர்ப்பாதமேவு
[illegible]ரால். ச

அறைந்தவிம்முறையேகுடிலையேநெஞ்சி லிருப்போர்மு
ணையுணரிற், சிறந்திடவிவுளிமேதநூறாற்றுபலத்தினைச்சேர்குவ
ரவர்நர், வறங்கணாநாவாம்பாவமற்றெவையு மண்ணனற்குடிலை
யேகொம்பி, னுறைந்திடுகனியையுலவிவீழ்த்தியபோலொன்றற
வொழித்திடுமென்றே. ரு

மற்றுளகடவுளோர்களையெல்லாம்வாக்கினுற்றுதித்துறவ
ணங்கிப், பெற்றிடப்படுவதோரொருபலனைபிறையணிபிஞ்ஞக
ன்றன்னைக், குற்றமின்றாகவணங்கிடிற்கோடிதேவர்கள்சொரி
த்திடுபலத்தை, யுற்றிடநல்கியொழிவிலாமுத்திதன்னையுமுதவு
வனன்றே. சு

இன்னவாறாயகுடிலையையுணர்ந்துமுத்திவீடெய்திடலரி
தா, முன்னமேவிளிநற்கெடுத்துநாமொழிந்தநிமித்தம்வந்தெய்தி
டில்விளங்கப், பன்னுநான்மறைகளுத்தழும்பேறப்பகர்ந்திடுகா
சியினடைந்து, மன்னியுள்ளாவிதணந்திடினீங்காமுத்திவீடெய்
துவர்மன்னோ. எ

பிரணவத்தியல்புரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—கசஅக.

தொண்ணூற்றொன்றாவது
காசியிற்சோலையியல்புரைத்த
வத்தியாயம்.

என்னமுனிவர்காசியினதியல்பையுரையென்றிசைத்திட்டு
மன்னமுயர்த்தோனாயிரம்யாண்டுரையப்படினுமறையொணா
மன்னுகாசியியல்புதனைவகுப்பல்சிறிதென்றுமைபங்கன் [றுல்
பொன்னங்கழற்றொடுதேற்றிப் பொருவில்குருதன்புகன்றன

முன்னம்பரமனுணுகுமிடையெங்கவீங்குமுலையுமையைப்
பொன்னங்குடுமியிமையவரைதன்னின்மணந்துபொருவிலா
மன்னுகாசிதனிலடைந்துமாசிலவிமுத்தேச்சரமாம்
பன்னற்கரியவிலிங்கத்தைப்பழுதின்றாகப்படைத்தனரால். ௨

படைத்தங்கவிமுத்தேச்சரனாமீசன்றனக்குப்பருமணியாற்
கடுப்பினிலைவாலோர்கோயிலியற்றிக்கதிர்க்குமணிசூழ்ந்த, தொ
டுக்கையுமையாடனக்கதுதான் காட்டியதன்பின்சூழ்சடையோ
ன், வடிக்கண்மடந்தையொடுமெனத்தால்வருத்தமலர்ப்பூங்கா
டைந்தான். ௩

பொதிந்தபசியநறும்பாளைப்பூகம்பொதிலன்பொருகோடு
துதைந்தமலர்ப்பூங்கூந்தலாய்த்தோற்றேனினதுகழுத்தென்
றெதிர்ந்திடாதுவான்போயவிடுகுமிடைக்கிங்கிடைந்தனவாற்
பதிந்துகிடந்தநிலமிசையின்றீயமலர்ப்பூம்பசுங்கொடியே. ௪

வருந்தவிடையென்றெழுந்தநின்முலையோடெதிர்க்கவொயத்தெங்
கிரண்டேமில்லேழுப்புடையைப் படைத்தேதலிளியென்செய்
தரும்பைதூங்கமுடத்தாழைநிற்பநறியமலர்ச்சோங்கம் [தெனக்
பரிந்துசாம்பிநறியமுகைபடியின்வீழ்த்திநிற்குமால். ௫

போதுபிணைத்தாலனையவனம்பொன்னங்குழைதாழ்ப்பொருதெ
ங்கண், மாதேநினதுவாய்க்குடைந்தேமென்றுமாழ்கிச்செந்தல
ந்த, தாதார்மலர்கள்பலதாங்கியிலவந்தோன்றுஞ்சண்பகமு
மதம்பெருகநின்மூக்கிற்கேலாப்பூவின்றிருக்குமால். ௬

குழைதாழ்மருங்குனின்மேனிக் கிடைந்தகனிர்கள்பலகுழைத்
தழியும்பசுந்தேன்கனிபுதவுமலர்ப்புமாவின்கிளைதோறு [மு
மொழியிற்குடைநற்குயில்கோடிமொழியத்தளர்கனியாடிக்
குழைவற்றிரங்கிமிகக்கருகிக்குழைமிச்சுனிந்திருக்குமையுமால். ௭

தொடிகளணிந்தபசுங்கழைகடோற்றவினைமென்றோளினாய்
படிகந்திரட்டிவிட்டனையபசுங்காய்நெல்லிதோன்றுமவற்
றிடையேயிடையேபாடலங்கணிர்குமவற்றினிருமருங்கும்
வடிவிறராளமணியரும்பிவான்றோய்புன்னைமருவுமால். (அ)

இடுகுமிடைநின்வாணெடுங்கட்கிடைந்ததன்பொற்சிறடிக்கு
மடன்மென்கமலஞ்சாய்ந்ததோவென்றுருவனைமனைமலனை
முடுகிநெருக்கவதுகண்டாங்காம்பவெள்ளிநகைமுகிழ்க்குந்
தடமீதொன்றிங்கிப்பிவாய்முத்தந்தயங்கத்தயங்குமால். (கூ)

வடிக்குமமுதகனிந்தொழுகுமழலைச்செந்தார்ப்பசுங்கிளியே,வெ
டித்தவானந்தடவியுற்ற சுறவோடிவிரிந்தவான், பொடித்தமீ
னைமனைத்துற்றாய் பொருந்தேலெமதுபாலென்று, துடித்துக்கய
ல்கண்மனைமலர்மட்டொளிக்குந்தூய்நீர்த்தடந்தோன்றும்.(க0)

உண்டேயிடையென்றுரைக்குமொழி பொய்யாயொழிய
வொருக்காலும், கண்டேயறியாநுசுப்பினாய்கமலநறுமென்பொ
துட்டேறி, வண்டோடெழுந்துசுரும்பசைப்பமகிழ்ந்துபெடை
யைச்சிறகரால், தண்டாதணைத்துவிடாதன்னந் தாழாவின்பத்
தொடுந்துயிலும். (கக)

கருவிமுகில்கைதொழுதகலுங்கற்றைக்கரியகூந்தலாய்
குரவம்பாவையீன்றதனைக்கொடுப்பத்தண்ணென்முகைவிரிந்து
விரைகால்கமலப்போதேந்திநிற்றல்விரைவினீன்றதாய் [தோ
பரிவாய்க்கொடுத்த குழவியினைக் கைத்தாயேந்தும் பான்மைத்

உருவவரிக்கண்குழைதேடியொழுகவொழுகும்புருவத்தாய்
பொருவில்கயிலையெனவெழுந்துபோதிப்புனரிதாழ்ந்துநீர்
பருகிநீலவரைபோலப்படர்ந்துவானத்திடைமீண்டு
கருவிமுகினீட்டருவின்மேலயர்வோயிறகண்படுக்கும், (கஉ)

எற்றுதிரைநீர்முத்தரிபெய்யெரிபோற்சிலம்பார்சிறடிபோய்
பொற்றநறியமலர்காதங்கமழும்பசியபூங்கொடிக
ளுற்றகருக்கட்டமைச்சுற்றியொன்றிக்கிடக்கும்வகையுரைக்கிற்
பற்றிப்பகுவாய்ப்பசும்பாம்புசூழ்ந்துகிடக்கும்பான்மைத்தே. ( )

மலைகொன்றெழுந்துநுண்மருங்குல்வருந்தவீங்குமுலையாய்
பொன், னலர்கொண்டெழுந்தநெடுங்கொங்கைச்சூழ்ந்தங்கலர்
தண்டளிர்நீட்டி, நிலைகொண்டளிசூழ்தருக்கள்பலநிற்றல் பசும்
பொனளிப்போர்பா, வுலைவுதீரக்கரநீட்டியுற்றங்கிரப்போர்தமை
மானும். (கரு)

வார்வாளகற்றிக்குழைகிழித்துக் குமிழ்மென்மறிய மலர்க்கண
ணாய், காய்வெங்கதிர்காறிகிரியொடுங் கடல்வாய்ச்சங்கங்கைத்
தாங்கு, மாயன்மேனிநிறங்காட்டுங் காயாவலர்சேர்மார்புமுயர்,
பாயுங்கோட்டுச்சினவிடையின்பால்வெண்ணீற்றைக்காட்டுமால்

வைவேனெடுங்கண்மலர்க்குழலின்மலர்க்கைவிரலின்வள்
ளுகிரோ, டொவ்வாவாயைப்படைத்தனமென்றுருகிச்செந்தார்
பசுங்கிள்ளை, செவ்வேயுறையாதகன்றதன்றுதேம்பித்தேம்பிச்
சேண்போகி, மைவான்முகிரேய்ந்திடவுயர்ந்தமலர்க்கஞ்சுகத்தி
னுறையுமால். (கஅ)

தருவிவானந்தனைமேவித்தோன்றுவளாயின்கோட்டுவழி
யருவிபோலமணிமுத்தவாரந்தழுவமலர்முலையாய்
விரியுமிலவப்போதுபலமுகிலைமேவிநிற்கும்வகை
கரியபட்டினிடையிடையேகொளுந்துமழலிற்காட்டுமால். ( )

புரிப்பூங்குழலாய்நின்மேனிபுரையாதெனினும்புரையுமென
வுரைப்பச்சிறக்குமாந்தளிர்மற்றதுபோலேனுமொருகாலும்
விரிக்கப்பொறியுற்றனமென்றுவெள்கிவாடுந்தளரேந்தி
மருக்கானறியமாமுயர்மதியந்தட்டவநிற்குமால். (ககூ)

திலகநீநோக்கலிற்பூப்பமற்றோரொன்பான்செறிதருக்க
ளிலவவவற்றிற்செற்றதொழில்செய்யாவதனாணிலைதளர்ந்து
மலரினாமணிற்கும்வகைதற்சூழ்பவரின்மகிழ்ந்தொருவர்க்
குலகவேந்தனருள்புரியவொழிந்தோராடியுறன்மானும். (௨0)

எங்கேயினிநூலிடையென்னவெறிக்குங்கதிர்சேயவந்தாங்கிப்
பொங்காவெழுந்துமுகங்கறுத்தபுணர்வெம்முலையாய்காதலினா
லங்கேகடுவன்மாங்கனியைமந்திக்களிக்குமதுகண்டு
செங்கானாணைசேண்போயசேவலுள்ளித்தளருமால். (௨௧)

பொருதெண்டிரைநீரிடையெழுந்தவிட்டும்புதியதெள்ளமுதா
விரவியகன்றுவான்முகத்திற்கிடந்துபுரளும்வேற்கண்ணாய்
புரியகினைதுகருங்குழற்குப்புரையப்பெற்றேமிலமென்று
கருவிவானமுகிலிரங்கிக்கண்ணீர்துளித்துகண்படுக்கும். (௨௨)

பாட்டாயிரம்வண்டறைகூந்தற்பசியகொடியேபாற்கடல்வா
யீட்டாவமுதேநின்கழுத்தோடிகலியோடியெதிர்வதற்கு
மாட்டாதாகிநறுமலர்க்கண்முத்தம்பரப்பிநணிமாழ்கி
மூட்டாவுள்ளக்கனல்வெதுப்பமூரல்வாய்ச்சங்கிடக்குமால். ()

மதியங்கோடும்வாணுதலாய்வருந்திமெலிகின்னிடைநோக்கிப்
பொதுளுங்காவிற்றுங்குமுகில்போழாவெழுந்தமின்கொடிதான்
வதியாதகறல்மிக்கப்பகையோனைக்காணில்வலியற்றான்
விதிராமெய்யோடுளங்கனலவெருவியொளிக்கும்வகைமானும்.

தேன்றோய்த்தெடுத்தாலனையவருஞ்சில்லங்கிளவிக்கருங்கு
யிலே, வான்றோய்நறியசண்பகத்தின்மணிநாண்முகைகள்வங்கு
கதிர், கான்றேயிருக்குமுடிக்கணத்தினிடையேயனிடையேதான்
கலந்து, தோன்றும்வகைபொன்மணியோடுமுத்தங்கோத்தெ
னத்துலங்கும். (௨௫)

முற்றியிடைக்கோர்வலியாகுமாலுமணிமேகலையணங்கே
மற்றோர்கொடியைமோர்துறையுந்தருவைச்சிறிதும்வாடாதாங்
குற்றேயுறையுங்கொடிமகிணையலாடன்பாலுற்றிடவுஞ்
செற்றேமகற்றிக்கற்புடையாள்கணவனிடஞ்சேர்திறமானும். ( )

இரங்குகடல்வாய்முத்திரங்கியேங்கியாழ்ந்துபோயொளிப்ப
முருந்தங்கவற்றியிளநிலாவிரிக்குமுகின்மென்னகைமாதே [கை
செருந்திறழைத்தினையொன்றைச் செவ்வேபோக்கிநிற்கும்வ
விரிந்தவானிணுடுவெண்ணகைக்கைநீட்டியபோல்விளங்குமால். ௨௭

கயறுண்டந்ததெனலாகிக்குழைமேனடக்குங்கருங்கண்ணைப்
மயன்மீதூரநீயாடுநீலமணியின்கழங்கேய்ப்ப
வயலேகனிகள்பல்தூக்கிநிற்குகாவலவிர்மதியுட்
பயிலுமறுவைத்தானீன்றபசியதனிமாற்றுடைக்குமால். (௨௮)

வயங்குபசும்பொற்றொடிஇன்ற மயிர்வார்முன்கைமலர்க்குழலா
மயங்கவீங்குமுலைசுமந்துமுன்னோவாருவன்மருங்குல் [ய்
கயக்கமன்றேநீயாடுங்கதிர்கால்பொன்னம்பந்தென்ன
நயங்கவுயர்ந்துமுகில்கீறுமலர்ப்பூமாவின்கனிதோன்றும். ௨௯

வாடிச்சிறையமடவன்னம்வணங்கநடக்குஞ்சிறடியோய்
நீடுகோங்கம்புன்றைகருடங்கின்றகொடியின்முகை
தோடுவிண்டுபொற்றாதூற்றல்பொருந்திநோக்கின்றே
ராடுகூத்தின்தலையின்மகிழ்ந்தம்பொன்சொரிந்தவகைமானும். ( )

கன்னங்கரியகுழற்காட்டிகளிவண்டார்க்குங்கனங்குழாய்
துன்னியோராயிரங்காதங்கமழத்துணர்த்ததண்டலையின்
மன்னுமுகிலையுறமேவுபுன்னைமுகைகணைமைந்தமுகி [ம்.
நன்னிணிடையேதோன்றிமிளிர் தண்டாரகையையேய்க்குமா

காசியிற்சோலையியல்புணர்த்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௪௧௨.

தொண்ணூற்றிரண்டாவது

காசியிற்றலமகிமையு மிலிங்கமகிமையு மூரைத்தவத்தியாயம்.

என்றுமலர்ப்பூந்தண்காவினியல்பையிறைவனிசைத்திடத்து
மன்றல்கமழுங்கருங்கூந்தல்வரைமாதொளிருமதிபுனைந்தோ
யின்றிங்கிந்தத்தலவீறுமிலிங்கவீறுமித்தலத்திற்
குன்றுதவத்தோருறைவதுவுங்கூறுகென்னமொழிந்தனளால். ௧

மொழிதலோடுமிமைமகடன்முளரிச்செவ்வாய்முகமோந்தாங்
குழவலன்பினொடுகேட்டியுரைப்பலறியவிரித்தென்று
பழுதின்றுயவித்தலம்போற்பாவைதெண்ணீர்சூழுலகி
லழிவொன்றில்லாமுத்தியினையளிக்குந்தலம்வேறின்றுமால். ( )

திகழாவமரும்விசும்பிடத்துந்திரைநீர்சூழ்ந்தவிரிநிலத்து
மிகழாதுறையும்பாதலத்துமிணைக்கமற்றோர்தலமில்லாத்
துசடீரிந்தத்தலந்தன்னிற்றோன்றிநீங்காதுறைதலினாற்
புகல்வாரவிமுத்தேச்சுரமாயிலிங்கமென்னப்பொருவில்லோர்.

ஆதலுணராவைம்பொறியும்வித்தங்கழியாத்தனிவீட்டிற் [ந்து
போதல்வேண்டுமெனவெண்ணிப் புரைதீர்வெண்ணீறெடுத்தணி
நின்றாகம்மையேதினமுமுள்ளத்தினிடைநினைந்து
கோதின்றாகப்பலகோடிமுனிவர்குழுமியுறைகின்றார். (௪)

பொருவிலாதநைமிசாரணியம்பொருந்துபுட்கரஞ்சீர்
மருவுகங்காத்துவாரமெனுமாசிறலங்கடாமுமறை
பரவுமிந்தத்தலம்போலப்பழுதொன்றில்லாத்தனிவீட்டி
லொருவாதென்றுமமர்ந்துநனியுறையவுதவமாட்டாவால். (௫)

போற்றுசயிகடவ்வியனும்பொருவில்முத்திபொருந்தினான்
வேற்றோரிணையிலாவியக்கர்வேந்தனன்பாலிவண்மேவிச்
சாற்றற்கரியவளகைதனையடைந்தேதிசைகாவலனானான்
மாற்றின்முத்திபெறுகுவன்சம்வர்த்தனென்போனீங்கடைந்தே

சுருதிவகுத்துப்புராணமிவைசெய்துதூயவியாதமுனி
மருவியுறைவனினிச்சின்றாட்செல்லின்மலரோன்மாயனழல்
பருதிமதியங்குலிசிபகர்தேவர்தேவமுனிவரொடும்
பொருவிலிவர்தாநம்மைமூழிப்பூசைபுரிந்திங்குறைவரால். (௭)

விடையவழியேயொழுகுபவர்தாமும்விடையந்தனிலொழுகா
தொடியாய்த்தவஞ்செய்தன்றறின்றோர்தாமு முனைக்கின்மா,பி
யடைதற்கரியபேரின்பமுத்திவீட்டினடைகுவரால் [ன் பி
மடனில்கேள்விமுனிவர்புகழிந்தத்தலத்தின்மாய்ந்திடவே. (௮)

கோதில்சுரபிமுனஞ்செய்தகோப்பிரோக்கமெனுந்தலத்திற்
றீதில்கோப்பியரோக்கமெனுமிலிங்கந்தனையுஞ்செழுங்கமலப்
போதினுறைவோனவனிபற்றுசபிலாகாரம்புகல்குமரீர்
மோதுகளையினுமைவிடபத்துசனுமொழிலிங்கந்தனையும். (௯)

அழிவின்றுறைபத்திரதோயமென்னும்வாவியகழ்ந்தலரோ
னுழுவலன்பினொடும்விரவாற்குணர்ந்தமற்றோரிலிங்கத்தை
வழியுநறவத்துளிதூங்குமலர்ப்பூந்துளவமணிமார்பன்
றழையும்விருப்பாற்கைக்கொண்டுதாழ்ந்துபராவித்தாபித்தான். ( )

அதுகண்டலரோன்வெருண்டிளைப்ப வலர்ந்தகமலத் தட ங்கண்ணான், கொதியேயுள்ளநின்யோற்குலவுமெனவேயுரைத் திடலும், விதியாங்கவன்றனொடும்வணங்க லிலிங்கத்தமர்ந்தெ ம்விதியுலகந், துதியாநின்றங்கிரணியகெற் பேசனென்றுசொல் லிடவே. (௧௧)

அன்னவிலிங்கந்தனையும்விசும்பருஞ்சிறையகன்னத்தோன்
பின்னுமுளத்தினிடைநிறைந்துபெருகிவழியுமன்பினன்
முன்னிச்சுவலினேச்சுரன்றனென்றுமுடியாநாமத்தைப்
பண்ணிமுத்தமுனிவரொடுமமைத்தபரலிங்கந்தனையும், (௧௨)

உருமினிடித்துப்புலியினுருக்கொண்டாங்கியக்கரோரிருவர்
வரலும்பந்தாலெறிந்துநீகொன்றாய்மற்றைப்பந்துதான்
பொருவிலாதகந்துகேச்சுரனென்றெவரும்புகல்செய்ய
மருவிற்றிலிங்கமாயந்தமாசின்றுறைலிங்கந்தனையும். (கங)

பனிமாவிமையப்பொருப்புள்ளம்பழுத்தவன்பாலிவனைத்தி
முனைநெஞ்சுருகித்தானமைத்தமுடிவில்சயிலேச்சுரன்றனையும்
சினவெம்புலிபோலடர்வினைகடீர்க்கும்வாரண்சிக்கனாயி
னனோநான்மலபோன்றுபித்தருவில்சங்கமவீச்சுரன்றனையும், கச

சுரரோடசுரர்பலகுழுமித்துதைதாண்மலர்கள்பலதூவி
யுருகியன்பாற்பூசிப்பவுறையுமத்திமேசனையு
மரிவையுன்றன்புதல்வனாய்மருமவெள்ளிதானமைத்த
பரவுஞ்சுக்கிரேசுரனென்றெவரும்பணிலிங்கத்தினையும். (கரு)

நரியாலிவண்மாய்ந்திமசுரனுருஞ்சம்புகேசனென
வுணையாகிற்கலிங்கமாயுறைந்தானுறைலிங்கத்தினையும்
மரியதேவர்முதலானோரமைத்தலிங்கம்பலகோடி
விரியாநிற்குமிவற்றினையுமின்னேரிடையாய்காணுதியால். (கசு)

என்றுகூறியின்னுமிந்ததலவிசேடப்பணித்தலந்தா
னென்றுந்தவிரியோசனைவட்டமாகியொழியாவித்தலத்தின்
மன்றவிலங்குபுழுக்கடருமுதலாமெவையுமுயிர்மாயிற்
குன்றுமுத்தியடையுமெனிற்கூறற்பாற்றோவிதன்வீறே. (கஎ)

பொருவில்கேதாரத்துமொளிர்புகன்மாலயனற்கிரியதிக
முனைமற்றதின்மத்திமத்தானமதிகமதனிலுலகெல்லாம்
விரியும்புனல்பொத்தியகாலுமழியாதாகிமிகவிளங்கி
மருவியொளிருமவிமுத்தமதிகம்வகுத்துவழங்குங்கால். (கஅ)

தலமகிமையுமிலிங்கமகிமையுமுணர்த்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—கருக௦.

தொண்ணூற்றுமூன்றாவது
காசியிற்சிவனை முனிவர் கண்டு துதித்த வத்தியாயம்.

என்றாங்குமையாட்கனக்கறியவியம்பியவிமுத்தேச்சுரமாங் [க
குன்றாவிலிங்கந்தனின்மழுவாட் குழகனுறைந்தாலுறைந்திடலு
நன்றுகதிர்காலிரவியொருகோடிதோன்றியெழுந்தென்ன
மன்றவொளித்தவ்விலிங்கத்தினெழுந்தோர்சோதிவயங்கிற்றால்

வயங்குசோதிதனைநோக்கிவானமாதருநிவணங்கிடலுந்
தயங்குகோடிமுனிவர்களுந்தாழ்ந்தார்தாழ்ந்தவர்கண்கள்
மயங்கவொளிதான்மிகவாய்த்தவுருவுதாங்கிமழுவேந்திப்
புயங்கமசைத்துவழுவையுரிபோர்த்துமுதல்வன்வெளிவந்தான்.

தோன்றுமிறைவனுருவுதனைக்காணாராகிமிகத்துளங்கி
யான்றகேள்விமாமுனிவர்வலித்திரங்கிநின்றிடலுஞ்
சான்றாயுறையுமுதல்வனவர்காணும்வகையோருருத்தாங்கி
நான்றவிதழித்தேன்றுளிப்பசைபூத்தொளிரநின்றனனால். (௩)

நின்றவிறைவன்றனைக்கண்டுமுனிவர்வணங்கவேரிழையா
டுன்றுமுனிவர்தமைநோக்கித்துதிமினெனவேபணித்திடலு
மன்றவவர்தாமாமறையாற்றுதிப்பமதியந்தவழ்சடையோ
னென்றற்கரியமுத்தியினை யளிப்பனுமக்கென்றுரைத்தனனால்.

உரைத்தங்குமையாடனைநோக்கியுயர்ந்தவானத்துறைநின்ற
மருக்கால்கமலத்தயன்முதலாந்தேவர்முனிவர்மற்றுள்ளோர்
விருப்பாலிவண்வந்தெய்திவினைதீர்ப்பார்விரிந்ததீயெனவைப்
பிணக்குந்திரைநீர்க்கங்கையினிலாடியெய்தும்வினைதீர்க்கும் (௫)

அறையப்படுதற்கேதாரமுதலாந்தலங்களினிலமர்ந்தே
செறியுமிலிங்கமெவையுமிந்தத்தெரித்தற்கரியகாசியினிற்

குறைவின்றாகவமருமெனக்கூறிமருக்கால்குளிர்சடையோ
னுறையுங்குடுமிச்சிரீசயிலாதன்னிலுமையாளொடுஞ்சென்றான்

சென்றாங்குறையுமல்லிகாச்சுனனீசானன்கணேச்சுரன்சீ
ரொன்றுமகிலேச்சுரனொடுமிராமேச்சுரனோர்கதம்பேச
னென்றேயுறையுமிலிங்கங்கண்முதலாமிலிங்கமெவற்றினையு
மன்றல்கமழுங்குழலுமையாண்மகிழ்வுற்றறியத்தெரித்தனனால்.

இன்னவிலிங்கமெவற்றினையுமிளந்தேன்வழிந்துமுருகுகமழ்
துன்னுமலர்கள்பலதூவித்துதித்துத்தலையால்வணங்கினோர்
மன்னுகின்றதுன்பங்களனைத்துமயங்கியிரிந்தோட
வென்றுளேனுமழியாதமுத்திவீட்டிலிருப்பரால். (அ)

காசியிற்சிவனைமுனிவர்கண்டுதுதித்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௫௧௮.

தொண்ணூற்றுநான்காவது

அவிமுத்தேசுரனை தேவிவழிபட்ட வத்தியாயம்.

என்றுகூறிநூறுபலநெய்யாலெனதிலிங்கத்தை
மன்றவாட்டுனமாமகிழ்ந்தேயிருபத்தைந்தென்று
மொன்றுபலநெய்யாட்டிடலப்பியங்கமாமோராயிரமாய்
நின்றபலநெய்யாட்டிடல்மாதானமாகுமிசழ்த்துங்கால். (௧)

இவ்வாறிந்நூறுநெய்யாலாட்டியிருபத்தைந்துபல
மொவ்வாச்சந்தக்குழம்பணிந்தாங்குருவவாடைமலர்சேர்த்தி
செவ்வேபுதல்வர்கிளைஞரொடுமலைசெய்திறைஞ்சியிரவெல்லாம்
வெவ்வாய்வினைதீருஞ்செழுத்தையோதிமுத்திவீடடைவார். (௨)

என்னவுரைத்துநெடும்பெண்ணைக்குரும்பையேய்ங்கவெழுந்
தமுலைக், கன்னல்சுவற்றுந்தீங்குதலைக் கழையொன்றியதோளு

மையோடு, மின்னக்கொளிருஞ்செஞ்சடையோன் விரும்பிய
டைகின்றோவற்கு, முன்னற்கரியமுத்தியினையுதவுகாசிதனி
லடைந்தான். (௩)

அடைந்துகள்வாய்வழிந்தொழுகுமாம்பற்பூவின்சாம்பல்போ
லொடுங்குசிறையதுள்ளுநடையுள்ளுநற்பயிலுங்குரியினங்கண்
மிடைந்துபுகைநேர்புறவோடுமேவுமாடவீதியெல்லா
நடந்தாங்கவிமுத்தேச்சுரமாமிலிங்கமதனினண்ணினனால். (௪)

முன்னமிறைவனுரைத்தபடிமுதல்வியாவினெய்யின்றன்
மன்னுமவிமுத்தேச்சுரமாமிலிங்கமதனைமகிழ்ந்தாட்டிச்
செந்நெலடிசிலளித்துநறுந்தேனூர்மலர்தூய்வலஞ்செய்து
கன்னன்மொழியாற்றுதித்திறைஞ்சிக்காதலோடும்பூசித்தாள். ( )

மன்றனறவத்துளிபிலிற்றிமலர்ந்தபசும்பொற்றாதுகுக்குங்
கொன்றையணிந்தோன்மந்தரத்திற்குறுகியந்தகாசுரனை [ர்
வென்றானென்னவென்றவகைவிரித்துமொழிவாயெனமுனிவ
ருன்றாத்தவத்துச்சூதமுனியவர்களறியக்கூறினான். (௬)

அவிமுத்தேசுரனைதேவிவழிப்பட்டவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௫௨௪.

தொண்ணூற்றைந்தாவது

அந்தகாசுரனுக்குச்சிவனருள்புரிந்த வத்தியாயம்.

அடன்மிகுமிரணியாக்கனென்றுணைப்போனளித்திடுமந்த
காசுரன்முன், மடலவிழ்கமலத்தயனடிவணங்கிமனம்விழைந்தி
டுவரம்பெற்று, மிடல்கெழுமமரர்க்கிறைவன்வெஞ்சமரில்வென்
கொடுத்தோடிடக்கண்டாங், கிடர்செயுங்கொடுங்கோல்செலுத்
திவிண்ணவருக்கிறைவனாயிருந்தனனன்றே. (௧)

ஆங்கவன்கவிகைவெதும்பிடமயங்கி யாழ்
தேவ, ரோங்குமந்தாத்தினைகிழுக்கண்ணனுறைத
டைந்து, வீங்குதோளந்தகாசுரன்விளைத்தவெம்மை
யும்விளம்பி, யீங்கெமைக்காத்திகளகணேயென்றுவிள
றைஞ்சினான்றே.

ஆயகாலையினிற்றிசையெலாம்வென்றுங் காடல்வேலந்
தகாசுரனும்; பாய்மதக்களிற்றையனையபல்கோடியசுரர்பற்றுபு
டைசூழ், மேயபோரண்டங்குலுங்கிடமுழங்கிவெயிற்கதிர்ப்பரம்பு
கோடரச், செயசெம்மணிகளிரவியைச்சிரியவ்விடஞ்சென்றடை
ந்தனனால். (௩)

அடைந்தமையறிந்துமாயனைமுதலோர் தங்களையஞ்சன்மி
னென்று, மடந்தையோர்பாகனெழுந்தவேறேடும்வந்தவல்லசுரர்
தின்மார்ப, மிடற்றுயிர்வீட்டியந்தகாசுரனையெரியுமிழ்சூலத்தா
ற்குத்திப், படர்ந்தவாணிடையினெடுத்துவானிரவிபாய்கதிர்பட
வெதுப்பினனால். (௪)

ஆங்கதுகண்டுதேவர்களெல்லாமாடினர்பாடினராகித், தாங்
கருமெமதுபகையினைத்தடிந்ததலைவனைச்சிற்றடியேங்க, ளீங்கித
ற்கொருகைமாறு வேறிழைப்பவென் னிடிற்பிறவிவேரறுத்தே,
யோங்கியமுத்தியளிப்பதற்கெவண்கை மாறுயாமியற்றுவதுளோ
யாய். (௫)

என்றவருரைத்தவடவைவிழுதுவிட்டெனக்கிடந்தவீர்ஞ்
சடையிற், கொன்றையுமருக்குங்குவிழுகிலெருக்கங்கண்ணியுங்கு
ளிர்மதிக்கொழுந்தும், துன்றியவிடவாளெயிற்றபையரவுந்துலங்
கிடவிரவியேமுடித்த, மன்றலங்குழலாள்பங்கனைமீட்டுமெனமகி
ழ்ந்திறைஞ்சினான்றே. (௬)

ஆங்கவர் துதிப்பவடவைகால்சூல நுனையினிலருக்கன்வெங்கதிரால், வீங்கியவுடலம்பசையறவாடிக்கிடக்கும்வெவ்வந்தகாசுரன்றா, னீங்கறிவில்லாவினையனென்றனக்குனின்னருள் சுரந்திடவேண்டுங், கோங்கரும்பனையகுவிமுலைபங்கவென்றுவாய்குழறியேதுதித்தான். (எ)

மற்றவன்றுதிப்பக்கேட்டெம்மிறைவன்மனம்விழைந்தவையுரையென்னப், பொற்றசெங்கமலத்துணையடிப்போதிற்பொருந்தியவன்பினையின்று, முற்றிழைபங்காதந்திடவேண்டுமென்னலு முக்கணனிரங்கிக், கொற்றநீள்சூலநுனையினின்றுங்குளிர்புனனிலத்திடைவிடுத்தான். (அ)

விடுத்தவன்றன்னைக்கணங்களுக்கெல்லாந்தலைவனாயுறையெனவீறு, கொடுத்தலுமலர்மேலயனையேமுதலாந்தேவர்களியாவருங்குழுமிக், கடுத்திகழ்மிடற்றோனருளினைவியந்துகழுமியவல்வினையென்னுந், தொடக்கறுத்துயர்ந்தவந்தகாசுரனைத்துதித்துளமகிழ்ந்தனரன்றே. (௯)

அந்தகாசுரனுக்குச்சிவனருள்புரிந்தவத்தியாயமுற்றிற்று.

ஆக விருத்தம்—௧௱௩௩.

தொண்ணூற்றுருவது

சிவன்வராகத்தின்கொம்பைப்பிடுங்கின வத்தியாயம்.

—*—

என்றலின்மாயன்கேழலின்வடிவமெடுத்துயிரணியாக்கனைமுன், கொன்றதுமந்தக்கேழலின்கொம்பைக்குளிர்மதிக்கண்ணியோன்பிடுங்கி, யன்றணிந்ததுமறையெனமுனிவரம்பகட்டிளமுலைபங்கன், மன்றல்கான்மலர்த்தாள்வணங்கிமாதுதன்மாசறவுரைக்கலுற்றனனால். (க)

விறல்செழுகுலிசமுதலியதேவர்யாரையும்போரினில்வெ
ன்றுந், செறுழ்வலியிரணியாக்கன்முன்கடல்சூழிருநிலமுழுவது
ஞ்சுருட்டி, யுரைசெய்பாதலத்தினுள்ளுறக்கொடுபோயுடல்சின
ஞ்செருக்குவாளசுரர், நிறைதரஞ்சூழ்ந்துதொழுதனரேத்தநெஞ்
சகங்களித்துறைந்தனனால். (௨)

ஆங்கதுகண்டுபோரினிலுடைந்த வமரர்கோன்முதலியதே
வர்; மாங்குயிற்குதலைச்சுருங்குநுண்மருங்குல்வள்ளிதட்கமலவீ
ட்டுறையும், பூங்கழன்மடந்தைநீங்கலாமார்பிற்புனைதுழாயினரு
ருத்துளிப்ப, வோங்குவைகுண்டத்துறையுமாயவன்முன்னுற்று
ளைந்திவையெலாமுரைத்தார். (௭)

உரைத்தலுஞ்செங்கட்கேழலினுருவை யெடுத்துறுசினமிக
த்தழைப்ப, பொருக்கெனவெய்தியெயிற்றிறலிரணி யாக்கனை
பொருபடையோடுஞ், செருப்புரிந்தாவிகுடித்துறுதுன்பந் தீர்த்
துமாநிலத்தினையெடுத்து, விருப்பொடுங்கொணர்ந்துகுறங்கின்
மேல்வைத்துவிளங்கிடவிருந்தனனன்றே. (௮)

ஆங்கதுகண்டவயனொடுமேகவாகனன்முதலருந்தேவர், வீ
ங்கியதடந்தோளசுரரைவீட்டியெமதிடர் தடிந்தவிண்ணவனே,
யாங்கள்கைமாறென்செய்வதிங்கிதற்கென்றிசைத்தடிவீழ்ந்துவீ
ழ்ந்திறைஞ்சித், தீங்கறவந்தமண்ணினிற்சிறிதாங்கெடுத்துயர்சி
ரத்தினிற்றரித்தார். (௫)

தரித்தலுமந்தமாநிலமடந்தைதகைபெறுவராகத்தின்கோட்
டி, லருத்தியாலுறைந்தமண்ணினையிவ்வாறுதலைமிசைதரித்தவர்யா
ரும், விருப்புறுமகவைப்பெற்றுளம்விழைந்தயாவையுமேதகவ
டைந்து, திருத்தகநெடுநாளுறைதருவரென்னத்தேவருந்தொழுத
னர்போனார். (௯)

அன்னவர்போனபின்னர்மாநிலத்தை யணிபெறப்பண்டு
போலமைத்து, மன்னியவராகம்பெரும்புறக்கடலையுழக்கிமாவ
டைத்தையேர்தி,முன்னமேயுறையுமாமையினேடுஞ்செருச்செ
ய்க்கண்டமுக்கண்ணன், துன்னிவெஞ்செருச்செய்பன்றியின்
கொம்பைப்பிடுங்கியேதுலங்கிடத்தரித்தான். (எ)

தரித்தலுங்கண்டுதேவர்கள்யாருஞ் சார்ந்துமுதலைவனேசின
வச், செருச்செயும்பன்றிக்கொம்பினைப்பிடுங்கித்திகழ்தரக்கரத்தி
னிற்றரித்தில், கருத்தியாலுலகம்யாவையுங்காத்தவண்ணலேயா
மிறைபக்கா, மருக்கமழ்தொடையோயென்றெடுத்தேத்திமலர
டிவீழ்ந்திறைஞ்சினரால். (அ)

சிவன்வராகத்தின்கொம்பைப்பிடுங்கினவத்தியாயமுற்றும்.

ஆக திருவிருத்தம்—௧௫௪௦.

தொண்ணூற்றேழாவது.

சரபனார்சிங்கத்தின்றோலுரித்துப்போர்த்த வத்தியாயம்.

—※—

என்னதுமிக்கவிரணியன்றன்னை யெரிவிழிமானிடமடங்க
ல், மன்னியேயுகிராலுடல்பிளந்ததுவும் மானிடமடங்கலினுரி
யை, மின்னவிர்சடையோன்போர்த்ததுமறியவிளம்பெனமுனி
வர்கள்சூதன், பன்னகாபரணனடிதொழுதேத்திப்பாற்படுத்து
ரைக்கலுற்றனனால். (க)

வேறு.

சிறந்தகதிர்வேலிரணியன்றன் சீர்சால்புதல்வன் மெய்தெரிந்து,
அறந்தேர்புகழ்ப்படுபிரகலாதனென்னுந்தூய்மையோன், பிறந்
தவழ்கற்றிடவேட்டுப் பெரியமுன்னீர்க்கடலின்வீழ்த், துற
ந்தமாயன்றனைநினைந்தாங் கோரெட்டெழுத்தேயுரைக்குவன்றல்

உரைக்குமதுகேட்டவன்றனை வெகுண்டுபோரினுடைந்
தோடு, மருக்காறுளவோன்றன்பெயரோவுரைப்பாய்வயங்குதி
சைகாத்தே, யிருப்பார்மற்றப்பெருந்தேவர்யாவரெனக்கிங்கெதி
ராவார், விருப்பற்றுயிர்மேனினக்கிதுதானுரைத்தார்யாவர்விள
ம்புதியால். (௫)

என்றுமெனதுநாமமேயுரையாயென்னவிசைத்திடவு
மன்றைப்பகலேயதுவுரையாதாழியோன்றனெட்டெழுத்தே
மன்றவுரைத்துவலியுடையமற்றையசுரர்புதல்வர்க்குங்
குன்றாதுரைமினெனவவருமதுவேகூறலுற்றனரால். (௬)

அதுகேட்டானைகேளாதே யமரும்புதல்வன்றனைமிகவுங்
கொதியாவெகுண்டுகேண்மினெனத் தாம்பாலார்த்துக்கொலைய
சுரர், மதிதோய்குடுமிவரைநின்றும்வீழ்த்தார்புனலினிடைமடுத்
தார்,முதிரும்வெய்யவெங்கனலினிட்டு முனிந்தேயுடற்றீய்த்தார்.

பைவாய்நாகவிடங்குழைத்துப்பூசிப்பாய்வெங்கனல்கக்கும்
வெவ்வாய்வாளாற்குருதிநீர்மெய்நின்றொழுகவெட்டிறு
ரிவ்வாறிவர்களிடர்பன்னூறியற்றல்செயவுமிடரின்றிச் [ல்
செவ்வேயுளத்தைத்தான்றிருத்திச் செங்கண்மாலைநினைந்தனனா

வேறு.

மற்றவனினைதலுணர்ந்துபல்கோடியலர்கதிரவிதாங்குழுமி,
யுற்றுடனுதித்தாற்பொன்றிருட்பிழம்பங் கொன்றறமாய்ந்துகெ
ட்டோடக், கற்றைவெங்கதிர்கான்றசுரருள்ளாவிகுடித்துவாய்க
னல்வழிந்தொழுகு, பொற்றையங்கிரிப்படைபுரங்காவல்பூண்
டொருமருங்கினின்றொளிர. (௭)

கலைநிறைமதியம்பன்னிருகோடி யெதிர்ப்பினுங்கதிரொளிம
ழுங்கி, யலைகடல்சூழுஞ்சக்கிரவாளகிரியினுக்கப்புறம்போகி,யுலை

[illegible]ச்சத்தோடறமாழ்கியுணர்ந்திடாவகையொளித்துறைய,
[illegible]திப்பப்புவலம்புரிச்சங்கமற்றொருமருங்கினில்வயங்க. அ

[illegible]ண்டரித்துழலுமலரணிகூந்தல்வருமுலைமலர்மகளுயர்ந்த
[illegible]ஞ்திருவியப்புறம்போயவலர்கதிர்ச்சேவடிவருடத், தெ
[illegible]ையுகித்தவிருகிலமுழுது மகப்படப்போத்துசேவடியைத்
[illegible]ண்டவெண்பிறை சேர்த்தெனத்தோன்றுந் தூய்நுதனிலமக
[illegible]. (௯)

[illegible]ரவிகருமுகிலவெணிருந்தொத்தொழிறிகழ்மார்ப
[illegible]ெறிக்குங்கவுத்துவம்விளங்கவீறுசால்வரையினில்ப
[illegible], பருவிவீழ்ந்தென்னவலங்கலந்துளவமலர்ந்துவீழ்பச்சி
ந்தேறல், பொருவில்கேயூரமணியொளிஇலக்கும்போருயர்புய
[illegible]வழிய. (௧௦)

இணையறுபசும்பொன்மவுலிகால்கதிர்கள்கணபணப்ங்கியோ
[illegible]கை, மணிவிடுசெய்யகதிரொடுமளவிவாணிமானதிப்ரத்தலை
[illegible], பணையெனமுழங்குசேனையாற்றோடும்பட்ர்ந்தெனத்தோ
[illegible]வாவ, வலையின்மேற்றுயிலுமாயவனெழுந்தாங் காளரி
[illegible]கொண்டடைந்தான். (௧௧)

அடைந்தமேற்றவியிரணிபகசிபுதன்னையாங்ககப்பட்டப
[illegible], மடங்கலின்வென்றிமற்றவன்வனரோர்மார்பகம்வள்ளுகிர
[illegible], யிடந்துயிர்குடித்துக்கிளையொடுசேனை யாவையுமொன்ற
[illegible], மிடைந்ததோள்வலியான்மேவியவண்டம்வெடிபட
[illegible]போதில். (௧௨)

வேறு.

அண்டங்குலுங்கவார்த்திடுதல்கேட்டாங்கெய்தியளிமூசாத்
தண்டாமரையிலுறையயனைமுதலாந்தேவர்சார்வதற்குக்
கொண்டவச்சமுடையோராய்க்குழுமிநெங்கிமணிக்கோடு
விண்டோய்ந்துயர்சக்கிரவாளமேவிவழுத்தலுற்றனரால், (௧௩)

ஒளியாயொளிக்குமொளியாகியுரவுத்திரைப்பாற்கடனடுவெட்
டளிவான்முகில்போற்கண்டுயிலுந் தலைவாதமியேம் பகையெல்
கிளையாதறுக்குந்திகிரியோய்கீதம்பாடிவருமிடற்ற [லாங்
வளிவீழ்துளவப்பசுந்தொடையலையாவருள்வாயருள்வாயே.௧௪

என்றேயவர்கள்வழுத்திடவுமிரங்காவுளத்தோடெவர்களையுங்
கொன்றுங்குறையும்வகைநோக்கிக்குழுமிவெருவிமலர்வாணி
மன்றவுறைநாவந்தணனேமுதலாந்தேவர்மலைவல்லி
யொன்றியுறையுமோர்பாகத் தொருவனுழைசென்றுற்றனரால்.

வேறு.

உற்றெழில்வாய்ந்தவிடமருங்கொளிக்குமுமையவள்காண
வெங்களிற்றைச், செற்றதன்கருந்தோல்போர்த்தசேவகனே சீ
ர்நுரைத்தலைவிடநாகம், பற்றுபுமருங்கினசைத்தமுக்கண்ணாபா
ற்கடற்பள்ளியோன்காணாக், கற்றையங்கதிர்கால்பொன்மலர்த்
தாளோய்களைகணேயருள்புரிவாயே. (௧௬)

பாலன்முன்பாலுக்கழுதிடவலம்புபாற்கடன்முழுவதுமளி
த்தோய், வேலைவாயெழுந்தகரியவெவ்விடத்தைவிரைமலர்த்தி
ருக்காத்தேந்திச், சாலவேயருந்தியெம்முயிர்காத்ததத்துவத்தலை
வனேசெக்கர், மாலைவாய்ப்பிறையுங்கங்கையுமணிந்த வரதனே
யருள்புரிவாயே. (௧௭)

எரிமணிக்கோட்டுவெள்ளியம்பொருப்பையிடந்துமுன்னெ
டுத்தவாளரக்க, னொருபதுமுடியுமிருபதுதோளு நெரிதரவெண்
மலர்கவற்று, திருவடிவிரலினுதியினூன்றுசேவசாசிற்றடியே
ங்க, ளருவினையகற்று மழலவிர்சடையோ யமலனேயருள்புரி
வாயே. (௧௮)

என்றவர்துதித்து வணங்கலுமிறைவ னுற்றதெனியம்புமி
னென்ன, மன்றலந்துளவோன்மாணிடமடங்க லுருவினையெ
டுத்துமற்றடர்ந்தோள், வென்றிவாட்டடக்கை யிரணியன்வலிய

[illegible]பகமிடந்தமே வுலகிற், றன்றிமற்றுறைவோ ரெவரையுங்
[illegible]வான்றுடங்கினனெனவுரைத்தனரால். (௧௯)

உரைத்தலுமவனையஞ்சன்மினென்று வொள்ளழலேந்து
[illegible]கண்ணன், வெருக்கொளுஞ்சரபவுருவினையெடுத்துமானிட
[illegible]கல்மெய்துயிர்ப்ப, விரித்தநீள்சிறையாற்புடைத்துயிர்பரு
கிவிண்ணவர்பாவமற்றதன்றோ, றரிக்கிறைஉரித்துத்தயங்கிடப்
[illegible]த்துக்கயிலைமால்வரையினிற்சார்ந்தான். (௨௦)

[illegible]ந்தவிக்காதைபகர்ந்தவர்கேட்டோர்பகர்ந்தவர்தமக்கு
[illegible]பொருளை, மகிழ்ந்துதாமளிப்போ ரளித்ததுகேட்டு மகிழ்செய்
வோர்மானிடமடங்க, றிகழ்ந்திடுமார்பமகழ்ந்ததன்றோலையுரித்
துமெய்போர்த்தவன்றேவர், புகழ்ந்திடவுறையும்போருயர்கயி
லைமால்வரைபொருந்துவரன்றே. (௨௧)

சரபனார்சிங்கத்தின்றோலுரித்துப்போர்த்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௫௧.

தொண்ணூற்றெட்டாவது

சிவன்சலந்தரனைக்கொன்றவத்தியாயம்.

என்னலுமுனிவரெல்லாமீறிலாமகிழ்ச்சியோடு
முன்னினர்தொழுதருதன்முகமலர்நோக்கியீசன்
கன்னவிற்றிரடோள்வெற்றிச்சலந்தரன்றன்னைக்காற்றோர்
பன்னிடக்கொன்றவாறுபகரெனப்பகர்தலுற்றான். (௧)

உரவுநீரிடையிற்றோன்றியுதித்தனனொளிறுவாட்கை
வரையெனத்திரண்டதிண்டோள்சூரன்மற்றவனைவாய்ப்ப
விரிபுனறரித்தவாற்றால்வெண்டிரைப்பாவைவேலித்
தரைமுதலுலகமூன்றுஞ்சலந்தரனென்றுசாற்றும். (௨)

ஆங்கவனுற்றகொல்லாவருந்தவம்பலவுமாற்றி
யோங்குமந்தரமென்றுள்ளவுயர்ந்ததோள்வலிபெற்றுட்கி
வீங்கியசினவெங்கூற்றுமெய்யுயிர்பதைத்துவாட
வாங்குவிற்கொருவனுகிமன்னினனுறையுநாளில் (௩)

வேறு

பருதியோரிரண்டெழுந்தனவெனநிலம்பகர
விரியும்வானிடைமவுலியின்மணிவெயிலெறிப்பக்
கரியமால்வரைவீழ்தருமருவியைக்கடுப்பப்
பெரியதோண்மிசைப்பிறங்குமுத்தணிவடம்பிறழ. (௪)

மந்தரத்தினைச்சுற்றுமாநாகமேபோல
வுந்துசெங்கதிருதரபந்தனமருங்கொளிர
வந்திவானில்வெண்பிறையிரண்டமர்ந்தெனக்குறுதி
சிந்துவாயினில்வளையெயிறிருபுடைதிகழ. (௫)

உருவவண்டொடுதேனினமோரொருகோடி
பிரிகலாதுறைதாரணிபிறங்கியமார்பிற்
பருதிபன்னிருகோடியைப்பாயிருள்செய்யும்
விரியுநீள்கதிர்மணியணியாரம்வில்லுமிழ. (௬)

கூற்றமேகொடுங்கொலைக்குரித்தென்றுவெங்கூற்று
மாற்றநீர்த்துவந்திறைஞ்சிடக்கொலைபுரிந்தழல்வா
யூற்றுகுற்றுடைவாள்மருங்கசைத்துறுப்கைஞர்
போற்றுதாளினினரலவம்பொற்கழல்வீக்கி. (௭)

வேறு.

துன்றுசெங்கதிரோன்மேயசுடர்மணித்தட்டேரொள்ளி
நின்றுயர்மேருவோடுநிகர்த்தருமணிகள்சேர்த்தி
மன்றல்காருமநாற்றிவயங்குபொற்கொடிஞ்சிமான்றே
ரொன்றலநூறுகோடிகச்சமாங்குடன்முன்னேக, (௮)

...ளைக்கர்த்தவாற்றூற்கறையடியென்பதன்றி
...செழுமருவலார்தங்கருந்தலையிடறிமெய்யி
முறைய, நன்றருள்செய்துகதழ்சினவுழுவைநல்லுரியசைத்துவா
னுயர்ந்த, குன்றெனமருளுங்கரியுரிபோர்த்தகுவிமுலையோரிடப்
பாக, னன்றொளிர்பருதியாயிரமெழுந்தாலனையதோர்திருவுருவெ
டுத்தான். (௨௭)

எடுத்தவவ்வுருவைக்காண்கிலராகியிமையவர்மயங்குதனோ
க்கித், தொடிக்கையந்தீஞ்சொலுமையவள்வேண்டசுடர்விழிய
ருளினனருளக், கடுத்திகழ்மிடற்றோனெடுத்தநல்லுருவைக்கண்
களார்ந்திடமிகநோக்கி, யடித்தடிமலரின் வீழ்ந்தனரிறைஞ்சி
யானவாகமகிழ்ந்தனரால். (௨௮)

மகிழ்ந்திடச்சூழ்ந்துவார்நரம்பியக்கிப் பாடினர்வரம்பில்கந்திருவர், திகழ்ந்தொளிர்மேனியரம்பையராடத்தேவதுந்துமியெழுந்தொலிப்ப, வகைந்தகற்பகப்பூமலர் சொரிந்தெழுந்துதித்தச் சாரணரருங்கணங்கள், மிகுந்துவானிடையி லார்த்தனர்மறைகள்விளம்பினின்றுவந்தனர்முனிவர். (௨௯)

ஆயகாலையினிலுலகெலாமொருங்கேயுய்யவுமிற்றுமணத்திடையமர்ந்த, வேய்புரைதோளிமுருகுவீற்றிருந்தமென்மலர்த்தொடைகரத்தேந்திச், சாயுமன்மருங்குநுடங்கிடப்பொற்சிலம்பு துயல்வருஞ்சீறடிபெயர்த்துக், காயமுற்கனிச்சிவேத்தியநடனக்கழலையில்வீழ்த்தினளால். (௩௦)

ஆங்கதுகண்டுமறைகளின்முடித்தலைவனிறைந்தமங்கையின்மீதுயத், தாங்கியமலர்தூயமலைசமிக்கெப்பகுங்களிக்கனிசின்மருக்கன்றேத்தி, யோங்கியமவுலிவின்னவர்புகழ வொண்மலர்ச்செங்கரங்கூப்பி, மாங்குயிற்குதலைமலைமகள்செய்யமலரடிவீழ்ந்திறைஞ்சினரால். (௩௧)

தேவிமாலைசூட்டினாத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் — ௨௩௯.

நாற்பதான்காவது

சிவனுமையைக் கலியாணம்பண்ணின வத்தியாயம்.

ஆயகாலையினிற்பொன்னிதழ்மிதந்தசெந்தாமரைமலர்க்கூட்டின், மேயநான்முகத்தோன்பரியகாம்பறிந்தவெள்ளியோத் தோளுமையாளை, யயசன்மணவீடுரிக்கிடவென்றிமணமியற்றுதைறஞ்சிடமிளிருங், காயமுற்கனிச்சிவேத்தியநடனக்கழலையடியியற்றென்றான். (௧)

வேறு.

என்னனுமலரோன்றன்னாலியற்றிடப்பட்டதோங்கி
மன்னியகதிரோனாணைகேட்டிடாதாகிமைத்த
துன்னிருட்பிழம்புசீய்க்குஞ்சுடருமிழ்மணிகடம்மாற்
பன்னுதற்கரியதாயபாற்படுநகரமொன்றே. (௨)

அகழ்கிடங்குடுத்துத்தோன்றுமணிமணிமிளிருமிஞ்சி
திகழ்தருநாகலோகத்துறைதருபுரிசைசெவ்வே
பகலவன்விசும்பினூடுபடர்ந்திடாதொழிப்பனென்று
புகழடைக்கடவிழுப்பமெழுந்ததையொக்குமன்றே. (௩)

அகழிருங்கிடங்கிற்பூத்தவாம்பலர்தீஞ்சொன்மாதர்
நகைமணிப்பவளச்செவ்வாய்நல்லெழில்காட்டத்தோன்றும்
பகலவன்கதிர்கள்வந்துபாய்ந்திடவண்டுபாட்
டுமைகயவிழ்கமலமன்னோர்முகத்தெழில்கொடுக்குமன்றே. (௪)

கன்னலங்கவளந்துய்த்துக்கடாக்களிசெருக்கிவெய்ய
கொன்னுனையேந்துகோட்டாற்குவிறிநின்றிடித்துவெம்பி
துன்னிழல்குனிந்துகுத்தித்தழலிருகண்கள்காலப்
பன்னரும்வேழங்கண்டோர்பணித்திடநடக்குமன்றே. (௫)

இணைவிழியென்னுங்கூற்றாலெதிர்ந்தவராவிகொள்ளுங்
கணிகையர்நசுப்புநோவநாடகங்கனிவிக்கின்ற
வணிபெறுமிடனுந்தீர்ந்தேவார்ந்தயாழனுக்கிப்பாட்
டணிப்பவரிடனுமன்னித்தொடர்ந்துடன்வைகுமன்றே. (௬)

உருமெனவாறிச்சீறியுட்கன்றவராவிகொள்வோ
ரரியுமிழ்படைகள்பற்றித்தொழில்புரியிடனுமோடி
விரைவுறுமுலவைவேந்தும்விரைவினைப்பயிலுந்தின்காற்
புரவிகள்வட்டங்கொள்ளுமிடங்களும்பொருந்துமன்றே. (௭)

வெண்ணிறவாவின்றீம்பானுரையெனவிளங்கித்தோன்றும்
புண்ணிவர்புலவுவேற்கட்பூவையர்பொருந்துமாட
மண்ணலங்குடுமிவெள்ளிவரையெனவயிர்த்துவார்ந்த
கண்மலிப்பசியதோகைகளிமிகநடித்துவைகும். (௮)

கைத்திட்டதேனும்பாகுங்கனிந்தவந்திருந்தொற்செவ்வா
யெய்த்துநுண்மருங்குல்வானத்தரம்பையரிரங்குதோறும்
மைத்தமைம்முகிலின்வந்தமின்னெனமயங்கிநோக்கிப்
பைத்தலையுரகவேந்தர்பதைபதைத்தயர்வாரன்றே. (௯)

பூகமென்படப்பைசூழ்ந்தபொய்கையின்மட்டேடன்றிச்
சேகறப்பூத்தசெங்கேழாம்பலந்தீந்தேனுண்ட
நாகிளவண்டுகோடிநக்கின்றிரங்கிப்பாடித்
தோகையரமுதச்செவ்வாய்சூழ்ந்துவீழ்ந்துழலுமன்றே. (௰)

வேறு.

பணைமுலைவிம்மிதப்பட்டுவீங்கலிற்
றுணையறவாடியநுசுப்பிற்றோகைய
ரிணைவிழிகணையெனவெருவியேங்குபு
பிணையினமெழுந்துபோய்ப்பெரிதுவாடுமே. (௧௧)

போகுயர்வன்முலைப்புனைமென்கோதையர்
நாகிளந்தளிரடிநன்குசேர்த்திய
சேகறுசிலம்பொடுசிலம்பவன்னமின்
பாகடுமொழியொடுங்கிள்ளைபாடுமே. (௧௨)

நெறிமலர்க்கோதையர்கிழன்றமேனியோ
டுறைமதுமாந்தளிர்தளிர்ப்பவொள்ளழற்
கறைகொள்வேல்கற்றுமற்றவர்கண்ணொடு
நிறைபுனற்கருங்கயல்பிறழுமீரதே. (௧௩)

வேறு.

வெய்யவனெழுந்துதோன்றுந்திசையினின்மிளிர்ந்துகாட்டுஞ்
செய்யசெம்மணியிற்செய்தவிமானங்கடிரண்டுசூழ
மைதவழ்விமானமொன்றுவானுறகிமிர்ந்துதோன்றுங்
கையினிற்குலிசமேந்துங்கார்முகிலூர்தியார்க்கே. (௧௪)

புண்டவிழ்வேற்கண்மாதர்பொருந்துபன்மாடஞ்சூழ
வுண்டொருவிமானமங்கிதிக்கினிலொலித்துவீங்கு
தெண்டிரையெழுந்துமுத்தஞ்சிந்திடுங்கடல்களேழுஞ்
சுண்டவாய்மடுக்கும்வெய்யசுடுதழலிறைவற்கன்றே. (௧௫)

எருமையேறுகைக்கும்வெய்யவெரிவிழிச்சுருண்டகுஞ்சிக்
கரியமைம்முகிலிற்றோன்றுங்கடுஞ்சொல்வெங்கூற்றினுக்குப்
பொருவிறென்றிசையிற்கோடிபோகுயர்விமானஞ்சூழத்
திருமணிகுயிற்றிவிட்டுத்திகழ்ந்தொளிர்விமானந்தோன்றும். ()

முறையினினிருதிதிக்கினிருதிக்குமுளைத்தகற்றைச்
செறிகதிர்பரப்புஞ்செய்யசெம்மணிவிளிம்புடுத்து
நிறைதருவிமானம்பற்றிநிறைந்துசூழ்ந்திலங்கவார்ந்த
நறைகமழ்தாமநான்றநல்லொளிவிமானமுண்டால். (௧௭)

திரையலைத்தெழுந்துவீசுந்தெண்டிரையிப்பியீன்ற
புரிமுத்தமாலைதாழ்ந்தபோகுயர்பன்மாடங்கள்
விரவிநின்றிலங்கமேல்பால்வீறுசால்வருணராசன்
மருவவோர்விமானம்வெள்ளைமதியமொத்திலங்குமாதோ. (௧அ)

சுழித்துலாமுலவைவேந்திற்கவன்றுலங்குற்றதிக்கிற்
குழைத்தசெம்பொன்னாற்செய்தகோடிநீள்விமானஞ்சூழப்
பழுத்தசொற்கவிஞராலும்பாற்படவெடுத்துக்கொண்டு
வழுத்துதற்கரியவாயமணியணிவிமானந்தோன்றும். (௧௯)

துளக்கொளிமுத்தந்தாழ்ந்ததுணைமுலைமடவார்கைத்
திளைத்திடுவிமானங்கோடிசூழவோர்விமானஞ்செய்யே
விளக்கழலுருத்துசெம்பொன் வெய்ந்தொளிர்விளக்கித்தோன்ற
மளப்பருநிதிக்கோன்வைகவாங்கவன்றிசையின்மாதோ. (௨௰)

இடியெனமுழங்கும்வெள்ளைநாவிடையவனேன்றேற்ப
படுகொலைமழுவாளங்கைபற்றுமீசானனுக்குச்
சுடர்விடுமணியிற்செய்ததுலங்குபல்விமானஞ்சூழ
விடுகதிர்விமானமன்றேன்றிசையினில்விளக்கித்தோன்றும். (௨௧)

இவ்வகையெழிலான்மன்றுமேத்தருநகரிற்செய்
ணவ்விதாழ்கரியவுண்கணன்னுதலுமையைக்கங்கை
கவ்விரீரணிந்தகம்பன்கடிமணம்புரிதற்காகச்
செவ்விதினியற்றல்செய்தமண்டபஞ்சிறிதுசொல்வாம். (௨௨)

வேறு.

பருவனையருவியில்வந்தபாயொளி
மரகதமணிக்குடவாயின்மாணிக்க
வெரிகதிர்த்தூண்மடுத்தெழிதிரைக்கடற்
குருமணிப்பவளப்போதிகைகொளுத்தியே. (௨௩)

வடுவறுவயிரநீண்மஞ்சுசூழ்ந்துவின்
விடுசுடர்பாப்பிடவிளங்குபொன்மதில்
கடல்கெழூட்ருநியிற்காலுங்கண்களிற்
படரொளிமழுங்கிடப்பாந்திமைக்குமே. (௨௪)

பற்பலபத்மராகங்கள்பொழிந்துசெய்
பொற்புறுபலகையாற்பொலிந்தகன்னிலம்
கற்பகநீழல்வானவர்கருத்தையு
மற்புதம்விளைத்தொளியலர்ந்துதோன்றுமே. (௨௫)

இந்திரநீலத்தாலியற்றுபர்வைக
ளந்திலங்சழகுறநிரைத்தலர்ந்தொளிர்
சந்திரகாந்தத்தாற்றயங்கச்சேர்த்திய
சுந்தரவேதிகைதுளும்புமென்னவே. (௨௬)

அலம்புதெண்டிரையெழுந்ததிரும்பாற்கடல்
வலம்புரிவயிறுவாய்த்திட்டமாசிலா
விலங்கொளிநித்திலமாலையெங்கணுங்
கலந்துமேற்றாக்கலிற்கவின்கனிந்ததே. (௨௭)

விரிகதிர்மரகதவியன்கொடர்மமும்
வரியளியினமெலாம்வாய்மடுத்துறப்
பருகிடாப்பசிளந்தேன்பயின்றிடாத்
தருமலர்த்தாமமுந்தாழ்ந்துதோன்றுமே. (௨௮)

கடிகமழ்ந்திடநறுங்காகதுண்டத்தி
னிடுபுகைதவழ்ந்துவிண்ணூடெழுந்தரோ
மடலவிழ்கமலத்தோனுலகின்மன்னியே
யிடைபவர்மூக்கினுமடுத்துவிம்முமே. (௨௯)

இவ்வகைமண்டபமியன்றகாலையிற்
றெவ்வடுத்தேவரைச்சிறப்பினீன்றரு
ளெவ்வமிலதிதியேமுதலவின்கனிக்
கொவ்வைவாய்மங்கையர்குழீமியெய்தினார். (௩௦)

நாகர்கந்திருவர்நல்லியக்கர்நாமயாழ்
சேகரத்தெரித்தகின்னரர்கள்சேயுயர்
மாகமூடியங்குறுகருடர்மாசற
வோகையுண்மலிதரவுற்றங்கெய்தினார். (௩௧)

எறிதிரைக்கடல்கள்பாய்நதிகளேழுமி
னறைதருதிங்களோடான்றதொல்லற
மறைகடோத்திரமுயர்குடிலமந்திரங்
குறைவிலாநல்லுருக்கொண்டெய்தவால். (௧௨)

வேலொடுசெறிவிவார்குழையின்மீதுபோ
யாலமொடுமுதனாயகன்றவாள்விழி
யேலவார்கருங்குழலெழிலரம்பையர்
நூல்புரைமருங்குனொந்தொசியவெய்தினார். (௧௩)

வேறு.

அரத்தவன்பனேறூர்கோடிவெங்கணத்தொடுமடைந்தான்
பருத்ததோடகேதார்க்கனேறூர்பதிற்றொருகோடி
செருக்குவேலவரொடுமடைந்தனன்றிகழ்விசாகன்
உருத்தவெங்கணமறுபதுகோடியோடுற்றான். (௧௪)

இயம்புவித்துதன்கணங்களொன்கோடியோடடைந்தான்
வியன்கொளொன்பதுகோடிவெங்கணத்தொடும்வினாத்தா
னயங்கொள்பாரியாத்திரன்சதுர்வத்தகனுமிகும்
பயங்கொள்வேற்கணம்பன்னிருகோடியோடடைந்தான். (௧௫)

உலங்கொடோட்கணம்பன்னிருகோடியோடெய்தி
னிலங்குவேல்கொடுவாலகேசனுமெழுந்தடைந்தான்
கலங்குதெண்டிரையெனவெழுங்கோடிமாகணங்களோ
சிலம்பியாத்திடச்சேர்ந்தனன்சமதகன்றானும். (௧௬)

எட்டுகோடிவெங்கணமெழுந்திருபுடைசூழக்
கட்டுவார்கழற்றுந்துபன்கடிதின்வந்தடைந்தான்
கட்டிந்தாரணிகபாலியென்பானேந்துகோடி
வெட்டுவாட்படைக்கணங்கள்சூழ்தரவினைந்தடைந்தான். (௧௭)

அரத்தவேலுடையறுபதுகோடிவெங்கணங்க
ளூரப்பியேகிடச்சங்கிலாதவனும்வந்துற்றான்
றருக்கினாலிருகோடிவெங்கணங்கடற்சூழ
விருப்பிற்குண்டகன்வெய்யகுண்டகன்விரைந்தடைந்தான். ( )

நிழன்றவாட்கைகிம்மிலகனென்பானிகரில்லா
வழங்கவெங்கணநாலிருகோடியோடடைந்தா
னுழன்றநெஞ்சொடும்பகைகெடவுருத்தவிப்பிலன்கண்
டழன்றவாயிரங்கோடிவெங்கணத்தொடுஞ்சார்ந்தான். (௫௯)

விறலினானுயர்புகழ்ச்சனனாதன்வெங்கணங்க
ளறையுமாயிரகோடியோடடைந்தனன்வென்றி
குறைவிலாதயாவேசனோர்நாலிருகோடி
திறலினான்மிகுகணத்தொடுஞ்சேர்ந்தனனன்றே. (௬௦)

வயசிர்பவரத்தனனியம்புமோர்கோடி
யாயவெங்கணஞ்சூழ்தரவடைந்தனனன்றே
தேய்விலாப்புகழ்மகேசனுஞ்சேர்ந்தனன்றிறலாற்
பாயவெங்கணமாயிரகோடிமுன்படர. (௬௧)

பரந்துபன்னிருகோடிமாகணம்புடைபற்றத்
திருந்துவேற்பறுவதகனுஞ்சேர்ந்தனன்கணங்கள்
அரந்துகோடியோர்நூறுநூறுடன்றொடர்ந்தேக
விரைந்துகாலகன்காலன்மாகாலன்மேவினரால். (௬௨)

வேறு.

அண்டர்பாலனைங்கிமுகனன்னறுணைத்தாளுளமிருத்துந்
தண்டாப்புகழ்சேர்திறலாதித்தியன்மூர்த்தான்றனுவகன்வாய்
புண்டோய்ந்தழன்றுபுகைகாலும்பொருவில்மழுவாள்வலனேந்
திண்டாச்செருக்குங்கணங்கோடிகோடியொடுமேவினரால். [இ

வடிவாள்கரத்திலுறப்பற்றுசமானன்மலர்த்தாரணிகுமுதன்
புடையிற்றாறுநூறுகுங்கோடிகணங்கள்வாய்ப்புகுந்தா
ரடைவேயுறைசாக்கவுசிகனற்சுமித்திராக்கனழலேயக்கு
மொடியாவென்றிமிகுகணங்கள்கோடிகோடியொடுமூற்றுள். ( )

காகபாதன்சந்தானன்கழறுமறுபதறுபதா
மோகையிருந்தகோடிகணமோடும்விலாவன்றூற்றனையா
ளுகமனையமகாபலன்பிங்கலனற்புகழ்சேர்மதுலிங்கன்
வேகமிகுமொன்பதுகோடிகோடிகணமொடுவிடையடைந்தான். ( )

வெள்ளணிறணிபுலிகண்டன்மிகுபூனைபத்திரனிவன்
றொன்றாறாறுகுங்கோடிகணஞ்சூழவடைந்தார்தொல்வி
லின்றேறேர்புகழ்ச்சேத்திடவுறையுஞ்சதுவத்திரன்வீரணிகணங்க
ளொன்றுமெழுபான்கோடிபடைசூழவெழுந்தாங்கெய்தினரால்

இவ்வாறெழுந்திங்கிவரெல்லாமடைந்தகாலையறுபவியா
லெவ்வாப்பூதகணங்களுக்குப்பதியாயுறையுமயிக்கோ
செவ்வேயோராயிரத்திருநூற்றிருபான்கோடியளவிற்றோ
ரவ்வாயாவறுபடித்தசடையன்னாயனைத்தாளடைந்தனரால். ( )

வேறு.

பிரமதகணங்களோர்மூன்றுகோடியின்
விரைவினிலடைந்திடவீரபத்திரன்
வரைநிகரறுபதுகோடிமாகண
மிருபுடைநெருங்கிடவெய்தினனரோ. (௩௯)

சொரிகதிர்மணிவரைத்தோளுரோமச
னாறுடைக்கோடிமாகணத்தொடுற்றனன்
கரிமுனுமிருவலிக்கரிசனென்பவ
னிருபதுகோடிவெங்கணத்தொடெய்தினன். (௪௰)

திரையெறிகடல்களோரேழுந்தேக்கிடப்
பருகினும்பருகும்வெம்பகைகொல்வெங்கண்
முனைசெய்தொண்ணூறெனுங்கோடியோடுசேர்
பொருவிலாவாருகன்பொலிவினெய்தினான். (௫௰)

வேறு.

பொருவில்பஞ்சாக்கரன்மேகபிருத்தியன் சாருடகூடன்சு
கேசன்பொற்பார், வளர்கீர்த்திண்டோட் சதமன்னுயுவிருடம
னவிச்சுவிருபன்மற்றை,விரிமலர்த்தாரணிசதானனியென்னுமி
வர்களோரொருவர்மிக்க, பரவுறுசீர்க்கணமறுபத்தொருநான்கு
கோடியுடன்படர்ந்தாரன்றே. (௫௧)

விருத்தியுகன்சடாசியன்பஞ்சாசியன்வரத்தண்டன் மேக
நாந்தன், பொருப்புறழ்தொட்டயித்திராந்தகன்றுங்கேதுல்குளி
சன்போற்றும், விரித்தபுகழ்க்காந்தகன்மற் றென்னுமிவரோ
ரொருவர்கணங்கள்வீசுந், திரைக்கடல்போலறுபத்துநாற்கோடி
புடைசூழச்சேர்ந்தார்மன்னோ. (௫௨)

மற்றையலோகாந்தன்காலாந்தகன் பாற்கரன்விட்டன் ற
பூகன்மற்றூர்ச், செற்றிடுநல்லசனிகச்சிர்பாதன் பிருங்கிருடிவி
டாதன்றேசார், கொற்றமிகுசயித்திரனென்றேரொருவரறுபத்
துநான்குகோடி, பொற்றசெழுந்தார்க்கணங்கள்புடைசூழவிருப்
பினொடும்புகுந்தாரன்றே. (௫௩)

என்னுமிவர்கரங்களாயிரமுடையர் முக்கண்ணுமுடைய
ரோசால், பொன்னவிருஞ்சடாமவுலியதனிலிளம்பிறையுடை
யர்புகைகானஞ்ச, மன்னுமணிமிடறுடையர்மணம்புரியவுமை
யுமிறைமலர்த்தாள்போற்றி, மின்னுமணிப்பூண்கதிர்கழகைவி
ளக்கவிருப்பினொடுமேவினாரே, (௫௪)

வேறு.

இங்கிவரடைந்தபின்னர்நாமகளுமெழிலயி ராணியுந்திருவு
ந், கங்கைநீர்கொணர்ந்துகருங்கயன்மழைக்கட்கதிர்முலையுமை
யைநன்காட்டிக், கொங்கவிழைம்பாறிருத்திநீர்முகந்த கொண்
டல்சூழ்குளிநிலாக்கதிரிற், செங்கையான்முல்லைக்கண்ணியுநறவ
ந்தேக்கியகூட்டும்வேய்ந்தனரால். (௫௫)

பின்னைவெண்மதியங்கலைநிறையாதுபெரியவாளரவினுக்கஞ்
சித், தள்ளலில்பசியதிருநிறந்தாங்கித்தயங்கவுந்தண்ணிலாக்கொ
ழுந்து, மெள்ளவந்தரும்பிற்றென்னவாணுதன்மேல் விழிகவா
ழுகுவிற்றிருப்ப, வொள்ளொளிநீறுகாண்டகவெடுத்தாங்குவப்பு
டனணிந்தனர்மாதோ. (௫௬)

கருமுகில்கிழித்துவெய்யவனெற்றைக் கதிர்மதிமேற்றவழ்
ந்தென்னப், புரிகுழற்றொடுத்தசெம்மணிச்சுட்டி பொறிநுதலி
டையினிற்றுலங்கப், பொருவிலாவெழில்சேர்வள்ளைவார்காதிற்
பொழிகதிர்க்கற்றைவிட்டெறிக்குந், திருமணிக்குழையுமொழு
கொளிவிரிக்குஞ்செய்யபொற்றோடுநன்கணிந்தார். (௫௭)

விலையில்வெண்சாந்துவரித்திருதோளின் மிளிர்மணிப்பொ
ற்றொடிசேர்த்தி, யிலகொளியாழிமணிவிரலணியா வெரிந்தவே
ள்வீங்கிடவீங்கு, முலையெழின்முன்றிற்குங்குமமெழுதி முதல்
கெடவுருகியுள்வாங்கி, யலைவுறுமருங்குவேங்கிடமுத்தாரலர்கதி
ர்வடம்பரப்பினரால். (௫௮)

அலைவுறுமருங்குற்கிரங்கினராகியலர்சினைக் கற்பகமளித்த,
கலனலங்கொளுத்தி யிருகுறங்கினும்பொற் கதிர்மணிமகரவாய்
சேர்த்தி, விலைவரம்பறியாக்கிண்கிணியோடும்பாடகம்விளங்கு
பொற்சிலம்புங், குலவிநேடாமைக்கூன்புறமயருமொளிநிகழ்
சீறடிக்கணிந்தார். (௫௯)

இவ்வகையணிந்தபின்னர்வெண்சங்க மேழ்கருங்கொண டலின்முழங்க, கவ்வைநீர்க்கடலின்முரசொலிகறங்கவரம்பை யர்கவரிகாலசைப்பச், செவ்விதிற்செறிந்த மணவினைக்கியற்று திகழ்ந்தொளிர்மணிசெய்மண்டபத்திற், கொவ்வைவாயுமையை க்கொணர்ந்துநான்முகத்தோன்மாயனேடிங்கிதுகூறும். (சுo)

நின்னெடும்பிறந்தநினைவனைமலர்க்கை நேரிழையுமையவ டன்னை, முன்னைநாடொட்டுமென்னெடுநின்னைமுனிவிலனெகி யேபிறக்கும், பொன்னவிர்சடையோன்றனக்கொளிர்வியாழம் புகன்றிடுபொருவிலோனையினி, லென்னவரேனுமகிழ்ந்திடக் கொடுப்பாயென்னலுமவனும்வந்தெழுந்தான். (சுக)

எழுந்துமுன்னேனமாகிமண்ணிடந்துங்காண்கிலாவிணை யடிக்கமலம், விழுந்தனனிறைஞ்சியிறுகுறப்பற்றிவிரைகமழ் நீரினெற்கழுவி, வழிந்துவீழ்நீர்தன்சிரத்தினிற்றெளித்திங்கென் னுடனுதித்தவானுதலைக், குழந்தைவெண்பிறையோயெனதுயி ரோடுங்கொள்கெனநீரோடுங்கொடுத்தான். (சுஉ)

கொடுத்தலுங்குடிலை யோடுநான்மறைக ளார்த்தன்குளி றினமுரசம், படுத்தமண்சுமந்தவேழமோரெட்டுஞ்செவிடுபட்ட னபனிமலனை, விடுத்திடாதுறையுமந்தணன்றேவர்முனிவர்க ளோடும்வீழ்ந்திறைஞ்ச, வடுத்தனர்வணங்கிச்சித்தர்சாரணருங் கற்பகமலர்மழைபொழிந்தார். (சுஙு)

பொழிந்திடநாணியுறைந்திடுமுமையாள் புணர்முலைத்தட மெலாங்காண, வெழுந்தபேருவகையோடெம்மிறைவ னிர்ந்து மாய்மாயனைநோக்கி, விழைந்தவையுரைத்தியென்னநின்னடியி லன்பையேவிழைந்தனனென்ன, வழிந்துவீழ்கங்கைச்செஞ்ச டாமவுலிவள்ளலுமகிழ்ந்தளித்தனனால். (சுச)

ஆயகாலையினின் மலரவன் கருமமியற்றுதற் கருள்புரிகென
லும், பாயும்வெள்விடையோனியம்புதியென்னப்பாயலகொண
ர்ந்தனனிட்டு, மேயநற்றருப்பைபுல்லொடுசேர்ம்வடக்குதாய்
மேவரக்கிடத்தித், தூயவாம்பருதிக்கடிகையும்பாய்த்திமறைமுக
ன்றவிசொரிந்தனனால். (௬௫)

அவிசொரிந்துமையாள்கழுத்தின்மங்கலநாணைப்பூட்டுவலெ
னுமென்கரத்தைநயுவமையிலிறைவன்கரத்தினிற்சேர்த்தியொலி
யழல்வலஞ்செய்தபின்னர், மையறமரயோனவிழ்தலெண்பொ
ரியையுகளிர்புனலுலகெலாமின்ற, துணையளன்முதலனலைப்
யாரழலிற்சொரிந்தனைடருமமார்த்தமே. (௬௬)

ஆர்த்தலுமழலுக்கிறைவன்மரபிற்றோடாம்பெருந்துவ
னிந்தனன்றற், பார்த்துநான்முகத்தோன்றேவர்களோடுமறு
மறைமுனிவர்களோடு, மோர்த்தபேரறிவாலுயர்ந்த மானிட
ளோடும்வாழ்ளுளிர்மதிக்கண்ணி, சேர்த்தசெஞ்சடையோனை
யினுமுமையாளடியினுஞ்சென்றனைதொழுதார். (௬௭)

தொழுதலுமலரோன்முதலியோர்க்கருள்செய் [illegible]
டைக்கொடியுயர்த்தோன், [illegible] தன்னுழையுமாக
பரந்தபல்கணங்களேத்தெடுப்ப, வழுவிலாவாரணசியினிலுமை
யோடமர்ந்துறைந்தனனமர்காலை, விழைவொடு [illegible]
யுமையாள்கேட்டனள்வியப்பினனிறைவன். (௬௮)

பொருவிலாவிறைவன்மணவிழாவின்று [illegible]
ன்றவர்கேட்டோர், மருவினன்குறை [illegible]
மறையவராசருண்மகிழ்ந்து, இருவிழைமணஞ்செய்காலைத்தெ
ரித்தல்வேண்டுமொற்றெரிக்குமவ்விடத்தி, லருள்செயலிறைவனு
மையொடுமிறைவன்பூசனையாற்றிடவேண்டும். (௬௯)

சிவனுமையைக்கலியாணம்பண்ணினவத்தியாய முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௩௬௬௩.

நாற்றைந்தாவது

கணபதிதோற்றமுரைத்தவத்தியாயம்.

——*——

என்னலோடுமுறைமாதவர்சூதனைநோக்கியே
மன்னுமைமங்கரனுதித்ததுநன்குவழங்கென
அன்னமூர்த்திதனைநேர்தருசூதனறைந்தனன்
பொன்னிலங்குசடையான்மலர்ச்சேவடிபோற்றியே. (க)

காசிதன்னிலுமைபங்கனமர்ந்திடுகோயிலில்
வாசவன்முதல்தேவர்கள்யாவரும்வணங்கியே
கூசுபேர்வலியரக்கர்தயித்தியர்கூடியோர்
மாசிலாதமகமாற்றலின்மைந்தினுயர்ந்தனர். (உ)

அன்னவெய்யவர்செய்நற்கருமங்களழிக்கவுந்
துன்னுமாதர்மகவீன்றுதுலங்கவும்யாங்களே
யின்னறீர்ந்திடவுமின்னெழிலைங்கரன்றன்னையே
மன்னுநன்கினருள்செய்தியெனச்சொலிவாழ்த்தினர். (ங)

பொன்னையொத்தவழன்மேனியில்வெண்பொடிபூசியே
கன்னல்வேளைநுதற்கண்ணழலாலுறக்காய்ந்தசீர்
மன்னுகாசியினில்வைகியமர்ந்திடுநீயலா
லின்னறீரவெமையாளுநரயாவரிசைத்திடாய். (ச)

உச்சிமீதிலமர்தாமரையொண்ணறுங்கோட்டைமே
லச்சமின்றியுயர்மெய்த்தவர்காணவமர்ந்திடும்
பச்சிரத்தம்வழிவெம்மழுவாட்படைநீயலா
னிச்சமெங்களையளிப்பவர்யாவர்நிகழ்த்திடாய். (ரு)

விடுசுடர்க்கதிர்செய்வெள்ளினன்மன்றினுள்வீறுடுங்
கடிகமழ்ந்தகுழலாளுமைகண்கள்களித்திட
நடனமேபுரிபுராண்மதிசூடியநீயலா
லடியராகவெமையாளுநர்யாவரறைந்திடாய். (சா)

என்றுமற்றவர்களைத்தழுவிரம்பிறைதருமேருவன்
லொன்றிலேழுமெனமேவுருக்கொண்மனைமயானையபு
மொன்றுமென்பிடியினல்லுருக்காங்கெனவேதத்து
மன்றுமற்றவளுமாசறுமவ்வுருக்காங்கினள். (எ)

தாங்கலோடுமுறைப்புல்லியணைத்தலுந்தாழ்குழ
லோங்குமைமங்கானையாவுருமேய்ந்திடவீன்றனள்
மங்கலாயினியகன்றவெறுவொளுஞ்சிந்தியா
விண்டுமானவர்களுண்மலர்மாரிவிளைத்தனர். (அ)

விளைத்துகாலையுமையாளெழின்மென்குழற்கேசவே
களிக்குமைந்தனைத்தாங்கிடம்பலவாட்டியே
துளிக்குந்தேனிதழியாணவன்குழமலர்த்தாளினுந்
தளிர்க்குமன்புபுரியன்னைபொற்றாளினுந்தாழ்ந்தனன். (௯)

தொழுதுநின்றுறையும்யானைமுகத்தனைத்தொல்லையோன்
றழுவியுச்சிகளிமோந்திவைசாற்றினன்றானவ
ரழியுமாறுமுயர்வானுறையண்டர்கள்யாவருங்
குழுமியுய்ந்திடவும்பன்றுறுதிகூன்பிறைக்கோட்டுவேழம். (௰)

எசிறக்கணைகளின்றியற்றியவெச்சமா
மாசுகொண்டிடவழுத்திவரைத்திடமாமறை
பேசநீதிமுறையாவும்பிழைத்தனர்வோருயி
ராசுகொண்டிடவறைந்தவராவியழித்தியால். (௧௧)

மன்னுமாச்சிரமநீதியைமாற்றிநடந்துளோர்
நின்னைப்பூசனைசெயாதுவிரம்பியவேட்கையா
லென்னையேமுதல்தேவர்கள்பூசையியற்றுவோ
ரன்னராவிகளைமாற்றுதியானைமுகத்திறைய. (௧௨)

நம்மைநாடொறும்வழுத்திடுதொண்டர்களன்குற
வெம்மைநோய்கள்பலதீர்ந்துவிளங்கவிளைக்குவாய்
மும்மையாயவுலகுள்ளவர்யாவருமுன்னியே
யம்மநின்னடியருச்சனைசெய்யிலளிக்குவாய். (௧௩)

என்றுசாற்றவெழிலைங்கானவ்வகையோபெற
நன்றுசெய்துமிகமன்னினனிக்கதைநன்குற
மன்றவுள்ளமொடுகேட்குனர்யாவருமாசற
வொன்றுமிவ்வுலகில்வேட்டவைபெற்றுறைவார்களே; (௧௪)

கணபதிதோற்றமுரைத்தவத்தியாய முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௧௬௧௩.

நூற்றுருவது

சிவன்காளியோடாடினவத்தியாயம்.

என்றுகூறலுமுனிவரெம்பிரா
னென்றுபேரிடுகொட்டிலுற்றரோ
நன்றதாகவேநடித்தல்கூறென
வன்றுசூதனுமறியக்கூறினன். (௧)

முன்னம்போர்வலிமுனைவிறன்மிக
மன்னுந்தாருகன்வானில்வாழ்தரு
மன்னமூர்தியையாதிவானவ
ரின்னல்கொண்டிடவியற்றினனரோ. (௨)

இடைந்தவானவர்யாரும்வெம்முலைத்
தடங்கண்மாதர்கலுருவுதாங்கியே
மடந்தைபாகனார்மலரடித்துணை
யிடைந்துமன்னியேவீழ்ந்திறைஞ்சினர். (௩)

இறைஞ்சிநிற்றலுமெழில்செய்நான்முகன்
மறங்கொள்தாருகன்வலியிறுஎன்மிகக்
கறங்குபோலவேசுழன்றுகாதலா
னிறங்கொள்சேவடிநேடிவந்தனம். [illegible]

அன்னவாட்படையசுரர்கோமகன்
மன்னுமாதராலன்றிமற்றையோ
ரென்னராலுமங்கிறந்திடானெனப்
பன்னிநான்மலர்ப்பதம்வணங்கினேன். [illegible]

வணங்கவீசனீள்வரையணங்கினை
மணங்குவேல்விழியவளைநோக்கியே
குணங்களொன்றிலாவவனைக்கொன்றுநீ
யுணங்குதேவரையுய்விப்பாயென்றான். [illegible]

என்றுகூறலுமிறைவியோர்கலை
யின்றுபுக்கரன்மெய்யிலார்கணந்
துன்றுவல்விடந்தோய்ந்தகாளியாய்
மன்றவெங்கனற்கண்ணினின்வந்தாள். [illegible]

தோன்றுவெண்டலைசூலந்தாங்கியே
வான்றயங்கியபிறைவனைந்திடா
வான்றநஞ்சமார்மிடறிலங்குறக்
கான்றதீவிழிக்காளியேகினள். [illegible]

தாருகன்னெனுமசுரன்றன்னையே
போரில்வீட்டியேபுகைகண்காலுற
வார்செய்கோபத்தாலழன்றுநிற்றலு
மோருமும்மையாமுலகம்வெந்தவே. [illegible]

வெந்துசாம்பராய்விளிதல்கண்ணுரு
வந்திவானிறவண்ணல்வெய்யவாஞ்
செந்தழற்பொறிச்சுடலேசேர்ந்தரோ
மைந்தனுகியேயழுதுவைகினன். (௧0)

அழுதல்கண்டுவெங்காளியங்கையாற்
றழுவியோங்குதன்மூலேகொடுத்தலும்
பொழியும்பாலொடுபொருப்புவில்லினன்
பழிசெய்கோபமும்பருகியிட்டனன். (௧௧)

செயிர்செய்வெஞ்சினந்திரவுண்டபின்
வயிரவன்னெனவகுத்தபேரொடு
மியையுமெட்டுருத்தாங்கியெங்கணு
மயலறும்படிமருவிகாத்தனன். (௧உ)

பின்னுங்காளியோடெழுந்துபேய்க்கணந்
துன்னவாடினன்றுகளிராண்டவ
மன்னசாலேயிலயனேயேமுதன்
மன்னுந்தேவர்கள்வணங்கியேத்தினர். (௧௩)

இன்னகாதையைக்கேட்கில்யாவரு
மன்னுபாதகம்யாவுமாய்ந்திட
மின்னுவார்சடையிறைவன்மேவிய
வன்னநற்பதியடைவரென்றனன். (௧௪)

சிவன்காளியோட்டாடினவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௧௨எ.

நூற்றேழாவது

உபமன்னியனுக்குப் பாற்கடலீ
வத்தியாயம்.

என்றோதலுமறைதெள்ளியவுபமன்னியனெ
குன்றாத்தவம்புரியாவிரிகொழும்பாற்கடல
நன்றாயமர்ந்தனைதயின்புறநவில்வாயெனமு
பொன்றாப்புலப்பகைவேரறப்பொருதகை

முன்னாளினிலுபமன்னியுவெனவேமொழி
மன்னாவுறைபுகழ்மாதுலன்மனைவாய்மகிழ்
யன்னோனருண்மகவோடுவந்தாவின்சுவை
கொண்டேனெமிகவருந்தவுறையில்லங்குறுகின

குறுகாவழுதேங்காவுயர்கோட்டாவினந்திட
ணிறையாதவென்வயிறெங்கணுநிறையும்படி
முறையேகொடுத்தருந்தும்வகைதருவாயென
யுறைதாய்முகநோக்காயுரைத்துள்ளந்தளர்ந்

திருந்தாவுளத்தொடுமேங்கியசிறுவன்முகநோக்கி
வருந்தேலிளம்பிறைசூடியைமலர்தூவிமுன்வணங்கா
திருந்தெங்களுக்காவின்முலைத்தீம்பாலுறும்யாங்கென்
றரந்தின்றெருளிர்வடிவேல்விழியன்னையுரைத்தனளால். (௬)

அன்னைபுகலுரைகேட்டுளந்தளரேலலர்கொன்றைப்
பொன்னஞ்சடையிறைதாடொழிற்புகுதாததுமுளதோ
வென்றவுரைத்தெறிப்பாற்கடலடைவேனெனவெழுந்து
மன்னுமிமையச்சாரலின்வாயெய்தினனன்றே. (௭)

எய்தித்தவழ்காலுண்டருந்தவமாயிடையியற்ற
வெய்துற்றுளநடுங்காவுறைவின்னோர்விரைந்தெழுந்து
மைதுற்றியபோதுமெழின்மாயோன்முனமெய்தா
நொய்துற்றனம்யாமென்றடிபணிந்தேயிவைநுவன்றார். (௮)

என்றுமுனநெடுமால்வளர்கயிலைக்கிரியெய்தி
மன்றுவெறிதிரைப்பாற்கடல்வேட்டேமறைச்சிறுவன்
கொன்னேதவம்புரிகின்றனன்குழகாவெனக்கூறிப்
பொன்றேர்சடையிறைசேவடிபுகழ்ந்தேதொழுதனனால். (௯)

மாயன்புகலுரைகேட்டுமதிசூடியவண்ண
லேயும்புகழ்வானோர்க்கிறையுருவோபெறத்தாங்கிப்
பாயுந்திறலயிராவதப்பகடேறினன்விரைந்தே
யாயும்மறைச்சிறுவன்றவம்புரிகானில்வந்தடைந்தான். (௧௦)

அடைந்தேயவனுறல்காண்டலுமருமாமறைச்சிறுவ
னடந்தாங்கெதிர்போய்மென்கரநளினநாண்மலர்குவியா
மடங்காப்புகழ்வானோர்க்கிறையாநீயிவண்வரலா
னிடைந்தோங்கியதவனல்வனம்வீறெய்தியதென்றான். (௧௧)

என்னுமுரைகேளாவருந்தவஞ்செய்ததற்கிரங்கப
பொன்னுடைகன்றடைந்தேம்விழைவரங்கேளெனப்புகல
பின்னுமழுப்படையோனடிக்கன்பேவிழைந்தனன்யான்
மன்னும்படியருளென்றலும்வெகுண்டேயிவைவழங்கும். (கஉ)

இணையின்றெழுமுலகெங்கணுமாவேனெதிர்நின்றே
குணமில்வினையவிழைந்தெங்ஙனங்கூறும்வகையென்னத்
துணைமென்கரங்கொடுதன்செவிதுண்ணென்றுறப்புதைத்தே
தணிவின்றிறன்குயரஞ்செழுத்துணராவிவைசாற்றும். (கங)

இடுக்கமிடைபங்காளனையிகழும்முறைகேட்கில்
விடல்வேண்டுமுள்ளுயிர்சொன்னவருவோரறப்பறித்தே
சுடல்வேண்டுமிவ்வாறேசெயிற்றொல்லோனுறையுலகி
லடைவாரொருமூவேழ்முறைகிளையோடெனன்றே. (கச)

வெருகுந்திறலசுரர்க்கிறைவிண்ணோரிறையல்லை
திருகுங்குணத்தானின்னுயிர்செகுத்தென்னுயிர்விடுகேன்
விளைவின்னெனவெகுண்டாசறும்வெண்ணீற்றினையெடுத்தே
யருணன்மறைபுகலாவழன்றப்போதினிலெழுந்தான். (கரு)

அதுகண்டருள்புரியாமுகையவிழ்கொன்றையந்தொடையோ
னெதிர்நின்றனன்றனதேர்பெறுமுருவாங்குறவெடுத்தே
பதிதங்கியசிறுவன்னுளமகிழாவெதிர்நோக்கிக்
கதிர்தங்கியகழற்சேவடிகாமுற்றனன்றொழுதான். (கசு)

தொழுவின்சுவைப்பால்வாரிகளோராயிரஞ்சொல்லில்
வழியுந்தயிர்க்கடலாயிரநெய்வாரியுமற்றே
பழுநீண்மலைசோற்றின்வரைபலவுண்டிவெற்பிவைகள்
விழைவெய்திடவளித்தான்கடல்விடமுண்டருள்பெருமான். ()

அருளாலவையருள்செய்தனனுசில்கிளையோடும்
பரிவாற்றிடவுன்டெம்முழைப்படருங்கணங்களுக்கே
புரைசால்பதியாய்நாளுமிங்கழியாதுறையென்னக்
குருமாமணிவளைமாதுகைக்கொடுத்தானவன்றனையே. (௧௮)

கொடுத்தேயருள்புரியென்றலுங்கோதில்பெருஞானம்
கொடுத்தீர்ந்திடுயோகம்வழங்கிடலும்மிறையோனை
யடுத்தேயுறத்தொழுதுன்னடிக்கன்பும்வழங்கெனலு
மடப்பேதையோர்பங்காளனுமருள்செய்தனன்மறைந்தான். ()

உபமன்னியனுக்குப் பாற்கடலழைப்பித்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௧௪௪.

நாற்றெட்டாவது

கண்ணன் பாசுபதவிரதமுரைத்தவத்தியாயம்

மறைந்தானெனவுரைசெய்தலுமாசின்மறைமுனிவ
ரறந்தேறுமச்சிறுவன்னுழையாகின்றுயர்கண்ணன்
றிறம்பாதியல்சிவமந்திரமுணர்ந்தாற்றதுதெளிய
வுறைந்தெங்களுக்குறையென்றலுமுரைத்தான்புகழ்ச்சூதன். (௧)

வேறு.

பன்முறைக்கண்ணன்கண்ணுதற்சாமிபூசனைபாற்பட்டேவாற்றிச், சொன்னனற்பாசுபதவிரதத்தைத்துகளறவடைந்திடல்வேண்டி, யென்னவோனுமேத்திடச்சிவனையேத்துபமன்னியுனைநாடி, மன்னியசாலையடைந்தவன்றன்னைவலங்கொண்டுபணிந்தனனின்றான். (௨)

நின்றவக்கண்ணனுளத்தினைத்தனது நிலவியவுளத்தினுணர்ந்து, துன்றியவினைபோம்படியுறநோக்கித்தூயவெண்ணீறெ

கேத்தணியா, வன்றவனுணர்ந்தவழிவிலாப்பாசுபதவிரதத்தினைய
றைந்தான், மன்றனன்குணர்ந்துமற்றவனிங்காப்பிறவியாருகியி
னைக்கடந்தான். (கூ)

கடந்துயர்பாசுபதவிரதத்தைச் சமூமநன்காற்றியபேற்ருற்,
குடங்கையினடங்காத் தடங்கனுளொருபா லமர்ந்தனன்குழக
னைவெளியே, தடங்கொடாமரைப்பூங்கண்ணிறுற்கண்டுதழைத்
தபோன்புகைமிகப்போ, யிடைந்தநின்னடியேற்கருள்சுரந்தொ
ருசேயீந்தருளெனவழுத்தினருல். (சு)

வேறு.

குவலைக்களத்தோயிமையவரைக்கொடுத்தவாசமலற்கூந்தற்
பவளச்செவ்வாய்மடமயிலோர்பங்கர்பாதம்பணிகின்றோர்
துவளப்புரியும்வினையாவுந் தொலைப்பாய்சுடர்வான்றனிதோல்
தவளக்கதிர்வாண்மதியணியுந்தலைவாவடியேற்புரப்பாயே. [றாங்

மத்தக்கரியினுரிபோர்த்தவரதாவணங்குமவர்வாழ
முத்திணணிசித்திரசடையினடிக்கும்பொருளேமுகைவெடித்த
தொத்தாரிதழித் தொடைபுனையுந் தோன்றுதொல்லை மறைமுத
டத்தாகயிலைமலைவாழுமமலாவடியேற்புரப்பாயே. [லே

நிச்சநினதுயலர்த்தானினைந்தாங்கேத்துமடியவரை
யச்சமுறவந்தடரும்வினையழியப்புரியுமம்மானே
நகச்சவிடமுண்டிருண்டமணிகண்டாகாமனுடலெல்லாம்
சென்றழலினிடைவெவவிழித்தோயடியேற்புரப்பாயே ()

வேறு.

றவனேத்தக்கேட்டழிவில்லாப்புதல்வனையருளுறநம்பி
மன்றலம்பொதும்பர்சூழ்தருகயிலைவரையினிலடைந்
னைன், சென்றுதன்மனையினெய்தியென்றுறுநந்தி

லாப்புதல்வனையடைந்தா, ரென்றியபாசுபதவிரதத்தோர்மகி ழ்ந்திடவுரைந்தனனன்றே. (௮)


பகர்ந்தவிக்காதைபடிப்பவர்கேட்போர் யாவரும்பங்கயக்க ண்ணன், புகழ்ந்திடவிரியும்வானகமேருவிப்போகுயர்கயிலையங்கி ரியி, னலைகந்தபூங்கொன்றைத்தாரணிந்துறையுமண்ணறன்சேவ டியடைவார், மகிழ்ந்துபோயடரும்வல்வினைத்தொடர்ச்சியாவை யுமொன்றறமாய்த்தே. (௯)

கண்ணன்பாசுபதவிரதமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௧௯௫௫.

—*—

பூருவகாண்ட முற்றிற்று.



உ

சிவமயம்.

இலிங்கபுராணம்

உத்தரகாண்டம்.

கடவுள்வாழ்த்து.

சீர்கொண்டசெஞ்சடிலவிமலனிடப்பாகமெலா
நிறைந்துவாழுங்
கார்கொண்டமலர்க்கூந்தற்கன்னன்மொழிக்கவுரிதிரு
வயிறுவாய்த்த
ஏர்கொண்டவெள்ளைமதியிளங்கொழுந்துமருட்டுநனி
யெழில்வெண்கோட்டுச்
சீர்கொண்டமதகளிற்றின்சேவடிப்பூங்கமலமலர்
சென்னிசேர்ப்பாம். (௧)

வேறு.

சீர்கெழுமுமையாள்சிறுமருங்கொசிப்பத் திரண்டவெம்முலையொடுமிகலி, யேர்பெறநின்றதெண்வளத்தெண்ணி யெழிற்றிர்ப்பசும்பொன்மால்வரையை; வார்சிலையாகவிருகடைகுழைத்தமதிமுகிழணிந்தவார்சடையோன்; காரிருள்கழியக்கதிர்விடுசம்பொற்கழலிணைசென்னியிற்புனைவாம். (௨)

ஊட்டிர்ந்தொழியமழுவலான்முகிழ்த்தகரத்திலோர்கனியுளதென்று, நாடியைங்கரத்தோன்விளைந்தனன்சென்று நகைந்தழைந்திடவிரித்த, வோடரித்தடங்கட்கடையிறுத்தேறைகதிந்நிலாநகைமுகிழ்த்தருளுந், தோடலர்கூந்தன்மலைமகள்பாற்றுணையடித்தாமரைதொழுவாம். (௩)

பூமலிதருவினிழலினிற்பசும்பொற்புனைமுடியமரரேத்தெடுப்பக், காமனைங்கணையுங்கடந்தவாட்டடங்கட் புலோமிசைகளிகலந்தழையத், தேமலர்ச்செழுந்தார்வாசவன்மகிழ்ந்து சிறந்திடச்சிந்துவேறிரித்து, மாமுதற்டிந்தமுருகவேள்கமலமலரடிதலைமிசைக்கொள்வாம். (௬)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

முதலாவது

கவுசிகன்கானம்பண்ணிப்பேறுபெற்ற வத்தியாயம்.

என்னலுமுனிவர்சூதனைநோக்கி யெறிதிரைக் கருங்கடன்முகந்து, மன்னியகொண்மூமருட்டியமேனிவட்டவாய்த்திகிரியங்கண்ணி, னின்னருளென்னவகையினாற்புரிவனென்னலுமிளமதிக்கண்ணிப், பொன்னவிர்சடையோனடிதொழுதேத்திச்சூதமாமுனிவரன்புகன்றான்: (௧)

முன்னைநாளம்பரீடனென்றுரைக்குமான்மிகுதானைவேல்வேந்தன், மன்னியமாற்கண்டேயநல்லெழில்சேர்மலர்முகநோக்கினன்வணங்கி, யின்னநற்காதைகேட்டனன்கேட்பவவனுளத்திருளறுமாறு, பன்னினன்கண்ணனறைகழன்மிளிரும் பங்கயப்பதமலர்நினைந்தே. (௨)

வேறு.

உரைசெய்மிரண்டாமுகத்தினிற்
கரையிலன்புடைக்கவுசிகனென்னும்
பாவுவேதியன்வினைகள்பாறிட
விரைவினவிண்மொபுரத்தின்மேவினான். (௩)

மேவுசாமகீதத்தன்வீதியி
ஞவினன்குறுகடந்துமெல்லிதழ்ப்
பூவைமேனியன்மகிழப்போற்றியே
யோவிலையமேற்றுன்னுறைந்தனன். (௭)

வதியுநாளினின்மகிழ்ந்துமெல்லிதழ்ப்
பதுமக்கண்ணினன்பாடல்கேட்டபோ
மதியமொட்டறுமலரியினைய்துயிந்
துகிலவன்பிறலடிகொட்டினான். (௮)

ஊட்டுகொலையிறுவந்துவேதியர்
வாட்டிறற்புகழரசர்வாணிகர்
கோட்டமில்குலப்புதல்வர்கோதற
வீட்டுகாதலாலெழுவர்கூடினர். (௯)

பாவுமெய்ப்புகழ்க்கவுசிகன்புத
மேவினல்லிசைவிருப்பின்றுபோ
நாவில்சீர்ப்பதுமாக்கன்றன்மனை
யோவிலன்பிறைதுறையினார். (௰)

மாதவன்னொடும்வணிகன்மாயவன்
றீதில்கோயிலிற்றீபமேற்றிட
வேதமில்லவன்மனைவியோவற
வோதுநாடொறுமலகிட்டேனன்றுள். (௧௧)

நற்றவாணிகன்மனைவியோதகம்
பொற்றசெவ்விபுதுமென்னவர்
குற்றமில்லிசைக்குருக்கோதற
வுற்றவன்போலிருந்துறைகின்றன். (௧௨)

நவையின் மற்றவர்நண்ணுநாளினிற்
கவுசிகன்றனைக்கலிங்கர்கோமக
னெவரும்போற்றவேயென்முன்னொடொரு
மூவமையில்லிசைபாடென்றோதலும். (௧0)

எனலுநாவொடுஞ்செவிகளீர்ந்துழாய்
புனைசெய்வோனடிபோற்றிக்கேட்குமா
லனைவருந்தொழுமமார்கோனையு
மினையவாறடாதென்றுகூறினன். (௧௧)

என்றுகூறலுமவனேடேழிசை
நன்றுகற்றவர்தம்மைநம்முனை
மின்றுபாடுவீரொனவியம்பலு
மன்றவ்வாறெதிர்ந்தவருமோதினர். (௧௨)

மாயன்சீரலான்மற்றையோர்புக
ழேயக்கேட்டிடாதறிதுமின்றெனப்
பாயதன்புகழ்பாடுவோர்தமை
மேயப்பாடுமின்விரைந்திங்கென்றனன். (௧௩)

என்னலோடுமங்கவரிசைத்தலு
மன்னனீண்முடிசெவியின்மாட்டியே
யின்னுந்தன்புகழிசைமினென்பனென்
றன்னகாலைநாவரிந்துகொண்டனர். (௧௪)

கொற்றவாட்படைக்குருசில்கண்டது
மற்றுவெஞ்சினங்கதுவமன்னியே
யுற்றநாட்டினிலுறைந்திடாவகை
யற்றைநாளினிலவனைப்போக்கினன். (௧௫)

அன்னயாவருமப்பதுமவங்களும்
மன்னுமாதவன்பன்னிதன்னொடு
மின்னனூற்றுடனேகவேங்கையே
மன்னுமாருயிர்மாய்த்தனர்களே. (௧௬)

வேறு.

இறந்திலிகாலேக் கூற்றுவன்றிசைக்கா வலர்களைப்பெயர்த்துற நோக்கி, யறந்தவிர்நமற்றவர்தம்மை யயலப்பழம்பெருத்தலி னென்னனெ, திறந்திடவெழிர்பொயாக்கவர்காமஞ் செய்யிகின்ற வைத்தலர்கமலத், தறைந்தான்முகத்தோனிவ் வாறீற்றிருக்கு முயருலகுய்த்தனரன்றே. (௧௭)

வருந்தனன்கற்றக்கப்பொற்றிலைத் தய்வார்சிறையுன்னைச்சுயர்த்தோன், விணாவினிவெழிர்போபுனசனிவிருப்புமேகுகழுமைனன்குறையா, வரியபோதிவாலுயர்த்திமைவரோடலையெறிபார்கடனவே, ஒளாவலார்தமக்குறைசெயற்கரியவேறுதந்திஞற்றனஞல். (௧௮)

அயிராத்திரட்டுமேயாசலேனளமகன் ... மேயபொன்விமானத் தாடாமகளிர் முனிவர்விண்ணவர்கடன்போலக், காய்கதிராழிதாங்கினர்சூழக் கதிர்மணிமடங்ககனைமேன், மாயவனிருக்கல்நோக்கியாங்கவன்றன் மற்றவனோடுதொழுதனனுல். (௧௯)

வணங்குமயிழா வருட்கவெனுந்துவி வம்பியனென்றினைமொழிவழங்கி, யணங்காவணையிலதிருவிலமருமலர்த்தழாயப்படலையஞ்செல்வன், குணங்களான்மிக்கவுதிகண்டன்னேக்கோஇலாவன்பொடுகெழீஇய, கணங்களுக்கெல்லாந்தலைவனுயென்றங்கவன்பொறவுறைத்திடப்பணித்தான், (௨௦)

இசையினுன்மிக்ககவுசிகனேடுந் துதித்திடுமெழுவனாயெ ன்றும், வசையில்சாத்தியமாதேவராயுறையவழங்கிமற்றவர்க்கு ணவளித்த, வசைவிலாவுள்ளப்பதுமவக்கனையன் றளகைவேந் தாகெனவருளித், திசையெலாம்விளங்கத்தீபமிட்டோனைச்சிற ந்துழையிருந்திடப்பணித்தான். (உக)

இன்னவாறருளிமடங்கலாசனமேன் மாயவனிருந்தசெவ் விக்கண், 'பின்றெளிமவுலியயனையேமுதல தேவனாவேத்திரக் கரத்தர், முன்னடந்தகற்றக்கீதவல்லோர்கண் மூர்ச்சனையெய்த யாழிசைப்ப, வன்னமென்பெடையல்மாமலர்மேலாயிழையொ துங்கியெய்தினளால். (உஉ)

எய்தியவவளோடுவகைகைமிகநன் கெழில்பெறவிருந்த கா லையினிற், செய்யபேரறிவான்மிக்கசிமூதன் சிறந்திடுதுன்புரு வென்பான், வையகமருளயாழ்தடவந்தார் மற்றதுகேட்டுளமகி ழ்ந்து, பையவிழரவப்பாயலான்கோடி பலகலனுவப்பநல்கின றல். (உ௩)

அங்கதுகேட்டுநாரதமுனிவனகமிகச்சாம்பினனயர்ந்து, தூ கிசைவல்லனும்புருகிர்ப்பச் சுடர்மணிவண்ணன்முன்னெய்தி , தாங்கியநல்யாழ்தனிதடவந்து தண்ணளிபெற்றிடவேண்டி யாங்கியதவமோராயிரம்பருவ மூச்சவித்திருந்துஞற்றினறல்.

நாரதன்முன்னமுகுந்தன்வந்தெய்திவேண்டினையாவையுந ஒ, யோருநல்லிசையாலோங்குதும்புருவோடொப்புமைசெய் ன னுள்ளத், தார்தருமன்பாற்பணிந்திடுமெடியார்வேண்டினவரு புரிகுவனு, லேர்தருமவன்றன்வணங்கிமெடியாரெய்திடாவ கயுமொன்றளதோ. (உரு)

நீயும்வ்வண்ணமறனக்குளத்தள்பானீடிருட்பிழம்புசெய்த்தெ
றிக்குங்,காய்கதிர்மணிகள்விளிம்படுத்தொளிருங்கண்ணகன்விசு
டபினைத்தடவி, யெய்வுறுபசும்பொன்சினகரமியற்றியெழின்மூ
டியமரர்வந்தேத்த, மேயநன்னகரமமைத்தருஞ்சிறப்பார்விழா
வணிநடத்துறவிருப்பான். (உசு)

வேட்டவனடியார்தங்களுக்கொளிருமெய்யணிபலகலனு
தவி, யூட்டுதியான்பாலுணைதெளித்தாற்றி யுறுசுவைக்கருணை
யோடடிசில், பாட்டளிதவழமுகைமுறுக்கவிழ்ந்துப்சுநறுப்பி
லிற்றுபைந்தொடையல், சூட்டுதிவெறுக்கைவெறுத்திடக்கோ
டிதுகளறநல்குதிவிளாங்தே. (உஎ)

பொருதிரைதவழ்பாற்கடற்றுயிலண்ணல்பொருவறுகாதை
மாகடலை, யிருசெவிசிறையத்தேக்குதியவையேநின்னுடைநாவி
னுலெடுத்துப், பாவுதிசிறையபாட்டளிமுரலும்பணிமலர்பற்பல
தூவி, விரைகமழ்நறியமலரடிப்போதேவிருப்பொடும்பணிதியெ
ன்றனனல். (உஅ)

கவுசிகன்கானம்பண்ணிப்பேறுபெற்றவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—நஉ.

இரண்டாவது

நாரதர்கூகைகயோடிசையுணர்ந்த வத்தியாயம்.

—※—

என்னலும்பரீடனென்னுமிறந்திடாமுனிவனைநோக்கி,
யன்னமாமுனிவன்யாழினியல்பையறிந்தவாறறைதியென்று
ரைப்ப, முன்னனுளந்நாரதன்முனேமொழிந்தனன்மொழிந்த
வாறெடுத்துப், பன்னுவல்கேட்டியென்றும்மாதவத்தோன்பாற்
பட்டவுரைக்கலுற்றனனல், (க)

அரியமாதவநல்லியாழ்முனியியற்றவருந்தவமொழிதியான்
முகில்கீண், டுருவுபொற்கோட்டுமானசோத்திரமென்றுரைத்திடு
மோங்கெழில்வரையின், மருவிடுங்கானவிந்துவென்றுரைக்குங்
கூகையாங்கதனுழைமன்னிப், பெரிதாநற்கீதமுணர்தியென்றுய
ர்வானிடையிலோர்மொழிபிறந்துளதான். (௨)

திருத்தகுமொழிகேட்டுவந்தியாழ்முனிவன் சேணுறையர
ம்பையரியக்கர், விருப்பினுறையுங்கின்னரரறியக்கீதனன்கா
ய்விரித்துணர்த்தி, யருத்தியாலமருங்கூகைதன்பாற்சென்றணை
ந்தனனடைதலும்வணங்கி, யுரைப்பருந்தவத்தோயென்னுழை
நீவந்துற்றதென்னென்றுரைத்ததுவால். (௩)

முன்னர்தாமுகத்திற்பாடரும்புருவைக்கேட்டுறைமுகுந்த
ன்முன்கணங்க, ளென்னையாங்கடித்துப்போக்கினவதற்குவெள்
கியானிருந்தவம்புரிந்தே, னன்னகாலையினின்மிகவழகெய்திய
றிதியாற்கீதமென்றகல்வான், மன்னியோர்வாணிபிறந்ததாலத
னைவந்தனனெனவழங்கினனால். (௪)

என்றலும்வெருவக்குழறியேவிரிகட் கூகையாங்குரைக்கு
மென்னியல்பை, யின்றெடுத்துரைப்பக்கேட்டியான்மதம்பாயி
ருகவுட்பிண்டமுண்களிற்று, வென்றியான்மிக்கவாட்புவனேச
னென்னுமோர்வேந்தனுண்டவன்றான், மன்றவோர்பதினாயிர
முயர்வாசபேயமாமகம்புரிந்துறைவான். (௫)

பின்னருமீரைஞ்ஞூறுநற்புரவிமாமகம்பெட்புறவாற்றி, ம
ன்னியபதினாயிரமெனுங்கோடிமாழைதீம்பால்பொழிகோட்டா,
வென்னவரோனும்புகழ்ந்திடநூறு கோடியாமறையவர்க்கீய்ந்து,
பொன்னுலகுறையு மணிமுடியமர ரேத்திடப்பொருந்திவைகின
னால். (௬)

பொருந்தியேவைகுநாளினிலழல்கால்போர்புரிதிகிரியே ன்றுணைத்தா, டிருந்திடப்பாடவல்லுனர்தம்மைத்தீதுறும்படி றைப்படுத்தி, யிரங்கியாழ்தடவந்தென்னுடைச்சிரோயென்றுகிர நாவினுலெடுத்து, விரிந்தவாறுறையுமமாருங்கேட்டுவிருப்புறப் பாடுமினென்றான். (௭)

ஆயகாலையினிலாசைவேராறுத்தங்கமாரிமித்திரனென்பான், பாய்புனற்கரையின்முத்தவெண்மணலிற்பங்கயங்கண்ணனென்னு ருவை, யேயநன்கமைத்துநறுமலர்தூவியாழெழியெழுந்தபோ ன்பால், வாயினற்பாடிக்கண்கணீர்வாரமெய்ம்மயிர்பொடிப்பனை கினனல், (௮)

அன்னகாலையினிற்கொடுந்தொழின்மள்ளரவன்றனையிடரு றப்பற்றி, மன்னன்முன்விடலுஞ்சேற்றயிக்கெழுந்தாமற்றவன் பொருளெலாங்கவ்வித், தன்னமர்நாட்டிலுறைந்திடாதகன்று டர்கெனச்சாற்றலுமவன்று, னின்னலுற்றேகவெந்தனூமுயிர் போய்க்கூற்றுவனிருக்கையெய்தினனால். (௯)

அடைந்தவன்பேழ்வாய்மறலியைநோக்கி யுறுபசியுருத்தி டுமிகவு, மிடைந்தனனிதனுக்கியாதுவெம்பாவமியற்றினேனெ னவுரைத்திடலுஞ், சுடர்ந்தொளிர்கமலக் கண்ணனதடியைத் தொழுமரிமித்திரன்றன்னை, நடுங்கிடவகற்றிப்பொருள்கவர்ந் தனனலிந்ததிப்பசியெனநவில்வான். (௧௦)

கொடியவெம்பாவத்தொடர்ச்சியால்வனையக் கூகையாய்த் தோன்றியவ்வுடம்பை, விடுதியால்விட்ட வுடம்பினைத்தின்று குறைகுணவமீட்டுமக்கூகை, வடிவினையெடுத்துவிரிந்துவின்வி ம்பின் மலிதசையருந்தியிவ்வகையே, யொடிவறமனுவந்தரமு றைந்தப்பான்மானிடனுயுதித்திடுவாய். (௧௧)

என்னவெங்கூற்றுமுனைத்திடச்சுழல்கட்கூகையாய்ப்பிறந் தனனிருந்தா, னன்னவன்யாவனென்னில்யாருமா லமரமித் திரனென்பான், மன்னுமாயவன்றன்னுலகினிலொளிரு மணி புனைவிமானமொன்றேறித், தன்னினனவன்பாலின்னிசைகற் ற ன்றனைவினிலெழுந்தடைந்தனனால். (௧௨.)

அடைந்தன னாருயிரமுறுபருவமாசறுகீதங்கற்க, முடங் கலிழுளத்தார்கற்றனனென்னைவரம்பில் கந்திருவர்களியக்கர், தொடர்ந்துகற்றனராலென்றலுமிந்தத் துகளிலாநாரதன்வணங் கிக், கிடந்தபோன்பாலரியநற்கீதங்கிடையறக்கற்கலுற்றனனால்.

பருவமோர்நூறுயிரத்தொடுமைம்பத்தாறு பாற்படநனிக்கற் று, விணாவினில்வணங்கிவேண்டியதியாதுவிளம்பெனமுனிவ ரன்விளம்ப, மருமலர்க்கமலத்தயன்பகலெல்லாமருவுவன்மரு விமாய்ந்ததற்பி, னுனைசெயப்பிறவி யெனக்குவந்தெய்துமுனை வாலாயென்றதக்கூகை. (௧௪)

என்றலும்பிரமன் பகலெலாங்கழிந்தாலெழுழ்வலிக்கலுழு ஞ்ய்வந்து, மன்றநீயுதிப்பா யெனவுரைத்தும்பர்மகிழ்ந்துறைசு வேதநற்றீவிற், சென்றுமாயவன்றாள்வணங்கினன்வணங்கத்திக ழ்ந் துறைகானவிந்துவின்க, ணன்றுணர்ந்திலையாற்கீதநீயென் றுநாகணையண்ணல்கூறுவனால். (௧௫)

உரைத்திடுமிருப்தெட்டதாஞ்சதுரியுகத்தினிற்று வாபரயு கத்தி, லருத்திகூர்கண்ணனாகிவந்திடுப்பேமாயிடையறியநற்கீத ம், விரித்துரைசெய்யவுணர்ந்துதும்புருவைநிகர்க்குவாய்விளம்பு மவ்வளவுந், திருத்தகுமிசைநீ பலரொடெங்கற்றுத்திரிதியாலென் றுரைத்தனனால். (௧௬)

என்றலும்பிரமனுழையினிலெய்தி யாழெழீஇயின்னிசைபா
டி, மன்றலந்துணர்த்தார்த்தும்புருவாயில்வந்திருந்தியாழ்தடவா
டு; மன்றுதும்புருவோ டுணர்ந்தவர்தமக்குமரியவின்னிசையினு
க்குடைந்து, சென்றுகந்திருவர்பலரொடுங்கற்றுச்சிறந்தபேருல
கெலாந்திரிந்தான். (கஎ)

இவ்வகையிருபத்தெட்டதாஞ்சதுரியுகத்தளவெங்கணுந்தி
ரிந்து, செவ்விதினடைந்ததுவாபரயுகத்திற்றிகழ்தரக்கண்ணன்
வந்துதித்து, நவ்விவாட்டடங்கட்டேவியரெண்மரோடுநன்கு
றைந்திடலறிந்து, கவ்வையங்கடலினோசைபோலுவகை யார்ந்
தெழுக்கண்ணனையடைந்தான். (கஅ)

வேறு.

ஒய்யெனவடைந்துமுன்னமுறைந்திடுசுவேதத்தீவின்
மெய்யதாயறைந்தமாற்றம்விளம்பலும்விரும்பிக்கண்ண
னையநுண்மருங்குல்வாடவரும்பியகுவவுக்கொங்கைச்
செய்யவாய்க்கருங்கட்சாம்பவதியொடுஞ்செப்பினானே. (ககூ)

சங்கிவன்றனக்குநல்யாழின்னிசையறியுமாறு
பாங்கினிற்பயிற்றுகென்னப்பருவமோரொன்றுநன்கா
யாங்கிவனறியும்வண்ணமறிவித்தாளவனுங்கற்றுப்
பூங்கழற்கண்ணனோடுகற்றதுபொருந்திச்சொன்னான். (உ0)

சொன்னதுகேட்டலோடுந்துவரிதழ்க்கருமென்கூந்த
லின்னகைத்தேவிமார்களெழுவரோடினியநல்யாழ்
பண்ணுறுபருவமேழுபாற்படக்கற்பாயென்று
கன்னியந்துளவப்பைந்தார்க்கதிர்மணிவண்ணன்சொன்னான். ()

சொற்றதுகேட்டுமுத்தச்சுடரிழைதவழவீங்கி
முற்றுறுமுகிழ்மென்கொங்கைமொய்குழலெழுவரோடு

மற்றையப்பருவமேழுமாசறக்கற்றுவல்லே
கற்றையங்கதிர்காலாழிக்கண்ணன்முன்னெய்தினனே. (உ௨)

வேறு.

எய்தியாங்கிரங்குபுரிநரம்பார்த்தயாழினைப்பருவமோரேழு, மைதொழின்மேனித்தேவியரொருவர் தம்மொடிங்கற்றவாறறைய, மையெழில்கவற்றுமணிநிறமேனி மலர்கதிராழியஞ்செல்வ, னெய்யெனமுனிவனுணர்ந்திடயாழின் முறையினையுணர்த்தனுற்றனனால். (உ௩)

சேயவருணர்ந்தமகதியாழ் மற்றைக் கோடையாழ் செவ்வியாழ்பிணித்த, வாய்தினைவையலனையவாரநம்பாங் கணிபெறவாரியும்வடித்து, மேயுறமுறையேயுந்தியுமுறழ்ந்து மியைந்தநீரோடென்மொழிக, டேய்வறவெடுத்துச்சிதறியும்பலகாற்றேனுறமின்னிசையெழுப்பி. (உ௪)

பட்டநீடருவுந்தளிர்த்திடவான்சேல்படர்சிறைப்பறவைமெய்சோர, வொட்டியமுறையில்மகதியாழ்நன்காய்த்தடவந்து பருவமோரொன்றின், மட்டவிழ்துளவோன்மாசறவுணர்த்தமுனிவரனுணர்ந்துவார்திரைநீ, ருட்டிகழுலகிலின்னிசையாழுக்கொருவனுயுவந்திடவுயர்ந்தான். (உ௫)

உயர்ந்துறைகண்ணன்சேவடிபோற்றக் கண்ணனுமுயர்ந்துறும்புருவோ, டியைந்தவிணநரம்பாரின்னிசையாழிற் செரிகதிர்மணிமுடியிமையோர், நயங்கிடக்குழுமியுறைந்திடவுறையத்தக்கவைகுண்டமாங்கதனிற், பயன்கொளின்னிசையாழ்முறையினிற்றடவிப்பாடிநம்மிடத்துறையென்றான், (உ௬)

என்றுரைசெய்துகண்ணனுந்தேவிமா ரொடுமிளமதிக்கண்ணிக்,கொன்றையோடணிந்தகுளிர்சடைச்குழகன்குரைகழல்பா

டிநன்குறைந்தார், நின்றுநம்மிறைலன்றனைத்தொழுதேத்திப்பர
இவோரிரவியோட்டறவி, னின்றுயர்கயிலைமால்வரைதன்னினி
லவிவீற்றிருப்பரென்றனும். (௨எ)

நாரதர்கூகையோடிசையுணர்ந்தவத்தியாயமுற்றிற்று.
ஆ திருவிருத்தம்—௫௬.

மூன்றுவது

கண்ணனடியார்தன்மையுரைத்தவத்தியாயம்

என்னலுமுனிவர்சூதனைநோக்கி யிரங்குவண்டின்னமுட்ப
ருகுங், கன்னியந்துளவோனடியவரெவ்வாறுறைவரக்கன்னியந்
துளவோ, னன்னவர்தமக்கெவ்வாறருள்புரிவனுங்கவையறிந்தி
டவெமக்குப், பன்னுதியென்னமதிக்கொழுந்தணிந்தோன்பதம
வர்கிளைந்தனனுரைத்தான். (௧)

மாயவன்செய்யமலர்புரைதுணைத்தாள்வணங்கினர்வழிபடு
மடியா, ரேய்வுறப்பொருந்தி மகிழ்வுடனுறைவாரவ்வுழிபொருந்
தியெஞ்ஞான்றும், பாய்திரைப்பரவைப்பாற்கடன்முகட்டிற்பா
ப்பணைத்துயிலுமம்மாயோன், வாய்விரிந்திளந்தேன்வாக்கியகம
லமடந்தையோடுறைவனுண்மகிழ்ந்தே. (௨)

வலம்புரித்தடக்கை மாயவனமம்வாயினுன் மகிழ்ந்தெடுத்
தோதிப், புலன்களாவருந்தாதாங்கவனுருவம்புந்தியினு டொறு
மிருத்தி, மலங்கள்போம்வண்ணமவனடிவணங்கி வழிபடுமடிய
வர்க்காணி, லலங்கொளியாழியண்ணலென்றுளத்தி லறிந்தவா
வனடியவரே. (௩)

ஆங்கவனுமஞ்செவியினிற்கேட்டு மவனுறைசினகரம்பல வு, மோங்குறவழகாயியற்றுதல்செய்து மொப்பிலாச்சந்தனமா டை, தேங்கமழ்மலர்கடுணரொடுங்கொய்துசிந்தைநெக்குருகமெ ய்யன்பாற், பாங்குறவுந்தவண்ணலுக்கணிந்துபணிபவரவனடி யவரே. (௫)

கருமுகில்வண்ணனெழில்பெறுமுருவைக் காண்டகவருந் துணர்காக, விரைகமழ்ந்திளந்தேன்முகைவெடித்தொழுக்குமெ ன்மலர்விதியினிற்றூவிப், பரவியுமடிசிலருந்திடும்போதுபாற்க டற்சேர்ப்பனேயருந்தல், புரிபவனென்ன நினைந்தும் வாழ்பவ ரேபூந்துழாய்மாயவனடியார். (௬)

இவ்வகையுறைவோர்க்கடிசினன்கூட்டி யெழில்பெறப்பூ சனையாற்றிக், கவ்வையங்கடலிற் கண்டுயின்மாயோன் காண்ட கப்பூசனைதனக்குச், செவ்விதினியற்றுதிறத்தினுமன்காத் திரு வருள்புரிவன்வானேரும், வெவ்வினையியற்று மறலியுமவரைக் காணிலோவிருப்புடன்றொழுவார். (௭)

ஈங்கிவரோராயிரவருக்கன்பாலின்புறு பூசனையாற்று, இங் கறுபலத்தின்மிகுபலனெய்துஞ்சில்லரிச்சிலம்பணிமலர்த்தாட், பூங்குழலுமையாளோர்புறத்தமர்ந்த புரிசடையண்ணலேவணங் கி, யோங்கியேயுரையு மொருவனுக்கன்பாற்பூசனைபுரிந் திடுவ வந்தே. (௮)

கண்ணனடியார் தன்மையுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம் — ௬௬.

நான்காவது

அம்பரீடனையாழிகாத்த வத்தியாயம்.

என்றுரைசெய்யவிருந்தபோதனை
ரன்றிகல்வேலம்பரீடனையாழிமுன்
னின்றுறக்காத்ததுநீநவில்வாயென
நன்றெனச்சுதனுநன்கிசைந்தான். (௧)

தென்னெனவண்டிசைதார்த்திரிசங்குவென்
மன்னன்மகிழ்ந்திடுதேவிதர்மாவதி
கன்னிநறுந்துளவோன்கமழ்பூங்கழல்
பன்மலர்தூவிப்பழிச்சினள்சொல்வாள். (௨)

ஆங்கொருநாளிடையாயிழையன்புறு
பூங்கழன்மன்னவன்றன்னொடும்பொற்பினில்
வீங்கியசீர்ப்புதல்வன்றனைவேட்டியர்
தாங்கருநல்விரதத்தலைநின்றாள். (௩)

நின்றுயர்மாயனிறைந்தமர்கோயிலி
னொன்றிவரங்கிடந்தாளவளெல்லையிற்
சென்றியலுங்கனவின்னிடைச்செய்யபொன்
மின்றிகழாடையன்வேட்டதென்னென்றான். (௪)

என்னலுநீள்கடனேமியெல்லாமுற
மன்னியகோறனியோச்சுபுவைகியுன்
பொன்னடிக்கன்புசெயும்புதல்வன்றனை
யின்னருண்மிக்குடையோயருளென்றாள். (௫)

என்றலுமோர்கனியீந்தனனீய்தலு
மொன்றியகண்படைநீங்கியுள்ளன்பொடுஞ்
சென்றுறைமன்னவன்றன்முனந்திங்கனி
யன்றுறக்காட்டியருந்தினளன்றே. (௬)

உண்டலுமஞ்சியுருத்தெழுவெம்முலை
கண்டொசிநுண்ணிடைகட்புலனாயிடத்
தெண்டிரைமன்புகழ்மைந்தனைத்தேன்மொழி
கொண்டவளார்கருவின்னிடைக்கொண்டாள். (௭)

மைந்தன்வயிற்றில்வளர்ந்திடவாண்முக
மந்தண்மதிக்கவினட்டதேயன்றியும்
பைந்தொடிமேனியும்பானிறம்போன்றொளி
சிந்தியதன்றொளிதேம்பியுள்வாட. (௮)

ஆடகப்பொற்கலசப்புறத்தாங்கெழி
லாடுமரகதநன்கதிர்வாய்த்தென
வாடமருங்குல்வனமுலையெங்கணு
மோடினபச்சைப்பசுநரம்புற்றதே. (௯)

கோலமென்றொளியிணைதேம்பலிற்கொண்டவி
வால்வளைநாடொறும்வந்துவந்தோடின
நாலவிர்நீளநடப்பினுநான்கெனு
மேல்வுறுகாவதமென்றுயர்சொல்வாள். (௧௦)

இத்தகையோடுறைவாளிரும்பாற்கடல்
அத்தனையேத்தியமர்ந்துவணங்கிடு
வித்தகநற்புதல்வன்றனைவீறொடு
மெத்திசையும்புகழ்ந்தேத்திடவீன்றாள். (௧௧)

ஈன்றிடுதற்புதல்வன்றனைக்கண்டிய
லான்றவன்போடுறைதாதைமகிழ்ந்தக
மேன்றிடுசிரம்பரீடனென்றேபெயர்
தோன்றிடக்கூறித்துலங்கினனன்றே. (௧௨

நீடிருள்கீறிநிழன்றொளிர்மாமணி
யாடகச்செம்பொனணிந்தொளிர்தேரொடு
கோடுயர்வெம்மதக்குன்றுறழ்வேழமு
னாடொறுமூர்ந்தலங்கிளர்கின்றான். (௧௩

நாமகணாவினும்பாற்கடனன்கெழு
பூமகண்மார்பினும்விந்தைபொற்றோளினுந்
தாமுறவைகிடத்தாழ்குழற்கோதையர்
காமுறுகாளைப்பருவங்கனிந்தான். (௧௪

வேறு.

பாழியந்தடந்தோள்வீக்கனோக்கினன்பார்த்தஞால
மேழையுமொருங்கேதாங்குமெனவுணர்ந்தெதிர்ஞாலந்
தாழ்வுறாவகையிற்றாங்கப்பணித்தவன்றனைமாசில்
சூழ்கதிர்பரப்பியோங்குதுறக்கம்புக்கடைந்தானன்றே. (௧௫

காதலின்மைந்தன்பின்னர்த்தயங்குபேர்ஞாலந்தன்னை
யேதமின்றுறக்காத்தேயுறுவலியமைச்சர்தம்மைத்
திறலையங்காவல்செய்கெனப்பணித்துவல்லே
யோதுறுதவத்திற்பூண்டுகொடுவினைக்குறும்புமாய்த்தான். (௧௬

கொடுவினைக்குறும்புமாய்த்துக்கோதறுமுளத்தின்வைகு
மடல்விரிகமலப்போதின்மலர்கதிராழிசங்கந்
தடமலர்க்கையினேந்துதலைவனைத்தயங்கவுன்னி
யொழிவறுபருவமோராயிரந்தனியுறைந்தானன்றே. (௧௭)

உள்ளநெக்குருகியாற்றுதவத்தினுக்குவந்துமாயோன்
புள்ளினுக்கரசைவெய்யபொழிமதங்கவிழ்க்குநால்வாய்
வெள்ளைவாரணமதாக்கிவிண்ணவர்க்கிறைவனாங்கு
மொள்ளொளியுருவந்தாங்கியேறினனுவந்துவந்தான். (௧௮)

எய்திவானுலகங்காக்குமிறைவன்யான்வேட்டயாவு
நொய்தினிலடைதியின்னேநுவன்றிடுகென்னலோடுஞ்
செய்திலென்றவநானுன்னைமுன்னிநீசிறந்தவான்போய்க்
கொய்தளிர்த்தருவினீழற்குறுகினன்குறைதியென்றான். (௧௯)

என்றலுமுவந்துசங்கோடாழிகையேந்திமேருக்
குன்றுறழ்கலுழன்மேலாக்குலவினன்றோன்றலோடு
மன்றுகண்டுவகையுள்ளங்கைமிகவலர்தார்வேந்தன்
மன்றலந்துளவோன்பொற்றாள்வணங்கினன்றுதிக்கலுற்றான். ()

வளைகடலுடுத்தஞாலம்வருந்திடாவகையிற்காக்குங்
களைகணேகமலையோடுங்கவுத்துவங்கவினவைத்த
தளையவிழ்துளவப்பைந்தார்தழைந்தொளிதயங்குமார்பா
துளையெயிற்றரவப்பாயற்றோன்றலேபோற்றிபோற்றி. (௨௧)

என்றவனேத்தலோடும்விழைந்தவாறியம்புகென்னக்
கொன்றைவார்சடையோன்றோளிற்குழைந்தபோன்பினோடு
மொன்றிநீயுறைதல்போலவுன்னடிக்கன்புபற்றி
மன்றலந்துணர்தூயேத்திமனமகிழ்ந்துறைதல்வேண்டும். (௨௨)

உலகெலாமொருவனென்னப்புரந்திடவேண்டுமும்பர்க்
கலகிலாவன்பினோடும்பூசனையாற்றல்வேண்டு
மலைவறநின்னையேத்திமகிழ்ந்திடுமடியார்தம்மை
நிலைபெறக்காத்துநாளுநிலவியேயுறைதல்வேண்டும். (௨௩)

பகையெலாமடர்த்துநாளும்பாற்படவுறைதல்வேண்டும்
புகையெழுவெம்பியாரும்பொருந்தியேயுரைத்தசாப
மகநனிகுழையவெய்தியடர்ந்திடாதகலவேண்டு
மிகவுநன்கின்பமெய்திமேவிடவேண்டுமென்றான், (௨௪)

என்றலுமெனக்குமுன்னமிளமதிக்கண்ணியோடு
கொன்றையுமணிந்தவள்ளல்கொடுத்தபேராழியீது
மன்றநீவிழைந்தயாவும்வழங்கியேகாத்துவைகு
மின்றுகொள்ளென்றுநல்கியிமைப்பினின்மறைந்துபோனான். ()

மறைதலுமம்பரீடனயோத்தியின்மகிழ்ந்துமன்னி
யறைகடலுலகமெல்லாமலகுடைநீழல்வைக
நிறைதருமன்பிற்காத்துநிழன்றகோலோச்சினாளுங்
கறைமலிநெடுவேல்வேந்தர்கைதொழவைகினானே, (௨௬)

அரிறபவாசபேயமாயிரமடைவினாற்றிப்
புரவிநன்மேதநூறுபோற்றிடப்புரிந்துநன்காய்
மருவினனவன்றன்னோடுமறையொலியாருஞ்செய்ய
திருமறுமார்பன்பூசையாலுமேசிறந்ததன்றே. (௨௭)

சிறந்திடுபுவிப்போத்தன்னதெவ்வரைச்செகுத்துமெய்மை
யறந்திறம்பாதுவையங்காத்திடுமம்பரீடன்
கறங்கிவண்டிமிருங்கூந்தற்கனிமொழித்தேவிபோதி
னுறைந்திடுதிருவையன்னபேதையையுவப்பினீன்றாள். (௨௮)

ஈன்றநற்புதல்விக்கீர்ந்தேனிணர்விரிமலர்த்தாள்வேந்தன்
றென்றெளித்தனையவின்சொற்சிரீமதியென்னவன்பாற்
றோன்றிடப்பெயருங்கூறிச்சுடரிழைதுளும்பச்செவ்வி
யான்றதன்றேவியோடுமகமகிழ்ந்திருந்தானன்றே. (௨௯)

வேறு.

மைத்துவார்ந்தகுழற்றுதியர்மாசின்
முத்தணிந்தமுலைமுன்றிற்றவழ்ந்துந்
தத்தரிக்கண்ணியற்றுயர்குரும்பை
யொத்தவெய்யமுலையுண்டும்வளர்ந்தாள். (௩௦)

விஞ்சைமாதரும்விளைந்துணைசெய்ய
பஞ்சின்மென்னன்றியபன்மலர்பாவிக்
கஞ்சமெல்லடிகளகன்றிவருந்த
வஞ்சொல்லேழைநடைகற்கியவாளுள். (௩௧)

தத்துவெண்டிரைசெய்தண்டபுனலுண்ட
மைத்தவாண்முகிலின்வார்ந்தனவோதி
முத்தம்வார்ந்தமுலைமுன்றிலின்மீதே
வைத்தசாந்துகுழைநக்கிவடிந்த. (௩௨)

அழலுமிழ்ந்துவிடமார்ந்திடுவெள்வேல்
சுழியநீண்டொளிர்கணங்குழைமீதில்
விழையவோடிணமிளிர்ந்துபுரண்டு
வொழியவாவிகளையுண்டொளிருண்கண். (௩௩)

ஊடுவோடியொசிவெய்துமருங்கு
லேதமெய்தவிளவெம்முலையெய்தி
மோதுநீரிலெழுமொக்குளைவென்றே
மாதிருசமதிள்வந்துமுகிழ்த்த. (௩௪)

எறிதிரைக்கடலின்வையமோரொழுஞ்
சிறியதாகவிரிசென்றதங்கல்குல்
கறையடிக்கரியின்கைவினைவென்றே
முறையில்வாழையைமுனிந்தகுறங்கே. (௩௫)

காமருவமர நகையகன்றேறி
யேமுற்றேங்கவழுசெய்துகலைக்கா
லாமையோசெய்யுறமஞ்சிடவென்ற
பூமென்கோதையெழிற்பூத்தபுறத்தாள். (௩௬)

வருந்துகாயினுங்காவிளையாட்டித்
திருந்துவெண்மையெழில்சேர்ந்தமலர்த்தா
மரந்தினம்பொன்மணியாழிகள்கவ்வி
யிருந்தகல்விரல்களோபெறவாய்த்தே. (௩௭)

வேறு.

இனையவாறெழில்வாய்ந்தவேழுதன்றுனைதமன்று
மனையிடைவைகுநாள்சிறப்புடைதேறுமெற்றக்
கனியுகல்விசையின்வல்லனாதன்கடிதினெய்தி
வினைகழல்புனையுகோன்றன்மன்னனைக்கண்ணுற்றான். (௩௮)

மன்னவனாசனமேவத்துமாசனத்திருத்துவித்து
அன்னியமுனிவர்பாதந்தொழுதவர்க்கிருக்கைநல்கி
யின்னுரைவழங்கியாங்கனிருந்துழியவைச்செவ்வாய்க்
கன்னலேமுனிக்குநேசன்சோர்கனிமொழியியம்பினானே. (௩௯)

எய்தியபாவைமேனியனைத்தெலாமெய்த்துநோக்கிச்
செய்தவமுடையமற்றநாரதன்மகிழ்ந்துதோன்று
மைதெழின்மேனிப்பாவையாவனொன்றறைதலோடும்
பெய்தபொற்கழற்கால்வேந்தன்பெற்றபொற்கொடியென்றானே. (௪௦)

ஓடிவருசிறப்பாளென்றன்புதல்வியுண்டிவ்வேயென்னும்
கொடிபுரைமருங்குநோவக்குமிழ்க்கின்றருவலைச்சொங்கை
படைநெடுங்கண்ணிருட்குப்பருவம்வந்திறுத்ததின்னே
கடிமணம்புரிதல்வேண்டுங்காண்டகவென்றுசொன்னான். (௪௧)

என்றலும்வீணைவல்லவிருந்தவமுனிவன்மற்றுங்
கொன்றினனுறைதல்செய்யும்பருவதனுணரவண்ணன்
தன்றுணையிகழ்ந்தவேந்தன்றனித்துறைசெவ்விநோக்கிச்
சென்றெனக்கிவ்வச்செவ்வாய்ச்சிறுமியைத்தருதியென்றான். ()

மற்றமெய்த்தவத்தின்மிக்கமுனிவரன்வடித்தநல்யாழ்
கற்றறிமுனிவன்செய்யகருத்தறிந்திடாதுதெவ்வர்ச்
செற்றவேலம்பரீடன்றனித்துறைசெவ்விநோக்கி
யுற்றெனக்கிவளையின்னேயுதவுதிகுணமிதென்றான். (சஙு)

என்னமற்றவரைநோக்கியிருவருக்கொருத்திதன்னை
முன்னிடக்கொடுக்கலாமேவாணுதலாரைவேட்டா
ளன்னவன்றனக்கேயின்றிங்களிக்குவனென்னவோடுஞ்
சென்னெறிமுனிவராசிசெப்பியாங்ககன்றுபோனார். (சச)

வட்டவாய்த்திகிரிமாயோன்முன்னர்யாழ்முனிபோய்மன்னிப்
பட்டவையாவுங்கூறிப்பறுவதன்குரங்கதாக்க
கட்டழகுடையாள்கண்முன்காணவாத்தோன்றவேண்டு
மட்டலர்தாரோயென்னவவ்வகையருளினானே. (சரு)

பறுவதன்மாயோன்முன்னமெய்திமுன்பட்டதெல்லா
முறைமையிலுரைத்துமற்ற நாரதன்முசுவதாகித்
துறுமலர்க்குழலிகண்முன்றோன்றிடவேண்டுமென்னக்
கறையணற்பாந்தட்பாயிற்கண்ணனவ்வாறளித்தான். (சசு)

ஆங்கவரவ்வாறுகவணிமுடியம்பரீட
னோங்குமண்டபத்தில்வேந்தருறுகழல்வணங்கியேத்தத்
தாங்கரியணையின்மேலேதகைபெறவிருந்துசெவ்வாய்
மாங்குயில்கவற்றுமின்சொன் மடந்தையைக்குணர்மினென்று [ன்.

என்னலுங்கலன்களார்ப்பச்சிலதியர்விரைவினேகித்
தென்னனவண்டொடுஞ்செறிகுழற்றேவியோடுங்
கன்னியைக்கலன்கள்பூட்டிக்காண்டகக்குணர்மினென்று
னின்னதாலிறைவன்றுணையெனவெடுத்தியம்பினாரோ (௪௮)

தொழுதவரியம்பலோடுந்தூங்குகைக்களிற்றின்மீது
விழுமணிக்குடத்திற்றந்தவிரைகமழ்நறியநன்னீர்
மழலையங்குதலைச்செவ்வாய்மடக்கிளிமாதரேந்தி
யழிமதுக்கோதையஞ்சொலணங்கினையாட்டினாரோ. (௪௯)

ஆட்டிவள்ளுகிராற்கோதியழகுறவைம்பால்கைசெய்
தேட்டினர்முல்லைத்தாமமெழில்பெறச்சூழ்ந்ததோற்ற
மோட்டிளந்திங்கணூன்றகதிர்க்குலமுகிலைநாடி
யோட்டறவளைந்துநின்றவண்ணமேயொத்ததன்றே. (௫௦)

பிறைநடுமீன்களெல்லாம்பின்றொடர்ந்தமரச்செவ்வா
யுறைதருசெவ்விபோலுமொளிமணிமுத்தங்கோத்த
கறையணற்பாந்தள்வீக்கிக்கக்குசெம்மணிசெய்சுட்டி
பொறிநுதனிவட்டோன்றிப்பொலிந்தொளிர்கின்றதன்றே. ()

வேறு.

வெள்ளைவெண்மதிவீங்கெழில்யாவையுங்
கொள்ளைகொண்டதுகுண்டலவாண்முக
முள்ளிநோக்கினராவியையொன்றற
வள்ளியுண்டகணஞ்சனந்தீட்டினார். (௫௨)

ஆய்ந்தகோதையராங்கையினால்லா
சாந்தம்பூசியவேழத்தண்மருப்
போய்ந்துசாயவுருத்தெழுவெம்முலை
யேய்ந்தவித்தனரீர்ங்கதிர்முத்தமே. (௫௩)

தாழமெல்லணை தண்பசுங்காம்பொடுந்
தோழமைக்கொடுதோளிணை துன்றிருள்
போழுமாமணிச்செய்யபொலந்தொடி
யேழைமாதரணியவிலங்குமே. (௫௪)

வேறு.

அரிமயிர்வான்றமுன்கையிலொளிகான்றணிகிளர்மணிவளை யணியா, வெரிநிறக்காந்தண்மென்றுடுப்பேங்கவெழில்வளரங்கை மேல்விரலில், விரியிருள்பருகிக்கடன்முசட்டெழுந்தவெஞ்சுட ரிருள்படமிளிர்ந்து, சொரிகதிராழிசுடர்ந்துவில்லுமிழ்ந்து தூலங் கிடவணிந்துவிட்டனரால். (௫௫)

பாழிவாயரவினுரிநிகரா்டை யணைமுலைநோக்கலாதேங்கி ந, தாழ்வுறுமருங்குற்கெழுதிமேகலையின்றகைநலமெழில்பெறக் கொளுத்திக், கோழைவாழைக்குலமெலாங்குடிபோய்க்குளைந் கிடவழகுசெய்குறங்கிற், சூழ்கதிர்விரிக்குமணிபலநிரைத்தமகர வாய்துலங்குறப்புனைந்தார். (௫௬)

வேறு.

நலங்கொள்ளாடவர்நெஞ்சொடுநாளெலாம்
புலம்புறுத்தரிப்பூஞ்சிலம்பீர்ந்தளிர்
மலங்குசீறடிச்சேர்த்திமணிவிரற்
கிலங்கவாழியுமிட்டனரொன்பவே. (௫௭)

வேறு.

கலந்தின்றுபணைத்ததோளுங்கதிர்மதிமுகமுமேரு
விலங்கலும்வாடவீங்குவெம்முலைத்தடமும்விஞ்ச
மலர்ந்தகாழல்குல்கைபோய்வளர்கின்றபரப்புநோக்கி
யிலங்கிழையவருரைந்தாராட்வரொன்பட்டாரே. (௫௮)

பூவையுங்கிளியுஞ்செய்யபுனைமலர்க்கரத்தினேந்திக்
காவியந்தடங்கணல்லார்நூற்றுவர்கலந்துசெல்ல
நாவியின்றுறுகூந்தனங்கையர்பிரம்புபற்றிச்
சேவடியிடுபோற்றிச்சிலரிருபுறமும்போக. ([illegible])

வாளொடுபல்லைகைபற்றிமணிக்கச்சுமருங்கின்வீக்கித்
தோளொடுமுலையுங்கச்சுச்சுற்றுபுகட்டிவெய்ய
கோளரிபெட்டைபோலக்குழுமிநூற்றொருபத்தென்பர்
காளைவண்டரற்றுகூந்தற்கன்னியைச்சூழ்ந்துவந்தார். ([illegible])

மாதரம்பாவைபோல்வாண்மலர்மிசையடிகள்கன்றி
யேதமுற்றழுதுகுஞ்சித்திரங்கிடவொதுங்கிவைவேற்
றாதைதன்பாதமூலந்தாழ்ந்துதாதியர்கள்சூழப்
போதின்மென்மயிலனாணப்பொன்னனாமருளநின்றாள். ([illegible])

நின்றவப்பேதைமேனியொளிவிட்டுநிமிர்ந்துவிம்ம
வொன்றியாங்குறைவோர்யாருங்கண்ணொளிமழுங்கிவாச
மன்றலங்கோதைசெய்யவடிவினைநோக்கமாட்டா
ரன்றயர்வுற்றுநின்றாரன்றிமற்றென்செய்வாரோ. ([illegible])

ஆயகாலையினிலந்தப்பருவதனோடுமோங்கல்
மாய்விலாக்கேள்விவல்லநாரதன்மகிழ்ந்துபுக்கா
னேயமுற்றவனைநோக்கியிறைமகனெழுந்துதாழ்ந்து
தூயவாமிருக்கைநல்கியிருந்தனன்சுடர்செய்பூணான். ([illegible])

மன்னவன்மகளைநோக்கிமன்னியமுனிவர்தம்பி
லென்னவன்றன்னைவேட்டாயாங்கவன்றோண்மேலே[illegible]
பொன்னவிர்மாலைதாங்கிப்பூட்டிடுபுனையலாகா
வன்னமென்னடையைவென்றவாயிழைமடந்தையென்றான். ( )

என்றலுஞ்சேடிகையிற்செப்பினுளிருந்தவாச
மன்றலந்தொடையல்வாங்கிநோக்கலுமுனிவர்வான்றோய்
குன்றுறைகுரங்குபோலத்தோன்றினர்கோதைமாழ்கி
நின்றனளன்னோர்நாப்பண்ணேமியோன்றன்னைக்கண்டாள். ()

மயங்குபுநிற்பநீண்டவடிகெழுவேற்கைவேந்தன்
றயங்கிணர்ப்பூங்கொம்பன்னாய்தளர்ந்துளஞ்சாலவாடி
மயங்கிடாதெவன்கொனின்றவாறெனவிசைத்தலோடும்
வயங்குபொற்றளிர்செய்மேனிவடிநெடுங்கண்ணிசொன்னாள். ()

முனிவரர்தம்மைக்காணேன்மூத்துறைகுரங்கிரண்டு
மணமிகவாடவைகூமற்றவைநடுவணம்போற்
